உ

ஸ்ரீ ரமண சந்நிதிமுறை

பாரத்வாஜி

ஸ்ரீ முகவைக் கண்ண முருகனார்

உ

சிவமயம்

ஸ்ரீ ரமண சந்நிதி முறை

பாரத்வாஜி

முகவைக் கண்ண முருகனார்

இயற்றியது

ஸ்ரீ ரமணபாதானந்தரால்

வெளியிடப்பெற்றது

[இரண்டாம் பதிப்பு]

சென்னை: 'லா ஜர்னல்' அச்சுக்கூடம்

வெகுதான்ய வருஷம், பங்குனி மாதம்

1939

முதற்பதிப்பு — 1933, ஜனவரி—பிரதிகள் 2000.
இரண்டாம்பதிப்பு—1939, ஏப்ரல்—பிரதிகள் 1000.

விலை ரூ. 2—8—0

உ
சிவமயம்

உள்ளுறை

முகவுரை	..	ix
சிறப்புப்பாயிரம்	..	xvii
நன்றியுரை	..	xxii
நூல்வரலாறு	..	xxiii
நூலுள்ளம்	..	xxv
பாடிப் பெற்ற பரிசில்	..	xxv
உரிமையுரை	..	xxvi
அருள்வேண்டல்	..	xxvii
சேர வாருஞ் செகத்தீரே	..	xxviii
ஸ்ரீ ரமண சந்நிதிமுறை		
க. *ரமண புராணம்	..	க
உ. சொரூபத் திருவகவல்	..	உக
௩. *கீர்த்தித் திருவகவல்	..	உ௩
௪. *திருவண்டப்பகுதி	..	௩எ
௫. வைராக்கியத் திருவகவல்	..	௫க
௬. †பிரார்த்தனைத் திருவகவல்	..	௫௩
எ. *வேட்கைத் திருவகவல்	..	௫அ
அ. உபதேசத் திருவகவல்	..	௬0
௯. போற்றித் திருவகவல்	..	௬எ
க0. †இயலிசைத்தல்	..	எ௪
கக. *வண்ணமுரைத்தல்	..	எஅ
கஉ. †சார்புரைத்தல்	..	அ0
க௩. திருத்தசாங்கம் (க)	..	அ௬

* புதிய பதிகங்கள்.

† பழம் பதிகங்களிற் புதுச் செய்யுட்கள் சேர்ந்தவை.

கச.	திருத்தசாங்கம் (உ)	..	அஅ
கரு.	வினைநீக்கம்	..	கூ0
கசு.	வைத்த பத்து	..	கூஉ
கஎ.	†திருமந்திரம்	..	கூசு
கஅ.	பிரார்த்தனைப் பத்து	..	கூஅ
ககூ.	கண்ணிகள்		
	க. எந்நாட் கண்ணி	..	க00
	உ. *பராபரக் கண்ணி	..	க0உ
உ0.	தேசிகப் பதிகம்	..	க0ரு
உக.	ரமணதேவப் பதிகம்	..	க0எ
உஉ.	எண்ணப் பதிகம்	..	கக்க
உரு.	அருட்பத்து	..	ககரு
உச.	வாழாப் பத்து	..	கககூ
உரு.	அதெந்துப் பத்து	..	கஉரு
உசு.	†பிடித்த பத்து	..	கஉஎ
உஎ.	அருணை வாழ்வு	..	கருக
உஅ.	*உண்மை வாழ்வு	..	கருரு
உகூ.	அடைக்கலப் பத்து	..	கருஎ
ரு0.	புணர்ச்சிப் பத்து	..	கசக
ருக.	†ஆசைப் பத்து	..	கசரு
ருஉ.	*அடிமைப் பத்து	..	கசகூ
ருரு.	ரமண கீதம்	..	கருரு
ருச.	காட்சிப் பதிகம்	..	கருச
ருரு.	கொண்ட பத்து	..	கருஅ
ருசு.	திருப்படை யாட்சி	..	கசு0
ருஎ.	சென்னிப் பத்து	..	கசுஎ
ருஅ.	*அற்புதப் பத்து	..	கஎக
ருகூ.	*அதிசயப் பத்து	..	கஎரு

௪0.	திருவுருக் கண்ட பத்து	௧௭௯
௪௧.	†உலகங் கண்ட பத்து	௧௮௩
௪௨.	திருச்சுழியற் பதிகம்	௧௮௫
௪௩.	*தொழுத பத்து	௧௮௯
௪௪.	குழைத்த பத்து	௧௯௩
௪௫.	பிரார்த்தனைப் பதிகம்	௧௯௭
௪௬.	*வேண்டற் பதிகம்	௨0௧
௪௭.	*வேண்டற் பஃறொடை	௨0௫
௪௮.	இரங்கற் பத்து	௨0௬
௪௯.	*செத்திலாப் பத்து	௨௧0
௫0.	அனனியப் பத்து	௨௧௪
௫௧.	மாறறியாப் பத்து	௨௧௬
௫௨.	மாறிலாப் பத்து	௨௨0
௫௩.	அயலறியாப் பத்து	௨௨௪
௫௪.	புறந்தொழாப் பத்து	௨௨௮
௫௫.	அருண வேங்கடம்	௨௩0
௫௬.	†திருவிந்திய மாலை	௨௩௧
௫௭.	ஆண்ட பத்து	௨௩௬
௫௮.	அயனினையாப் பத்து	௨௪0
௫௯.	மறவாப் பதிகம்	௨௪௨
௬0.	அச்சப் பத்து	௨௪௬
௬௧.	நீத்தல் விண்ணப்பம்	௨௫0
௬௨.	†திருவார்த்தை	௨௬௭
௬௩.	†திருப்பாண்டிப் பதிகம்	௨௭௮
௬௪.	*வாழ்வறிவுறாஉ	௨௮௩
௬௫.	*உறுதியுரை	௨௮௫
௬௬.	திருப்படையெழுச்சி	௨௮௭
௬௭.	சந்நிதிச் சிறப்பு	௨௮௯

சுஅ.	யாத்திரைப் பத்து	..	உகூ0
சுகூ.	†அன்னை	..	உகூச
எ0.	நற்று யிரங்கல்	..	௩00
எக.	*நற்று யேங்கல்	..	௩0உ
எஉ.	நற்றுய் பரிதல்	..	௩0சு
எ௩.	இயற்பழித்தல்	..	௩க0
எச.	திருவோலக்கப் பத்து	..	௩கஉ
எரு.	†செவிலி யிரங்கல்	..	௩கசு
எசு.	ரமண மாயவன்	..	௩கஎ
எஎ.	*தலைவி யிரத்தல்	..	௩உக
எஅ.	வண்டுவிடு தூது	..	௩உ௩
எகூ.	வண்டுதரு மாற்றம்	..	௩உஎ
அ0.	†அமுதா நுபவம்	..	௩உகூ
அக.	ஆனந்தமாலை	..	௩௩0
அஉ.	திருப்புலம்பல்	..	௩௩ச
அ௩.	*அருணை ரமணேசன்	..	௩௩சு
அச.	*ரமண வைபவம்	..	௩ச0
அரு.	*ரமண லீலை	..	௩சச
அசு.	சோணைத் திருப்பதிகம்	..	௩சரு
அஎ.	இறைபணி நிற்றல்	..	௩சகூ
அஅ.	அநுபூதி	..	௩ரு௩
அகூ.	உயிருண்ணி	..	௩ருச
கூ0.	சோணைமூத்த திருப்பதிகம்	..	௩சு0
கூக.	திருச்சதகம்		
	க. மெய்யுணர்தல்	..	௩சுச
	உ. அறிவுறுத்தல்	..	௩சுசு
	௩. சுட்டறுத்தல்	..	௩சுஅ
	ச. ஆத்தும சுத்தி	..	௩எஉ

ரு. கைம்மாறு கொடுத்தல் .. ௩எசு
சு. அநுபோக சுத்தி .. ௩எஅ
எ. காருண்யத் திரங்கல் .. ௩அ௨
அ. ஆனந்தத் தழுந்தல் .. ௩அசு
கூ. ஆனந்த பரவசம் .. ௩அஅ
க0. ஆனந்தாதீதம் .. ௩கூ0

கூ௨. தேவபாணி
க. ஒன்றி யொன்றுமை .. ௩கூச
௨. இன்றியமையாமை .. ௩கூரு
௩. அடிச்சார்ந்தார் .. ௩கூசு
ச. உலகியல் .. ௩கூஎ
ரு. வீட்டியல் .. ௩கூஅ
சு. உரைச்சிறப்பு .. ௩கூகூ
எ. அருட்சிறப்பு .. ச00
அ. அனைத்து நீ .. ச0க
கூ. பேத வபேதம் .. ச0௨
க0. அறிதற் கருமை .. ச0௩
கக. விடுதலை வேட்கை .. ச0ச
க௨. அசலநிலை .. ச0ரு
க௩. குணாதீத நிலை .. ச0சு
கச. முப்பொருண் முடிபு .. ச0எ
கரு. உண்மை வழிபாடு .. ச0அ
கசு. உண்மை யுணர்வு .. ச0கூ
கஎ. உண்மை நிலை .. சக0

கூ௩. பண்டாய வேதம் .. சகக
கூச. †திருவெண்பா .. சக௩
கூரு. திருவுந்தியார் (க) .. சகஅ
கூசு. *திருவுந்தியார் (௨) .. ச௩எ

கூஎ. *திருவுருத்திறம் .. சருஅ
கூஅ. திருவருட்டிறம் .. சசக
கூகூ. *அடிமைத்திறம் .. சசரு
க00. திருப்பள்ளி யெழுச்சி .. சசடு
க0க. †திருவெம்பாவை .. சசகூ
க0உ. †திருவம்மானை .. சசு0
க0ரு. திருச்சாழல் .. சசுஅ
க0ச. திருத்தெள்ளேணம் .. சஎரு
க0டு. திருத்தோணோக்கம் .. சஎகூ
க0சு. †திருக்கண்ணோக்கம் .. சஅச
க0எ. திருப்பூவல்லி .. சகூ0
க0அ. †திருப்பொற்சுண்ணம் .. சகூசு
க0கூ. திருப்பொன்னூசல் .. டு0எ
கக0. குயிற்பத்து .. டுக0
ககக. திருக்கோத்தும்பி .. டுகச
ககஉ. திருவேசறவு .. டுககூ
ககரு. வியந்த பத்து .. டுஉக
ககச. இறும்பூதுப் பத்து .. டுஉரு
ககடு. பேற்றுப் பதிகம் .. டுஉஎ
ககசு. *பொங்கற் பஃறொடை .. டுருக
ககஎ. அச்சோப் பதிகம் .. டுருஉ
ககஅ. திருப்பல்லாண்டு .. டுருச
*வாழ்த்து .. டுருசு
அருளானந்தம் .. டுருசு
*பொறையிரத்தல் .. டுருஎ
செய்யுள் முதற்குறிப் பகராதி .. டுருஅ

௨

கணபதி துணை

திருத்தணிகேசன் துணை

முகவுரை

ஸ்ரீ ரமண சந்நிதிமுறை என்னும் இப் பிரபந்தத்தின் பாட்டுடைத் தலைவர் திருவண்ணாமலையில் வீற்றிருந்தருளும் ஸ்ரீ ரமண பகவான். திருஞான சம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய,

"நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார் தாமே தானாகச் செயுமவன்"

என்னுந் திருவாக்குக்கு இலக்கியமாய், சச்சிதானந்தமாய், பரமாத்ம சொரூபமாய், ஈசனாய் விளங்குகின்றார் பகவான்.

"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க"

என மணிவாசகப் பெருமான் தம்மை ஆண்டவரை நினைந்துருகி அந்நாள் எவ்வண்ணம் திருவாசகம் என்னும் தேனை வெளியிட்டருளினரோ அவ்வாறே, இந் நூலாசிரியராகிய ஸ்ரீ முருகனார் பகவானது திருக்கண்ணோக்கம் பெற்று அவரருளால் நெஞ்சிற் செஞ்சொல் ஊற்றெழ அவரது அருள், அருமை, பெருமை, எளிமை, உண்மை, இயல், செயல் முதலிய சகல குணங்களையும் அன்பெனும் ஆறு கரையதுபுரள ஆர்வமொழிகொடு அவர் திருவடிக்கே அணிந்த புத்தமுதப் பாமாலை ஆகும் இந்நூல். இந் நூலாசிரியர் இராமநாதபுரம் என வழங்கும் முகவையம் பதியில் அந்தணர்குலத்திற் றோன்றித் தமிழ் வல்லுநராய் விளங்கும் தவநிறை செல்வர். இவர் பகவானது பரிபூரண

கடாக்ஷம் பெற்ற பக்குவியாகி, அவரது திருவருட் பேற்றின் காரணத்திஞற் "புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித் தத்திக் கரை புரளும் பரமானந்த சாகரத்தே" திளைத்து விளையாடும் உயர் நிலையில் உலகுய்யத் தந்த செழுந்தமிழ்ப் பாசுரங்களாம், இந் நூலின்கண் மிளிரும் பாடல்கள் எல்லாம்.

"கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப ஞக்கிஞய்"

என மணிவாசகப் பெருமானும்,

"அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளும்
அறியென விமைப்பொழுதின் வாழ்வித்த வேதியனும்"

என அருணகிரிப் பெருந்தகையும் இறைவன் கருணையை வியந்தெடுத்து ஓதியவாறு, இந் நூலாசிரியரும் பகவான் தமக்கருளிய பேற்றை,

"தூங்கி மடிந்த சோம்ப லேனைத் துயினீங்க
வாங்கி நோக்கா லென்னைத் தனது வயமாக்கி
மூங்கை யேனைக் கொண்டு தன்சீர் மொழிவித்த
வேங்க டேசன் விச்சைக் கிணையும் வேறுண்டே"

என வியந்தெடுத்தோதி உள்ளங் கரைகின்றனர்.

இந் நூலின் முதற்பதிப்பு 1933-ஆம் வருடம் வெளி வந்தது. அப் பதிப்பு வெளிவந்த பிறகு இயற்றப் பட்ட பல புதிய பதிகங்களும், பழம்பதிகங்களிற் சில புதிய பாசுரங்களும் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள. திருவாசகத்தைத் தழுவியமைந்த இந் நூலின் முதற்பதிப்பிலே குறையாக இருந்த ரமண புராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, அற்புதப் பத்து, அதிசயப் பத்து, சேத்திலாப் பத்து என்னும் பதிகங்கள் ஆறும் இப்பதிப்பிற் புதியனவாகச் சேர்க்கப்பெற்றன; அதனல், திருவாசக

உறுப்புக்கள் அனைத்தும் இந்நூலின்கட் காணலாம்படி இப் பதிப்பு அமைந்துள்ளது. பழம் பாசுரங்களிலும் பழம் பதிகங்களிலும் சிலவற்றின் முறைவைப்பு, சில பயன் கருதி மாற்றப் பெற்றிருக்கின்றது.

புதியனவாகிய பதிகங்களும் பாசுரங்களும் (*) இவ் வுடுக்குறியாற் குறிக்கப்பட்டுள.

முன்பதிப்பில் உள்ள வசைதொடு பதிகம் என்பது அருணை வாழ்வு என்றும், சுழியற்பதிகம் என்பது திருச் சுழியற் பதிகம் என்றும், அயலறியாப் பத்து (2) என்பது புறந்தொழாப் பத்து என்றும் இப் பதிப்பில் மாற்றப்பெற் றிருக்கின்றன. முன்பதிப்பில் அயலறியாப் பத்து (2) என்பதன்பின் தனிச் செய்யுட்களாக அமைக்கப்பெற் றிருந்த இரண்டு செய்யுட்கள் அருணவேங்கடம் என்னும் தனித் தலைப்பின் கீழும், முன் சார்புரைத்தல் என்னும் பகுதியி லிருந்த ஈற்றயல் இரண்டு செய்யுட்கள் வேறு புதிய செய்யுட்கள் நான்கனோடு சேவிலியிரங்கல் என்னும் தனித் தலைப்பின் கீழும், அப்பகுதியி லிருந்த இறுதிச் செய்யுள் வேறு புதிய செய்யுட்கள் இரண்டனோடு அமுதாநு பவம் என்னும் தனித் தலைப்பின் கீழும் இப் பதிப்பிலே அமைக்கப்பெற்றன. வேறு சில சிறு மாற்றங்களும் அங்கங்கே காணப்படும்.

திருவாசகத்தையே இந் நூல் பெரிதுந் தழுவி அதன்கண் உள்ள பலதுறைப் பதிகங்களையும் பின்பற்றி அமைந்துள்ள தெனினும், சிற்சில வேறுபாடுகளும் இந் நூலகத்துக் காணலாகும். உதாரணமாக, ஆசிரியர் திருச்சதகத்தை அந்தாதித் தொடையின்றி அமைத்தும், அருட்பத்தை அருட்பத்து அதெந்துப் பத்து என இரு வகையாக விதந்தும், திருவம்மானையை ஒருத்தி இருவர்

மூவர் என விரித்தும், திருத்தசாங்கத்தைக் குயிலிடம் வினவியும், பிரார்த்தனைப் பத்தைப் பிரார்த்தனை அகவல், பிரார்த்தனைப் பத்து, பிரார்த்தனைப் பதிகம் என வெவ் வேறு பாவகையில் வகுத்தும், திருக்கழுக்குன்றப் பதிகத் தின் கருத்தைத் தழுவிக் காட்சிப் பதிகம் எனப் புனைந் தும், திருவாசகத்தில் இல்லாத சொரூபத் திருவகவல், வைராக்கியத் திருவகவல், உபதேசத் திருவகவல், திருக் கண்ணேக்கம், தேசிகப் பதிகம், அடிமைப் பத்து முதலிய வற்றைக் கூட்டியும் இச் செந்தமிழ்மாலையைப் பகவான் திருவடிக்குச் சூட்டியுள்ளார். திருவாசகத்தைத் தழுவிய தொடு நில்லாது, திருஞான சம்பந்தப் பெருமானது தேவாரத்தில் உள்ள அருமைப் பதிகங்களாகிய "தோடு டைய", "உண்ணமுலை", "கற்றுங்கெரி", "காதலாகி", "மானினேர்விழி", "மாதர்மடப்பிடியும்" என்பனவற்றைத் தழுவியும், அப்பர் சுவாமிகள் அருளிய திருநேரிசை, திரு விருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலிய வற்றைத் தழுவியும், சுந்தரமூர்த்திப் பெருமான் திருவாய் மலர்ந்த "மற்றுப் பற்றெனக்கு", "பொன்னார் மேனியனே" போன்ற அற்புதப் பதிகங்களைப் பின்பற்றியும், அம்மட் டொடு நில்லாது திருவிசைப்பாவில் "உயர்கொடியாடை" என்பது போன்ற பதிகங்கள் பாடியும், திருப்பல்லாண்டு பாடியும், பின்னும் "திருமந்திரம்" எனப் பெயரிய தனிப் பதிகம் ஒன்று புனைந்தும், இவற்றுடன் அமை யாது பதினோராந் திருமுறையிற் காணப்படும் பெருந் தேவபாணியென்னத் தேவபாணிப் பதிகங்கள் அமைத் தும், இவ்வாறாகப் பன்னிரண்டாந் திருமுறை நீங்கலாகச் சிவபிரானுக்குரிய பதினொரு திருமுறை யமைப்புக்களும் இந் நூல்வயின் திகழுமாறு புத்தமுதன்ன தமிழ்த்திரு

முறையாக இச் சந்நிதிமுறையை உலகுக்கு ஈந்தது இறைவன் பெருங்கருணைத் திறம் என்றே நாம் கூறவேண்டும். மற்றும், திவ்யப் பிரபந்தத்திற் சில பதிகங்களும், பரிபாடற் பகுதியும், அருணகிரியார் அருளிய அநுபூதியும், தாயுமானார் இயற்றிய பராபரக் கண்ணி, எந்நாட் கண்ணிகளுங்கூட இந்நூலிற் பின்பற்றப் பெற்றுள. மேற்கூறிய பலவகைப் பதிக வகைகளில் முக்கியமாக எடுத்துக் கூற வேண்டுவது "திருக்கண்ணோக்கம்" என வரும் திருப்பதிகம். அருணகிரியார் "கடைக்கணியல் வகுப்பு" என்று அருளியது ஒருவகை. திருக்கண்ணோக்கம் என வரும் இப்பதிகமோ திருத்தோணோக்கம்போல ஒரு புது வகையது. **சக்ஷுர்தீக்ஷைக்கு ஆதாரமாக நின்றுதவும் பெருங்கருணையது பகவான் திருக்கண்** என்னும் மறைப் பொருளை இப்பதிகம்,

ஞானம் பெறலாம் நலம்பெறலா மெந்நாளும்
ஆனந்த வீட்டி லமரலாம்—மோனநிலை
கற்றுளோர் தேடுங் கதிரமணர் கண்ணோக்கம்
பெற்றுநா மாடப் பெறின்

என்னும் வகையில் வியந்தெடுத்து ஓதுவது.

இந்நூலின் பிறிதொரு சிறந்த இலக்கணம் இதன்கண் உள்ள சமரசபாவம்; இதனை ஆசிரியர்,

"பத்தனே யென்கோ பரமனே யென்கோ
பரிவுடைக் கிறித்துவே யென்கோ
முத்தனே யென்கோ முனிவனே யென்கோ
முகம்மது நபியென மொழிகோ
வித்தனே யென்கோ விமலனே யென்கோ
வீரகோ தமமுனி யென்கோ
அத்தனே யென்கோ குமரனே யென்கோ
வண்ணலே ரமணமா தேவே"

என வரும் பாட்டிற் "கையிலங்கு பொற்கிண்ணம்" போலத் தெளிவுற விளக்கியுள்ளார். "தீண்டாமை"யைத் "தீத்தீட்டு" என்று கூறி, அஃது அற ஒழிந்து தம் சிந்தை தூய்தாயிட வேண்டும் என்னும் ஆசிரியர் பிரார்த்தனை இக்காலத்தார் உய்த்துணரற்பாலதொரு நுண்பொருள். இங்ஙனம் இத் திப்பிய நூலின் செம்மை எல்லாம் எடுத்துரைப்பின் மிக விரியும்.

இந் நூல் துதிநூலாதலின், இயன்ற அளவு தேவாரத்தையும் திருவிசைப்பாவையும் ஒட்டிப் பதிகங்களுக்குப் பண்கள் அமைக்கப்பட்டுள. அவ்வப் பண்ணுக்குப் பெரிதும் பொருந்தினதாகப் பெரியோர்களால் தொன்று தொட்டுச் சொல்லப்பட்டு வரும் ராகமும் பக்கலிற் காட்டப்பட்டுளது. ஆங்குக் காட்டிய ராகமேயன்றி நடைக்கும் பொருளுக்கும் ஒத்த வேறு ராகங்கள் அமைத்து இசை வல்லுநர் பாடினும் நன்றேயாம்.

"செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானர்?
என்னுடை யடிமைதான் யாதே?"

என உண்மைப் பெரியோர் புலம்பியவாறு பொய்ந்நிறை புலையனும் எளியேனுக்கு இம் முகவுரை எழுதும் திருப்பணி கிடைத்தது என்னை ஆளும் திருத்தணிகேசன் திருவருளே எனச் சிந்தித்து மகிழ்கின்றேன். நிற்க.

இந் நூலாசிரியருடைய அமுதாநுபவத்திலிருந்து எழுந்த அரிய பெரிய பாக்களைக் கொண்ட இந் நூலை உலகிற் பரப்புதலே தமது பெருந்தொண்டு, பெருந்தவம் என மேற்கொண்டு, அதன்பொருட்டுத் தமிழ்நாடேயன்றித் திரைகடலோடித் தமிழ் வழங்கும் தேயமெல்லாமும்

சென்று சென்று பிரசாரம் செய்யும் பேருழைப்புக் கொண்டவரும், பகவான், முருகனார் என்னும் திருநாமங்களை நினைக்குந்தோறும் பேசுந்தோறும், சந்நிதிமுறைப் பாடல்களைப் பாடுந்தோறும், "இசைபாட விம்மி யழுமாறு வல்லா ரழுந்தை மறையோர்" என ஞானசம்பந்தப் பெருமான் கூறிய திருவாக்குக்கு இற்றைய சாக்ஷியாக இலகி, விம்மி அழுது பரவசம் அடையும் பண்பினரும், ரமண வைபவம் என்னும் யாழ்மூரிப் பதிகத்தை ஆசிரியர் இயற்றினதற்குக் காரண பூதராயிருந்தவரும், ஆசிரியராலேயே அப் பதிகத்தின் நேர் நடுப்பாகத்தில்,

"இன்னிசை யாழ்மூரிப்பண் ணில யத்தொடி சைக்கெனும்
ரம ணிய பத சுகர் தொழுதெழு கழலர்"

என அருமையாகப் பாராட்டப் பெற்றவரும் ஆகிய ஸ்ரீ ரமணபாதாநந்த சுவாமிகளுடைய பேரன்பு தமிழ்நாடு என்றும் போற்றுந் தகையது என்பதற்கு ஐயமும் உண்டோ?

தமிழ்ப்பேராசிரியரும் தமிழுக்கே தம் வாழ்நாளைச் செலுத்தித் தமிழை வளர்க்கும் பெருந்தகையுமான ஸ்ரீமத் ராவ்சாஹிப் மு. இராகவையங்காரவர்கள் இந் நூலின் முதற்பதிப்பு வெளிவந்தகாலத்தும், இவ்விரண்டாம் பதிப்பு நிகழ்ந்த காலத்தும் தம் தமிழ்ப் பணிகளுக்கிடையே இதனையும் ஒருபகாரச் செயலாகக் கொண்டு தம் அரிய குறிப்புக்களை அப்போதைக்கப்போது தெரிவித்து உதவிய அன்புக்கும், தமிழ்க் கடலிலும் முருகன் திருவருட்கடலிலும் திளைத்து விளையாடுபவரும், செஞ்சொலாளரும், "கலைமகள்" துணையாசிரியரும், தமிழுலகு கண்ணெனப் போற்றும் தாக்ஷிணாத்ய கலாநிதி மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களிடம் பயிலும்

பாக்கியம் பெற்றவருமாகிய வித்துவான் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையரவர்கள் இவ்விரண்டாம் பதிப்பில் தம்மால் இயன்ற உதவிகளையெல்லாம் ஊக்கத்துடன் செய்துவந்த அன்புக்கும் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இப் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய பல்வகை உதவிகள் செய்த பிற பெரியோர்களின் அன்பும், இந்நூலை மிக அழகிய வகையில் அச்சிட்டு உதவிய சென்னை 'லா ஜர்னல்' அச்சுக்கூடத்துத் தலைவர் அவர்களது அன்பும் என்றும் பாராட்டத் தக்கன.

திங்கள் சூடி திருவருள் எங்கும் என்றும் இலகுக.

திருமுறைகள் பதினொன்றுந் தெரிக்குநல வாய்மையெலாஞ்
செறியு மிந்த
ஒருமுறையி லெனக்காட்டப் பகவனரு ளாலெழுந்த
வுண்மை நூலாய்
அருமுறையி லமைந்தஸ்ரீ ரமணசந் நிதிமுறையை
யறிந்து கற்போர்
கருமுறையி லகப்படார் பேரின்ப நிலைவீட்டிற்
கலப்பர் மாதோ.

நிலமலி யுயிர்கதி நிலைபெற வருள்வது
நலமலி யுரைகளை நலமுற நவில்வது
நலமலி யுரைகளை நவில்வதிஃ தாதலின்
நிலவுக ரமணசந் நிதிமுறை நிலனே.

1—4—1939,
சென்னை.

வ. சு. செங்கல்வராய பிள்ளை

உ

சிவமயம்

சிறப்புப்பாயிரம்

பிரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

திராவிடவித்யாபூஷணம்

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

உதவியது

(ஆசிரியவிருத்தம்)

அருண்மலி யருணை வாழ்தரு ரமண
னந்தமா முனிவர னகஞ்சார்
இருண்மலி துயரம் போக்கிடுங் கதிரோ
னிணையடிக் கன்புமீ தூர்ந்து
தெருண்மலி சுவையுஞ் செவ்விய நடையுஞ்
சேர்தரு சந்நிதி முறையைப்
பொருண்மலி முகவை வாழ்கண்ண முருகன்
புகன்றனன் யாருமின் புறவே.

தமிழ்ப்பேரகராதி நிலயத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ராவ்ஸாஹேப்

வித்வான் மு. இராகவையங்காரவர்கள்

உதவியது

(ஆசிரியவிருத்தம்)

பாருய ரருண கிரியினின் ஞான
பானுவாய்ப் பரத்தொடு மியைந்த
சீருயர் ரமண தேவன தருளின்
செல்வமே செல்வமென் றறைதி
சாருயர் மனத்தா னவனடி சார்ந்து
சகவியல் துறந்தவன் முகவைப்
பேருயர் முருகன் றமிழறி புலவன்
பெரிதுமென் னிடையுமன் புடையோன். (க)

அன்னவ னருணை மாமுனி யருளா
லடைந்தநன் ஞானமுந் துறவின்
மன்னிய வாழ்வு முற்றவ மில்லா
மக்களுக் கரிதரோ வாய்த்தல்
தன்னிய னாகித் தான்பெறு பேற்றைத்
தரணியும் பெறுகென ரமண
சன்னிதி முறையா யனையவன் றருநூல்
தமிழ்மகட் கணியெனத் தருமால். (உ)

ஒப்பறு மூவர் வாதவூ ரடிக
ளோதிய திருமுறை யெட்டுந்
திப்பிய ரமண தேவனுய்ச் சிவனே
தெரியவந் தருளுத னேக்கி
இப்படி யுருவே றெடுத்தொரு முறையா
யியைந்ததிந் நாளென வறிந்தோர்
செப்புறப் பொருளும் பத்தியுஞ் சொல்லின்
செல்வமுந் திகழ்வதிந் நூலே. (௩)

ஆன்றசீ ரமண மாதவ னருளி
னதிசய மிருந்தவா! அவனே
சான்றநம் முருகன் றனையடிக் கொண்டு
தகுமவன் ருலுவின் மேவித்
தான்றனைப் பாடித் தன்புகழ் விரித்த
சன்னிதி முறையிஃ தென்ப
தியான்றக வறிந்தே ஞதலா லோதி
யாவரும் பெறுகவ னருளே. (௪)

ராவ்பஹுதூர்

வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், எம். ஏ.

(*Retired Personal Assistant to the Inspector General of Registration*)

உதவியது

(கலிவிருத்தம்)

இனித்த பாக்களா லெங்கள் ரமணரைத்
தனித்த புத்தமு தென்னுந் தகைமையிற்
செனித்த சென்மமீ டேறத் துதித்தனன்
மனித்த ரிற்றகை வாய்ந்த முருகனே. (க)

முத்தி வித்தை முனியை ரமணரைப்
பத்தி மெத்தத் ததும்பு பதத்தொடு
துத்தி யஞ்செயுந் தோத்திரப் பாக்களின்
மெய்த்தி றத்தை வியக்கு முலகமே. (உ)

(வேறு)

மேலோர்புகழ் ரமணேசரின் மேம்பாடவை யெல்லாம்
பாலோவிது தேனோவிது பாகோவிஃ தென்ன
நூலோர்வியந் தேத்தும்வகை நுவன்றானவ ரடிக்கே
மாலோனெனு முருகன்னவன் மாண்புக்கிணை யெதுவே.

(ஆசிரியவிருத்தம்)

உரிமையுடை யடியாரா யுள்ளுறவே தனையுள்க
 வல்லார் கட்கே
அருமையுடை யனகாட்டி யருள்செய்யு மாதி *யென
 வன்று ரைத்த

---

* சம்பந்தர் - திருப்பெரும்புலியூர்த் தேவாரம்.

தருமவுரை பொய்யாமே தனையடுத்துச் சரண்புக்க
முருக னார்க்கே
ஒருமையுணர் மெய்ஞ்ஞானம் பாலித்த பெருமானை
யுளத்திற் கொள்வாம். (ச)

பாட்டறிவே யானுணர்வேன் நால்வர்தரு பாட்டெல்லாம்
பழகி விட்டேன்
கேட்டறிவேன் புதுப்பாட லெனுங்கிளர்ச்சி மனத்தெழுந்தோ
கிளரு நெற்றி
நாட்டமறைத் தோருருவ மொருநாமம் பெற்றண்ணு
மலையி னண்ணி
வாட்டமற முருகனார் தமைக்கொண்டு புதுப்பாடல்
வனையப் பெற்றாய்! (ரு)

சரணமண்ணு மலைசரணஞ் சுழியல்வரு பெருமானே
சரண நீயே
அரணமென வடைந்தவன்ற னருணாட்ட மிகப்பெற்றே
யன்பர்க் கெல்லாம்
தருணமிது செந்நெறிகாண் பீரெனச்சந் நிதிமுறையைத்
தந்த சீலக்
கருணைநிறை முருகனா ரெனுநாமக் கண்மணியைக்
கருத்துட் சேர்ப்பாம். (சு)

சம்பந்தர் பாடலெல்லா முலகுபெற வேண்டியன்று
தமது கையாற்
பம்பந்த வருட்சரணு லயர்வரைந்த படிரமண
பாதா நந்தர்
வெம்பந்த வினைபோக முருகனார் தருபாடன்
மேதி னிக்கே
அம்புந்து விசையெனவே யருளுந்த வச்சிலிட்டே
யருளி னாரே. (எ)

உ

சிவமயம்

நன்றியுரை

அரிதி னடைந்ததம் மவகா சத்தே
பரிசிரம மொன்றும் பாராட் டாது
திரண்டசீ ரமண சந்நிதி முறையின்
இரண்டாம் பதிப்பை யினிதுற நோக்கிப்
பல்லாற் றானும் பழுதறச் சோதித்
தெல்லாத் திறத்து மேற்புடைத் தாகப்
பிழையற வச்சிடப் பெரிது முதவிய
நுழைபுல மிக்க விழைதகு நண்பர்-

ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள், ஸ்ரீ வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையரவர்கள் இம் மூவரும் செய்த நன்றி சிறிதும் மறக்கற்பால தன்று. முன்னை யிருவரும் முதற் பதிப்பினும் இவ்வாறே உதவி யது ஈண்டு நினைவு கூர்தற் பாலது. அவ் வனைவர்மாட்டும் ஆசிரியர் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டுள்ளார்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு".

உ

சிவமயம்

நூல் வரலாறு

(கலிவிருத்தம்)

அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டெ னும்பொரு ளுண்மை விளக்கமா
மண்ட வென்னகந் தைமல மாசறக்
கண்ட வித்தகக் கண்ணனை யெண்ணுவாம்.

(நேரிசையாசிரியப்பா)

மகத்துவ முறத்திரு வாதவூ ரடிகளைத்
திகழ்த்திய தெய்வத் திருவருட் குருவாம்
இறைவனு லாளப் பெறுவனோ வொருகாற்
பெறினுமவ் வாண்டான் பெய்கழல் போற்ற
வல்லனோ வொருதிரு வாசகங் கல்லாப்
புல்லனுங் கடையே னெனப்புரி சிந்தை
ஏனைய சிந்தையி னிதுவுமொன் றென்ன
வானிடந் தோன்றி மறையுமின் னேபோற்
றொன்றே தோன்றிப் பின்றை மறைந்திடத்
துன்றுபல் காலந் தொடர்ந்து கழிவுழித்
திருவணு மலையிற் றிகழுமெய்ஞ் ஞான
சொருபனைத் தோன்றிச் சுடர்தவக் கொழுந்தாம்
அவனடிச் சார்பா லருள்பெற் றுய்ந்தோர்
அவனருட் சீரை யகமகிழ்ந் துருகி
வாயாற் கூறச் செவியாற் கேட்டு
வீயாக் களியால் விம்மித மாகிப்

*பார்வளர் கயிலைமுற் பதிகத் துதியாற்
சீர்வள ரடிகளைச் சேவித் தடியேன்
விதியின் விளைவான் மீக்கெழு மன்பாற்
பதிகஞ் சிலசொலிப் பரவுநா ளொன்றில்
†அண்ணா மலையென் றாரம் பிக்குமோர்
பண்ணார் பாவைப் பாசுரந் தீட்டியுள்
உருக்குங் கருணை யுடைரம ணேசன்
திருக்கண் ணோக்கச் சேர்த்தலு மன்னோன்
சயம்பெறு மணிவா சகர்வா சகம்போல்
இயம்பவும் வல்லையோ வெனவிளை யாட்டாக்
கூறு நின்ற குறிப்பின் சிறப்பைத்
தேறு வுணர்வாற் சிந்தை தியங்கிக்
கூகைபோ னண்பகற் குருடா யிருட்கு
வாகைசூ டியவென் மடமதி யெங்கே
மின்மினி தன்னொடு விண்மணி போலப்
புன்மதி யேனொடு பொருந்துமன் னார்தம்
கங்குலா மைபல் கழன்றுமெய்ஞ் ஞானம்
பொங்குமான் மாநு பூதியெங் கேயென்
றிசைத்தே னிசைத்தது மெய்த்தே னெய்த்தலும்
அசைத்தே மதியை யருளா லெர்த்தி
என்னித யத்தே யிலங்கவ் விறைவன்
என்னது செய்கை யிலாதே ரமண
சந்நிதி முறைநூல் சாற்றினன்
தன்னது வாய்மை தழைத்தோங் கிடவே.

---

* பார்வளர் கயிலையெனத் தொடங்கும் தேசிகப்பதிகம்.

† அண்ணா மலையென் றாரம்பிக்கும் திருவெம்பாவைப் பாசுரம்.

உ

சிவமயம்

நூலுள்ளம்

மூட்டறு சந்நிதி முறைக்கருத் தென்னெனக்
கிட்டிண மூர்த்தி கேட்க வுரைத்தது.

ஆண்டா னருள்விளக்கத் தாலே யகந்தைமயல்
ஈண்டா தடிக்கீ ழிருத்தலே—ஆண்டசிவ
வள்ளற் குருரமணன் வார்சந் நிதிமுறையின்
உள்ளக் கிடக்கை யுணர்.

—:o:—

பாடிப் பெற்ற பரிசில்

மூர்த்திரம ணேசன் முகம்புக் கடிமுருகன்
சாத்துமுறை யாஞ்சந் நிதிமுறையின்—வாய்த்தபரி
சென்னையோ வென்னிற்பே ரின்பமயச் செம்பொருளாம்
தன்னையே தான்றரப்பெற் றான்.

உ
சிவமயம்

உரிமையுரை

கற்றூர் பரவுங் கனவேங் கடரமணன்
பொற்றூட் கெனைப்புகலாப் பூட்டியதால்—நற்றூய்ப்
பரிவாலே யென்னைப் பயந்தபரைக் கிந்நூல்
உரிமையாச் செய்தே னுவந்து.

உ

சிவமயம்

அருள் வேண்டல்

திருச்சிற்றம்பலம்

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

உடையா ளுன்ற னடுவிருக்கு
முடையா ளடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு
மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ண முன்னின்றே.

—திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

சேர வாருஞ் செகத்தீரே

திருச்சிற்றம்பலம்

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே.

—அப்பர்

ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர்மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையேவந்து சார்மின் களே.

—சம்பந்தர்

நீரின்ப வெள்ளத்து ணீந்திக் குளிக்கின்ற
நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட
பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை
யுள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று
பேணுமினே.

—மணிவாசகர்

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீரமணபகவான்

உ

சிவமயம்

ஸ்ரீ ரமண சந்நிதிமுறை

க. * ரமண புராணம்

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமோரம ணாய நலம்பெற வாழ்க
விமோசன மெய்யன் விரைமலர்த்தாள் வாழ்க
அடிமுடிக்குண் டாய வநாதித் தொடர்பின்
விடமுடியா மெய்ம்மறந்து விட்டுழல்புன் னாயேனைப்
பத்திமா லேற்றியகப் பட்டிமனத் தூனமறு
சுத்தியா லங்கவடித் துய்யசுடர் தோற்றித்
தவவிரத ஞானத் தழல்வேள்வி வேட்பித்
தவபிரத நோக்க வமுதாட்டி யாண்டபிரான்
விண்ணா டருஞ்சுவைக்க வேணவாக் கொண்டுவிழை
கண்ணா ரமுதக் கடவுளுமை யோடு
திருக்கயிலா யத்திற் சிறக்கக் கொலுவீற்
றிருக்கையிலே யேய்ந்தபதி னெண்கணமுங் கண்களிக்க

* திருவாசகத்துச் சிவபுராணம்போல, வேதம் ஓதும் இசையுடனும் நிறுத்திய உச்சரிப்புடனும் இப்புராணத்தை ஓதுதல் வேண்டும்.

ஓங்குபர பத்தி யுருத்தெரியப் பக்குவர்க்குப்
பாங்குபெற நீபோய்ப் பயின்றொழுகிக் காட்டுகென
ஆருயிர்மாட் டின்ப வருளாற்ற லொன்றேதன்
காரியமாக் கொண்டவக் கண்ணுதலோன் கூறவவன்
சந்நிதியை விட்டுத் தணவாது தற்பரமாம்
தன்னதுயிர்த் தத்துவத்தைத் தானறிந்து பேதமறு
நேசம் பயில்சகச நிட்டன் குடமுழநந்
தீசனே வாசகனு யேய்ந்ததுகொண் டவ்வுழுவல்
மூண்டவழல் போன்று முறுகலான் முத்திநெறிக்
காண்டகழ லன்றி யறியாப் பரவசத்திற்
சந்தநடை சான்ற தமிழ்நாடன் வாசிதரத்
தந்த நிதித்திரளின் றன்மவிசே டத்தாற்
குருமூர்த்த மாகக் குலவியதன் கோயில்
பரமார்த்த மென்றப் பணியிற் செலவிடவே
கிங்கரரால் வேந்தழைக்கக் கேட்டுமதி மாழ்கலாற்
சங்கரனுந் தன்னடியிற் சார்ந்துகுறை சாற்ற
விலைமதிக்க லாகா விரிசுடர்மா ணிக்கம்
சலமனத்தன் கண்டுமெகிழ் சாரமுத லுய்த்து
நரித்திரளை நாமப் பரியாக்கிக் கொண்டவ்
வரிமர்த் தனன்செய் யருந்தவத்தாற் கண்முன்
மரகதமா ணிக்கம் மயங்கெழிலோ டஞ்சொற்
றுரகதமா வூர்ந்தரசன் சோத்தமகிழ்ந் தேற்றருளிக்
கொள்ளுகெனத் தான்கயிறு மாறிக் கொடுத்தலுமந்
நள்ளிரவே முன்னை நரிகளா யப்பரிதாம்
ஊரை யவலமுறத் தூளையிட்டுக் கொண்டோட
யாரைநீர் மாயஞ்செய் தீரென் றடிகளைவேந்
துள்ளங்காய்ந் தாற்ற வொறுத்தலுமே வையைக்கண்
வெள்ளம்பாய்ந் தூர்மேல் விரைவதனைத் தட்க

அடியா ரிரந்தகுறை யாண்டானுந் தன்பொன்
முடியா னிறைவேற்று மோததயா மூர்த்தி
அனனியமாத் தன்னை யடைந்தசர ணத்தாற்
கனநியமச் சான்றோருங் கண்டுதொழத் தக்காள்
முதுவந்திக் காளாய் முயன்றுமுடி மேலே
மதுவந்த பிட்டுக்கு மண்சுமக்க லுற்றுப்
பிரம்படிதா னுண்ட விசித்திரத்தாற் றூனே
வரம்பிலவா மெட்டு வடிவாதல் காட்டி
அமைச்சர் பெருமை யரசற் குணர்த்தித்
தமைச்சிவவாழ்க் கைக்கே சரிக்கவிடுத் தப்பால்
அழகுமலி தில்லைப்பொன் னம்பலஞ்சார் கென்னத்
தழுவுசிவ ஞானத் தபோதனரை யேவி
மனவா சகங்கடந்தும் மத்தமனப் பேயேன்
சொனவா சகம்விழைந்த சொக்கப் பெருமான்
இகலுறுமஞ் ஞானமழிந் தின்னருளா லெய்தும்
புகலருமெய்ஞ் ஞானநு பூதிவடி வாகக்
குருவே யெனத்தடுத்தாட் கொண்டசிவந் தன்னோ
டிருவே றறக்கலந்த வேற்றமிகு மந்தத்
திருவாத வூரர் திருவாய் மலர்ந்த
திருவா சகமுந் திருக்கோவை யாரும்
உலகமறிந் துய்ய வுளங்கொண்டு தக்காங்
கிலகவரைந் திட்ட வெழிற்பொலங்கைச் சீர்வாழ்க
பம்பரமா யெவ்வுயிரும் பாசத்தா லாட்டிவிட்
டம்பரமாய் நிற்கு மதிசயச்சீ ராளன்
அனைத்துஞ் சுழலவுமவ் வாறுதான் மட்டும்
எனைத்துஞ் சலியாமெய் யின்புணர்வாந் தாள்வாழ்க
துன்னியர்வெப் பாற்றுஞ் சுரத்துக் குளிர்மரம்போற்
றன்னியல்பிற் பக்கபா தஞ்சற்றும் பாராட்டா

தாடா தமர்நிலையச் சாணியாந் தன்னடியிற்
கூடாநின் றார்பிறவிக் கொட்பகற்றுங் கோல்வாழ்க
நால்வீதி யட்டத்தோ டேழ்சுற்று வட்டத்தும்
கால்வேக மாகப்பல் கான்மாறி யோடி
அலைசேர்ந் துழலுமடி யார்பிறவித் தேரை
நிலைசேர வுய்த்தவரு ணேச னிலைவாழ்க
பத்திவிசு வாசம் பயின்றார்தற் கண்டளவே
சித்தவிசி ராந்தியருள் செம்மலடி வாழ்க
விழுமியதக் கார்தம் மனோலயஞ்செய் வித்தங்
கழகியசொக் காக வவிருங் குருமணிதன்
ஞானவொளி பெற்ற நயவருள மாயிகமாம்
ஏனையொளி பற்றா தெறிக்குமிரண் டற்ற
பரவெளியா யோங்கு முரவொளிதான் பாழ்த்த
உருவெளியா மிந்த வுலகெல்லாம் போர்த்திடுக
தன்மமொடு பாவமுறச் சாருங்கா லவ்வந்தக்
கன்மநுகர்ந் தேதான் கழிதலாற் றன்மாட்
டுவப்பத் தலைக்கூடி யுள்ளிப் பிரிவேன்
தவிப்புத்தீர் வாயினுந் தானேயாய்த் தன்னைப்
பிரிவா தனைபிரியப் பேசுமறி வாலே
பிரியா விடைநல்கும் பெம்மா னருண்மொழியிப்
பேதையே னுள்ளத்திற் பேரா தினிதொளிர்ந்து
பாதியா மத்துமென் பாச மகற்றிடுக
பேணியார் வாழப் பிழைபடா வாகாய
வாணியா யாசி வழங்குதிரு வாய்மொழியோன்
தாணுவா யன்பர்குடி தாங்கு மொருமொழியால்
ஆணை நடாத்தி யனைத்துயிரு நன்காள்க
ஆதார சத்திக்கு மாதார பீடமாம்
பாதார விந்தப் பழமுதலோ னெண்ணுன்

கறந்தாங்கி நின்றவுல கன்னையைத்தன் வாமப்
புறந்தாங்கு கின்றவருட் புண்ணியன்றான் முக்கரணம்
ஆனநேர் வாக்கு மனங்காயம் வாசியோ
டியானதே ராப்பண்ணி யேறி யுலாப்போந்
தறிஞ ரிதயச்சிங் காதனத்து நாளும்
குறியா யிருந்துசெங் கோலோச்சி வஞ்சத்
திருகுடைப் பொல்லாத் தெருமரலைச் சேதித்
தொருகுடைக்கீழ் மன்னுயிரை யுள்ளமுவந் தாள்க
இடைக்கலமா யன்பருயி ரேங்கியழி யாதவ்
வடைக்கலநா ளும்புரக்கு மண்ணலருள் வாழ்க
உயிர்க்குறுகண் செய்ய வொருப்படாச் செம்மை
இயற்கொருகண் ணாயிலகு மெந்தையருள் வாழ்க
அறந்தவறாச் சிந்தைசே ரந்தணர்க்கண் ணிக்கும்
சிறந்தபரா னந்தச் செழுங்கழலோன் சீர்வாழ்க
அன்பகத்து நாளு மகலா தினிதுறைந்து
துன்பகற்று மின்பத் துணைவனடித் தாள்வாழ்க
சந்நிதியா யெங்குந் தலைவணங்குந் தாழ்மையால்
என்னதியா னற்றோர்கட் கெய்ப்பில்வைப்போன் றாள்வாழ்க
போதவப்போ தாய்க்கணமும் போதலறப் புந்திசெய்து
மாதவப்பே ரேந்தன் மகிழுமலர்த் தாள்வாழ்க
தெய்வச் சுழியற் சிவபுரத்துச் சீர்விளக்கும்
சைவப் பெருமான் சரணமலர் வாழ்க
பிறையொடுதன் சென்னி பிறங்கக் கடல்வாய்க்
கறைவிடநன் குண்ட களத்தோன்றாள் வாழ்க
பழவா தனையைப் பரிசறச்செற் றென்னை
விழைவாக வாண்ட விநோதனடி வெல்க
கெடுத்தலரு வல்வினையைக் கீண்டுபூண் டோடே
அடர்த்தலரு முட்பகையு மட்டோ னடிவெல்க

ஆணவரா கத்தோ டருவருப்புந் தானகன்று
பூணவரா மெய்யிற் புனைந்தோ னடிவெல்க
வஞ்சிப்போர் மாலை வனைந்தேற்ற மாற்றாரை
விஞ்சித்தார் வாகைபுனை வீரட்டன் றாள்வெல்க
நட்டார்க்குத் தோற்றலை நாணும் பெருங்குணத்தோன்
மட்டார்க்குஞ் செந்தா மரைப்பூங் கழல்வெல்க
ஏயவிள மக்க ளிதயத்து மெய்யன்பு
மேயவித நோக்கி வியப்பித்து வெம்பாசம்
தட்குந் திருச்சந்நி தானத்தி லென்னகந்தை
வெட்கும் பரிசாண்டோன் வீரக் கழல்வெல்க
காதாருங் கேள்வியாற் காமுற்றுத் தன்னடிச்சீர்
ஓதாநின் றார்கட் குறுதியோன் றாள்வெல்க
பிங்கல மேனிப் பெருமான் பொலிகென
மங்கல வாசகர் வாழ்த்துவோன் றாள்வெல்க
வாழ்த்துநரை வானோரால் வாழ்த்துவிப்போ னாகியவர்
பாழ்த்தநர லைப்பிறவி பாற்றுவோன் றாள்வெல்க
இன்றியமை யாதபே ரிச்சையாம் பத்தியால்
ஒன்றியமெய் யன்பருற வோங்குகழல் வெல்க
அருட்கிழமை பூண்ட வருந்தவத்தோர் சிந்தை
இருட்பிழம்பு போழு மிரவிக் கழல்வெல்க
மெய்ம்மை யுணர விழைந்தெழுந்தார் சற்றுமனச்
செம்மை திறம்பாத சித்தசுத்தி யாலே
அடிமைக்க ணின்றுதம் மான்மவுருக் காணும்
படிமக் கலனும் பதாம்புயப்பொற் சீர்வெல்க
காமியமா மற்பமதிக் கார்கரக்க வானொளிசெய்
தார்மிகனு மெந்தையருட் சார்புதுணை யாக
அவகடவாழ் வற்றோர்க் கழகியமெய்ஞ் ஞான
உபநிடவாழ் வீயு முதாரனடி வெல்க

அணித்துவரு மன்பரகத் தாரமுத மூறித்
தணித்தலருந் தாபந் தணிப்போன்பொற் றுள்வெல்க
நெஞ்சிற்பூ ரித்து நிறுவுயிரா யோகியர்க்கென்
குஞ்சிப்பூ வாகக் குலவுதிருத் தாள்போற்றி
பாதந்தை வந்து பராசத்தி கைசிவப்பத்
தாய்தந்தை யின்றியுள தான்றேன்றி தாள்போற்றி
வேத்திரக்கோல் போன்று வெறிதிருக்கு மம்மனமே
மாத்திரைக்கோ லாகி வலஞ்சுற் றிலேசானே
ஐந்தொழில்க ளாற்று மவரவர்மாட் டம்முறையவ்
வைந்தொழினன் காற்று மசலசித்தன் றுள்போற்றி
தேற்றமா மவ்வுண்மை தேருது தாமவற்றை
ஆற்றலா யன்னு ரகங்கரிப்பி னவ்வாண்மை
கோபுரந்தாங் கும்பிம்பக் கூத்தெனவென் கோதகத்தைச்
சார்பெதுந்தோன் றுதழியச் சாய்த்தோ னடிபோற்றி
தம்மையெலாந் தாங்குபெருந் தாணுவாம் பண்டியிற்றம்
சும்மையுந்தாம் போட்டுத் துயர்நீங்கும் பாங்கறியார்
தாங்குவதா யச்சுமையைத் தந்தலேமே லாணவத்தால்
வாங்குவதா லென்றுந்தாம் வாளா வருந்துறுவார்
மூரிநீர் போல முழங்குவார் மூங்கையராய்
யாரைநீ ரென்னி னிருந்தாங் கொடுங்குறுவார்
ஊனப் பிணம்போ லுறங்கியுணர் வாற்றலொழிந்
தேனையவத் தைக்க ணெழுப்பினு லன்றியெழார்
தன்னை யெழுப்பிவிடிற் றுனே தனிப்பொருது
துன்னலரை யெல்லாந் தொலைப்பலெனு மோர்முடன்போற்
றுமியங்குந் தன்மைசிவ சத்தியா லென்றுணரார்
தாமயங்கிச் சித்திபல சார்வதாச் சேட்டிப்பார்
உச்சமத்த மாக்க ளுளறுபடி யூக்கமாம்
அச்சமர்த்தை யெள்ளிநகை யாடுவோன் றுள்போற்றி

அஞ்சுபூ தத்துள்ளு மவ்வதன் பண்படைவே
எஞ்ச லிலாதடைத்த வெம்மான்றாள் போற்றி
மதியினிடைத் தண்மை கதிரினிடை வெம்மை
மதியினிடை யோர்மை வகுத்தோ னடிபோற்றி
தொந்தநீர்த் தொந்தமவை தொன்றே யுயிர்த்தொகைதம்
பந்தமுத் திக்காப் படைத்தோன்றாள் போற்றி
அடியார்க்கு நல்லா னறந்தவறும் பொல்லாக்
கொடியார்க்கு வல்லிடியாங் கூற்றுவன்றாள் போற்றி
அடியேத்து மன்பரைத்தன் னந்தமில்வீட் டின்பக்
குடியேற்று மிக்க குணநலத்தா னெந்தம் ககூ0
மிடியாற் குறைந்தகுடில் வேவவருட் டீயாற்
பொடியாக்கு மூரற் புராந்தகன்றாள் போற்றி
முழுமையுமாய் நின்றும் முனிவரனு யெம்மை
எழுமையுமாட் கொண்ட விறைவனடி போற்றி
உளமுலா முண்மை யொளிநூலொன் றுள்ளக் ககூரு
களமெலா மோடத்தான் கற்பித்த வாற்றால்
வளமிலா மற்றையநூன் மாட்டெனக்குண் டாய
அளவிலா வார்வ மறக்கடிந்த மோனம்
நழுவலறு மெய்ஞ்ஞான நாதனடி போற்றி
உழுவலன்பு பூண்டே னுடையோ னடிபோற்றி உ00
குன்றாத ஞானக் கொடைக்குணத்தா லென்றென்றும்
பொன்றாத சீர்த்திப் புராண னடிபோற்றி
பொய்த்துவித வின்பம் புலந்தோ ருளத்தூறும்
அத்துவித வின்ப வமுத னடிபோற்றி
பற்றாகத் தன்னடியே பற்றியந்தப் பற்றுக்கே உ0ரு
அற்றார்கட் கற்றாரு யற்றோ னடிபோற்றி
எங்குமுக மாக வியம்பியெல் லோர்மதியும்
பங்கமுறு விக்கும் பரகாயன் றாள்போற்றி

யானென்று மின்றி யிதயத் திதயமாய்த்
தானென்று மோனவுப சாந்தத் தனிமுதலோன்
அவ்வவர்தந் தன்மையா லவ்வவர்பாற் சேர்ந்துலகின்
எவ்வெவர்தம் மாட்டு மியல்பா யிருந்தொளிர்வோன்
யானெனென் றெழாதியல்பா யேயும்போ தென்மயமாய்த்
தானென்றி நின்று தயங்கிடினு மேயெனயான்
தன்பழமை காணத் தலைதூக்கி னக்கணமே
என்புதுமை நோக்கியவ னெள்கித் தனைக்கரப்பான்
யான்பின் றலைசாய்த் திறந்தாலே யவ்விறைதாள்
தான்முன்போ லென்னுட் டழைத்தொளிரு மாதலால்
யானெழூஉ முன்னுமவ் வியானெழுந்த பின்னுமலாற்
றானொளிரா வந்தத் தலைவன் பெருமையுணர்ந்
தியானென்ப தற்ற விறையுணர்வா லல்லான்மற்
றியானென்னும் போதத்தா லியார்தா மியம்பவலார்
செப்பத் தரமில் சிறியேன் சிவரமணன்
மெய்ப்பரிசு விள்வேனம் மிக்கோன் வியனருளால்
விண்ணுளாய் மண்ணுளாய் வேதா கமத்துள்ளாய்
பண்ணுளாய் பாட்டுளாய் பார்ப்பார்கட் கெங்குமுளாய்
வண்ணமோ ரைந்துடையாய் வாழ்த்துவா ராய்ப்பரவி
எண்ணுவார் தங்க ளிதயத்துட் போய்ப்படிந்தாய்
வெள்ளெனவென் னுள்ளே வெளிப்படா தெண்ணெயை
எள்ளெனவுன் றன்னை யெனக்குக் கரந்தாய்
அறியாமை யென்னுமவ் வாவரணந் தன்னுள்
வெறியாடு மேதினியை விக்கேப சத்தி
உளத்துண்மை தோன்றா தொருங்கிருண்ட தாலே
வெளித்தன்மை யெவ்வணமோ மெய்யுமது வென்னப்
புலனைக் காட்டனுமென் புந்திமயக் குற்று
நலனைகு மென்றதனை நாடனுமந் நாட்டம்

அவாவாய்ப் பரிணமித்தென் னுருயிர்க்கெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்தாய்ச் சலஞ்செய்
பிறவியாம் பொல்லாப் பெருமரத்தைத் தோற்ற
மறவியான் மற்றும் மரத்தொருபுள் ளாகி
இருவினையாற் சிந்தையழிந் தெம்மருங்கு நோக்கித்
தெருமரலாற் காய்கனியைத் தின்றுதின்று வீணே
மறித்துமறித் தின்பதுன்ப மாறாது துய்த்து
வெறுத்துமனத் தொன்றும் விளங்கா நிலைக்கண்
அவத்தமே நாயே னழிந்துபடா வாற்றால்
உவத்த லுவர்த்தலறு முண்மையரு ளாலே
அருணைநகர் தன்னிலோ ரந்தணனாய்த் தோன்றிக்
கருணைவிழி யாற்றன் கமலபதங் காட்டி
அமைதிபெறச் சிந்தையறி வானந்தத் தேனை
அமைவறவெப் போதும்பில் காருயிர்க்கோ மானே
மகமாயை தன்னான் மறதியொன் றுண்டாய்
அகமாக மென்ன வறிவறைபோய்த் தாமொருகால்
எண்ணிய வாங்கே யெழுபிறப்புந் தூர்க்கந்தம்
நண்ணிட மும்மல நாறுமிக் காயத்
தருவருப்புக் கொள்ளா தரும்பொருளென் றெண்ணிப்
பெருவிருப்புச் செய்து பிழைபடுவோ ராகி
அழிவழக்குப் பேசி யகத்துட் கிடத்தல்
புழுவழுக் காதலாற் பொன்னிறத் தோல்புறம்
போர்த்து மழுப்பினு மொன்பது பொத்தலும்
ஊத்தை யொழுக்கு முடலபி மானமாம்
அங்கண நீர்தோ யறக்கடை யாளரும்
தங்க ணமைந்த தடுமாற்றம் பொன்றச்சாய்ந்
தெங்கு நிறைந்த வியல்பாய மோனத்தாற்
பொங்கித் ததும்புபரி பூரண மாந்தன்

நிரதிசயா னந்த நெடுங்கட லாடிப்
பரவசமாய் நிற்கப் பராபர ஞானம்
வழங்கொலி யோடு தொழுங்கலி யோவாத்
தழங்குசய பேரி யெழுங்கொடி முன்றில்வாய்
நாயிற் கடையாய் நடந்தமடப் பொல்லேனைத்
தாயிற் சிறந்தபெருந் தண்ணளியா லாட்கொண்டாய்
யானே யெனதே யெனைக்கெடுத்துத் தானேயவ்
யானே யெனதே யிரண்டுமெனக் கானுய்
அவரப் பகுதிபர மாணுவாய் நாண
அவிர்சிற் பரமகத்தா யாளும் பராபரமே
வாழ்வுதாழ் வாதியிரு மைக்கடலின் மன்னுயிர்தாம்
மாழ்குபாழ் மையலற மாற்று மொளிப்பிழம்பே
முப்புடியின் மேவுமுயிர் மோக விலாசமறச்
செப்படியில் வித்தையாத் தீர்க்குஞ் செழுஞ்சுடரே
நேதியா யேதிலற நீங்கவே யான்மபரஞ்
சோதியா யெஞ்சித் துலங்குஞ் சொரூபமே
ஆடுமனக் கண்ணடி யாலசைந்து விம்பிக்கும்
மூடுமயக் காருயிரை மோக விகாரமெலாம்
நன்னயமுற் றேங்கசல ஞானன்ம மெய்ப்பொருளாம்
தன்னியலிற் போலத் தடுமாற்று மம்மாயை
தன்னருள்பெற் றூறிவைச் சற்றுஞ் சலிப்பியா
தன்னதைமுற் றுந்தன் னதீனமாப் பெற்றேனே
சூதர் பொறிக்கணுவுந் தோன்றாத சூனியமே
போதர்விழிக் கெங்கும் புலப்படூஉம் பூரணமே
அன்பரோ டல்லார்க் கணியானே சேயானே
என்பரமோ நின்சீ ரியல்புணர்ந்து பேசிடுதல்
வீறிட் டெழுந்தநால் வேதா கமங்களும்வீ
றூறிட் டமைதி யடையினடி நாயேனுன்

சீருஞ் சிறப்புஞ் செயலுங் குணநலமும்
பேரும் பெருமிதமும் பேசல் பெருநகையே
பாதலத்தோர் பூதலத்தோர் மீதலத்தோர் பாராட்டிக்
காதலித்தோர்க் கெல்லாங் கனிந்தருளுங் கற்பகமே
தொக்க சிறுமனித்தத் தொண்டரவாக் கொண்டனரேல்
மிக்கமரர் வேத்தவைக்கண் வீற்றிருக்கச் செய்வோனே
எவ்வெத் தனைதா மியலும் பிறப்புளவோ
அவ்வத் தனையு மடைந்தலுத்தே னெம்பெருமான்
இந்திரன் றொட்டெவ் விறைவ ருயர்பதத்தும்
புந்திசென் றெய்த்துப் புலம்பற் கொருப்படேன்
அம்பொன்மா மேரு வடைந்தபறைக் காக்கையுமச்
செம்பொன் மயமாந் திறம்போலச் சிற்சொருப
சந்நிதிவா யெய்ந்தவதி சாமா னியவுயிரும்
உந்நதமா மச்சொருப முற்றொளிரு மாண்பாலே
ஊன்மயனு னோரா துடையாயுன் மெய்ஞ்ஞான
வான்மயமா மோனம் வழங்குதிமெய் யுள்ளுறைக்க
வாய்மொழியே போற்றோன்றி மாயா மனமூலத்
தாய்மொழியா மோர்மொழியே தக்கமொழி யாகப்
பரமார்த்தஞ் சொல்வார் பரம்பரைக்கே யாதி
குருமூர்த்த மாகக் குலாமோனக் கோமளமே
வித்தகத்தொன் னூலனைத்தும் விஞ்சைசேர் நின்மோனப்
புத்தகத்துக் கான்றோர் புகன்றவுரைப் பாயிரமே
ஆதலினம் மோன மவிழ்கலார் மெய்யுணர்ச்சிக்
கேதலரே யன்றோவவ் வேனையெலாங் கற்றிடினும்
பிள்ளை புரிந்த பிழையுளதே லப்பிழையைத்
தள்ளை பொறுத்தருளத் தக்கதுபோ லேதும்
அறிந்துமறி யாதுநா னுற்றபிழை யுண்டேல்
மறந்துமதி யாதே மகிழ்ந்துவத்தி தாட்கே

பிழைக்கு மதுவும் பிழைபொறுப்பு மென்ப
ஒழுக்கநமக் கென்றிவ் வுலக மறிந்தமே
காரிருளா மாயை கழற்றுங் கழலோனே
பேரருளா மின்பமழை பெய்யுமுகி லோனே
தவிக்குமுத் தாபத் தழற்கொழுந்து வீசா
தவிக்குமெய்ஞ் ஞானப்பே ராற்றின்ப வெள்ளமே
உண்ணு ரமுதே யுரைகடந்த பேரொளியே
தண்ணு ரளிசேர் தயாம்புதியாந் தாயே
நலமொன்று மில்லாவிந் நாய்காண வுள்ளப்
புலமொன்றி நின்றொளிரும் பொற்பதப்பூ மானே
இளையா யழகியா யார்க்குமெழு தொண்ணுக்
களையா ரகண்டசிவா கார விருத்தி
உணர்வின் றெளிவூற வூத்தையகங் காரப்
புணர்வின் றிறமாய்த்த போதக் கிழவோனே
நின்றொழும்பே மிக்க நியமமாய்க் கொண்டுலகிற்
சென்றழிம்பு பேசாதுட் சேர்விக்குஞ் சீரோனே
முன்போ லுலகிடைநான் மோகமுறு தின்னருளாற்
றன்பா லெனதுணர்வைச் சார்த்துந் தயாபரனே
மூர்த்திதலந் தீர்த்தமெனு மூன்றுமாய்த் தான்முயங்கி
ஆர்த்தியொடு மன்பரா லாடப் பெறுவோனே
அவ்வா றவற்றையுவந் தாடினர்க்கோர் சற்குருவாய்ச்
செவ்வேயோர் வார்த்தை திருவாய் மலர்வோனே
ஆழ்ந்துயர்ந்து நீக்க மறப்பரந்த நுண்ணியனே
தாழ்ந்தொழுகு வாருளத்துட் பாய்ந்தொளிருந் தத்துவனே
எங்கானுந் தன்னடியா ரெண்ணிவிடி னங்கவர்பாற்
புங்கா நுபுங்கமாய்ப் பொங்குசிவ போகமே
பொல்லாப் பொறியும் புலமுங் கரணமும்போய்ப்
புல்லா தமுங்குமிறும் பூதாம் பொதுவே

புறத்தா ரகத்தார்க்குப் பொய்யோடு மெய்யாய்
வெறுத்தார் விழைந்தார்க்கு வெய்யாய் தணியாய் நடுமே
மதிநுட்ப நன்னூன் மடுப்பரிதாய் மையத்
ததிநுட்ப மாக வவிர்பரமான் மாவே
பயிற்சியக நோக்காய்ப் பரங்கருணை நாட்டத்
தயர்ச்சியனு வேனுமற வாற்றுசிவ யோக
முயற்சியெனு நோன்றுண் முடங்கினர்க்கெட் டாத
உயர்ச்சியுறு மாமலைக்கோட் டுச்சிவளர் தேனே
அழகொடுசேர் சுந்தரம்போ லைக்கியபா வத்திற்
பழகடியார் தம்முளங்காண் பத்திரசத் தீம்பாகே
ஆணித் தரமாய்நா னுரெனவுள் ளாழ்ந்தறிவால்
நாணித் தலைசாய்ந்தூ னெனுமப் போலிப்
பரிச்சின்ன வீணகந்தை பாறுதலு மாங்கே
வெரிச்சென்ன லின்றி விளங்குசிதா காய
முழுமுதலாய் முப்புடியின் மோகவுணர் வோய்ந்து
கெழுமியவா னந்தங் கிளரும் பரவசமே
ஓர்ந்தார்தம் மாலும்பின் னோர்கா லுணர்வருமச்
சாந்தா நு பூதிநலஞ் சாற்றுவார் யாரே
கதண்டுபோல் வேகக் கடுப்பா லெழுந்து
விதண்டை யிடுவார் வெருவும் வெளியே
அருணேக்கத் தாற்கண் டநுபவிப்ப தல்லால்
மருணேக்கத் தாலுணர மாட்டாத மாண்போனே
விண்ணப்ப னுயகுடு மித்தேவ வேட்கைமிகும்
கண்ணப்ப ராயதிருக் காளத்தி வேட்டுவர்போன்
றெண்ணறியா ரேனு மெழுத்தறியா ரேனுமனக்
கண்ணிறையா நின்றசிவக் காதலாற் றாண்டப்பெற்
றுண்மையாய்த் தம்மையடிக் கொப்படைத்த நல்லடியார்க்
கெண்மையாய்க் கைந்நெல்லி யின்கனியா வானே

களவறியா துண்மை கடைப்பிடித்து ஞான
உளவறிவா ருள்ளத் தொளிருமொளி யானே
உயிரகந்தை போனு லொழியவிளங் காத
செயிரறுமெய்ஞ் ஞான திரவியச்சீ மானே
அகங்கார வோசை யடங்குமிடத் தேதன்
முகங்காணத் தோற்றுமதி மோகனமெய் யோனே
அடக்க மிலார்பா லணுகவெட்கு வானே
கடக்கவொணுச் சிந்தைக் கவல்கெடக்காண் பானே
நயமான ஞான நடையாள ருள்ளத்
தியமானன் ருனு யிலங்கு மிறையோனே
ஆன்றவதி கார மடைதற் கரிதடைந்த
மூன்றுபதி ஞென்ரு முதற்றேவர் நாயகமே
குன்ருது வீறங் குதலைதீர் செஞ்சுடர்முற்
றன்ருது பொய்ப்படூஉந் தொல்லை யிருட்குலம்போல்
உண்மையாந் தன்மெய் யுணர்வா யொளிர்தலால்
விண்மைபோன் மோகம் வெறுஞ்சொல் லளவாய்
இனைதவெம் பாசபந்த மென்றுமே யின்றி
அநாதியே வீடுபே ருக மிளிர்வோனே
வல்லையா யேதும் வயிராக் கியத்துக்கோர்
எல்லையாய் நின்ற யதீந்திரர்தம் மாண்பே
பதியாதி மூன்றும் பழுதறக்காண் பார்க்கோர்
முதலாய் முடிந்த முழுமுதலா வானே
முதலிடையீ ருதிதன் மோனமா ஞான
மதலைவடி வத்து மருவப் பெருனே
கனவாய் நனவாய்க் கவர்துயிலாய்க் காணும்
மனவான் மயவுலகு மாய்வா மதீதத்
துரியவெளி யாமிதயத் தூயவெளி யாக
விரியுமொளி யாமெய் விழிப்பாஞ் சுழுத்தியே

முன்னையுறு முக்குணத்தான் முற்றியவா மன்னுயிர்க்கு
நுன்னையுற வாக்குமதி நுட்பவியல் பாலே
முதற்குணத்தா லன்றி முயங்கலுரு யேனும்
அதற்குமப்பா லோங்கு மதீதமா நிர்க்குணமே
பன்னிலையாய்த் தோற்றும் படர்க்கையொடு முன்னிலைக்கும்
முன்னிலையாந் தன்மைதன் மூலமறிந் தற்றால்
அதனோ டவையுமொருங் காங்கே யழிவுற்
றதனொளியே தன்னுண்மை யாகு மகண்டமே
ஊனாக நான்போ யுருவழிந்த மாட்சியாற்
காணாது காணுங் கருணைக்கண் ணோக்கத்தார்க்
கிம்மையே யன்றிமற் றெம்மையுஞ்சின் மாத்திரமாம்
செம்மையாய் நீடுஞ் சிவலோகக் காட்சியே
என்றுமோ ரின்றேயாய் நின்ற நிகழ்ச்சியுனை
அன்றி யிறப்பெதிர்வை யாய்வொன்றின் றெண்ணலன்றோ
ஆதலினீ தானே யகமிதமா யன்றியுமுப்
போழ்திடனு யோரப் புலப்படுதி யத்தகவே
தேறவோ வன்றித்தற் றேற்றவோ தன்னினும்
வேறிலா தொன்றாய் விளங்கலாற் றானே
அவிசார நோக்கா மநேகவிசே டத்தும்
அவிர்சார மாமெய் யவிசேட ஞானமே
செவ்வியநின் னுண்மைத் திறத்தின்கட் டம்முண்மை
ஒவ்விடநன் றோர்ந்தொடுங்கி யொன்றுதலா லல்லாது
சச்சித்தா முன்னைச் சடவிடயச் சுட்டறிவாம்
இச்சித்தாய் வாலெங்ங னெய்திடுமுன் மெய்க்காட்சி
தன்னை விடயமாய்த் தானறியத் தானிரண்டு
துன்னலிலா வேகத்தாற் சுட்டறிவு கூடாவத்
தன்னையே கோவணமாச் சாத்தினதாற் போலுமதற்
கென்னையோ வண்ணநிற மென்றறியா வாலறிவோய்

அந்தமனக் கற்பனையா லன்றிப் பொருள்சேரா
முந்தூழ் முகத்துவளி யுந்து மொலியுடைத்தாய்
மிக்கநீர் வேட்கையால் வேசற் றுழல்வார்முற் சஙடு
றெுக்கநீ ரேய்ப்பத்தான் றோன்றுவறும் பேய்த்தேர்போல்
ஊருநிழ லோசையுல கோர்ந்துனைச்சோர்ந் தார்பொருளாம்
சீரை யொழித்துநிழற் சித்திரமே கண்டுகளித்
தேழிசையை யன்னவற்றுக் கின்றியமை யாமூல
ஊழிசையை விட்டோர்ந் துவக்குமதி மேதைகளாம் சச0
அன்னியமா மாயவிட யங்களிற்போன் றையமுரண்
தன்னியல்பா முண்மையிலோர் சற்றுமெழா வாற்றாலே
நள்ளிருளி னுள்ளொளியாய் நாத்திகத்து மாத்திகமாய்த்
தள்ளருமெய் யான்ம சதோதயமாந் தற்பரமே
போக்குவர வின்றிப் பொலிவுற் றொருபடித்தாய் சசடு
நீக்கமற வெங்கு நிறைந்தசுக வாழ்வே
இருளே யொளியே யிரண்டு மலாத
பொருளே யடியோம் புகலாம் பரமே
தெருளே தெருளின் றெளிவே தெளிந்த
அருளே யதீதச்சிற் றம்பலமாஞ் செம்பதமே சரு0
ஒன்றே யிரண்டே யுவைகடந்த மோனமணி
மன்றே மருந்தே மணியேவான் மந்திரமே
முன்பே முளைத்த முழுமுதலா மின்பப்பே
ரன்பே சிவமா யமர்ந்த வனந்தமே
ஒன்றுமலை தன்னையலா லொன்றுமிலை யாயவுனை சருடு
மன்ற வொருவல் மறத்தலே யாதலால்
ஒன்றுபே ரன்பா லொத்துவெங் கூற்றம்போல்
அன்றினு ராலு மதேநினைவா லெய்துறுவாய்
ஆயினுமவ் வாற்றா லடியடைதல் வன்கண்மை
ஏயவரக் கர்க்கே யியல்பி னியல்வதுகாண் சகூ0

அன்புசெய லன்றிவே றாகாவவ் வத்துவிதத்
தன்மயமெய் யான்ம சதாசிவமா முன்னே
வெறுப்பதா யுள்ளம் வியர்ப்பதுதம் மைத்தாம்
மறப்பதா மூட மதிமயக்க மாத்திரமாம்
அன்பொழுக்க மற்ற வலகைதா மாற்றாமைத்
துன்புழக்க நின்றெறிக்குந் தன்மத் துறுகதிரே
என்பிலவை வெய்யிற் கிறப்பதுபோற் றாம்பதைப்புற்
றன்பிலவை மாய்த லறக்குற்ற மன்றே
மடாதுபோற் பாவஞ்செய் வாரைநிழல் போல
விடாதுபோய்ப் பற்றும் விதியின் விளைவே
விழுத்தொழும்பர் சும்மை யெழுத்தழிய மாய்க்கும்
எழுத்தறியும் பெம்மா னிணையடியே யெண்ணமாய்
மார்க்கண்ட மாணிதன் மாறேற்ற சாவூழை
மேற்கொண்ட பத்தியா மிக்கவிர காலே
நியதி தனக்கோர் நியாமகனாந் தன்பால்
அயர்தியறு நெஞ்சத் தருளின் மதவலிகொண்
டூழா வுலைவுறா துப்பக்கங் காணவதைத்
தாழா துஞற்றுந் தறுகணார் தந்தருக்கே
ஊழென் றுஞற்றென் றுவற்றின் முதன்மூலப்
பாழுங் கடந்தகன பானப் பரசிவமே
மாயப்போர் வல்லவுண மாற்றார் மறங்கெட்டுச்
சாயப்போர் மீக்கூர் சயமதத்தாற் பொச்சாந்தோர்
திண்டிறல்காண் பிக்கச் சிறுதுரும்பின் மேலுமோர்
மிண்டிலராய் வென்றிச் செருக்கழிந்து வெட்க
இயக்கவடி வாயவ் விமையவர்முன் னிட்ட
வியக்குமதி வீரவிறல் வீங்குபரா சத்தியாய்
ஏதுக்கள் சால வெடுத்துக்கோத் தேதிலர்தாம்
சாதிக்கு மாறுபோற் சத்திசிவ மென்ன

விபாகிக்க வென்றுமிரு வேறின்றி மேவு
சுபாவத்தி லொத்த சொரூபமெய் தோன்றப்
பதியாக நின்றும் பரவம் பலத்தே
சதிராக வம்மை யெதிராடித் தன்பே
ரசலசொரூ பத்தி னகப்படவச் சத்தி
நிசரதமா மத்துவித நிட்களமாங் கேவலமாய்
மாக சிவநிசியின் மாவழிபா டேற்றருளற்
காகவே மார்கழிநா ளாதிரையின் மாலயன்முன்
சோதியுரு வாயெழுந்து தோன்றுநெடுந் தூணமாம்
ஆதியரு ணசலப்பே ரற்புதலிங் கோற்பவமே
இன்னபல வாற்று லெடுத்தெடுத்து நின்றிருமுன்
நின்னியல்பு யானிசைக்க நேர்ந்ததுமென் பாக்கியமே
யானுதய மெங்கிருந்தென் றெண்ணமற வெண்ணலால்
யானுதய மாகா விதயத்துள் யானறவே
செத்தஞ் சுணர்வகத்துட் சிக்கெனத்தற் சேர்ந்தோர்தம்
சித்தஞ் சிவமாந் திருமூலட் டானமே
ஆண்டவ நின்றன் னடியோ மெழுமையுநின்
காண்டகு செம்பொற் கழற்கே யடைக்கலங்காண்
ஓர்துளியாற் பல்வே றுலகுயிர்கள் சாந்தியுற
ஊர்கடலாம் பேரன் பொளிவெளியாங் கண்ணேயென்
றின்ன மனமொருங்கி யெண்ணித் துதித்துநிதம்
நன்னர் வழிபடூஉ நற்றவத்தோர் மாமோக
ஐயத்தி னீங்கி யறத்தெளிந்த சித்தத்தால்
வையத்தின் வான நணித்தாக வாய்க்கப்பெற்
றுண்டா னருள்வெளிக்கே யாண்டா னருணடங்கண்
டாண்டா னருளடிக்கீ ழாண்டா னருளமுதுண்
டேனந்து புன்பிறவி யோப்ந்தொருங்கு வாழ்வர்நீ
டானந்த மாக வமர்ந்து.

(நேரிசை வெண்பா)

*கோளிலறி வேநிர்க் குணமே யறிவறியா
நாளிலெனை யாண்டகுரு நாயகமே—மாளுறுமித்
தேகநா னென்னுமயல் சீத்தவருட் செல்வமே
சார்கநா னுன்றன் சரண்.

திருச்சிற்றம்பலம்

அரங்கேற்ற வெண்பா

*மங்களமா யீசுரசம் வச்சரந்தைக் கார்த்திகைநாள்
மங்களவா ரஞ்செம் மலைமுகட்டிற்—பொங்கொளிசேர்
போத ரமண புராணக் கலிவெண்பா
ஓதுமரங் கேற்ற முணர்.

௨. சொரூபத் திருவகவல்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

உருவாத் தமையோர்ந் துழலு மாந்தர்
கருவா தனைத்திரள் கடியப் போந்தவவ்
வருளுரு வத்தி னருமை யறியா
துருமடம் பட்டவ் வுடையா னுழைத்தம்
ஏழைமை யாலே யெளிய மதிசெய்
தூழின் வலியா லொழுகுவ ரேலவர்
காற்றுள போதே தூற்றிக் கொளார்போல்
ஈற்றி னழுங்கி யினைவ ராகலின்
எண்ணில பலசிறப் பியல்பொருங் கிசையினும்
உண்மையி லொன்றொடு மொட்டற வொழுகலின்
நிர்க்குண னாதியா நிகழ்த்தப் பெறாஉம்
சிற்கன வருணைச் சிலம்பின் கிழவோன்
எனாது மனத்துக் கினித்த ரமணன்
தனாதுமெய் யவன்புரி தண்ணளி யாலே
யாமறிந் தாங்கவ ரிடையுள நட்பால்
தாமறிந் துய்தி தலைப்பட விசைக்கேம்
அணுவும் பற்றா வணுவோ னயலைப்
பணியவு மகிழ்ந்து பரவவுஞ் செய்யான்
இறும்பும் பற்றா விறையோ னுடன்பட்
டிறைஞ்சினர்க் காசி யிசைக்கவுஞ் செய்யான், அதனால்

சிறியனு மல்லன் பெரியனு மல்லன்
குறிகுண மொடுபடாக் கோல வளத்தான், அதாஅன்று
உள்ளத் துணர்வுரு வாயோ னுறத்துறத்
துள்கி யுளத்தா லுணரவும் வாரான்
அம்மா தவத்துரு வாயோ னமைந்து உரு
சும்மா விருக்கத் துலங்கவுஞ் செய்வான், அதனால்
எளியனு மல்ல னரியனு மல்லன்
வெளியுரு வாமவ் விசித்திர முறையோன், பட்டாங்
குண்டென வின்றென வுருவென வருவெனப்
பெண்டென வாணெனப் பிழைபடு மலியென ௩0
உணர்வென மயலென வொன்றெனப் பலவென
அணுவென விபுவென வகமென வயலென
இன்பெனத் துன்பென வியல்செயல் வழிமுறை
என்னென வியம்பரி திறையவன் சோரூபமே.

திருச்சிற்றம்பலம்

௩. * கீர்த்தித் திருவகவல்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அசல நடத்தா லடியே னகத்துக்
குசல முசாவுங் குரைகழ லெங்கும்
விளங்கருட் சத்தி விலாசத் தாலே
களங்கமி லன்பரைக் காக்கும் பொருட்டாற்
பொன்னம் பலத்திற் புனித மாகத்
துன்னும் பலப்பல தொல்பதி தோறும்
சேய்பிணி தீரச் சிந்தை பொருந்தித்
தாய்மருந் துண்ணுந் தகைமை போலத்
திரண்ட வருள்கெழு சிற்பரை தன்னின்
இரண்டற மொன்றா யிணைந்த சிவத்தோ
டநாதி யுறவா லளித்த வுயிர்த்தொகை
இனாத பவப்பிணி யிகந்தமெய்ஞ் ஞான
அமுத வாழ்க்கை யடைவா னரும்பரன்
சமுக மேய்ந்து சயசய வெனத்தன்
நாட்டமே வாயா நடமே மருந்தாத்
தேட்டமா யுண்டு சிந்தை மகிழ
வலம்புரி யாதி யலம்பவை மாய்த்துச்
சிலம்பெழு மோசை கலின்கலி னெனவிக்
கலிகா லத்துங் காதலர் காணச்
சலியா திருந்தே சலிக்கவும் பெறாஉம்

அற்புதப் பெற்றி யாரும் பரமன்
சொற்பதங் கடந்து சுடருந் தொல்லோன்
குறியிற் சிறந்த குறிக்கோ ளாளர்க்
கறிவுக் கறிவா யவிர்ந்தே யருள்வோன்
தந்தமு ளிறைமை தருக்கினர் காணு
அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
பாவிடு மத்தகைப் பக்குவ மின்றிக்
கரவுடை வஞ்சக் கசட்டு மனத்தால்
எந்தர மில்லா வெளியெமை யாளச்
சுந்தர வேடத் தொருமுத லுருக்கொடு
தேன்மலி பூஞ்சடைத் தேவர் பெருமான்
ஆன்மநா தன்றன் னரும்பெய ராகவும்
நடையா லுயர்தமிழ் நாட்டிறை பாண்டியோ
டிடைநா டுந்தனக் கேற்றநா டாகவும்
குதிரைவா ணிகனுய்க் குலவியோன் சுழியல்
மதுரையோ டண்ணு மலையூ ராகவும்
முன்பே முளைத்த முழுமுத லிதயத்
தின்பப் பெருக்கே யாறு வொழுக்கியும்
பன்னரும் பூரணப் பயன்சால் பரம்பரன்
இன்னரு ளேதன் னெழின்மலை யாகவும்
ஏசில் புகழ்சே ரிறையவர்க் கீசன்
வாசிதீர் வாசியே வாசியா வூர்ந்தும்
எத்தகு கலைஞரு மிறைஞ்சும் புலவோன்
வித்தக மேவிறல் வீரவா ளாகவும்
போதமே யுருவாய்ப் பொலியுங் குருபரன்
நாதமே வெற்றி நவில்தவி லாகவும்
எந்தர மில்லா வந்தணர் பெருமான்
அந்தா மரைத்தா ரகலத் தணிந்தும்

தவநடைச் சீலர் தலைப்படு தெய்வ
உபநிடக் கொடிவிசும் போங்க வுயர்த்தும்
கவ்வை யெழப்பெருங் காசினி காண்குறும்
எவ்வெவர் தன்மையுந் தன்வயப் படுத்தாங்
கந்தண வடிவோ டண்ணு மலைவாய்
மந்தண மாவென் மதியை மயக்கி
எனதை யுணர்வுந் தன்வயப் படுத்துத்
தனதடி யல்லா லெனதுயிர்க் கிருப்பே
இன்மையாச் செய்த வியல்பின் சிறப்பால்
என்மயந் தன்மய மிருமய மின்றி
ஒருமய மாக வொருங்குயக் கொண்ட
பெருமித ஞானப் பிறங்கொளிப் பெம்மான்
தன்னரு ளாலே தன்பர முணர்ந்த
மன்னிய புண்ணிய மாதவ ரல்லால்
ஏனோர் தாமு மினிதுணர்ந் துய்யத்
தானே சாற்றித் தந்திடி னன்றித்
தொடுகடற் றுளியுங் கங்கைப் பேரியாற்
றிடுமணற் றிரள்வா னெறிமீ னினமும்
வையத் துதித்த மன்னுயிர்த் தொகையும்
பையக் கணக்கிடப் பார்ப்பது போல
ஓத்து முறைக்கொணு தொடுங்குமவ் வுடையோன்
சீர்த்தியை யானோ கிளக்க வல்லேன்
அனாதிமல முத்த வான்ம சொரூபமாம்
தனாதுவடி வத்திற் றடுமாற் றங்கொண்
டரும்பெரும் பாவிநா னந்தோ கெட்டேன்
இருந்தியா னென்செய் வேனென விரங்கிப்
பரிவு கூர்தலே பாவமா மன்றி
மருவிய பாவம் மற்றிலை யெனவும்

ஆதலிற் பாவமுண் டாயினப் பாவம்
சேதனத் தாலலாற் றீரா தெனவும்
ஆன்ம சொரூபமா யனைத்துயி ரகத்தும்
யானெனுந் தன்மையிற் றானெழுந் தருளலிற்
கருத்தனு ரெனத்தற் காண்டலே யறிவொடு
பொருத்தமாங் கன்மம் புலவோர்க் கெனவும்
விபத்தியார்க் கென்றுள் வினுவலே விஞ்சு
சிவத்தியா னங்கெழு பத்தியா மெனவும்
வியோகமார்க் கென்னும் விசாரமே யொன்றுநல்
லியோகமார்க் கத்தி னிராசிய மெனவும்
கன்மம் பத்தியோ கங்களுக் கெல்லாம்
தன்மய ஞானமே தான்குறி யதனுல்
அகமா வதன்பொரு ளாய்ந்தடை யமைதியே
நிகமா கமப்பொது நிண்ணய மெனவும்
ஆத லழிவுடை யகந்தைக் கணுவுமவ்
வேதமி லுணர்விய லேபொரு ளெனவும்
அவதுன் மதிசே ரகங்கெட மாய்த்தலே
சிவதன்ம மாகச் செய்தவ மெனவும்
உண்மையாந் தன்னை யொழிந்தய லொன்றும்
திண்மைசேர் தேற்றத் தின்மையின் மயலால்
மனத்தை யயற்கண் மடாஅ தொழித்தலே
கனத்த கடவுட் கடைப்பிடி யெனவும்
அமையா மனத்தையவ் வாற்று லமைத்தலே
சமயா தீதத் தலைப்பா டெனவும்
பொய்க்கண் ணெழுகிய புலப்பந் தீரவும்
மெய்க்கண் ணிற்றலே மெய்யுணர் வெனவும்
யந்திர மந்திர தந்திர மெல்லாம்
அந்தர மாகு மதீதபோ தனையாற்

சலிக்கு மனத்தைச் சலமறு மூல
நிலைக்க ணிறுத்தும் நெறியறி வித்துக்
குருவா யிந்தக் குக்கலை யாண்டு
திருவா சகம்போ லொருவா சகச்சீர்
கூடா வெதனையுங் கூட்டுவிக் குந்தன்
வாடா வருளால் வழுத்துவித் தாங்கே
புலவர் பலரைப் பொன்னடிக் கார்த்துப்
பலசொன் மாலை பாடுவித் தருளியும்
இசைவல் லோர்பல ரின்னிசைத் தேனை
நசையொடு மாந்தி நலம்பல நல்கியும்
துன்பநிலை காணார் தோய்ந்தார் தம்முளத்
தின்பவெள மடைதிறந் தேறப் பாய்ச்சியும்
கன்மம் பரமெனக் கட்டுண் டவர்க்கவ்
வன்மங் கெடமெய்ம் மாண்பை யுணர்த்தியும்
துவிதாத் துவிதப் போர்தொடா தன்பர்
அவிதாக் குரலிட வாவவென் றருளியும்
அன்பர்தம் பொல்லா வரிட்ட மனைத்துமேற்
றென்புதோ லாத்திரு மேனி யிளைத்தும்
குறியா யொழுகுங் குலவடி யார்க்குப்
பறியா மருந்தாய்ப் பழவினை பாற்றியும்
இயக்கும் பதத்தை யெண்ணி மனத்தால்
உயக்கும் பிடிவார் மயக்க மொழித்தும்
சோத்தமா யடித்தடந் தோய்ந்தார்க் கிரங்கித்
தீர்த்தமா யாணவ மாசுதீர்த் தருளியும்
சிவக்கும் படிமனஞ் சிந்திப் பவர்தம்
பவக்கம் பத்துணுக் கறப்பா லித்தும்
பழுத்த தொழும்பர் விழுத்தொழும் பேற்றுச்
செழித்தமெய்ஞ் ஞானந் திறப்பட நல்கியும்

வழித்துணை யாயடி வழிபடு வாரை
விழுத்துணை யாயுயர் வீட்டிற் கூட்டியும்
அழற்கண் ணிழுதாய்க் கழற்கண் ணுருகித்
தொழற்கண் ணுகுவா ருளத்தண் ணித்தும்
பசுமரத் தாணி யறைந்தா லெனப்பதம்
இசைவுறத் தொண்ட ரிதயத் திலக்கியும்
அன்பர் சிலர்கிரி யாணகா லத்துத்
தன்பது மக்கர மவர்நெஞ் சத்தலத்
துறுத்தியன் னாருயி ருளத்தினீங் காது
நிறுத்தியன் னார்க்குடன் நிறைபத நேர்ந்தும்
அன்றிய மனத்தா லரியும் பிரமனும்
பன்றியொ டன்னமா யிடந்தும் பறந்தும்
துருவொணா தெழுந்த சோதிப் பிழம்பாம்
திருவணா மலையாய்த் திகழ்ந்ததோ டவ்வரை
உத்தர சிகரத் தொருவருங் காணா
தத்தகு சித்தனா யானிழ லமர்ந்தோன்
அத்தட வரையி னடிக்கொரு முனியாய்
ஒத்தனை வருங்காண் குறவெழுந் தருளியும்
தனாது வடிவாய்த் தயங்குமம் மலையைத்
தனாதடி யவரொடு தான்வலம் வந்தும்
கோயிலிற் சிறப்புக் கொண்டரு ளுந்தன்
நாயகக் கோலநல் லணிகாண் குற்றெனக்
கடந்தநாட் டத்தன் கரந்தவே டத்தோ
டடர்ந்தகூட் டத்திற் படர்ந்துதான் சென்றும்
அகந்தை மோக மளாய விகற்பம்
இகந்த வியல்பா லெந்தை சிலகாற்
கூடு மடியர் குலவித் தன்புகழ்
பாடும் பொழுதுடன் றானும் பாடியும்

மாணுறப் பிறங்குமம் மலையினின் றெற்றிவாய்ச்
சேணுறப் பறந்துசென் றின்னருள் செய்தும்
புலர்தரு முன்னிராப் பொழுதிடை வல்லே
சிலர்பலர் வரைந்திடச் சின்னா ழிகைக்குள்
வாய்ப்புறக் கணபதி வாய்கொடு வடமொழி
யாப்புப் பன்னூ றினிதுவந் திசைத்தும்
பாத்துப் பதினெண் பகுதியிற் கீதை
சாத்தர் களிக்கத் தயையொடு பணித்தும்
வேறுபா டுற்ற விசேடத் தாலே
மாறு படும்பல் லாறும் பொருந்த
நானா ரெனுமெய்ஞ் ஞான விசாரம்
தானா தரத்தொடு சாற்றி யருளியும்
அடுத்தா ரொருவர்த மைய வினாவை
விடுத்தாட் கொளுமவ் வினோத முகத்தாற்
றானா ரெனுமெய் யதனொடு தன்னை
ஏனோ ரெளிதறிந் தெய்தும் புலனும்
ஒழுகிய லோசை யுறுதனிப் பாவால்
அழகிய திருவாய் மலர்ந்தருள் செய்தும்
வேற்றுநாட் டோர்சிலர் வினவிய வற்றுக்
கேற்றமாட் சியவாய் விடைகளை யிறுத்தும்
புறச்சம யத்தினர் புக்கோர் புலமிசை
வுறச்சம ரசமெய் யோதி யுணர்த்தியும்
அறவுரை வேண்டி யடைந்தார் தமக்குளத்
துறவிய லுண்மை துலங்க வுணர்த்தியும்
ஒன்றும் வேண்டா வுலவாச் செல்வமோ
டென்று முளமெய் யியல்பா முணர்வும்
இடம்படு மந்த விரண்டு மிணையெனத்
திடம்பெறு நிராசைச் சிறப்பை விளக்கியும்

எழுதாக் கிளவியை யிழுதாத் திரட்டித்
தொழுதார்க் குளமுவந் தெழுதிக் கொடுத்தும்
எதனை யெதனை யெவரெவர் வேண்டினர்
அதனை யதனை யவரவர்க் களித்தும்
சின்னத் தனமறுஞ் சீரடி யார்க்குத்
தன்னைத் தானே தான்கொடுத் தருளியும்
குணநல மிக்க குலமகார் பிதிரர்
கணமுற மீளுங் கதியே யுதவிடக்
கண்டினி தன்பிற் கரைந்தடி சேர்ந்த
மண்டிணி ஞாலத்து மக்கட் கெலாமே
வயிற்றுட் பிறவா துளத்துட் பிறந்துதான்
பயிற்றுஞா னத்தாற் பரகதி நல்குவோன்
பெற்றூர்க் கேயல பெருப்பிறர் தமக்கும்
முட்டா வெழினல முழுமதி போலத்
திகழும் பலமனைச் செல்வப் பிள்ளையாய்
மகிழின் பருளி மறுவற வளர்ந்தும்
தொட்டவை யாவுந் துலங்கப் பெறலாற்
றட்டறு மாண்பிற் றங்கக் கையெனப்
பெட்ட மனத்தாற் பெருக வுரைத்து
நட்டவ ராலே நயப்புறப் பெற்றும்
இருதுண் டகமா யிகன்றதன் கோவணம்
பொருகண் டகத்தாற் பொருத்தி யுடுத்தும்
விரகமாய் மின்னர் வெய்துயிர்ப் பெய்த
விரதமேற் கொண்ட விகிர்த னாகியும்
ஆடவர் பெண்மை யவாவு மழகன்
காடவர் வாழ்க்கை காதல னாகியும்
சூரத்திலே யெம்மைத் துறந்துபோய்ச் சூதுவல்
பரத்தைமேற் கொளுமனப் பாங்க னாகியும்

உலைத்திட லரிய வுலகியற் பந்தம்
அலைத்தெனை யடிக்கா ளாக்கி யருளியும்
என்னிலை மாறற் கிடையூ றின்றியென்
அன்னையைத் தன்சே வடிநிழற் சேர்க்குமுற்
றன்னியல் பாற்போ லென்னையு மறியா
தன்னவ டனையநு மதியளிப் பித்தும்
சோட்றி யாது துருவினேற் குத்தனைக்
காடதி லன்பொடு காட்டியும் வட்டிற்
கிலைபறிக் கெனவனத் தெனைக்கொடு போகி
உலைவறக் கண்ணைக் குவகையி னுதவியும்
உகண்டவென் னுயிருணர் வொடுக்கிநள் ளியாமத்
தகண்ட சிவா நுபவ வாலறி வளித்தும்
திருநாட் சிவராத் திரியெனத் தெரியா
தொருநாட் பட்டினி யிட்டெனை மறுநாள்
விசர்ப்புற வலம்புரி வித்தரு ணந்தனைப்
பசிப்பத மறிந்தூண் பரிந்தளிப் பித்தும்
உன்னைக் காணினை யோவென வருகின்ற
தென்னத் தன்னிலைக் கிரங்கவு மொருவனால்
உனக்குப் பிழைத்தற் குரியவோர் சிறுதொழில்
எனக்குடை யோனிட மியம்பியீ விப்பனென்
றுணர்ச்சி ததும்பமற் றொருவனா லகிலமும்
பணிச்சுப் பணிகொள்வோன் பரியவும் பெற்றும்
அவ்வவர் திறத்தா லவர்வழி யொழுகி
எவ்வெவர் மனமு மினிதுகொளை கொண்டும்
மெத்தென விசைத்தும் வெட்டென வறைந்தும்
பத்திசெய் யடியரைப் பண்படத் திருத்தியும்
தனாதடி யோராத் தான்கரு தாதே
தமாலுடை யோனாத் தான்றொழப் பெற்றும்

மேவன தன்பணி பிறர்செய விரும்பா
தாவன தானவர்க் கார்வமொ டாற்றியும்
பெறுதற் கரிய மானிடம் பெற்றோர்
உறுதற் கரிய வழுக்கா றுறவே
கறவையா யிரங்கிநாற் காலின விலங்கு
பறவையா திகள்பாற் பரிவுபா ராட்டியும்
செயல்வழி யோடிச் சித்தம் வழாதுதன்
இயல்வழி நின்றே யெலாஞ்செய் திலக்கியும்
ஏகசத் தியமா யிருந்தொளி ரான்ம
யோகசித்தி ராம யோகிக் குதவியும்
அங்கமா மண்ணா மலையி லமர்ந்தே
சங்கரா னந்த பாரதி தனக்குக்
கடவுளர் வதியுங் கவின்சா ரிமயத்
தடவரைச் சாரலிற் றரிசனந் தந்தும்
ஆலவா யலர்மே லம்மைக் கருளால்
ஏலவே காட்சியீந் தினிதுற மேலைச்
சிவபுரிக் கண்ணே சிரேட்டிசுப் பிரமணிக்
கவசரக் கோலக் காட்சி யளித்தும்
சாதன மாமெத் தகையது செய்து
மாதவ மேயினு மருவுமின் னருளாற்
புண்ணார் சடமகம் போத வெழுச்சி
நண்ணா தடியொடு நசித்திடு காறும்
கண்ணா ரமுதக் கழலின் சொருபம்
கண்ணா மூய்ச்சிபோற் காட்டியே மறைப்போன்
விழிதெரி யாவொரு கிழவிதன் கண்ணுக்
கெழில்வரு பேரொளி யிலக்கி யொளித்தும்
அசைவுகண் டுளம்பொறு தடியவ ளொருத்திசொல்
வசைமொழி தன்னை யிசையென மகிழ்ந்தும்

கடவுமன் பாலொரு கனமூ தாட்டிநல்
கடகரும் போனக மாக மிசைந்தும்
கட்டுடைத் தாகக் கருதிய தன்பணி
முட்டுடைத் தாயும் முரிந்திடை யறுஅ
தந்தணி முதலி யம்மை யிருவர்
பொங்கவிப் பூசனை பொலிவித் தேற்றும்
தென்புலத் தார்தந் திதியிற் பூசனை
அன்பர்தம் பிதிரர்க் காற்றுப வற்றொடு
வடவேங் கடத்து நெடியோன் றனக்குக்
கடவதா நேர்த்திக் கடனுமேற் றருளியும்
உண்டியோ டேனை யுறக்குஞ் சுருக்குகென்
றண்டியோர்க் குச்செய லாலறி வுறுத்தும்
சேமப் பொருள்சில சிக்கு மென்ன
யாமப் பொழுதிடை நேம மின்றி
மாச்சரி யஞ்சேர் வஞ்ச மனத்தர்
ஆச்சிர மத்து ளடைந்தா ராய்ந்து
தன்றிரு மேனி தனதடி யாருடல்
என்றிரு மருங்கு மேதப் புண்பட
நள்ளா மனத்தொடு நையப் புடைத்த
கள்வர் தமக்குங் கருணை காட்டியும்
தாபமோர் மூன்றுந் தணித்துப சாந்த
ஆர்வமார் வலர்க்களித் தருண்முழு மதியொடு
கீழொடு மேலீ ரேழுல கத்தினும்
இடைப்படி யிதயமாய் நடுப்படு ஞாலத்
துண்மை ஞான வொளிக்கதிர் பரப்பும்
திண்மை சேர்ந்த திவாகர னாகி
மந்திரங் கட்கெலா மாண்பொரு ளாக
முந்துமம் மோன முதற்குரு தனக்கே

மந்திர குருவா கிடமடம் பட்டோன்
சிந்தை தெளியத் தியானத் தெதிர்ந்து
தற்செருக் குற்றுமோ சம்போ கற்கென
எச்சரிக் கைசெய் தேதந் தவிர்த்தும்
காட்டுத் தீப்போற் கடுந்தவக் கொழுந்து
சேட்டிற் படரச் செய்தவச் சீமான்
விதண்டையிட் டெழுவார் வெறித்துரை யிற்கடுங்
கதண்டுகொட் டியநோய் கடாதுநோன் றாற்போற்
பொறுக்கொணாப் புல்லர்தம் புன்மையும் பொறுத்து
மறக்கொணா தான்றோர் மனத்தில் வதிந்தும்
மலைபெயர்ந் திடினும் வான்றுளங் கிடினும்
நிலைகலங் காவுர நெஞ்சங் காட்டியும்
இன்றியா னுண்ணே னென்றுதா னோர்தினம்
துன்றுகா டதனுட் சோதனை யீதென
இருமுறை மாத ரெழுவ ராலுமற்
றொருமுறை யிராமனா லுந்தொடர்ந் தன்பின்
வண்ண வடிசில் வற்புறுத் தப்பெற்
றுண்ணநேர்ந் தினியா னெண்ணலே னென்றோன்
நசித்த மனத்து விசுத்தமோ னத்தால்
வேண்டா தும்பல் லாண்டா யிசைந்த
வாய்வா ளாமையின் வாய்வழக் கறலாற்
பெரிதும் முயன்றுபேச் சரிதிற் பயின்றும்
சொற்குறி யற்றதன் றற்குறித் தன்மை
பொற்புறக் காட்டுமோர் குறிப்புப் பொறித்தும்
தன்னை யழைத்த வன்னை தனக்கு
நன்னர்ப் பழுத்த ஞான நவின்றும்
பூதிசேர் மாட்சி புலப்படப் பின்னர்ச்
சோதி லிங்கமாத் துலங்கத் தோற்றியும்

ஏனைய சத்தி யிரண்டினு மேம்பட
ஞானசத் திக்கொரு நாயக மீந்தும்
பண்டொரு நூலும் பழுதறக் கல்லான்
எண்டிசை மெச்சும் பண்டித னாகியும்
சாத்திர மறியாக் காத்திரன் பற்பல
சோத்திர ரேத்துந் தோத்திர னாகியும்
உருப்பெய ரொடுபடா வுண்மை மாத்திரன்
உருப்பெயர் பற்பல வுடையோ னாகியும்
செயல்குணஞ் சேராச் சின்மாத் திரத்தோன்
செயல்குணம் பற்பல திளைத்தோ னாகியும்
சமரச மாமுத் தமரச மெய்யன்
நவரச விகற்பத் துவகைய னாகியும்
ஞான சொரூபமாய் நடக்குமந் நம்பன்
மானிடத் துருவாய்த் தானடித் தருளியும்
எத்தந் திரத்தினு மெய்தற் கரியவன்
அத்த னடைவுதம் மாண்மையி னன்றெனச்
சித்தந் தெளிந்துயிர்ச் சேட்டை யொடுங்கி
எய்த்தங் கிருந்தோர்க் கெளிதகப் பட்டும்
செத்த மனங்கெழு சீரிய ரறிவாற்
சுத்த சிவமாய்த் தொழப்பெற் றாங்கே
சித்தக் களிசேர் சிறார்கல் லெறியாற்
பித்துக் கொளிபோற் பேணப் பெற்றும்
வென்றுதா மேம்பட விரைந்தோர் தன்முன்
ஒன்றுமே யுரையா தொடுங்கின ரொழியவும்
ஐயந் தீர வடைந்தோர் தன்னெதிர்
ஐயந் தாமே யகன்றன ரேகவும், அதாஅன்று
அம்மா வீதோ ரதிசய மென்னெனத்
தம்மா லொன்றுஞ் சாற்றப் படாததம்

புந்திக் கண்ணே புதைந்து கிடந்த
அந்தக் கவல்க ளநேகர்க் கடிக்கடி
தன்னுரை யாலோ வன்றித் தன்முற்
றுன்னிய வேனோர் சொலாலோ தெளியவும் ௩௬௦
இன்னே ரன்ன விறும்பூ தெண்ணில
என்னு னுந்தனக் கியைபில் லனபோற்
காந்தா சலமொடு கதிரவ னெனத்தான்
சாந்தா சலமாய்ச் சந்நிதித் திறத்தாற்
றேறுநர் நோக்காற் சித்தேச் சுரனுய் ௩௬௫
ஆறி யமைந்துதா னுற்றனு முரியன்
எழுதரு ஞான வியல்பெறு சோதி
எழுதரு சோணை யிடத்தடி யார்கள்
விழியிணை செய்தநல் வினைப்பய னுகச்
செழியவேங் கடசதா சிவனரு ளுருவுகொண் ௩௭௦
டழகுற வடைவா யமர்ந்தருள் கின்றனன்
பழகியா ரறிவ ரவனருட் பரிசே.

திருச்சிற்றம்பலம்

ச. *திருவண்டப்பகுதி

(இணைக்குறளாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அறிவாற் சிவனே யாக வகத்துள்
மறிவா லொளிர்மணி வாசகப் பெருமான்
குருந்த மரத்தின் குளிர்நிழல் வாயன்
றிருந்திறை யருளிய வியம்பரு மொருமொழிப்
பொருளநு வாதமாய்ப் புகன்றுரை செய்த
அருளநு பூதியா மண்டப் பகுதியின்
இயல்பொரு ளெஞ்ஞான் றிதயத் தூரம்பெற்
றியல்புற விடையறு தெய்துகே னடியேன்
ஆண்டா னதுபெருந் தூலசூக் குமமெய்
ஈண்டா தரத்தோ டியம்புமிப் பகுதி
உடையவ னருளி னுறுவலி யாலே
இடைமுரி வின்றி யினிதுமுற் றுகவே
அணுத்தருந் தன்மையி லையோன் சற்றும்
தணத்த லருந்தன் சத்தியி னிறைந்தோன்
உண்மையில் வேறுபா டுறுதொரு தானே
விண்முதற் பலவாய் வெளிப்பட விரிந்தோன்
அனைத்துந் தானே யானமெய்த் தன்மையை
நினைத்திங் குருகவென் னெஞ்சிடை நின்றோன்
பூவிடை நாற்றம் போலென் னுயிரின்
ஓவறு முணர்வா யொழிவற நிறைந்தோன்

மறப்பொடு நினைப்பா மிறப்பொடு பிறப்பும்
திறப்பட நீங்கிய சின்மாத் திரத்தோன்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறி புலன்கள்
உண்டுபோற் றேன்றினு மொன்று மிலாதோன்
அநேக மதங்களா மறிவறி யாச்சிறார்
அநேக விதத்தால் விளையாட் டயரச்
சேவைக் கெனப்பல பாவைத் தெய்வமோ
டியாத்தன வாம்பல் சாத்திரக் குப்பையும்
பயந்தவை தன்முற் பயில்விளை யாட்டை
நயந்துகண் ணேக்குறு நாயகக் கிழவோன்
அறிவுரு வாக வமைந்தோ னயற்சுட்
டறிவி னகப்படா ததீதமாய் நின்றேன்
மருவியெப் பொருளும் வளர்ப்போ னுருத்துப்
பருவத் தவற்றைப் பாற்றவுஞ் செய்வோன்
அரியதி லரிய வரியோ னடியர்க்
கெளியதி லெளிதா யெய்தவும் படுவோன்
ஏனேர் பாவனைக் கேற்பவாங் காங்கு
நானு விதவுரு நண்ணும் பராபரன்
நூலுணர் வுணரா நுண்ணியோ னவ்வவர்
பாலுள நாமெனும் பான்மையி னெளிர்வோன்
மேலொடு கீழாய் விரிந்தோ னன்பர்
தாலுவோ டுள்ளத் தலத்தொடுங் குற்றேன்
சொற்பதங் கடந்த தொல்லோ னன்பர்சொல்
அற்பமுங் கடவா தாணையி னிற்போன்
துஞ்சும் போதுந் துணையாய் மாடுதோய்ந்
தஞ்சுந் தோறு மபயமா கிற்போன்
கட்டொடு வீடு கழன்றேன் கற்பனைச்
சுட்டொடு சூனியந் துறந்தமெய்ச் சுடரோன்

சால்புறு மணிவா சகர்க்குக் கிடைத்த
பால்பெறு செம்பொற் பாத தரிசனம்
என்றென் கிலுமெனக் கெய்துமோ வெய்தின்
என்றுகொ லெய்தலென் றெண்ணினே னுக்கு
நாட்பல கழிவுற ஞான தயாபரன்
ஆட்கொள வென்னையுளத் தடைத்த திறத்தால்
உண்ணீர் வேட்கையா லுழலு மொருவன்
தண்ணீர்க் கங்கையைத் தலைப்பட் டாலென
நன்னு ளாமொரு பொன்னு ளதனிற்
றன்னு தரப்பெருந் தாகந் தணியச்
சீர்வளர் திருவடிச் சிந்தனை யதனுற்
பார்வள ரெனுமொரு பதிகத் தொடுபோய்
ஞானதே சிகனுய் நல்கும் பரசிவ
மோனவா ரிதியா முனிவரன் முகங்கண்
டழலது கண்ட மெழுகது போலக்
கழலது கண்ட கருத்தழிந் துருகிக்
கன்றுதன் றுயைக் கண்டது போலக்
கன்றிநின் றுள்ளங் கழலிடைத் திளைக்க
உடலம் புளகித் துவாமதி கண்ட
கடலின் மல்கிக் காதல் பெருகப்
பரையருளா லுயிர் பரவசப் படூஉ
உரைதடு மாறக் குழறிப் படித்துப்
பதிகந் தனையவன் பதத்திற் சேர்த்தலும்
ததியின் மலர்க்கண் சாத்தி யருளினன்
அந்நாட் டொட்டவ னடிக்கே யெனது
செந்நாத் துதியுரித் தாயிற் றென்க
அவனெனை யாட்கொண் டருளிய வடைவாற்
சிவனென முற்றத் தேறின னென்க

யானென தென்னு மிரண்டுமெவ் வுடையோன்
தான்றன தாக்கிக் கொண்டன னென்க
அள்ளற் சேற்றி லழுந்தினு மனமவ்
வள்ளற் பெருந்திற மறவா தென்க
அவனருள் வெளியி லடங்கலு நாடொறும்
நவநவ நாடக நடப்பன வென்க
அந்நா டகத்தை யமைவுறக் காணார்
பொய்ந்நா டகத்துட் புலம்புவ ரென்க
அவனருட் கண்ணா லறிபவர்க் கன்றி
அவனருட் பெருமை யறியொணா தென்க
அரும்பய னளிக்கு மரும்பரன் றனதருட்
பெரும்புக ழெனாற்கேட் பித்தன னென்க
வேதா கமங்களாய் விளங்குமத் துவித
போதா னந்தப் புராதனன் காண்க
ஓமுத லாய வுறுபொருண் மறைமொழி
தாமள விலவாத் தழைத்தோன் காண்க
தடம்படு சத்திச் சதுரப் பாட்டால்
இடம்பொழு தாக வியல்வோன் காண்க
தனிமுத லகர்த்தன் சத்தியொற் றுமையால்
வினைமுதல் போலவு மேவுவோன் காண்க
காயமா யெங்குங் கலந்தோன் கடுந்திறல்
வாயுவா யாண்டும் வழங்குவோன் வயங்கொளித்
தேயுவாய்ச் செவ்வே திகழ்வோன் றீஞ்சுவைத்
தோயமா யொழுகிச் சுலவுவோ னணுத்துற
மண்ணென மாணத் திணிந்தோ னிருளறத்
துண்ணென வடுகதிர்ச் சுடரோ னிரமியத்
தண்ணில வாகத் தழைத்தோ னிவற்றொடு
நண்ணிய மானனாய் நயப்போன் காண்க

ஒன்றுமுத லைந்தீ ருமுறைப் பூதத்
தைந்துமுத லொன்றீ ருங்குணன் காண்க
விசையுறு வீணையில் விசும்புறு வில்லில்
இசைநிற மேழா யிசைந்தோன் காண்க
நிலவுபல் கோடியி னிமிர்பிர மாண்டம்
குலவுதன் சொரூபமாக் கோடிக் கணக்கின்
மீப்பாய் கதிரினோர் கீழ்ப்பா லணுவிற்
பார்ப்பார் விழியெதிர்ப் படுப்போன் காண்க
தன்னை யுணராத் தமத்தின் கண்ணே
துன்னுவ தாகலிற் சுழலத் தோன்றும்
நனவுகற் பனையென நன்னர்த் தேறக்
கனவுகற் பித்த கருத்தன் காண்க
கனவுபோற் காணுல குக்கெலாம் பொருளாம்
உணர்வுமாத் திரசிவ லோகன் காண்க
வாணிலா வொளியின் மனக்கற் பனையைக்
காணலா விழியாற் காண்போன் காண்க
காண்பான் காணப் படுபொரு ளிரண்டையும்
காட்சியாந் தன்னுட் கரப்போன் காண்க
இதயஞ் சாரயா னென்பதன் பொருளாய்ச்
சததஞ் சுடர்பரந் தாமன் காண்க
உணர்வுடை யுள்ளமா யுயிர்க்கெலா நின்றும்
உணர்வுடை யோர்களே யுணர்வோன் காண்க
ஊழி முதல்வனு யுள்ளோ னுருப்படு
கேழிலா வுண்மைக் கேடிலி காண்க
தழுவிய தற்பர சச்சிதா னந்தப்
பழமுத லாய முழுமுதல் காண்க
புன்புலை நாயினைப் பொன்னடிக் காண்டபே
ரன்புடை வண்மைசே ரடிகள் போலும்

பொய்யறவன் றென்னைப் பொதுநீக்கி யாண்டவர் தாமோ பிற-
ஐயுறநின் ஞருமின்றவ் வையர் போலும் [ரோவென
பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன் கஙரு
நாலுக்குஞ் சான்ருய் நடப்பான் போலும்
நச்சுறு தீதொடு நன்றெஞ னன்பர்
அச்சுறு நடுநிலத் தமர்வான் போலும்
பிள்ளை தனையழக் கிள்ளியும் விட்டுத்
தொட்டி றனிலுமிட் டாட்டுவான் போலும் கசO
உண்மையி னுள்ளத் துறுதி பயப்பினும்
மண்மிசை யன்பரை வருத்துவான் போலும்
அன்பர் வருத்தங் காண்டலு மோர்வகை
இன்ப மவன்கொள வேதுவாம் போலும்
துதித்திடு திருப்பணித் துறையினன் கூக்கி கசரு
எதிர்த்தடை யுந்தா னிழைப்பான் போலும்
இருட்புலங் கீண்டுதன் னிணையடிக் காண்ட
அருட்பெருங் கிழமைக்கீ தறிகுறி போலும்
நியதியின் வழியே நிகழ்ந்ததோர் செயலின்
அயர்தியுண் டாக வாயிடை யாற்றும் கருO
பரிசறி யாத பதத்தி னிரங்கியோர்
உரைதர வும்பற் றுளஞ்செய்வான் போலும்
அடித்துணைக் காட்பட வயலார்க் குரைக்க
எடுத்துக்காட் டாவது மிதுவே போலும்
சோதித் தறியொணுச் சூதனுந் தன்சூ கருரு
தோதப் படாமதி யூகி போலும்
குறிக்கொணுத் தனது குறிப்புநிறை வேற
மறிக்கொணுச் சூழ்ச்சிவன் மாயன் போலும்
அவன்கருத் தாழ மகல்விசும் புடைய
தெய்வக் கருப்புல வருந்தெரி வரிதெனிற் கசூO

கூழை யுறுசிறு மோழை மதியுடை
ஏழையோங் களுக்கஃ தெணமிட லெளிதே
மறவோர் தம்மை மடிக்கும் போதுசில்
அறவோர் தமையு மடர்ப்பான் போலும்
நல்லார் தமையு நடுங்கக் காண்டலவன்
பொல்லா மாயைப் புணர்ப்புப் போலும்
பிறர்மனப் பான்மையைப் பேணி நடிக்கலுற்
றுறுமகிழ் தரல்போன் றுளைவிப்பான் போலும்
தன்பா லருளே தமக்குறு தஞ்சமென்
றன்பா லீடுபட் டடைந்தோர் பிழைபல
செய்தன பொறுப்போன் செயாப்பிழை யொன்றைமேற்
பெய்துள னைந்திடப் பேசுவான் போலும்
ஏனையோர் கூறி யிருப்பினப் பேச்சினில்
ஆனவோர் கூறுமே பித்துரை போலும்
பித்த னெனச்சொல் பெரும்பெயர் வேட்ட
உத்தம னுக்கஃ தொத்ததே போலும்
அழித்தலுங் காத்தலு மருள்போற் செயுநெஞ்
சழுத்த முறுந்தனக் கழகிதா மென்னப்
பொங்கு முருத்திர மவற்கப் போதினில்
எங்கிருந் தோவந் தியைவது போலும்
அந்தக் காட்சியை யருகுறக் கண்டோர்
சிந்தை குலைந்து திகைப்பர் போலும்
அச்சில காலவன் றிறத்துப் பயில்வரி
துய்த்துணர் வார்க்கு முளப்படப் போலும்
இன்மை யுண்மை யென்னும் பேதம்
புன்மையேம் நோக்கொழிந் தின்றும் போலும்
உண்மை யதனையு முளத்தோ டமையா
தெண்மையி னுரைத்த லிழுக்குப் போலும்

எல்லா நிலத்து மெவர்க்குமெஞ் ஞான்றுமோர்
வல்லான் வகுத்ததே வாய்க்கால் போலும்
ஒருக்கியுள் ளேயடிக் கொடுக்குமுன் வாயைப்
பெருக்கிவல் லாட்டம் பேணுவான் போலும்
தன்பதங் கதியாச் சரண்புகுந் தாரை
அம்பலத் தாட்டி யலைப்பான் போலும்
புணர்ச்சியின் பத்தினும் போதப் பிரிபரி
வுணர்ச்சித் துன்பமே யுறுத்துவான் போலும்
காதலர் துன்பங் கண்டுங் காணு
தேதலர் போறலு மியல்பே போலும்
விதிவழி யடியரை விடலுமிப் பொழுதொரு
புதுவழி யாகப் புணர்ந்தனன் போலும்
பழகிய வடியர்தம் பண்புசோ தித்தலும்
அழகிய திருவிளை யாட்டுப் போலும்
அணுக்கத் தொண்டரை யாள்பரி சிதுவேற்
பிணக்குத் தொண்டர்தம் பெற்றிமை யென்னும்
அடியார் தம்முள் வேற்றுமை காணினும்
கடியான் கரியாய்க் காண்பான் போலும்
திருத்தலு மவரைப் பொருத்தலு மின்றி
இருத்தலே யிறைமைக் கிலக்கணம் போலும்
இகலில ராயெஃ குடையோ ராயடிப்
புகலவர் வாழ்தலும் பொல்லாங்கு போலும்
தாயினைத் தணவாச் சேயினம் போற்பல்
ஆயிரக் கணக்கா மன்பரெப் போதும்
தென்முக நோக்குந் தன்றிரு முன்னர்த்
தன்மய நிட்டை சாரவேண் டாவோ
அதற்குத் தடையுண் டாயினத் தடையை
ஒதுக்கக் கடமையு மொழிந்தது போலும்

அம்மா வதிசய மசலமு நாணச்
சும்மா வதிதலோர் சொரூபம் போலும்
அரும்பெரும் புலவ ரநுதினம் போற்றித்
தரும்பிர சச்சுவைத் தண்டமிழ் நுகர்வோன்
வெவ்வே ருந்தன் வியன்குணத் தடியேன்
இவ்வா றுஞ்சில வியல்பெடுத் துரைக்கத்
தீம்பா லிதநிதந் தெவிட்டப் புசிப்போன்
ஏம்பலாய்ப் பழம்புளிங் காடியிச் சித்தாங்
குரிமையா லுரைத்ததை யுவகையா லேற்ற
அருமைசே ரென்னுயி ரம்மான் போற்றி
அந்தர மாக வதீதமாய் நின்ற
கந்தழி யாய கடவுள் போற்றி
எண்ணிறந்த சமயத் தெண்ணிறந்த பேதக்
கண்ணிறந்து நிற்குங் கடவுள் போற்றி
வளம்பெறு சத்தி வதிநில மாந்தன்
உளம்பர வெளியா யுள்ளோன் போற்றி
அங்கயற் கண்ணி யகடா மிதயப்
பங்கயக் கண்ணியல் பரமன் போற்றி
உடங்கு தனைமக னொடுபிதா வாவுடை
மடந்தை தனக்கு மணாளன் போற்றி
இடனுடை ஞானத் திலாவுல கெதிர்தலிற் சத்தியை
உடனொடு வேறுமா யுடையோன் போற்றி
மாணுடை வடிவத் தேறுமா றுக
ஆணொடு பெண்ணு மடைந்தோன் போற்றி
ஆணொடு பெண்ணு மடையினுந் தானவ்
வாணொடு பெண்ணு ளடங்குறுன் போற்றி
அட்டமூர்த் தங்களோ டமூர்த்தமு மாகிச்
சுட்டயார்க் கும்படாச் சுடர்வெளி போற்றி

இருவரன் றறியார் வெருவரும் படிநீண் உசரு
டொருபரஞ் சுடரா யொளிர்ந்தோன் போற்றி
கல்லா லடியிற் றுபதர் காணச்
சொல்லா துண்மை துலக்கிமோ னத்தாற்
றன்மய நிட்டை சதுர்படக் கொளீஇத்
தென்முக மாகத் திகழ்ந்தோன் போற்றி உரு௦
வென்றிசேர் வித்தக வேடங் காட்டி
அன்றுபோ லின்றுநன் கருள்வோன் போற்றி
ஆவிக் குகந்தபே ரார்வ ரமணனென்
நாவுக் கருங்கல நாமன் போற்றி
ஊனுயி ரொடுபட் டோரம் போக்குறும் உருரு
நானென தறுநடு நாயகன் போற்றி
உலகுறைந்து நின்றே யுண்மையிற் றுனவ்
வுலகிறந் தொளிருணர் வுருவோன் போற்றி
யதிகள்பன் னூறு யிரர்பணிந் தேத்தும்
அதிவன் னுச்சிர மாரியன் போற்றி உசு௦
யோக மெனும்பே ரொளிப்பிழம் பார்தரு
தேக முடைச்சிவ யோகி போற்றி
நளிகடல் போலக் குளிர்கண் ணோக்கால்
ஒளிபடர் ஞான முதவுவோன் போற்றி
புன்னகை நிலவின் பொங்கொளி யாலே உசுரு
துன்னக விருளறத் துரப்போன் போற்றி
பாவணங் காட்டியிப் பதகனைத் தன்னடிக்
காவணங் கொண்டென வாண்டோன் போற்றி
வானவர் காணு மலரடி யெமக்காய்
நானில மீது நடந்தோன் போற்றி உஎ௦
பொய்க்கன வதனைச் சிக்கெனப் பற்றி
மிக்கன செய்த வீணனேன் றன்னை

உண்மை நெறிக்கே யொழுகுவித் தாண்ட
திண்மைசேர் ஞான தேசிகன் சேர்ந்தோர்
தாரதர நோக்காத் தண்ணளி யாலெனை
நிராகரி யாதுயக் கொண்டோன் போற்றி
பொறிவாயி லைந்தும் பொன்றுவித் துண்மை
அறிவா யிலங்குபே ராசாய்த் தூவெண்
மதியக் குடையா மனநிழல் கவிக்க
இதயத் தவிசில்வீற் றிருப்போன் போற்றி
தாயைக் கரந்துசூல் சாரா திலகுமம்
மாயக் கருமுதற் ருயகம் போற்றி
நெஞ்சைக் கரந்தொரு வஞ்ச மிலாவந்
நெஞ்சக் கரியாய் நிகழ்வோன் போற்றி
சுத்தசூ னியமாய்த் தொலைந்த மனத்தாற்
பித்தர் தமுட்பெரும் பித்தன் போற்றி
நயன்பட யாரு நவிலா துணர்ந்த
பயன்கெழு மாமறைப் பட்டன் போற்றி
சோதி யனைத்துமாய்த் துலங்குமெய் யிதய
சோதியா மான்ம சொரூபன் போற்றி
சொன்மலி தெய்வத் தொகுதி யெலாமே
தன்மய மாகத் தரித்துநின் றதனால்
நினைத்துப் பரவுவார் நினைவினுக் கேற்ப
அனைத்துக் கடவுள ராகவுந் தானே
தோற்றி யவர்க்கத் தொண்டர் செயும்பல்
போற்றியுங் கொண்டருள் புரிவோன் போற்றி
பேத மதியறப் பேர்ந்தவப் பெற்றியே
ஓர்தரு போற்றியா வுவப்போன் போற்றி
உளப்புண் டரிகத் துணர்வுரு வாய்மதி
அளப்பின் கரைகடந் தமர்ந்தோன் போற்றி

செறிதற் கருமுளஞ் செறிந்தறிந் தாரும்பின்
அறிதற் கரியசீ ரம்மான் போற்றி
ஆவணு னதுவெனு மநுசந் தான
பாவனு தீதப் பரம்பொருள் போற்றி
தன்னருட் கண்ணுற் றரிசிப் பார்க்கலால்
இந்நிறத் தானென வியம்பொணுன் போற்றி
அக்கணு ளுள்ளவா றறிந்தார் தமையும்
தொக்கசூ தூமராத் தொலைப்போன் போற்றி
உரைப்பா ருரையொடு பாடுவார் பாட்டும்
தரைப்பா லாகித் தழைப்போன் போற்றி
நாவலர் நாவொடு நானிலத் துயர்ந்த
பாவலர் பாவையுந் தகைவோன் போற்றி
ஒத்த கருத்துடை யுத்தமத் தொண்டராம்
பித்தர் கூடிப் பிதற்றுவோன் போற்றி
சத்துவ குணத்தார் தலைப்படு சுத்த
தத்துவ மாந்தனித் தலைமகன் போற்றி
சுடச்சுடர் பொன்போற் கடுந்தவத் தாலே
அடச்சுடர் கின்ற வரும்பரன் போற்றி
அருவிநீர் போலிடை யறுத்தியா னத்தால்
மருவியார் பிரியா மாண்போன் போற்றி
இடையறு வார்வத் தேய்ந்து பதமலர்த்
தொடையறு வமுதஞ் சுவைத்துமேன் மேலும்
அருந்துமா னந்த வடியவர் மாட்டுப்
பொருந்தநா சாரம் பொறுப்போன் போற்றி
அடியார்க் கடியனு யாண்டெனைத் தன்னடிக்
குடியாக் கொண்டநற் கோமகன் போற்றி
சிறவா வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழு
கறவோ னுமெய் யந்தணன் போற்றி

ஓதிய மூன்றுகொண் டொன்றே கொடுத்திரண்
டேதியங் காணுநல் வாணிகன் போற்றி
பாங்கர்த மேவற் பான்மையோ டொழுகலின்
நான்கா மவனுமாய் நடப்போன் போற்றி
விஞ்சை மறையோன் வேள்வியி னவிவிருந் துண்ட
பஞ்சம நாதப் பறையன் போற்றி
அவத்தவாழ் வாசை யற்றடித் துணைக்கே
சுவத்தராய் வாழ்வோர் துணைவன் போற்றி
குணங்கள் போற்றியுங் குற்றங்க டூற்றியும்
வணங்கிவாழ்த் துநரை மல்கியோன் போற்றி
அவதுன் மதிசே ரகங்கெடத் தவமாம்
சிவதன்ம மோதுமெய்த் தேசிகன் போற்றி
சடில மதிப்பிறை தான்கரந் தெனது
குடில மனத்தைக் குலைத்தோன் வாழ்க
வீறெழு நுதல்விழி வெளிப்படா தொளித்துத்
தேறென வுண்மை தெரித்தோன் வாழ்க
நீறணி நெற்றி துலங்கப் பிறவிப்
பேறெனை யுறுத்திய பெரியோன் வாழ்க
ஊனவாழ் வொழிய வொழிவில்பே ரின்பமெய்ஞ்
ஞானவாழ் வுவந்து நல்குவோன் வாழ்க
கருக்குழி வீழ்ந்தார் கடுகவீ டேறச்
சுருக்கு வழிதான் றுலக்குவோன் வாழ்க
நினையா நினைவொன் றினையார் வலர்க்கு
வினைதீர் தரவருள் வேதியன் வாழ்க
இம்மையே யம்மை யின்பம் பயக்கும்
மெய்ம்மைசேர் ஞான விநோதன் வாழ்க
கொய்யா வுளமலர் கொண்டணை வார்க்குப்
பொய்யா மெய்யருட் பூரணன் வாழ்க

அயாமோக மற்றவி ரான்ம சொரூபமாம்
தயாமூல தன்மத் தத்துவன் வாழ்க
பிண்ட மதனைப் பிரிந்துமற்
றண்ட மதனைக் கண்டோ ரின்மையிற் ௩சுo
பிண்டமே யண்டப் பெட்பென வுரைத்தும்
சித்த மதனைத் தீர்ந்துமற்
றத்தநு புவன மறிவரி தாகலிற்
சித்தமே யவற்றுமெய்ச் சீரென வுரைத்தும்
சித்தை யொழியத் தேர்ந்திடிற் ௩சுரு
சித்தமென் றொன்று சிறிது மின்மையிற்
சித்தே சித்தத் திறமென வுரைத்தும்
அந்தச் சித்தே யவிர்பர மாந்தன்
சந்தத் திருவடித் தத்துவ மெனவே
அந்தக் கழலே யனைத்துமென் றுரைத்தும் ௩எo
அண்ட பிண்ட சராசர மெல்லாம்
அண்டருங் காண்ட லருந்தன் கழற்கே
தோன்றிநின் றொடுங்குந் தொல்வர வதனை
ஆன்ற வருள்விழி யாலே காட்டிக்
கன்மத் திமிரங் கலந்த வகங்கெடத் ௩எரு
தன்மெய்ப் பரவுரு வென்னுளத் தொளிரப்
பத்தித் திறமில் பதரனை யேனை
முத்தித் திறமுற முயங்குவித் தருளினன்
அண்ணா மலையினே ரந்தண னாகிக்
கண்ணா ரமுதவேங் கடமுத லோனே. ௩அo

திருச்சிற்றம்பலம்

ரு. வைராக்கியத் திருவகவல்

(நேரிசையாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

பண்படு வினைஞர் பலபடப் புனைந்த
கண்கவர் காட்சிமேற் காதலு மின்றே
ஊழ்கொள வியலி யொழுகுதே னொத்த
யாழ்குழ லிசைமே லிச்சையு மின்றே
நறுமண மிக்கு நடைபெறும் பற்பல
அறுசுவை யுண்டிமே லவாவு மின்றே
அரைபடு சாந்தகி லாதி யாய
விரைபல வற்றில் விருப்பமு மின்றே
வன்றோ ளாடவர் மான முடைப்பார்
மென்றோட் டுயில்வாய் வேட்கையு மின்றே, இன்னணம்
ஐம்புல நுகர்ச்சி யடங்கலு மெச்சிற்
றம்பல மாகத் தவிர்ந்தது மல்லாற்
கடம்படு யோகக் கருவி யாய
உடம்பினு மோகை யொழிந்தது மாதோ, அதா அன்று
வள்ளுவர் முற்சில வண்டமிழ் நூலிற்
றெள்ளிய வாசையுந் தீர்ந்தது மன்னோ, எனினும்
திண்மை யாகத் திணிந்தபே ராசை
உண்மையா யிரண்டொன் றுளவா கும்மே, அவைதாம்
தேவரு மெய்தாத் திருவடி யுறையோ
டோவலில் லாத வுபசாந்தி தாமே, அதனால்

கருவ ரலாற்றுக் கடுந்துயர் தம்மால்
வெருவ ருலுற்று மேவு வோரைப்
பருவ ரலாற்றும் பற்றறச் சுட்டுத்
தெருமர லொழிக்குந் திருவருட் செல்வப்
பெருமித மிக்குப் பிறங்கிடு மோன
குருவர ரமணக் குரிசில் கேளாய்
குடும்ப வாழ்க்கை கொடுஞ்சிறை தன்னின்
இடும்பை யாக வெய்திய வாற்றூற்
கள்ளப் படிற்றுக் காரிரு ளோட்டி
உள்ளத் துணர்ச்சி யுரம்பட வுதவிப்
படிமிசை மோனப் பயன்சால்
அடியுறை வாழ்க்கை யளித்தல் கடனே.

திருச்சிற்றம்பலம்

௩. பிரார்த்தனைத் திருவகவல்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

எழுகடல் சூழ்ந்த விப்புவி தன்னில்
மழையாய்ப் பெய்து மன்னுயிர் தமக்குப்
பிழையா விளையுள் பெருக வாக்கி
வழிவழி வாழ்விக்கும் வள்ளால் போற்றி
அரிய வுண்டியு மடையுங் காயும்
பருகு நீருமாய்ப் பவித்தாய் போற்றி
ஒன்று முதலா றுணர்வுடைத் தாய
தொன்றுயிர் யாவுமாய்த் துதைந்தாய் போற்றி
மண்முத லைந்து மதிகதி ரியமான்
எண்முத லுருவா யியைந்தாய் போற்றி
முற்படு விசும்பு முதற்பல வற்றிற்
பற்பல குணமாய்ப் பரந்தாய் போற்றி
குணங்குறி யாவுமாக் குலவியு மந்தக்
குணங்குறி யிகந்தநிர்க் குணனே போற்றி
அயன்முத லவரை யைந்தொழிற் படுக்கும்
வியன்முத லாய விழுப்பொருள் போற்றி
சுதியின் கேள்வித் துறைபோ யுயர்ந்த
விதியுந் தேரா விபவா போற்றி
பற்றறச் செற்ற பவித்திர ரிதயப்
புற்றிடங் கொண்ட புனிதா போற்றி

பொன்னுறு பணிபோற் பொருள்பற் பலவும்
தன்னுரு வாகத் தழைத்தாய் போற்றி
தான்றா னாகிச் சராசர நடைக்குச்
சான்றா விளங்குஞ் சதுரா போற்றி
அச்சரா சரந்தன் னறிவி னிலாமையால்
அச்சான் றக்கு மதீதா போற்றி
அகில புவனமு மடுக்கவல் லோரும்
அகிலபூ தங்க ளடக்கவல் லோரும்
எண்ணிய வுடலை மெடுக்கவல் லோரும்
நண்ணுருக் கரந்து நடக்கவல் லோரும்
இறந்தகா லத்து மெதிர்கா லத்தும்
உறழ்ந்த மேல்கீ ழுலகங் களினும்
இயலுஞ் செயலோர்ந் தியம்பவல் லோரும்
அயலார் நினைவை யளக்கவல் லோரும்
இன்னோ ரன்ன விருத்திக ளிமையிற்
பன்னா றாயிரம் பயிலவல் லோர்தம்
பொன்றா வலியெலாம் பொன்றக் கெட்டு
முன்றாழ் கின்ற முன்றி லாள
இருமை மும்மை யிடம்பெறா தேங்கும்
அருமை பெருமையார்ந் தவிருந் திருவடி
சத்துவ குணத்தாற் றலைப்பட் டதனாற்
றத்துவந் தம்முட் டலைப்படு மடியார்
மற்றைக் குணத்தின் வயப்பட் டகந்தைப்
பற்றை விடாதயல் பார்ப்பார் மதியை
மயலாச் செய்யும் மாயா விலாசச்
செயலாம் பற்பல் சித்தி களைத்தாம்
பேத மதிகொடு பேணுவ ரேலிறும்
பூது பயக்கும் புதுமை யதுகாண்

கண்டமா யொன்றுங் காணா ரவற்றைப்
பண்டமா யெண்ணிப் பதறலு முண்டே
ஈடு மெடுப்பு மின்றி யெழுந்த
வீடும் வேண்டா விறலோய் போற்றி
வளர்பசுந் தருவின் குளிர்நிழல் வாய்ப்பத்
தளர்வறத் தங்கித் தடையறு வாற்றாற்
பொருவறு போகம் புலோமசை பாற்புணர்ந்
திருவிசும் பாளு மிந்திர ரமிழ்தப்
பிழியுங் கைத்துப் பிறக்கிட் டொழியக்
கழியும் மதுரக் கனியே போற்றி
போகமாத் தன்னைப் பொருந்தினார் மதியைப்
போகமாப் புசிக்கும் புங்கமே போற்றி
விழிவாய் விளங்கும் விளக்கமா யுள்ளத்
தொழிவற நிறைந்த வுணர்வே போற்றி
பின்னிய மாயைப் பிறவிக் கடலின்
மன்னுயிர் தம்மை மாணடி புணையாய்
மீகான் போல மீட்டித யத்தே
ஏகான் மாவா யிலகுதி போற்றி
எவ்வெத் திறத்தா லெய்தின ரவ்வவர்க்
கவ்வத் திறத்தா லருளுதி போற்றி
ஆருயி ரதனுக் கதன்மெய்ப் பொருளாம்
பேருயி ராகப் பிறங்குவ தல்லது
தற்சார்ந் தோர்க்குத் தணத்தற் கரிய
மெய்ச்சார் பொன்றும் மேவா மையினால்
எந்த நெறிக்குளு மேய்ந்ததோ ருண்மை
அந்தச் சொரூபமா யருளுதி போற்றி
கழல்புனை கஞ்சங் காண்டொறு நினைதொறும்
அழல்படு மெழுகா யகங்குழைந் துருகி

அழுதழு தாற்றி யுடல்கம் பித்துத்
தொழுதெழு மடியார் பிறவித் துயரைத்
துண்ணெனச் சுடுதழற் கண்ணா போற்றி
விண்ணினு நுண்ணருள் வெளியே போற்றி
பொன்றுஞ் சடமாம் புலைக்கா யத்தை
நன்றென நானா நயந்த வகத்தைச்
சோதியா முன்றன் சொரூப நெருப்பாற்
பூதியாப் பொன்றப் புரியுமுன் னெந்தாய்
ஆழி யகத்தே யமர்வட வைப்பே
ரூழிக் கனன்மே லுருத்தெழுந் தாற்போல்
அழலுமுத் தாப மாற்றா துன்றாள்
நிழலை நாடினே னெஞ்சங் குளிரத்
தலையளி யாமுன் றண்ணருண் மாரி
உலைவறப் பெய்திங் குதவுதி போற்றி
அடப்பட லன்றி யறிஞரால் வேண்டித்
தொடப்படு மோவித் தொல்லைப் பிறவி
படப்படா வெந்துயர்ப் பவ்வமா மதனைத்
தொடப்படா தாயினுந் தொட்டே னுன்பணி
கடப்பதன் றெனநின் கனவரு ளென்பால்
நடப்பதுண் டென்ன நம்பினா யடியேன்
உடற்பொறை யாற்றா தோலிடு கின்றேன்
விடப்படு வேனலேன் விழுமங் கூர்ந்தேன்
உடற்பொறை கழிய வுத்தம சாந்திக்
கடற்புக வமிழ்த்திக் கரைப்பாய் போற்றி
காற்றா லியங்குங் காய்ந்த சருகாய்
ஏற்றாய் பணிக்கே யிருத்தாய் போற்றி
உன்னடி யன்றி யுறுதுணை மற்றெனக்
கிங்கில முற்றினு மில்லை போற்றி

தன்புல வுண்மை தானறி யாது
புன்புல வழிப்போம் புலைமனப் பேயை
இன்பப் புணரியா மிதய சொரூப
நின்பொன் னடிவாய் நிறுவிக் காத்தல்
எளியேன் றனக்கஃ தரிதே யாயினும்
அரியோய் நினக்கஃ தெளிதே யன்றோ, அதனால்
போற்றிவல் லாள போற்றிகண் ணுள
தேற்றி மனத்தைத் திருப்பித் திருவடி
விமலமெய்ஞ் ஞான விசும்பா மிதயக்
கமலவண் டேனுகர் களியளி யாகப்
புரிந்தருள் செய்யாய் புத்துயிர் பெறநான்
பரிந்தருள் செயலுன் பாரம் போற்றி
அற்பனென் செயலென் னறிவா னந்தத்
தற்பர ரமண தயாபர போற்றி
சொருபமா முன்றாட் சுவையுண ராது
மருவிக் கிடந்தவீண் மண்டுக மானேன்
*பிரார்த்தனை யிதுகாண் பெரும புனன்மருட்
டுராத்துனைத் தேரா முருவெளி யுலகின்
விண்மை போலுமவ் வெறுங்கற் பனையற
உண்மைசே ருன்னரு ளொளிநா டுற்றேற்
கெவ்வெது நோக்கினு மவ்வத னூடுநின்
செவ்விய சொரூபத் திறந்துலங் குறவே.

திருச்சிற்றம்பலம்

---

*இவற்றுள், முன்னிரண்டடிகள் மாற்றவும், பின்னான்கடிகள் சேர்க்கவும் பெற்றவை.

எ. *வேட்கைத் திருவகவல்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

பொன்மய வணிகளே போல வடங்கலும்
தன்மய மாகத் தழைத்தவத் துவித
துயர்க்கா ரணமாந் துவிதத் தோற்ற
மயக்கான் மருண்டு மங்கல மாந்தன்
பதமியா னயர்த்துப் படருறச் செய்த
புதுமையா மாயப் பொல்லா வவிச்சை
இருள்கரந் தோட வெதிரெழுந் தருளி
அருள்சுரந் தாண்டவென் னுருயிர்த் தலைவ
கற்புடைப் பெண்டுதன் கணவனை யன்றிமற்
றற்புடைப் பத்தியின் வழிபட லாற்றுத்
தொடர்பா லுன்னடி தொட்டத னின்றும்
கடவா தொழுகக் கடவே னுக்கு
மூர்த்தியு நீயே தீர்த்தமு நீயே
நலமுறு மிக்க தலமது நீயே, அதனால்
மூர்த்தியா யுன்னடி முன்னித் தொழுதும்
தீர்த்தமா யாடித் திளைத்துஞ் சீர்த்தல
வாசமா யாங்கே வதிந்தும் முழுமன
நேசமா யெல்லா நியமமு முனக்கே

பூண்டுநின் றன்னுட் பொலியவெந் நாளும்
வேண்டுநின் னடியேன் வேட்கையீ டேறப்
பாங்குடை யிவ்வரம் பாலித் தருளுதி
வேங்கட ரமணமெய்ஞ் ஞானவிண் மணியே.

திருச்சிற்றம்பலம்

அ. உபதேசத் திருவகவல்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

கடல்சூழ் வளாகக் காசினிக் கண்ணே
அடல்சேர் காரறி வாளரென் போலக்
கிடையா மையினக் கிரதாம் பூலம்
உடையே னெனைத்தா னுந்தெரி யாதேன்
கல்லா விலங்கிற் கடையா மொழுக்கம்
பொல்லா மனத்துட் பொதிந்து கிடந்தேன்
மக்கண் மாண்பை வளர்க்கப் பிறந்தோன்
மெய்க்கண் ணின்று விழுப்புகழ் பெற்றோன்
அன்பெனுந் தெய்வ மவதரித் தாற்போல்
மன்பதைக் கெல்லா மகிழ்ச்சி யளிப்போன்
நாட்டுக் குறுதி நல்குவான் போன்றுயிர்
வீட்டுக் குறுதி விளக்கும் பெருமான்
எழில்சேர் காந்தி யெனுந்தன் பெயரைக்
கழிபே ருவகையாற் காதாற் கேட்டோர்
திக்கு நோக்கித் தெண்டனிட் டிறைஞ்சத்
தக்கமகான் மாவைத் தலைமையாக் கொண்டு
நல்லோர் பற்பலர் நாட்டுநன் மைக்காச்
சொல்ல வொணாவெந் துயருழப் போர்ந்தும்
துப்புர வெல்லாந் துறந்துமுன் னோடி
ஒப்புர வாற்றி னெழுகா மடவேன்

பயிலக் கடவ பலசா தனத்துள்
உயிருக் குறுதி யுண்மையென் றோரேன்
மனத்தொடு வார்த்தை மாறா வசனித்
தனர்த்தமாச் செய்தே னடைத்தவா ணாளை
வாயா லன்பை வழங்கிய தன்றி
நேயமா யொன்றை நீட்டி மகிழ்ந்திலேன், இன்னணம்
நன்னிதி யாக நவைத்திர ளீட்டித்
துன்னிய சோங்கிற் சுமந்துவெம் பிறவிக்
கேதமாங் கடலிற் கிடந்துழல் வேனை
ஏதுவேண் டாத வியல்பாந் திருவருட்
போதமாந் தாம்பாற் பொன்னடிக் கார்த்துப்
பேதமா யைத்துயில் பேர்த்துக் காத்தாய்
எத்துணை யிழிந்த விழிசெயல் செயினும்
அத்துணை யும்பொறுத் தன்பினா லாற்றி
நாயினும் பொல்லா நடையனென் றிகழ்ந்து
சீயெனத் தள்ளா தாயின செய்யும்
தாயெனப் பரிந்து தந்தையாய் மேவி
நீயெனக் கன்பாய் நிகழ்த்திய கட்டுரை
நில்லா தவற்றை நிலையின வென்னக்
கல்லா வறிவாற் கலங்கி யவற்றிற்
பேயாய்த் திரியும் பேதையே னெண்ணி
வாயா லம்மா வழுத்தவும் படுமோ
ஆண்டவ னாயே னடிக்கடி செயும்பல்
வேண்டுகோ ளொன்றும் வீணா விளியா
தியற்பா சுரம்பல யாப்புடைத் தாகப்
பயில்வினை யாட்டாப் பகர்ந்ததோ டடியேன்
ஆர்த்தியை முன்னிட் டான்ம வித்தைக்
கீர்த்தனை யொன்றுங் கிளந்தனை போற்றி

ஏகமெய்ஞ் ஞான ரவிசந் நிதியிற்
கூகை போலக் குருடாய்ப் பகலே ௫௦
அருடரு நோக்க மடைபட் டகந்தை
இருடரு நெறிக்கண் ணேகிய ஞான்றவ்
விருடி கணத்தோ ரிறுமாப் பழித்துப்
பொருடனை யுணர்த்தநீ புரிந்தபோ தனையை
அனுவா தத்தா லடியேங் களுக்கோர் ௫௫
†பனுவ லாகவும் பயந்தனை போற்றி
அவற்றுட னில்லா ததற்பினு மடியேன்
பவத்தொடக் கறுக்கும் பரிசுரைக் கென்னக்
கள்ள வகந்தைக் கட்டறு மாறும்
உள்ளது தானு யொளிவிடு மாறும் ௬௦
தெள்ளிதி னுணர்த்துந் திப்பிய நூலாம்
உள்ளது நாற்பது முதவினை போற்றி
அவாவே பிறப்பவ் வவாவை யறுத்தலே
தவாப்பே ரின்பந் ததும்பிய வீடெனக்
குருவாய் வந்தென் குடிமுழு தாளத் ௬௫
திருவாய் மலர்ந்தருள் செய்தாய் போற்றி
பற்றற நின்றவப் பற்றைப் பற்றுறப்
பற்றுக வென்னப் பறைந்தாய் போற்றி
உன்னையல் லாலோ ருலகமு மன்றித்
துன்னிய சீவேச் சுரர்களு மில்லை ௭௦
அன்னதா லுண்மை யகண்டனீ யென்ன
வன்னவாய் மலர்ந்துவா னுக்கினை போற்றி
உள்ளன போற்றேற் றுலகுயி ரீச்சுரர்
உள்ள வுருவென் றுரைத்தாய் போற்றி

---

†இஃது, இந்நூலை அலங்கரித்து நிற்கும் உபதேசவுந்தியார்.

உள்ள லெழீஇ யொடுங்கு மிடந்தான்
உள்ளமென் றுளப்பொரு ளுரைத்தாய் போற்றி, அதனுல்
உள்ளவவ் வெல்லா முளவா மிடமவ்
வுள்ளமே யென்ன வுரைத்தாய் போற்றி
உள்ளதவ் வுளத்தே யுண்மையா லுள்ளதும்
உள்ளமென் ருமென் றுரைத்தாய் போற்றி
உள்ள லுருவன் றுளப்பெயர் பெறுமவ்
வுள்ள பொருளென் றுரைத்தாய் போற்றி
உள்ளத னுணர்வோ டுவற்றி னுணர்வுமவ்
வுள்ளதை யொழிந்தின் றென்ருய் போற்றி
கண்டவர் தாமலாற் காண்கலா ரியாவதும்
எண்ண லசங்கத மென்ருய் போற்றி
உள்ளத் தவிசோர்ந் துறினலா துள்ளதன்
உள்ளொளி காணு தென்ருய் போற்றி
உள்ளாழ்ந் துதிதல முறினுயி ருருவாம்
உள்ள லறுமென் றுரைத்தாய் போற்றி
உள்ள லுருவல துருவிலா வுயிர்கள்
உள்ள லுருவற் றுளவப் பொருளைக்
கள்ள மனத்தின் கற்பனை யாலொழிந்
துள்ள படிக்கே யுள்ள வொருமையின்
உள்ள பொருளவ் வுள்ளத் தலத்திடை
உள்ள லுருவற் றுள்ளவவ் வாறே
உள்ள லுருவற் றுயிருமவ் வுளத்தே
உள்ளதே யுள்ளலென் றுணர்த்தினை போற்றி
நினைவுரு வாக நிமிர்ந்து நின்ற
மனமே மாயையம் மனத்தை மாய்த்தலே
உண்மை யுணர்வென வுளங்கொளத் தேற்றி
எண்மை யெளியேற் கிசைத்தனை போற்றி

மனமே தென்ன மனத்தா லாய்தலே
மனமாய் வழியென வழங்கினை போற்றி
பஞ்சகோ சத்துட் படுமான் மாவைத்தன்
னெஞ்சத் தலத்து ணேர்படப் பெறாஅ
துசாத்துணை யெனும்பல் லோத்துட் கடைபோக
விசாரித் திடல்வீ ணென்றாய் போற்றி
தொந்த நினைப்பே பந்த மென்னச்
சிந்தை கொள்ளத் தேற்றினை போற்றி
சிந்தா சிந்தையாற் சிவாசிவ மொழியுமென்
றெந்தா யெளியேற் கிசைத்தாய் போற்றி
அந்த நினைவுக ளார்க்கெனக் காணிற்
பந்த மறுமெனப் பகர்ந்தனை போற்றி
யாப்புண் டார்கள் யாரெனக் காணின்
யாப்புண் டாரே யிலரா வதனால்
யாப்பே யின்றா யிகந்தது கொண்டு
நீப்புமின் றென்ன நிகழ்த்தினை போற்றி
சித்தமாந் தன்னைத் தெரிதலே பெரிய
சித்தியென் றென்னைத் தெளித்தாய் போற்றி
சித்தியு மதுவே முத்தியு மதுவே
புத்தியு மதுவெனப் புகன்றனை போற்றி
அச்சக் காரண மணுவுமின் றாக
அச்சுறல் பேதென் றறைந்தனை போற்றி
அந்நிலை கண்டா ரடங்குவ தன்றிக்
கைந்நிலை யுலகிற் கலங்கா ரென்ன
உடம்பொடு புணர்த்தி யுணர்த்தினை போற்றி
திடம்பட மூடனுந் தேறினேன் போற்றி
வெகுளி யெழுங்கால் வெகுளிப் பகையை
வெகுண்டொழி யென்ன விண்டாய் போற்றி

புகழ்தற் பொருட்டும் புணரா தோரை
இகழ்த லோம்பென் றிசைத்தாய் போற்றி
தூற்றுநர் தமையே யாற்றநட் டோராப்
போற்றுக வென்னப் புகன்றனை போற்றி
உனக்குள வுரிமை யொழிந்தார் தமக்குமுண்
டுனக்குமே யில்லை யொழிந்தார்க் கிலாதவை
யான்மே லாடா திருக்கு மிதயமே
ஆன்மா வென்னு மகண்ட பரம்பொருள்
என்றென் றியம்பி யிடைநிலை யியல்பை
மன்ற வுணர்த்திய மறையோய் போற்றி
தம்மைக் கண்டார் பிறர்க்கா ணுமையிற்
பிறரைக் கண்டார் தமைக்கா ணுரென
மோனச் சிறப்பை முற்ற விளக்கிய
மானக் கழல்சேர் மாண்பா போற்றி
எல்லாம் வல்லிறை யிடத்தொப் படைத்துன்
பொல்லாக் கவல்போக் கென்றாய் போற்றி
பொய்யென் றுரைப்பினும் புலனு முலகுயிர்
மெய்யென் றுரைப்பினு மெய்ந்நூ லறிஞர்
முன்னது காரிய முன்னியு மற்றைப்
பின்னது காரணம் பேணியும் பேசலான்
முரண்பா டிலவம் மூதறி வோர்மொழி
இரண்டுமே யொக்குமென் றிசைத்தாய் போற்றி
அயல்செலா தான்ம நிலையகம் பெறலாற்
பயனுமொன் றென்னப் பகர்ந்தனை போற்றி
நிராசையே நல்ல நெறியெனக் காட்டித்
துராசையைத் தூரத் துரத்தினை போற்றி
சிந்தித் தலுமென் சிந்தைக் குகையுட்
புந்திக் கமுதாய்ப் புக்காய் போற்றி

ஆற்றப் பெரிய வறிஞர்தம் மாலும்
தோற்றமாம் விடயந் துணிந்தினைத் தென்னச்
சொலப்படா தாருயிர்த் தொகைமுற் சூதாப்
புலப்பா டுடைய பூமிகட் கெல்லாம்
நிலைக்கள மாந்தன் னிலையை யறிதலே
கலைக்கட லமுதாக் காட்டினை போற்றி
மறதியா மையலை மாய்த்துமெய்ஞ் ஞான
உறுதி பயக்கு முவாத்தி போற்றி
அந்த வுறுதி யபின்ன விளக்கமாம்
சொந்த சொரூபமாத் துலக்கினை போற்றி
முதற்கண் ணிறையா யிடைக்குரு மூர்த்தியாய்
அதற்பினான் மாவா யமர்ந்தனை போற்றி
அன்புக் குரியவென் னான்ம சொரூப
இன்பக் கடலா யிருந்தாய் போற்றி
உயர்ந்தமோ னத்தா லுரவோர் தமக்குப்
பயந்தமெய்ப் பொருளைப் பரிவுமே லீட்டால்
எளியேன் றன்னிலைக் கிரங்கிவா யாலும்
தெளிவா யுரைத்த தேசிக போற்றி
வாயா லுரைத்தவம் மட்டோ வந்நிலைக்
காயே நிற்க வருளினை போற்றி
சிறக்குமெய்ஞ் ஞான சிவாம்புதிக் கண்ணே
இறக்குமா றுள்ளத் திழுத்தனை போற்றி
யானவ் வாழிவா யிறக்கின் றேனடிக்
கானகைம் மாறென் னாற்றலென் போற்றி
கடுத்த மனத்தைக் கழலடிக் கண்ணே
மடுத்தல்கைம் மாறு மகிழுதி போற்றி
பொலிகநின் பொன்னடி பொலிகநின் பொன்னருள்
பொலிகவேங் கடநின் பொற்புகழ் தானே.

திருச்சிற்றம்பலம்

௪. போற்றித் திருவகவல்

(நேரிசையாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

நால்வகைத் தோற்றமு மேழ்வகைப் பிறப்பும்
பால்வகைத் தாயவெண் பானான் கிலக்க
யோனியும் போய்ப்போ யுகம்பல வாக
ஊனியல் வாழ்க்கை யுழத்தற் கடுமை
இனைத்தெனச் சற்று மியம்பற் கரிதாய்ச்
சுனைத்துத் தின்னுந் துயர்பல கூர்ந்தேன்
பதறிப் பலவாம் படிகளி னின்று
விதலைமெய் யுற்று விழுந்தழி யாது
தாணுவைப் பற்றித் தவழ்கொடி கைகொடுத்
தேணிப் படிகால் வரன்முறை யேற்ற
ஞானந் தெளிந்து நடத்தற் குரிய
மானிட மாநான் வளர்ந்து மனந்தான்
பரத்தின் பாலே பரியினு மந்தப்
பரத்திற முணரப் படாமை யாலே
இறையென் றொருபொரு ளிருப்பினு மில்லா
துறுகற் பனையா யொழியினு முயிருக்
குறுதி பயத்தற் கொழுகு மொழுக்கமே
உறுமென் றுட்கொண் டொழுகுவே னாக
அவ்வொழுக் காற்றினு மடிக்கடி யோட்டைபோய்ச்
செவ்விதீ ரொழுக்கஞ் சேர்ந்ததும் பொறுத்து

மதிக்கொளி தந்தம் மதிக்கு ளொளிர்ந்தும்
குதர்க்கவா திகளாற் குறுகற் கரிதாய்
ஊன்மய லின்றி யொளிரும் பரசொரூ
பான்ம வியல்பா யமர்ந்த சதாசிவம்
மலபரி பாக மடுத்தேன் போற்றன்
சிலதரி னொருவனுச் சேர்க்கக் கருதி
மானென்று காட்டி மான்பிடிப் பதுபோல்
ஊனென்று காட்டி யுயிர்பிடிப் பேனென்
றுருவா யானெனே யோர்தலாற் றன்னை
வெருவா விதத்தால் விசுத்த மாயையால்
நிருபா திகமா நிகழ்சொரூ பத்திற்
குருவா மனித்தக் கோலங் காட்டி
அயனரி முதலா மமரர் மணிமுடி
செயவெனப் பணிபதஞ் சிவந்து விளங்க
வேளொடு மாறாய் வேட்கை விளைத்துக்
கீளொடு வெள்ளைக் கோவணங் கிளர
உயற்கென மூன்றுல கும்புகல் புக்கென
வயிற்றிடை மூன்று மடிப்புத் திவள
உதயமோ டத்த முருதெங்கு மொன்றாய்
இதயமார்த் தாண்ட னிலங்குகதி ரெறிப்ப
அந்தக் கதிரொளி யாலடி யார்மனம்
சிந்தப் பகலிற் சிறுமதி போலக்
கரத்திற் றண்டு கமண்டலத் தோடு
பரத்துக் குய்க்குங்கட் பார்வைபார்ப் பாரைத்
திட்டியல் லாலோர் சிட்டிமற் றெவ்வா
றெட்டுமென் றெட்டியாங் குறத்து விழிப்ப
முப்புர மெரித்த முகவிலா சப்பிழம்
பற்புத மாக்குளிர்ந் தருண்மழை பொழிய

வீற்றுச் சுடர்விழி வெளிப்படா தொளித்து
நீற்றொளி யாலே நிலாநுதல் பரப்ப
யோகியர் புருவத் திடைக்காண் சோதிநான்
ஓர்கெனக் குங்குமத் திலத மொளிர
அண்ட முகட்டி னழகிது வென்னும்
முண்டனச் சென்னி முனிமை யுணர்த்தச்
*செத்தகங் காரந் தீர்ந்த மனஞ்சேர்
சுத்தசங் கற்பத் தொகையின் வெண்ணரை
மீதுகண் டிலகுமம் மீத்தலஞ் சுத்த
சோதிமண் டலமாச் சுடரநாற் பாலும்
சதுரிழந் தறிமால் சார்ந்தமெய் யன்பர்
எதிரிருந் தடியிசை யினிதேத் தெடுப்பப்
பண்ணோ ராலும் பரவப் படூஉம்
அண்ணா மலைக்கோ ரந்தண னாகிக்
குளவி யதனாற் கொட்டப் படும்புழு
குளவியே யாகக் குலாயது போலத்
தானென யானுந் தனாற்குறிக் கொளப்பட்
டியானென தென்னு மியல்போ யுண்மை
மன்னிய வுணர்வு மாத்திர மாத்தன்
சன்னிதி மாத்திரத் தால்விழி நோக்கால்
அனுபவ மாக வடைவித் ததனாற்
றனுகர ணம்போய்த் தன்மய மாக
அளியனா நின்றேற் கருளிய வருமையை
எளிமையென் றெண்ணி யிகழா தடியைப்
பிறியா நிழலின் பெட்பது போலக்
குறியாக் கொண்டு கோணுத லின்றி

---

*இதுமுதல் நான்கடிகள் புதியனவாகச் சேர்க்கப் பெற்றவை.

அருளை யெண்ணி யகங்குழைந் துருகி
வெருளர்போற் சிந்தை விம்மித மாகிக்
கண்ணீர் கம்பலை பாயக் கருத்தால்
எண்ணு மேனை யிசைத்தலுந் தடைப்பட்
டன்பது பொங்கி யகத்தை யழிக்க
நன்புல னொன்றி நமோமய மாகி
மயிர்சிலிர்ப் பெய்த வெயர்பொடிப் பெய்தச்
செயலனைத் தும்போய்ச் சிவன்செய லாக
இறைபணி நிற்பித் தெனையுயக் கொண்ட
பிறையணி சென்னிப் பிரானே போற்றி
மாயனுங் காணா மலரடி யிந்தப்
பேயனுங் காணப் பேர்ந்தாய் போற்றி
மெய்யுட் புலம்பும் பொய்போ லன்றிப்
பொய்யுட் பொலியும் மெய்யே போற்றி
கற்பனை கடந்த காட்சியோ ராய
விற்பனர் நெஞ்சில் விளக்கே போற்றி
அறிந்தார் தமக்கு மறிவரி தாகச்
செறிந்து கிடந்த சிவமே போற்றி
எந்தா யிறைவர்க் கரியா யெளிவந்
திந்தா வெனக்கூஉ யேற்றாய் போற்றி
தலையி னிழிந்த மயிரெனத் தனது
நிலையி னிழிந்தவிந் நீசனை நீசப்
புலையனென் றெள்ளிப் புறக்கணி யாது
வலிய வந்து வாரிச மலர்க்கண்
வலையை வீசித் தன்வயப் படுத்துத்
தொலையா வாய்மைத் துகளறு வேதக்
கலைஞர் பல்லோர் காணக் கடைக்கணித்
தலையா நிலைசேர்த் தருள்சிற் பரைசேர்

அசல போற்றி யந்தண போற்றி
குசலமெய்ஞ் ஞானக் குரிசில் போற்றி
பெருந் துயர் செய்யும் பிறவிப் பிணிக்கோர்
மருந்தே போற்றி மணியே போற்றி
அறிவே நாடா தறவே கெட்ட
வறியேற் கெய்ப்பில் வைப்பே போற்றி
முனைநாட் செய்த வினைக்கரா வாய்நின்
றெனையாட் கொண்ட வியவுள் போற்றி
ஆதி போற்றி யழக போற்றி
சோதி போற்றி சுந்தர போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
உஞ்சே னாயே னுடையாய் போற்றி
ஈசா போற்றி யெந்தாய் போற்றி
பாசா டவிக்கோர் பாவக போற்றி
கோவே போற்றி குருவே போற்றி
தேவே போற்றியெந் திருவே போற்றி
தெள்ளத் தெளிந்த சின்மய போற்றி
உள்ளங் கவர்ந்த கள்வா போற்றி
அருமையி லெளிய வழகே போற்றி
எளிமையி லரிய வெழிலே போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
கண்ணொளி கதுவாக் கதிரே போற்றி
கதிரே போற்றி மதியே போற்றி
கதிர்மதி காணாக் கதியே போற்றி
எண்ணே போற்றி யெழுத்தே போற்றி
எண்ணெழுத் திகந்த விறைவா போற்றி
அச்சா போற்றி யம்மா போற்றி
அச்சா கியநல் லறிவே போற்றி

உயிரே போற்றி யுடம்பே போற்றி
உயிருடம் பல்லா வுணர்வே போற்றி
அடியே போற்றி முடியே போற்றி
அடிமுடி யற்ற வனந்தா போற்றி
மண்ணே போற்றி விண்ணே போற்றி
மண்ணினும் விண்ணினு மாண்பா போற்றி
குழலே போற்றி யாழே போற்றி
குழலியாழ் கொஞ்சுங் குதலாய் போற்றி
இயலே போற்றி யிசையே போற்றி
தயல்படு நாடகத் தமிழே போற்றி
மலையே போற்றி கடலே போற்றி
மலைகடல் படூஉம் வளமே போற்றி
சொல்லே போற்றி பொருளே போற்றி
சொற்பொருள் கடந்த சொக்கே போற்றி
உள்ளே போற்றி வெளியே போற்றி
உள்வெளி கடந்த வொளியே போற்றி
பொய்யே போற்றி மெய்யே போற்றி
பொய்ம்மெய் கடந்த பொருளே போற்றி
அறிவே போற்றி யயலே போற்றி
அறிவறி யாமைக் கதீதா போற்றி
இன்பே போற்றி துன்பே போற்றி
இன்புதுன் பிகந்த விறைவா போற்றி
சிறியாய் போற்றி பெரியாய் போற்றி
சிறுமுதுக் குறைந்த செல்வா போற்றி
நிட்டா போற்றி நிமலா போற்றி
சுட்டப் படாத துரியா போற்றி
துன்று நனுக்கனுத் துயிலாய்த் துரியம்
ஒன்று யவற்றா டுருவினை போற்றி

விதியே போற்றி மதியே போற்றி
விதிமதி மூல விறலே போற்றி
வித்தே போற்றி விளைவே போற்றி
புத்தே ளமுதச் சுவையே போற்றி
அமுதே போற்றி நஞ்சே போற்றி
அமுதமா நஞ்ச மருந்தினை போற்றி
அம்பர வுருவா யம்பர மெட்டும்
அம்பர மாக வணிந்தாய் போற்றி
உன்னைப் போற்ற வுரகனுங் கில்லான்
என்னின் வல்லேன் யானோ போற்றி
எவ்வொன்றை யல்லா விரண்டுமற் றின்றோ
அவ்வொன்று நீயா வறிந்தனன் போற்றி
நின்முக நிகழ்த்துமெய்ந் நிட்டைத் திறத்தாற்
றென்முக னீயாத் தெளிந்தனன் போற்றி
ஏழேழ் தலைமுறை தலைமுறை யாக
ஊழூழ் முறையா லொடியா துண்மகிழ்ந்
தீன்றோ ரியற்றிய விட்டியி லென்னைப்
பூன்றா குதியாப் புசித்தாய் போற்றி
அன்னோ ரனைவரு மகமிக மகிழ்ந்து
பன்னா ளாவெதிர் பார்த்த படிக்கே
அவபிரத நானந் திருவரு ளாழிவாய்ப்
பவநரலை வற்றப் படிந்தனர் போற்றி
போற்றிசெய் துன்னைப் புகழ்ந்திட னம்மில்
வேற்றுமை விளக்குமென் றஞ்சினேன் போற்றி
போற்றிநின் பொன்னடி போற்றி
போற்றிவேங் கடநின் பொன்னருள் போற்றி.

திருச்சிற்றம்பலம்

௧௦. இயலிசைத்தல்

(கலிவிருத்தம்)

†பண் : கௌசிகம் (பைரவிராகம்)

திருச்சிற்றம்பலம்

*அமுத மாக்கட லால மருந்தினன்
அமுத வண்டமி ழாய்ந்த வறிவினன்
அமுத வார்கழ லாய்பவர்க் கண்ணிக்கும்
அமுத னமெனை யாண்ட ரமணனே. ௧

ஆட்டு வானு மகில வுலகையும்
ஊட்டு வானு முயிர்களுக் கூழ்களைக்
காட்டு வானுங் கதிகளை நிர்க்குணக்
கோட்டு மேலுறை கோல ரமணனே. ௨

சூடு வானுமென் சொற்றொடை பேதையேம்
ஊடு மெல்லை யுணர்த்தியு மெங்களைக்
கூடு வானுங் குகேச னெனவொளிர்ந்
தாடு வானு மழகன் ரமணனே. ௩

ஓத்து நாலுள் ளுறைபொரு ளாயொளி
பூத்து நின்ற புனிதனும் புந்தியால்
ஏத்து வார்த மிதய வெளிக்குளே
கூத்த னுக்குனிப் பானும் ரமணனே. ௪

---

†காத லாகிக் கசிந்து—என்னும் தேவாரப் பண்.

நேதி யாலன்றி நேர்முக மாகமற்
றியாதி னுலு மியம்ப வொணுதவன்
மாதி ரம்புடை வைத்து வளைத்தசிற்
ருதி யம்பல வாண ரமணனே. ரு

ஏதி லானென யாவையுங் காண்டலால்
நீதி யாகிய நேர்மை நிறைந்தவன்
கோதி லாத குணுசல மீதிலோர்
சோதி யாகத் துலங்கு ரமணனே. சு

பெரிய பார்பிறப் பிக்கும் பிரமனும்
கரிய மேனி கலந்தொளிர் கண்ணனும்
எரியு மாமழு வேந்திய வீசனும்
துரிய வார்சுயஞ் சோதி ரமணனே. எ

காண லாது கலங்கு மிருவரும்
வேண வாவொடு வேண்டித் துதித்திடச்
சோண சைலஞ் சொலித்திடு தோன்றலான்
ஆண முஃகனென் னுவி ரமணனே. அ

செத்த டங்கிய சிந்தைய ராகியுன்
மத்த மேறிய மாந்தரா லன்றிமற்
றெத்த ராலறிந் தெய்த வொணுதவன்
அத்த னெங்களுக் காய ரமணனே. கூ

ஆன்ம தாக மடைந்தவர் கட்கெதிர்
தேன்ம டைதிறந் தாலுறழ் திட்டியான்
நான்ம றைக்க ணடிப்பொரு ளாயநல்
ஆன்ம தத்துவ மான ரமணனே. கo

மிச்சை யாகிய மேதினி யோர்கடம்
துச்ச ஞானத் துளக்க மறுப்பவன்
முச்சு டர்க்கு முதற்சுட ராயதோர்
சொச்ச ஞானத் துரீய ரமணனே. கக

அருவ வல்வினை யல்ல லுடைக்கொடுங்
கருவ ணுதடி யார்களைக் காப்பவன்
வெருவ லாத விநோத மகிழ்ச்சிசேர்
குருவ ரத்திருக் கோல ரமணனே. கஉ

ஒருவ கைப்படு மோர்வுடை யோகியர்
புருவ மத்தியிற் போந்தொளிர் புண்ணியன்
உருவ நோக்கியெ முள்ள முடைத்தொளிர்
திருவ ணுமலைத் தேவ ரமணனே. கங

வந்த டைந்தவர் வல்வினை மாசற
எந்த நேரமு மின்னருள் செய்பவன்
அந்த கார வவிச்சை யவித்தொளிர்
சுந்த ரானன சோதி ரமணனே. கச

பாத மேதொழும் பத்திமை யோர்களுக்
கேத மற்றிட வின்ப மளிப்பவன்
வேத மாமுடி மீது விளங்குசின்
மோத நின்மல மூர்த்தி ரமணனே. கரு

சேயி னன்பொடு சேவடி சேர்ந்திடத்
தாயி னும்மிகத் தண்ணளி செய்பவன்
நாயி னுங்கடை யேனது நச்சுளம்
கோயி லாக்குடி கொண்ட ரமணனே. கசு

அடங்க லற்றது ராசை யெனப்படும்
இடங்கர் வாயினின் றெம்மை விடுப்பவன்
கடங்க விழ்க்கு மகந்தைக் களிற்றினை
உடங்கு செற்ற வுறவன் ரமணனே. கஎ

ஆண மெத்திய வஞ்சுவை யுற்றபா
வாண ரெய்ப்பினில் வைப்பனும் வாய்ப்புடைத்
தூண மாக்கெழு துப்பனு மெம்மனோர்க்
கியாண ராயபே ரின்ப ரமணனே. கஅ

தீதி லாத செழுந்தமிழ்ப் பாக்களால்
ஓதி னுரை யுயர்கதிக் குய்ப்பவன்
நீதி யாக நினைந்தவர் நெஞ்சமென்
போதின் மீதுடன் போந்த ரமணனே. கசு

உகவு மெத்திய வொண்டமிழ்ப் பாக்களால்
அகவு வார்களுக் கன்ன மளிப்பவன்
மகவு மாநிதி மற்றவு நல்கிடும்
முகவ சீகர மூர்த்தி ரமணனே. உ0

நேம மோடு நினைந்தெழு மன்பரைச்
சேம முற்ற சிவத்தொடு சேர்ப்பவன்
சாம மோடென் சழக்குடைப் புன்சொலும்
வாம மார்பில் வயக்கு ரமணனே. உக

திருச்சிற்றம்பலம்

கக. *வண்ண முரைத்தல்

(கலிவிருத்தம்)

† பண்: திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

தாயின் வண்ணமுந் தண்ணருள் வண்ணமும்
சேயின் வண்ணமுஞ் சிந்தையின் வண்ணமும்
வாயின் வண்ணமும் வாய்மையின் வண்ணமும்
தீயின் வண்ணமுந் தேவ ரமணனே. க

நீதி வண்ணமு நெஞ்சத்து வண்ணமும்
நேதி வண்ணமு நின்றதன் வண்ணமும்
பாதி வண்ணமும் பார்ப்பதி வண்ணமும்
சோதி வண்ணமுந் தொக்க ரமணனே. உ

நாத விந்து கலாதிகள் வண்ணமும்
பேத நீங்கப் பிறங்கொளி வண்ணமும்
வேத மோது விழுப்பொருள் வண்ணமும்
போத வண்ணமும் பொங்கு ரமணனே. ௩

மருளின் வண்ணமு மாயையின் வண்ணமும்
பொருளின் வண்ணமும் பொங்கொளி வண்ணமும்
அருளின் வண்ணமு மந்தண வண்ணமும்
தெருளின் வண்ணமுந் தெய்வ ரமணனே. ச

---

† சிந்தை வண்ணத்த ராய்—என வரும் திருக்குறுந்தொகைப் பதிகத்தைத் தழுவியது.

சரண வண்ணமுஞ் சன்மங் கடத்துற
தரண வண்ணமுந் தம்மவர் வாழ்க்கையின்
பரண வண்ணமும் பார்வைக் ககப்படாப்
புரண வண்ணமும் போத ரமணனே. ரு

வார மோடு வழிபடு வாருக்குச்
சேர வின்னருள் செய்திடு வண்ணமும்
வீர வெல்கழல் வீக்கிவெங் கூற்றுதை
தீர வண்ணமுந் தேவ ரமணனே. சா

ஆத்தி கப்பெரி யார்சொல் லரங்கமாச்
சாத்தி ரப்படி சாங்கிய ரோதுபொய்ந்
நாத்தி கங்கெட நர்த்தனந் தான்செயும்
கூத்தின் வண்ணமுங் கோல ரமணனே. எ

விளக்கும் வண்ணமும் வீண ரகங்கெடப்
பிளக்கும் வண்ணமும் பேரவென் கன்மனம்
இளக்கும் வண்ணமு மெல்லவர் சிந்தையும்
அளக்கும் வண்ணமு மான்ம ரமணனே. அ

அலக்க ணீங்கநல் லன்பருக் கின்னருள்
துலக்க மாகநா டோறுஞ்செய் வண்ணமும்
புலக்க ளைசைகள் பொன்றிய வுள்ளத்தார்க்
கிலக்கின் வண்ணமு மெந்தை ரமணனே. சூ

துதியொ டும்மலர் தூற்றிடு வண்ணமும்
மதியொ டும்விதி மாறுகொள் வண்ணமும்
பதியொ டும்பசு பாசத்து வண்ணமும்
கதியின் வண்ணமுங் காட்சி ரமணனே. கo

ஞால வாழ்க்கை நடலையு மன்னதன்
மூல தத்துவ மொய்ம்பொடு முற்படு
மேலை நல்வினை யான்மெய் விளங்கநு
கூல காலமுங் கோல ரமணனே. ௧௧

திருச்சிற்றம்பலம்

——(o)——

௧௨. சார்புரைத்தல்

(கலிவிருத்தம்)

† பண் : திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

தாய்ச்சி யாய தனிப்பரை தோள்புணர்
நீச்சி லாதபே ரின்ப நிலையனை
ஏச்சி லாரம ணேசப் பெரும்புகழ்
வீச்சி னானைக்கண் டேர்வேண் டற் பாலதே. ௧

கரீய னைத்தங் கருத்து ளடியராற்
றரீயி னானைத் துரீய ரமணனை
உரீய னாயெனக் கூனுயிர் நிற்கவும்
பிரீயி னானைக்கண் டேர்பேண ற் பாலதே. ௨

களக்கி லாக்கலி யாண குணங்கெழு
விளக்கி னானைமெய்ஞ் ஞான விநோதனை
அளக்கி லாப்பர மாய ரமணனைத்
துளக்கி லானைக்கண் டேர்தொழற் பாலதே. ௩

† அண்டத் தானை—என வரும் திருக்குறுந்தொகையைத் தழுவியது.

மதியி னுள்ளொளிர்ந் தந்த மதியினை
விதியி னால்விளக் குற்ற ரமணனை
மதியி னையுண் மறித்துப் பதிக்குறும்
கதியி னனைக்கண் டீர்தொழற் பாலதே. ௪

ஆமை போல வடக்கிய வஞ்சினர்க்
கேம மாய விறைரம ணேசனை
வாய்மை யாய வளங்கெழு செல்வனைத்
தூய்மை யானைக்கண் டீர்தொழற் பாலதே. ௫

மாறி லாத மனத்த ருளத்தமு
தூறி னனைமெய்ஞ் ஞானவா னும்பலே
ஏறி னனை யிறைரம ணேசனை
ஏற னனைக்கண் டீர்தொழற் பாலதே. ௬

தூவ ணத்துற வோர்க டொழுங்கழற்
கோவ ணத்திருக் கோல ரமணனை
நாவ ணஞ்சிறப் பெய்த நயந்துநீர்
பூவ ணச்செழும் பொன்னடி போற்றுமே. ௭

*அருணை தன்னி லருட்குரு வாகத்தண்
கருணை மாமுகி லொன்று கலந்தது
சரண மென்றுநீர் காலந்தாழ்க் காதுபோய்த்
தரண முற்றுத் தழைத்துயிர் வாழ்மினே. ௮

*மரண வாதனை மாற்ற ரமணனென்
றருணை தன்னி லமுதம்வந் துற்றது
தருண மாமிது சாற்றின னுமக்
கரண மாக வடைந்துயிர் வாழ்மினே. ௯

அசாவி லும்பிர மாத மறிந்திடா
விசார சீலமெய்ஞ் ஞான ரமணனே
உசாவு வார்க்கொளி யாய வுளத்தனே
உசாவி னல்ல துயிர்க்குய்தி யில்லையே. க0

கற்றி லாத கசட்டுச் செருக்குடைப்
பெற்றி சேர்பிற விப்பெரும் பீழைகள்
வெற்றி வேங்கட வித்தக மெய்ப்பொருள்
பற்றி யின்புறு பாக்கியர்க் கில்லையே. கக

தூண்ட லற்ற துளங்கொளி தோமறுத்
தாண்ட வேங்கட வண்ண லசலமாத்
தாண்ட வந்தமுட் டாங்கண் டவர்க்கலால்
மாண்ட தன்று மயக்கப் பிறவியே. க௨

கெழிய மண்டையிற் கீறு மயனெழுத்
தழிப டுந்திற னுயு மறிஞர்க்குச்
செழிய வேங்கடச் செல்வப் பிரானடி
வழிப டல்விட்டு மார்க்கமொன் றில்லையே. க௩

யாக்கை வெஞ்சிறை யின்னின் றுயிர்களை
மீட்கை யின்விறல் வேங்கடன் வெல்கழல்
வேட்கை யோடு விரைந்துசே விக்குறும்
வாழ்க்கை யன்றிநல் வாழ்க்கையொன் றில்லையே. க௪

*எப்பொ ருட்கு மிறைரம ணன்வழங்
கொப்பு யர்வறு முத்தம போதத்தால்
முப்பு டிச்சுட் டறுத்தொளிர் மோனத்தார்க்
கெப்பு விக்கணு மெய்தவொன் றில்லையே. க௫

*உத்த ரக்குரு வாட்சி யுறினுநன்
றத்த னய ரமண னருள்புரி
சுத்த ஞான சொரூப வுணர்ச்சியாற்
சித்த சாந்திசேர் வார்க்கலா தில்லையே. கசு

ஒள்ளொ ளிப்பே ருணர்ச்சி யுருவமாய்
உள்ள லற்றுளத் துள்ள ரமணனை
நள்ள லுற்றவர் தம்மை நலிமனக்
கள்ளக் காரவிச் சைகழன் றோடுமே. கஎ

காத லாற்றிரு வேங்கடக் கண்ணுதல்
பாத பங்கயம் பற்றிப் பணிந்தவர்
பேத புத்தி பெயர்ந்த மனத்தராய்
மீத மாப்த்திகழ் மெய்ப்பொருள் காண்பரே. கஅ

ஊக்க மாய்நம் முயிர்க்குடை வேங்கடன்
பூக்க மழ்பொன் னடிச்சரண் போற்றினால்
நீக்க மற்ற நிரதிச யானந்த
மாக்க டற்றம் மனத்து மடுக்குமே. கசு

ஏவ லாற்றி யிசைகெழு வேங்கடப்
பாவ நாசன் பதம்பணிந் தேத்துவார்
ஆவ லாயி னதன்படி யண்டர்மேற்
காவ லாய்க்கை வலியமுங் காண்பரே. உ0

*வினவின் மெய்ப்படு வேங்கட தேவனை
மனவன் பாக மகிழ்ந்துவா லாயமாய்
நனவின் கண்ணழு வாம லுணர்ந்திடிற்
கனவின் கண்ணுமெய்க் காட்சி கலக்குமே. உக

*தஞ்சம் புக்குத் தகுரம ணேசனை
நெஞ்சம் புக்கு நிரம்பிய காதலால்
வஞ்சம் போய்வழு வாது வழிபடிற்
றுஞ்சும் போதுஞ் சுடர்விடுஞ் சோதியே. உஉ

*தெரியு மூன்றையுந் தேர்வுறுஞ் சுட்டறுத்
தரிய வந்தரி யாமி ரமணனைப்
பிரிய லற்றதன் பெற்றிமை பேணுறிற்
றுரிய மெங்கணுந் தோய்ந்து விளங்குமே. உ௩

*சித்த வேடந் திகழ்வேங் கடவனை
மெத்த நட்பொடு மேலைத் தவத்தினுற்
சித்த மொன்றிச் சிறக்க நினைந்திடிற்
சுத்த மாகத் துலங்கும் பிறவுமே. உச

*சிவனை வேங்கடச் செஞ்சுடர் வண்ணனைத்
தவநி னைந்துமெய்ச் சார்புறக் கூரிதாம்
கவன மாயருட் கண்கொடு கண்டிடின்
அவனி முற்று மவனொளி பாயுமே. உ௫

*எம்மை யாளுடை யின்ப ரமணனைச்
செம்மை சேர்தரு சித்தத் தெளிவொடு
மெய்ம்மை யாக விரும்பித் தொழுதிடின்
இம்மை யேயம்மை யின்பம் பயக்குமே. உ௬

*அன்பு விஞ்சி யதேநினை வாய்முற்ற
நம்பி வேங்கட நம்பனை நாடிடின்
இன்ப துன்ப விரட்டை யறப்பெறும்
தன்ப தத்துத் தழைத்திட லாகுமே. உ௭

*மெய்த வழ்ந்த விபூதி ரமணனை
உய்தி சேர வுளம்புகுந் துண்மையாய்ப்
பைத லாணவப் பற்றறப் பற்றிடின்
எய்து மோவங் கிருவே றியற்கையே. உஅ

* நிசிவா யாடு நிருத்த ரமணனைக்
கசிவா லுள்ளங் கரைந்துநீ ராளமாய்
அசபா மந்திர மோதி யறிவுறிற்
பசுபா சங்கள் பதிமய மாகுமே. உகூ

* ஆட்சி கொண்டகண் ணைய ரமணனை
மீட்சி யற்ற விழிப்பொடு நோக்குறின்
மாட்சி வாய்ந்த திரிபதார்த் தங்களின்
காட்சி யாவுமக் கண்மய மாகுமே. ௩௦

*ஈச னெந்தை யிறைரம ணேசன்றன்
வாச மல்கு மலர்நந் தனவனம்
மூசு வண்டொடு தும்பி சுரும்புநல்
ஆசு தீர்மெய் யநுபவ மோதுமே. ௩க

கட்ட மோடு கவலகன் றோடநல்
இட்ட மென்பன யாவு முடனெய்தும்
அட்ட மூர்த்தவண் ணமலை வேங்கடச்
சிட்ட னல்லடி சிந்தை செறிக்கவே. ௩உ

*பாச பந்த மறுக்கும் பரரம
ணேசன் றன்னடிக் கேவல்செய் தவ்விறை
நேச மாக நிகழ்த்துந் திருவுளத்
தாசி பெற்றோ ரமரர்க்கு மும்பரே. ௩௩

திருச்சிற்றம்பலம்

கரு. திருத்தசாங்கம் (க)

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

பேயர்

நிகழ்ந்தமன மாயை நிலாத்தோற்ற மெல்லாம்
இகந்தபரஞ் சோதிரம ணேசற்—ககந்தை
உறங்குபொழு துந்தா னுறங்கா துளத்துட்
பிறங்குபர மான்மா பெயர். க

நாடு

ஒருகுலத்தோ ராக வொருமித்துப் பல்வே
றிருநிலத்தோர் தாழ்வேங்க டேசற்—கொருகுடைக்கீழ்
வானுநில னும்பிலனும் மையலற நாடுண்மை
ஞானவிசும் பாட்சிவள நாடு. உ

நகர்

தனுதுபர மான்ம தரிசனத்தால் யாவும்
தனுதுருவாம் வேங்கடவேந் தற்குத்—தனுஅ
திடமா யெவையு மியக்கு மிதய
நடுவே தலைமை நகர். ௩

யாறு

சான்முக நிற்குஞ் சலிப்பற்ற தன்மையால்
ஆன்றரம ணப்பே ரனந்தற்குத்—தோன்ற
விழித்திமைக்கு மெல்லை விளைத்துலக கோடி
அழித்தொழுகுங் காலமே யாறு. ௪

மலை

ஓடுங்கா வகத்தை யொடுக்கி யவிச்சை
மடங்கொன்ற வேங்கடமன் னற்குக்—கடுங்கால்போல்
இன்னல்செய் மாயை யிகல்சாயத் தன்னிலையில்
மன்னு முணர்வே மலை. ரு

பரி

பத்தர்கடம் பாவனையின் பாங்கே பரிந்தோடி
வித்தகமா யுற்றுதவும் வேங்கடற்குச்—சித்த
நியாமகமா யெங்கு நிறைந்த சொரூப
வியாபகமே வேகப் பரி. சு

படை

உலக மயலை யுடற்றி யகந்தைக்
கலியைக் கடிவேங் கடற்குக்—குலவுபர
நிட்டையுரு வாய நிருவாத ஞமோனப்
பட்டயமே கைக்கொள் படை. எ

முரசு

உயக்கும் பிடுவார்க் குறுதி யுரைத்து
மயக்கந்தீர் வேங்கடமா வள்ளற்—குயிர்க்குயிராய்
நின்றுதன துண்மை நிகழ்த்தும் பராவாக்கே
முன்றின் முழங்கு முரசு. அ

தார்

எம்மதமுஞ் சம்மதமா யேற்ப வருள்வழங்கி
விம்மிதமாய் நின்றொளிரும் வேங்கடனுக்—கம்மதங்கள்
போற்றுமறை யாய புனிதநூல் யாவுள்ளும்
சாற்றுமிசை யாவுநறுந் தார். கூ

கோடி

எல்லாந்தன் மாட்டே யிசைவனவாப் பல்லோரும்
சொல்லாடும் வேங்கடப்பேர்த் தோன்றற்குப்—பொல்லாத
யானென தென்னு மிரண்டன் றியாகமே
வானமுற வாவுங் கொடி. கO

திருச்சிற்றம்பலம்

———:o:———

கச. திருத்தசாங்கம் (உ)

[குயிலொடு கூறல்]

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

பேயர்

மைக்குங் கருங்குயிலே மையில்குரு நாதன்பேர்
எய்க்கும் படிநோன் பிழைத்தபயன்—துய்க்கும்
மகவான் முதலோர் மதித்தற் கரிய
பகவா னெனவே பகர். க

நாடு

சித்திரமாம் பூங்குயிலே தேசிகன்சீர் நாடுதான்
புத்தமுத வுண்டியொடு புந்தியுமே—மெத்தவுடை
வீடரும்பே ராயுள் விபுதப் புலவருந்தாம்
நாடருஞ்சிற் றம்பலமா நாடு. உ

நகர்

கொஞ்சுங் குயிலே குருநாதன் கோலநகர்
எஞ்சாத வொன்றிரண்டு மூன்றுநான்—கஞ்சா
றிகலடையுங் காலத் திறைவர்களு மஞ்சிப்
புகலடையும் மோன புரி. ங

ஆறு

பண்முகமாம் பைங்குயிலே பண்ணவன்றன் மாநதிதான்
எண்முகமா யோடி யியங்காமே—உண்முகமாய்
முந்தார்வ மோடு முயல்வார்கட் கானந்தம்
நந்தாத சீவ நதி. சு

மலை

அம்மை நிறக்குயிலே யாரியன்றன் மாமலைதான்
தம்மை மறந்த சழக்கினூற்—பொய்ம்மையிலே
மான்றோர் மயக்கத்தை மாய்த்துத் தமைவிளக்கும்
பூன்றசுயஞ் சோதிப் பொருப்பு. ரு

ஊர்தி

சுவைத்தமொழித் தீங்குயிலே சோதியா னூர்தி
மிகைத்தெழுந்த வேதப் பரியை—உகைக்கும்
உரமிகுத்த தன்னு லொழிந்தூர வொண்ணுப்
பரிமிகுத்த சிந்தைப் பரி. சா

படை

கூடித் திளைக்குங் குயிலேயெங் கோன்படைதான்
ஓடித் தனையடைந்த வுத்தமரைப்—பீடித்த
அஞ்ஞானப் பேயை யடித்துத் துரத்துவதோர்
மெய்ஞ்ஞான தண்டமென விள்ளு. எ

முரசு

இருமாங் குயிலே ரமணன் முரசம்
மருளறுமா வாக்கியத்தில் வாய்த்த—பொருளனைத்தும்
சுற்றுமுள பக்குவர்க்குச் சொல்லாது சொல்லியே
முற்றுமிரு பூங்கண் முரசு. அ

தார்

மெல்லோசை சேர்குயிலே வேதியன்றன் மாலைதான்
பல்லோரும் பாடிப் பயன்பெறவே—சொல்லோரும்
தொண்டரெலாங் கூடித் தொடுத்த நறுமணஞ்சேர்
தண்டமிழ்ப்பா மாலையெனச் சாற்று. கூ

கொடி

இன்பாங் குரற்குயிலே யீச னெழிற்கொடிதான்
துன்பாம் பிறவித் துனியஞ்சித்—தன்பால்
அடுக்குந் திருவுடையார்க் கானந்த வாக்கம்
கொடுக்குந் தியாகக் கொடி. க0

திருச்சிற்றம்பலம்

—:0:—

கரு. வினை நீக்கம்

(கொச்சகக்கலிப்பா)

† பண் : குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

செற்றார் தமக்கேயு மின்னா செய்யாமை
பெற்றார் வாழ்சோணைப் பெருமான் புகழ்பேசக்
கற்றார் தமைக்காக்குங் கடவுள் கழல்களே
பற்றா நின்றாரைப் பற்றா வினைதாமே. க

† கற்றங் கேரியோம்பி—என்னும் தேவாரப் பண்.

திருந்தார் புரமூன் றுஞ் செற்றுங் கடியார்கள்
வருந்தா வகையன்னூர் மயல்சாய்த் தடர்நோய்க்கு
மருந்தாந் திருவண்ணா மலையான் பாதமே
பொருந்தா நின்றாரைப் பொருந்தா வினைதாமே. ௨

பாரா தியவற்றைப் பாராப் பார்ப்பார்கட்
காரா வமுதாகி யண்ணா மலைமேய
சீரார் சுயஞ்சோதிச் செம்மல் பாதமே
சேரா நின்றாரைச் சேரா வினைதாமே. ௩

பெண்ணா ணலியாம்பொய்ப் பேத நோக்காதே
உண்ணா டுணர்வோரே யோரும் பெருமைசால்
அண்ணா மலைமேய வண்ணல் பாதமே
நண்ணா நின்றாரை நண்ணா வினைதாமே. ௪

மாயா துழல்பேயா மனத்தைப் புறஞ்சற்றும்
பாயா தறச்செற்றுட் பார்ப்பார் நெஞ்சத்துள்
ஓயா தொளிர்கின்ற வுணர்வோன் பாதமே
தோயா நின்றாரைத் தோயா வினைதாமே. ௫

ஆவா வெம்மைகூ ரல்லற் கழிவெய்திக்
காவா யெமையென்னக் கரையு மடியாரை
ஏவாப் பணிகொள்ளு மெந்தை பாதமே
மேவா நின்றாரை மேவா வினைதாமே. ௬

ஒருதா யுதரத்தும் பிறவா தடியாரை
ஒருதா னிரங்கிப்போந் துதவுங் குருமூர்த்தி
இருதா மரைப்பாத மிதயத் தெப்போதும்
கருதா நின்றாரைக் கருதா வினைதாமே. ௭

அனைமார் வெட்கப்பே ரன்பார் குருவாகி
எனையான் மறந்தேபோ யேமாந் தழிந்தேனை
இனையா தருள்செய்த ரமணன் கழல்களே
நினையா நின்றுரை நினையா வினைதாமே. அ

நடையா லனம்போல்வார் நகிலின் பொறையாற்று
இடையாற் றளர்வெய்து மேழை பெளியேனை
இடையா தருள்செய்த ரமணன் கழல்களே
அடையா நின்றுரை யடையா வினைதாமே. கூ

அணுவா மான்மாவை விபுவாச் செய்வித்துத்
தணிகா சலத்தேயுந் தமியே னுள்ளத்தும்
நணுகாக் குடிகொண்ட நல்லோன் பாதமே
அணுகா நின்றுரை யணுகா வினைதாமே. க0

திருச்சிற்றம்பலம்

——:O:——

கசு. வைத்த பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண்: திருநேரிசை (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

உண்ணிலா முயிரும் வைத்தா
  ருயிரொடு முணர்வு வைத்தார்
கண்ணிலே காட்சி வைத்தார்
  கருத்தொடு கரணம் வைத்தார்

† கங்கையைச் சடையுள் வைத்தார்—என்னும் ஐயாற்றுத் தேவாரப் பண்.

மண்ணிலே மாட்சி வைத்தார்
மருளுவார்க் கருளும் வைத்தார்
விண்ணிலே விளக்கம் வைத்த
வேங்கட விகிர்த ணூரே. க

வானிலே கலப்பு வைத்தார்
வாசநன் மலரில் வைத்தார்
பானலாங் கண்ணி பாலே
பரிவுடைப் பார்வை வைத்தார்
ஆனிலே யஞ்சு வைத்தா
ரஞ்சுவார்க் கருளும் வைத்தார்
வேனலான் விளியச் செற்ற
வேங்கட வெங்க ணூரே. உ

கருவிலே கனத்தை வைத்தார்
கனவிலு நனவு வைத்தார்
உருவிலே யருவை வைத்தா
ரொழிவிலே யொடுக்கம் வைத்தார்
திருவிலே திறலை வைத்தார்
தியங்குவார்க் கருளும் வைத்தார்
வெருவிலா விமல ரான
வேங்கட விபுல ணூரே. ௩

குளத்திலே நயனம் வைத்தார்
குலத்திலே நலத்தை வைத்தார்
களத்திலே கடுவை வைத்தார்
கலப்பிலே யமுதம் வைத்தார்

உளத்திலே யுறுதி வைத்தா
　　ருருகுவார்க் கருளும் வைத்தார்
விளத்திலே வேட்கை வைத்த
　　வேங்கட வேணி யாரே. ச

செய்களைத் திருந்த வைத்தார்
　　சிந்தையைச் செறிய வைத்தார்
மொய்களை யகழ வைத்தார்
　　மோனத்தைப் பயில வைத்தார்
பொய்களைப் புலம்ப வைத்தார்
　　போற்றுவார்க் கருளும் வைத்தார்
மெய்யினை மேவ வைத்த
　　வேங்கட மெய்ய னாரே. ரு

தாயுளே யன்பு வைத்தார்
　　தந்தையு ளறிவு வைத்தார்
தீயுளே புனலை வைத்தார்
　　தீம்பரைத் தேம்ப வைத்தார்
வாயுளே வாய்மை வைத்தார்
　　வாழ்த்துவார்க் கருளும் வைத்தார்
வேயுளே முத்தம் வைத்த
　　வேங்கட முத்த னாரே. சு

நீதத்தை நிகழ வைத்தார்
　　நெஞ்சிலே நேயம் வைத்தார்
ஏதத்தை யகல வைத்தா
　　ரென்புநெக் குருக வைத்தார்
பாதத்தைப் பரவ வைத்தார்
　　பரவுவார்க் கருளும் வைத்தார்
வேதத்தை விளம்ப வைத்த
　　வேங்கட வேத னாரே. எ

நாட்டிலே நரரை வைத்தார்
நட்பிலே வாழ்வை வைத்தார்
கேட்டிலே யாக்கம் வைத்தார்
கிழமையிற் பழமை வைத்தார்
பாட்டிலே பண்ணை வைத்தார்
பாடுவார்க் கருளும் வைத்தார்
வீட்டிலே யின்பம் வைத்த
வேங்கட விசிட்ட னாரே. ௮

கோணவான் பிறைமேல் வைத்தார்
கோளரா முடிமேல் வைத்தார்
நாணவா சுகியில் வைத்தார்
நாட்டத்தைப் புரத்தில் வைத்தார்
ஆணையைக் கூற்றில் வைத்தா
ரடைந்தவர்க் கருளும் வைத்தார்
வீணையை மிடற்றில் வைத்த
வேங்கட விநோத னாரே. ௯

சேரநல் லினங்கள் வைத்தார்
செய்யத்தஞ் சேவை வைத்தார்
தேரமெய்ஞ் ஞானம் வைத்தார்
தேக்கவா னந்தம் வைத்தார்
வாரமென் சொல்லில் வைத்தார்
வழுத்துவார்க் கருளும் வைத்தார்
வீரமெட் டேரில் வைத்த
வேங்கட வீர னாரே. ௧௦

திருச்சிற்றம்பலம்

கஎ. திருமந்திரம்

(கலிவிருத்தம்)

† பண் : கௌசிகம் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

நமோரம ணயவே ஞானமுங் கல்வியும்
நமோரம ணயவே நாமறி மந்திரம்
நமோரம ணயவே நாவுக் கருங்கலம்
நமோரம ணயவே நல்வழி கூட்டுமே. க

நமோரம ணயவே ஞாயிறுந் திங்களும்
நமோரம ணயவே நாள்களுங் கோள்களும்
நமோரம ணயவே நாற்கா ணங்களும்
நமோரம ணயவே நம்முட் சுடர்வதே. உ

நமோரம ணயவே நான்கு நெறிகளும்
நமோரம ணயவே நான்மறை யுட்பொருள்
நமோரம ணயவே நம்முரை வாய்மையா
நமோரம ணயவே நம்பிக்கை கூருமே. ௩

நமோரம ணயவே நம்ப னுருப்பெயர்
நமோரம ணயவே நாளு முருச்சொல
நமோரம ணயவே நன்புலத் துட்புக்கு
நமோரம ணயவே நம்பனைக் காட்டுமே. ௪

---

† காத லாகிக் கசிந்து—என்னும் தேவாரப் பண்; நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்—என்னும் தேவாரத் திருக்குறுந்தொகைச் செய்யுளைத் தழுவியது.

நமோரம ணுயவே நாத்திகர் காட்சிக்கு
நமோரம ணுயவே நாத்தி நபாதியும்
நமோரம ணுயவே நம்பினர் தங்கட்கு
நமோரம ணுயவே நாளு மிருப்பதே. ௫

நமோரம ணுயவே நாச மிலாதது
நமோரம ணுயவே நானென் பதன்பொருள்
நமோரம ணுயவே நாடி னிதயத்து
நமோரம ணுயவே நன்மை பயக்குமே. ௬

நமோரம ணுயவே நட்ட நடுத்தறி
நமோரம ணுயவே நம்ப னருள்கொடு
நமோரம ணுயவே நாடு மகத்துளே
நமோரம ணுயவே நாட்டிய மாடுமே. ௭

நமோரம ணுயவே நம்ப னவின்றது
நமோரம ணுயவே நங்களை யாண்டது
நமோரம ணுயவே நங்கள் விழுத்துணை
நமோரம ணுயவே நங்குறி நாட்டமே. ௮

நமோரம ணுயவே நம்முன் னொளிர்வது
நமோரம ணுயவே நம்மை யொளிர்ப்பது
நமோரம ணுயவே நாமா யொளிர்வது
நமோரம ணுயவே ஞானமெய் யின்பமே. ௯

நமோரம ணுயவே ஞாதுரு ஞேயமும்
நமோரம ணுயவே ஞான விளக்கமும்
நமோரம ணுயவே ஞால முழுமையும்
நமோரம ணுயவே நங்கள் சொரூபமே. ௧0

(நேரிசை வெண்பா)

*வலாற்கார யோகிதடு மாறரம ணன்றருள்
எலாக்கால முந்தா னிலங்கும்—நிலாக்கான்
றனிசந்தப் பாதுரம ணுயநம வென்ன
அனுசந்திப் பார்த மகத்து.

திருச்சிற்றம்பலம்

——:o:——

கஅ. பிரார்த்தனைப் பத்து

(கொச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

போவாப் புரந்தரன்றன் போகமுமே யான்வேண்டேன்
சாவாத ஞானந் தருவேங் கடரமண
தேவாதி தேவ சிகாமணிக்கு வண்கடப்பம்
பூவாகப் பூக்குமுயர் புண்ணியத்தே னுவேனே. க

சதியோ சனையிற் சமர்த்தனுய் மூவுலகும்
குதியா லளந்தோன்வை குந்தமுமே யான்வேண்டேன்
மதுவார் பொழில்புடைசூழ் வந்தரம ணுச்சிரமக்
கொதுகாப் பிறக்குமொரு கொள்கையே னுவேனே. உ

வாயாப் பெருவளஞ்சேர் வானரசும் யான்வேண்டேன்
வீயாத சூர்தடிந்த வேல்வேங் கடரமணன்

---

† சூலப் படையானை—என்னும் தேவாரப் பண்; ஊனேறு செல்வத்து—என்னும் பெருமாள் திருமொழிப் பதிகத்தைத் தழுவியது.

மாயா மதந்தொலைத்த மாயோன்வா ழாச்சிரம
ஈயாப் பிறக்கு மியல்புடையே னாவேனே. ௩

கொண்டாடுங் கொற்றக் குடையரசும் யான்வேண்டேன்
அண்டாரை யில்லா வதிகாரம னானந்தன்
கண்டார்தங் கண்கவருங் கண்ணாளன் பூங்காவில்
வண்டாப் பறந்துமகிழ் மாதவத்தே னாவேனே. ௪

வானாளுஞ் செல்வமுமிம் மண்ணரசும் யான்வேண்டேன்
மானாபி மான மயக்கறுத்தோன் மாதேவ
சேனானி யாம்வேங் கடரமணன் றீர்த்தத்தில்
மீனாப் பிறக்கும் விதியுடையே னாவேனே. ௫

ஈடிலாப் பஞ்சவர்க ளின்னருளும் யான்வேண்டேன்
கோடிலா ஞான குருரமண னின்னருளைக்
கேடிலாப் பத்திமையோர் கேட்டுவக்க நல்வானம்
பாடியாப் பாடுமுயர் பாக்கியத்தே னாவேனே. ௬

கோகுலமால் வைகும்வை குந்தமுமே யான்வேண்டேன்
வாகுபனி ரண்டுடையான் வாழ்த்தின் வகையல்லால்
ஆகுலங்க ளெல்லா மகற்றுரம ணாச்சிரமக்
கோகுலமாக் கூவுங் குலாவுடையே னாவேனே. ௭

முடிச்சே கரமணிந்து மூவுலகா ளாசைகடைப்
பிடிச்சே யுழல்கின்ற பேதைமையேன் யானல்லேன்
அடிச்சே வகர்க்கெளிய னாயரம ணாச்சிரமக்
கொடிச்சேவ லாகுங் குதூகலத்தே னாவேனே. ௮

வீயாப் பெருவளஞ்சேர் விண்ணரசும் யான்வேண்டேன்
சேயாப் பிறந்த திருவேங் கடரமணன்
பாயாக் குருகட்ட பண்ணவன்சே ராச்சிரம
நாயாப் பிறக்கு நலனுடையே னாவேனே. ௯

பருநா டரையாளும் பாக்கியமும் யான்வேண்டேன்
வருவா தனையகற்றி வாழ்வளிக்கும் பெம்மான்முன்
விருபாட்சி வீற்றிருந்த வேள்வேங் கடரமண
குருபாத சேவைசெயுங் கொற்றத்தே னுவேனே. கO

சுற்றம் பலகோடி சூழ்தொடர்பும் யான்வேண்டேன்
தெற்றத் தெளிரமண தேசிகன்ற னின்னருளால்
உற்றபல கோடி யுலகமுமே யுள்ளடக்கும்
சிற்றம் பலமேயாஞ் செய்தவத்தே னுவேனே. கக

திருச்சிற்றம்பலம்

——:o:——

கக௯. கண்ணிகள்

(கலித்தாழிசை)

க. † எந்நாட் கண்ணி

திருச்சிற்றம்பலம்

அஞ்சலஞ்ச லென்றே யணிவாய் மலர்ந்தடியார்
சஞ்சலங்கள் போக்குமவன் சார்படைவ தெந்நாளோ. க

மறைபணிக்கா ளாகை மறந்து ரமண
இறைபணிக்கே யாளா யிருந்திடுவ தெந்நாளோ. உ

தெள்ளியோர் சிந்தையிலே சேர்வேங் கடரமண
வள்ள லருள்பெற்று வாழ்ந்திடுவ தெந்நாளோ. ௩

மோகாந்த கார முடிந்துரம ணேசனுடன்
ஏகாந்த மாக விசைந்திடுவ தெந்நாளோ. ௪

† தாயுமானவர்பாடலிலுள்ள எந்நாட் கண்ணியைத் தழுவியது.

அமலன்பால் வெண்ணீ றணிபெருமா னீன்ற
ரமணன்பாற் கூடி ரமித்திடுவ தெந்நாளோ. ௫

ஓரொருகா லூடி னுணர்த்திப் புணர்கின்ற
ஈர றுதோ ளெம்மா னியல்புணர்வ தெந்நாளோ. ௬

ஆய்ந்தாய்ந் தடங்கிரம ணீசா னருளடிக்கே
ஓய்ந்தோய்ந் தொடுங்கி யொளிர்ந்திடுவ தெந்நாளோ. ௭

ஏக்க மிலாதரம ணேச னருள்வலத்தால்
ஊக்கமா யோக வுறக்கமுற லெந்நாளோ. ௮

காந்திக் கனன்றமனக் கண்ணின் களிப்பொழியச்
சாந்தித் துயில்வாய்ச் சமைந்திருப்ப தெந்நாளோ. ௯

சாந்தியோ சாந்தியெனச் சாற்றிடுசெந் தாபமறச்
சாந்தியே தானாய்த் தரித்திடுவ தெந்நாளோ. ௧O

பற்றற்ற பாவனநின் பற்றாலே மற்றவற்றின்
பற்றற்று நிற்கும் பதமடைவ தெந்நாளோ. ௧௧

என்னு லெதுவு மியங்காமல் யாவையுமே
உன்னு லியங்க லுணர்ந்தொடுங்க லெந்நாளோ. ௧௨

தன்மயமா யெங்குந் தழைத்தரம ணானந்தா
உன்மயமா யானு மொளிர்ந்திருப்ப தெந்நாளோ. ௧௩

ஊனொழிந்து மற்றைய்வை யோம்பா வுணர்விலியேன்
யானொழிந்து நீயா யிருந்தொளிர்வ தெந்நாளோ. ௧௪

யானாகி நின்ற வியலழிந்து மெய்ப்பொருளாம்
தானாகி யெங்குந் தழைத்திடுவ தெந்நாளோ. ௧௫

திருச்சிற்றம்பலம்

உ. *பராபரக் கண்ணி

திருச்சிற்றம்பலம்

அவனவனென் றேவா தரற்று வதினும்
சிவன்சிவனென் றேதல் சிறப்பாம் பராபரமே. க

பற்றற்று நிற்கும் பரிசன்றே பண்டைவினைத்
தொற்றற்று நிற்கச்செய் சூழ்ச்சி பராபரமே. உ

உண்மைப் பரவெளியா முன்னிடத்தே முப்பொருளின்
திண்மைப் பிரிவினையார் செய்தார் பராபரமே. ந

நானென் பவனன்றே நாட்டினன் மெய்ஞ்ஞான
வானின் றிறத்தவ் வழக்குப் பராபரமே. ச

அல்லலொழிந் தென்றே வமர்வேனம் முப்பொருளின்
எல்லைவழக் குத்தீர்ந் தெளியேன் பராபரமே. ரு

ஆச்சுப்போச் சென்ன வகந்தை யடங்குறாதல்
ஏச்சுப்பேச் சுண்டோ ரமணப் பராபரமே. சா

ஊனவிழிக் கல்லா லொளிருமெய்ஞ் ஞானவெளி
ஆனவிழிக் கன்னியமெவ் வாறும் பராபரமே. எ

ஆயினுனை யன்றியிரண் டற்றபரி பூரணமாய்
ஏயுமிறை வாநீ யியம்பாய் பராபரமே. அ

உடையைவிழுப் பென்றவிழ்ப்ப ரூனுடனு னன்றென்
றுடலவிழ்த்த லன்றே வுணர்வாம் பராபரமே. கூ

ஊனமொன் றின்றி யொழுகும் பரசொருப
மோனமன்றே ஞான முழக்கம் பராபரமே. க0

திருச்சிற்றம்பலம்

---

* தாயுமானவர் பாடலிலுள்ள பராபரக் கண்ணியைத் தழுவியது.

உ0. தேசிகப் பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண் : தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

பார்வளர் கயிலைப் பருப்பத நீங்கிப்
பண்ணவர் சூழலை விட்டு
வாரொளி மணிபோல் வாசகர் வாக்கை
வளர்செவி மடுத்திட விரும்பி
ஏர்வளர் பெருந்தண் டுறையடைந் தாற்போ
லிழிசினேன் புன்சொலும் வேட்டுச்
சீர்வள ரருணைச் செழும்பதி சேர்ந்தாய்
தேசிக ரமணமா தேவே. க

இருவராந் தெய்வப் பெரியரா லறியா
விவ்வுரு வெதற்கெனத் தள்ளிப்
பருகலா மனித்தப் படிவமேற் கொண்டு
பணிந்தெழு மடியவர் தமக்குக்
கருவணு தருளக் கங்கணம் பூண்டு
கச்சையு மதற்கெனக் கட்டித்
திருவணு மலையிற் சிறக்கவீற் றிருந்தாய்
தேசிக ரமணமா தேவே. உ

---

†திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்.

கூன்மதி யணிந்த குடிலமு மறைத்துக்
குளநய னத்தையு மறைத்து
மான்மழு வணிந்த மலர்க்கர முதலா
யாவையு மறைத்தனை யெனினும்
மான்முத லோரை யளித்தபைஞ் ஞீல
மிடற்றினை மறைப்பதும் வழக்கோ
தேன்மடை திறந்த கொன்றையு மறைத்த
தேசிக ரமணமா தேவே. ௩

முற்பல பேரை முகங்களை நெரித்தும்
மூக்கொடு கரங்களை யரிந்தும்
பற்களை யுடைத்துந் தலைகளைத் தறித்தும்
பறித்துநற் கண்களை யந்தோ
பற்பல விதமாப் பலபடப் புரிந்த
பழவினை யொழித்திடப் பரிந்தோ
சிற்பர யோகஞ் செறிந்துநிற் கின்றாய்
தேசிக ரமணமா தேவே. ச

போகமே துறந்த புனிதமா தவர்க்குப்
புலப்பட யோகுசெய் நாளில்
வேகமே மிகுந்த வெங்கணை துரந்த
வேடனை விழித்ததாற் காம
வேகமே யில்லாய்க் குடுத்தகோ வணமும்
மிகையின்மேன் மிகையெனின் மிகையோ
தேகமே மிகையாத் தேர்ந்தெலாந் துறந்த
தேசிக ரமணமா தேவே. ரு

காரிய நோன்புங் கவினிய கற்புங்
 கலங்கிடச் செயுங்கடுங் கோலென்
ஞூரிய நாட்டி லரசியல் வழிக்கே
 யமைதியாய்ப் பற்பல சமயா
சாரிய ரொருங்கே சார்ந்துழைத் திடுதல்
 சற்றுமஃ தறிந்திலை கொல்லோ
சீரிய வதற்கென் செய்துளை கொல்லோ
 தேசிக ரமணமா தேவே. சு

நோய்மையாம் பிறப்பை நோன்றிடற் கஞ்சி
 நோய்மையா தொன்றுமே சேரா
வாய்மையாம் பரமே வாய்வதற் கெண்ணி
 வந்தடி வணங்கிடு வார்க்குத்
தூய்மையா முள்ளத் துறவினை நல்கித்
 துகளறு காட்சியு மளித்துச்
சேய்மையாம் பொருளை யண்மையிற் சேர்ப்பாய்
 தேசிக ரமணமா தேவே. எ

தஞ்சமென் றடைந்த தமியனேன் வாழத்
 தயைமிகத் தழைத்திட நோக்கி
அஞ்சலென் றுன்ற னணிமலர் வாயா
 லாதரம் பெருகிட வழைத்துக்
கஞ்சமென் றுவமை கண்டநின் கழலாங்
 கனகமா முடியெனைக் கவித்துச்
செஞ்சொலொன் றருளித் திருவருள் புரிவாய்
 தேசிக ரமணமா தேவே. அ

பருவ ரலாற்றும் பற்றுடை வினையின்
பரிசென விளைந்திடு மூத்தைக்
கருவர லாற்றுக் கழிபடர் வருத்தங்
கனவினு நனவினுங் கருதி
வெருவர லடைந்து விதிர்விதிர்ப் பெய்தி
மிகமிகக் கலங்கிடு முள்ளத்
தெருமர லொழித்துத் திருவருள் புரிவாய்
தேசிக ரமணமா தேவே. கூ

விருத்தமா மிரண்டு வினைகளின் பயனும்
விளைந்திடுங் கொடுமைசால் பிறவி
வருத்தமே மருவா வாழ்விடை யமர்ந்து
மனமகி ழடைந்தினி திருப்பப்
பொருத்தமா ஞானப் பூவையை யெனக்குப்
புதுமணம் புணர்த்திடின் வாழ்வேன்
திருத்தமாம் பொழில்சூழ் திருவணா மலைவாழ்
தேசிக ரமணமா தேவே. க0

தெருக்கடை யலைந்து திரியுநாய் போலத்
தேர்ந்ததே தேர்ந்ததே தேர்ந்து
பெருக்குடை யெல்லாப் பிறப்பினும் பிறந்து
பெருந்துய ரிடும்பைக ளுழந்து
கருக்கடை கதியாக் காத்துநிற் பேனைக்
கடைக்கணித் தியானென தென்னும்
செருக்கற வொழித்துத் திருப்பத மளிப்பாய்
தேசிக ரமணமா தேவே. கக

(கட்டளைக்கலித்துறை)

தச்சறி யாத சதுமறைப் பார்ப்பான் சமைத்தவுடற்
றுச்சிலுட் கன்மத் தொடர்பாற் புகுந்த சுணங்கனிது
புக்கிலை வேட்டுப் புலம்பெய்து காலையிற் புண்ணியநின்
எச்சிலை வேட்டுன் னிருதா ளிறைஞ்சி யிரக்கின்றதே.

திருச்சிற்றம்பலம்

—:o:—

உக. ரமணதேவப் பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

புரமனே கங்கள் பொடிபடச் செற்ற
புராரியே முராரியே முதலோர்
கரமனே கங்கள் சிரமிசைச் சுமந்து
காணவே கடைத்தலை காக்கும்
பரமனே யுனது பாதமே யடைந்தேன்
பதகனே னென்னினும் பரிந்து
வரமதா விமல வாழ்வெனக் கருள்வாய்
வள்ளலே ரமணமா தேவே. க

† திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்.

பத்தனே யென்கோ பரமனே யென்கோ
பரிவுடைக் கிறித்துவே யென்கோ
முத்தனே யென்கோ முனிவனே யென்கோ
முகம்மது நபியென மொழிகோ
வித்தனே யென்கோ விமலனே யென்கோ
வீரகோ தமமுனி யென்கோ
அத்தனே யென்கோ குமரனே யென்கோ
வண்ணலே ரமணமா தேவே. உ

மக்களு மனையும் மண்ணொடு பொன்னும்
மற்றுள பற்பல பொருளும்
தொக்கன போலத் தோன்றுறு முலகந்
தொன்றுபோ லொன்றுமே யின்றி
உக்கன வாகி யொழிந்திடல் கண்டு
முண்மையை யுணரவே யொட்டாப்
பொய்க்கன வதனிற் பொருந்துத லாற்றேன்
புண்ணிய ரமணமா தேவே. ௩

அலையிலே சுழலுந் துரும்பது வாக
வறிவது கலங்கியே வேடன்
வலையிலே மடுத்த மானது போல
மனமிக மயங்கிடு வேனைத்
தலையிலே யுனது தாண்மலர் வேய்ந்து
சஞ்சல மென்பது சாரா
நிலையிலே யிருப்ப நிறுத்தியே வைப்பாய்
நின்மல ரமணமா தேவே. ச

பாசமா லிகந்த பரமனு முனது
பாதமே மோசன மென்று
நேசமே லிட்டு நினைப்பயர்ப் பில்லா
நினைப்பிலே யழுந்துறப் பழைய
வாசனு திகளால் வலிப்புறப் பட்டு
மாயமா முலகியல் வாழ்வில்
ஊசலா டுளத்தை யொருநிலை நிறுத்தி
யுதவுவாய் ரமணமா தேவே. ரு

நண்ணுதற் கரிய ஞானமாம் பரிசி
னுடியே வந்தடைந் தேனை
எண்ணுதற் குரிய வினியநற் குணந்தா
னேதுமே யிலனென விகழிற்
பண்ணுதற் குரிய பரிசிலா மையினுற்
பதைபதைத் தழிவதை யன்றி
அண்ணுதற் குரிய வயலிடங் காணே
னண்ணலே ரமணமா தேவே. சு

மூர்க்கமே படைத்த முழுமக னென்று
முனிவதை யொழிந்துதன் கடைக்கண்
நோக்கமே புரிந்த நுவலருங் கருணை
வெள்ளமே நோய்மையே பெருக்கும்
ஆக்கமே யவாவி யடைந்திலே னுன்பா
லயர்வற வறிதுயி லமரும்
தூக்கமே வேண்டித் துன்னினேன் கண்டாய்
துரியனே ரமணமா தேவே. எ

சிந்தையே கோயில் சேர்ந்தனை யதனாற்
சிந்தையி லழுக்குறு வண்ணம்
எந்தையே செய்ய வியன்றிடு வரையி
லெத்தனஞ் செய்திடு கின்றேன்
புந்தியே பொருந்தி யதுகடை போகப்
புரிவது நின்பொறை கண்டாய்
நிந்தையே மருவா நெடும்புகழ் சேர்ந்த
நீதனே ரமணமா தேவே. ௮

நீசனே யாக நின்மலா நினது
நெடுங்கழ லடைந்துமுன் னின்றேன்
ஈசனே யெங்க ளிறைவனே யடைந்த
யாவையுந் தன்மய மாக்கும்
தேசனே யென்னைச் சிவமய மாக்கித்
திகழவே வைப்பதுன் கடனாம்
நேசனே யென்னுள் வாசனே கண்ட
நீலனே ரமணமா தேவே. ௯

காணவே யொண்ணாக் கதிரொளி மேனி
காட்டியென் சீவபோ தத்தைப்
பூணவே யரிய பொறையுடைச் சிவமா
போதபா ரத்தினா லழுத்தி
வீணனா மென்னை விழுங்கியே யாண்டாய்
வித்தக வெளிறனே னுனக்கு
மாணவே செயுங்கைம் மாறுதா னுண்டோ
வள்ளலே ரமணமா தேவே. ௧௦

திருச்சிற்றம்பலம்

௨௨. எண்ணப் பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: புறநீர்மை (பூபாளம்)

திருச்சிற்றம்பலம்

துங்கவாள் விழியாற் றேய்ந்தமெய் யடியார்
தொல்வினைத் தொடக்கறத் துணித்துச்
சங்கவார் குழைதாழ் செவிகளா லன்னார்
தங்குறை கேட்டருள் சுரப்போய்
பொங்கரா வோடு புனிற்றிளந் திங்கள்
புரிசடைப் புணர்த்தவேங் கடவா
அங்கணு ணோக்கி யடியனே னல்லற்
காவவென் றிரங்கவேண் டுவனே. க

சூதங்க மாம்பார்ச் சுரத்தவா வளியாற்
சுழன்றெறி பட்டவெம் பிறவி
ஆதங்க நீங்கி யடியனே னுன்ற
னடிநிழ லடைந்திட வேண்டும்
வேதங்க ளாலும் விளம்புதற் காகா
வித்தகா னந்தவேங் கடவா
ஏதங்கொண் டின்ப வூதியம் போக்கா
தென்னையு முய்யக்கொண் டருளே. ௨

---

† மங்கையர்க் கரசி—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் எண்ணப்பதிகத்தின் கருத்தைத் தழுவியது.

தீண்டாமை யெனுந்தீத் தீட்டற வொழிந்தென்
சிந்தைதூய் தாயிட வேண்டும்
வேண்டாமை யென்னும் விழுப்பொருள் வேண்டும்
மெய்யுணர் வுரம்பெற வேண்டும்
மூண்டாரு நின்புன் முறுவலுக் குணவா
முப்புரஞ் செற்றவேங் கடவா
ஈண்டாமை யிச்சை யவிச்சைவே ரறச்செற்
றென்னையு முய்யக்கொண் டருளே. ங

நின்னலா லொன்று நிலையிலாத் தன்மை
நினைவற நினைந்திருந் தறிந்தேன்
உன்னலா துலகை யொழித்துநா னுளத்தா
லுன்னையே யுன்னுதல் வேண்டும்
பன்னலார் சோணைப் பதிக்கணுஞ் சிற்றம்
பலக்கணும் பயின்றவேங் கடவா
இன்னலா லடியே னிரங்கிடா வண்ண
மென்னையு முய்யக்கொண் டருளே. ச

புதுவது நாளும் புலவர்கள் புனைநின்
பொன்னடிப் பத்திமை வேண்டும்
முதுவருக் கெல்லா முழுமணிப் பூண
மோனநான் முற்றிட வேண்டும்
கதுவுதற் கரிய கனவழற் பிழம்பாய்க்
கடவுளோர் கண்டவேங் கடவா
இதுவரை யுன்னை யிகந்தமைந் தாற்போ
லினிப்பிரிந் தாற்றகில் லேனே. ரு

கருதுப கோடிக் கணக்கெனு வுடைய
 கைதவ மாயவெம் பிறவிப்
பருவர லொழிந்து பரமநின் பரம
 பதத்திடை வதிந்திட வேண்டும்
குருபர ளுகிக் குடிமுழு தாண்டென்
 னுயிரையுங் கொண்டவேங் கடவா
ஒருபொழு தேனு முனையகன் றடியே
 னுடையவா வுய்யகில் லேனே. சு

வாழ்துமென் றிருந்த வலவையேன் பலகான்
 மனத்துனைக் காண்குரு தந்தோ
ஆழ்துயர்க் கடல்வா யமிழ்ந்தழி கின்றே
 னருள்சுரந் தாண்டவேங் கடவா
மாழ்குறே னுன்றன் மதிமயங் கிடநான்
 மாறிடேன் மனத்தினின் றிமைப்பின்
போழ்துமென் றன்று புகன்றவாய் மையுமோர்
 பொய்ம்மையோ வெம்பெரு மானே. எ

போற்றிலே னுன்றுள் பொதிந்திலேன் புந்தி
 புணர்ந்திலே னடியவர் கூட்டம்
தேற்றிலே னுண்மை தெளிந்திலேன் சிந்தை
 தீர்ந்திலே னுலகிய லாசை
மாற்றிலா வகையா லருள்சுரந் தாண்டாய்
 மதியினை யுண்டவேங் கடவா
நோற்றெனே யானே னேக்கநீ வரினு
 நோக்குநா ளுணுவ னன்றே. அ

மேயினு ரகந்தை வீணரென் றுனது
 மெய்யடி யார்தமைப் பலகால்
வாயினுல் வைதேன் வாழ்த்திலேன் முறையால்
 வணங்கிலே னினைக்கிலேன் கொடியேன்
ஆயினு மென்னை யருள்சுரந் தாண்டா
 யவ்வரு ளறியின்வேங் கடவா
நாயினுங் கடையாம் பேயனே னுன்னை
 நணுகவு நாணுவ னன்றே. ௯

எள்ளுளே நெய்போ லென்னுளே யிருந்த
 வுன்னையோ ரில்பொரு ளாக
எள்ளியே யிகழ்ந்த விழுக்குமே நோக்கா
 தெனையுமோர் பொருளென வாண்டு
வள்ளமா யிந்தக் கள்ளனேன் கையில்
 வளம்பட வந்தவேங் கடவா
உள்ளுளே யுணர்வா யொழிவற வரினு
 முள்ளநான் வெள்குவ னன்றே. ௧0

திருச்சிற்றம்பலம்

உங. அருட்பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

காணியே வேண்டிக் கனமறை யோதிக்
　　கால்கொடு விசையுற நடந்த
மாணியே முதலோர் மதித்திடற் கரிய
　　மாண்புடை ரமணமா தேவே
பேணியே நினைவார் பிழைபொறுத் தாளும்
　　பிறங்கல்போற் பிறங்குபே ரின்பக்
கேணியே யுன்னைக் கிடைத்தருந் திடநான்
　　கிட்டவா வென்றருள் வாயே. க

பேரிலே பெருத்த பிரமன்மா லாதிப்
　　பெரியவர் யாவரும் வேண்டக்
காரியே விழுங்கிக் கருமைசேர் நீல
　　கண்டனே ரமணமா தேவே
சீரிலே சிறக்கச் சேர்ந்தவர்க் கருளுஞ்
　　சிலம்புபோற் றிகழுநீ டின்ப
ஏரியே யுன்னை யினிதருந் திடநா
　　னெழுகவென் றருள்புரி வாயே. உ

† திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் அருட்பத்தின் கருத்தைத் தழுவியது.

பாரிலே மனித்தப் படிவமாய் ரமணப்
பசும்பெயர் தாங்கியே வந்த
பாரியே ஞான பானுவே தன்னைப்
பற்றியே யகங்கரைந் துணர்வார்
பேரிலே யிரங்கிப் பேரருள் சுரக்கும்
பிறங்கல்போற் பிறங்குபே ரின்ப
வாரியே யுன்னை வாய்மடுத் திடநான்
வருகவென் றருள்புரி வாயே. ௩

கேடுதா மடைந்தக் கேடுதீர் மார்க்கங்
கேட்டுவந் தடைபவர் தமக்கு
வீடுதா னருள வெளிப்படப் போந்த
விமலனே ரமணமா தேவே
பீடையே யொழித்துப் பேரருள் சுரக்கும்
பிறங்கல்போற் பிறங்குபே ரின்ப
ஓடையே யுன்னை யுவந்தருந் திடநா
னோடிவா வென்றருள் வாயே. ௪

கள்ளமே யின்றிக் கரைகுவார் தங்கள்
கரதலத் தெய்துமோர் செம்பொன்
வள்ளமே யருட்கண் வலையினை வீசும்
வல்லனே ரமணமா தேவே
பிள்ளவே யரிய பெருங்கவல் பிளக்கும்
பிறங்கல்போற் பிறங்குபே ரின்ப
வெள்ளமே யுன்னை விழைந்தருந் திடநான்
விரைகவென் றருள்புரி வாயே. ௫

கெடாதமால் வசத்தா லடாதவே புரிந்துங்
கிழமையாய்ப் பத்திசெய் வோர்கள்
படாதபா டெல்லாம் படுவதை யொழிக்கும்
பரிவுடை ரமணமா தேவே
விடாயினு லடைந்தோர் வெப்புநோய் தணிக்கும்
விலங்கல்போல் விளங்குபே ரின்பத்
தடாகமே யுன்னைத் தணிந்தருந் திடநான்
சார்கவென் றருள்புரி வாயே. சு

யாவரே யெனினு மினிதுவந் தடைந்தோ
ரெவ்வித பேதமு மின்றிப்
பாவமே போக்கிப் பவித்திர மாக்கும்
பாதனே ரமணமா தேவே
ஆவலா லேய்ந்த வடியவர்க் கருளு
மருணைபோ லவிருநீ டின்பக்
கூவமே யுன்னைக் குனிந்தருந் திடநான்
கூடுக வென்றருள் வாயே. எ

பாவியே னுடைய பழவினை யொருங்கே
பற்றறச் செற்றிடப் பரிந்து
கூவியே யென்னைக் குடிமுழு தாண்ட
குருவர ரமணமா தேவே
மேவியே நினைவார் மேலருள் சுரக்கும்
விலங்கல்போல் விளங்குபே ரின்ப
வாவியே யுன்னை வாய்மடுத் திடநான்
வருகவென் றருள்புரி வாயே. அ

உருவிலே யன்றி யுணர்விலே பொல்லா
　　வூத்தையே னையுமொரு பொருளாய்
மருவியே யாண்ட மாணிக்க மலையே
　　மாண்புறு ரமணமா தேவே
வெருவியே யடைந்தோர் வெவ்வினை சாய்க்கும்
　　விலங்கல்போல் விளங்குபே ரின்ப
அருவியே யுன்னை யருந்தவே யென்னை
　　யணைகவென் றருள்புரி வாயே. ௯

கோத்தகூர் வாளி குறித்ததே யல்லாற்
　　கொலாமையாங் குணமுடை விரதம்
காத்ததே யில்லாக் கசடனை யாண்ட
　　கடவுளே ரமணமா தேவே
ஏத்தவே செய்வோர்க் கேற்றமே நல்கு
　　மிறம்புபோ லிலங்குபே ரின்ப
நீத்தமே யுன்னை நெடிதருந் திடநா
　　னீவரு கென்றருள் வாயே. ௰

திருச்சிற்றம்பலம்

உச. வாழாப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண்: தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

பாதியா யாண்பெண் பகிர்ந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
ஆதியோ டந்த மகன்றவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
சோதியா தென்னைத் துயர்களைந் தருளாய்
துறந்திடின் வாதனைத் திரளால்
வாதியா நின்று வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. க

பற்பநீ றணிசெம் பவளமே னியநின்
பற்றலான் மற்றிலேன் கண்டாய்
அற்பனே னையுமிக் காண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
அற்பினா லெனக்குன் னமுதவாழ் வளித்தா
யகற்றிடின் மீட்டுநான் முன்போல்
வற்பினா லிடைந்து வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. உ

---

† திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் வாழாப்பத்தைத் தழுவியது.

பாதமே யல்லாற் பரமனே சாரப்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
ஆதனே யெனையுநன் காண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
நீதமோ டுன்னை நினைவற நினைந்துண்
ணெகிழுமெய்ந் நேயரோ டல்லால்
வாதரோ டிணங்கி வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. ௩

பண்டெனை யாண்ட பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
அண்டரு மறிதற் கரியவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
குண்டுணி யென்னத் தண்டமே செய்யிற்
குலவுநின் கோலநான் மறந்திம்
மண்டிணி யுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. ௪

பஞ்சனுங் கடியாள் பங்கநின் பாதப்
பற்றலான் மற்றிலேன் கண்டாய்
அஞ்சலென் றெனைநன் காண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
நெஞ்சநின் மலர்த்தா ணிழலினீங் காது
நிலைபெற வருளுதி யிலையேல்
வஞ்சரின் மயங்கி வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. ௫

பசுபதிப் பெரும பரம்பொரு ளாந்தற்
பதப்பொரு டொம்பதப் பொருளோ
டசிபதப் பொருளா மைக்கிய ஞான
வருணமா மலையருட் சுடரே
நிசரதச் சுவையா னெஞ்சினை யுருக்கு
நிமலனே நின்னையா னீங்கி
மசரதத் தூர்ந்து வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. சு

பற்றற வுனது பதத்துணை யல்லாற்
பற்றிலே னெனு மகந்தை
அற்றிட வெனையன் றுண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே
கலாதுநின் கழலிணை மறப்பின்
மற்றொரு கணநான் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. எ

பரந்தபே ரருளார் பரமநின் பாதப்
பற்றலான் மற்றிலேன் கண்டாய்
அரந்தைபேர் தரநன் காண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
புரந்தரா தியர்தம் போகமே யடியேன்
புந்திநின் றுண்மற வாத
வரந்தரா யென்னின் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. அ

பழகினர் தம்மாற் பிரிவரு நின்றாட்
பற்றலான் மற்றிலேன் கண்டாய்
அழகனே யெனைநன் காண்டவேங் கடனே
யருணமா மலையருட் சுடரே
விழவினர் கலிச்சீர் விளிவிலா முன்றில்
விநோதனே விட்டிடி னெனைநீ
மழவனே யிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. ௬

பைந்தமிழ் வாண பரமவேங் கடநின்
பற்றலான் மற்றிலேன் கண்டாய்
ஐந்திணை களுமா யளவியு மளவா
வருணமா மலையருட் சுடரே
நைந்துள மழுங்கி நலியநட் டாற்றி
னழுவவிட் டிடாதிநின் னருட்சீர்
மைந்தின லன்றி வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே. ௧௦

திருச்சிற்றம்பலம்

உரு. அதெந்துப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

பண்டுமா லயனும் பார்த்திடற் கரிதாய்ப்
பாதல மேழின்கீழ்ப் பாய்ந்து
விண்டல மேழின் முகடுமூ டுருவும்
வித்தக மேனிவேங் கடனே
தண்டமி ழருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அண்டிநா யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே. க

கழுக்கடை தரித்த கரத்தனே கறைசேர்
கண்டனே பிண்டநே ருயிரை
விழிக்கடை நோக்கால் விமலமா வேதித்
திடவெளி வந்தவேங் கடனே
சழக்கிலா வருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அழுக்கடை நாயே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே. உ

---

† திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்; சோதியே சுடரே—என்னும் திருவாசகத்தைத் தழுவியது.

தேவர்தாந் தமையின் றமைந்திடா திந்தச்
செயலெனச் செருக்கின ராக
மேவலார் தங்கள் புரங்கண்மூன் றெரிய
வெண்ணகை புரிந்தவேங் கடனே
தாவலா வருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
ஆவலா யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. ௩

மூகவிலா சத்தான் மோகவா ரிருள்போய்
முடிவுற வடியவர்க் கருள
மிகவலாய் வெள்ளி வான்பிறைக் கோடு
வேணியின் மிலைந்தவேங் கடனே
தகவுலா மருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அகவலா யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. ௪

மம்மரா மிருளான் மயங்குவார் மலக்க
மாய்க்குமெய்ஞ் ஞானமாப் பரிதிச்
செம்மலே சற்றுஞ் சிந்தனைக் கரிய
செல்வமே செழியவேங் கடனே
தம்மமாஞ் சோணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அம்மவோ வடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. ௫

கறவையே நாடிக் கடுகியே யோடுங்
கன்றுபோற் கழலடை வோரை
விறலினு லோங்கும் விழியினுல் வினையின்
வீறுதீர்த் தருள்செய்வேங் கடனே
தறியதா மருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அறவைநா யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. சு

உலகெலா முணர்ந்தோ ருலப்பிலாக் கால
முசாவியு முணர்கலா வுன்னை
விலையிலாச் செழுமா ணிக்கமா மலையை
மேலைநல் வினையினு லடைந்தேன்
தலைமைசே ரருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அலகைநா யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. எ

மடைக்கடை திறந்த மகோததி யேபோற்
கருணைபாய் மலர்த்தடங் கண்ணுல்
மிடுக்குடை வினையேன் வெம்பவத் துயரை
வீட்டுநல் லந்தண்வேங் கடனே
தடப்பெருஞ் சோணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அடிக்கடை நாயே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே. அ

சவலையா யழுங்குந் தமியனேற் கிரங்கிச்
செவிலியா யருளமு தூட்டிக்
கவலறத் தனது கவானிடைக் கிடத்திக்
கண்வளர்த் திட்டவேங் கடனே
தவலருஞ் சோணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அவலமுற் றடியே னுதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. சுகூ

வழங்கினு யெனக்கு வரதனே யுனது
வண்மையா லருளமு தத்தை
விழுங்குறு முன்னே விக்குவேன் கொல்லோ
வியன்முத லாயவேங் கடனே
தழங்குதீ யருணைத் தலத்திலே தேமாந்
தண்ணிழ லமர்ந்தமா தவனே
அழுங்கிநா யடியே னுதரித் தழைத்தா
லதெந் துவே யென்றரு ளாயே. க0

திருச்சிற்றம்பலம்

உசு. பிடித்த பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

மையர்வசத் தாலே மதிதடு மாறி
மகார்செயும் பிழைகளை யியல்பாற்
றயவுடைத் தள்ளை சகித்தலேய் தரவென்
றவறுக ளடங்கலும் பொறுத்தாய்
அயர்வுயிர்ப் பெய்த வடியவ ரகக்கட்
டவிழ்த்திடும் பரிதிவேங் கடப்பேர்
இயவுளே யுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. க

பொங்குமா கடல்போற் பொங்குமென் புந்திப்
புலத்தைமேற் பொங்குறு தடங்கி
மங்குமா கடலாய் மங்குமா றனது
வாள்விழி நோக்கினு லடர்த்தாய்
எங்குமா யெழுந்த வின்பமாக் கடலே
யாவுமா மேகவேங் கடனே
இங்குநா னுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. உ

---

† திருவுமெய்ப் பொருளும்—என்னும் தேவாரப் பண்; உம்பர்கட் கரசே—என்னும் திருவாசகத்தைத் தழுவியது.

தோற்றமா மெந்தத் தூலசூக் குமமுந்
துச்சமா யுளத்தினின் றொழியத்
தேற்றமா ஞானத் திறமெனக் கருளித்
திகழ்ச்சிசேர் சிவபத மளித்தாய்
ஆற்றலா லென்ற னகந்தையா மதனை
யறத்தெற விழித்தவேங் கடனே
ஏற்றவா றன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௩

*அகமக மெனநா னகங்கரித் ததனு
லகவிழி குருடுபட் டடியேன்
பகிர்முக நோக்காற் பரிதவிக் குங்காற்
பரிவுளங் காட்டிவந் தாண்டாய்
மகமனை மண்பொன் னாதிய மையல்
வகையெலா மறுத்தவேங் கடனே
இகபர முன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௪

வஞ்சியா நின்று மலங்கலைச் செய்யு
மாயைக்கு வயங்கத ளாகித்
துஞ்சிடா தென்னைத் துரியமேல் வைத்துத்
துகளறு போதநன் கீந்தாய்
அஞ்சிடா தென்மே லருள்சுரந் தாண்ட
வழகனே யந்தண்வேங் கடனே
எஞ்சிடா துன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௫

பொன்னுளே தோன்றிப் பொன்னுளே நிலவிப்
பொன்னுளே மறைபொலங் கலம்போல்
என்னுளே யாவுந் தோன்றியே யியங்கி
யென்னுளே யொடுங்கிடக் கண்டேன்
உன்னுமா றில்லா வுணர்வுமாத் திரமா
யுவந்தெனைப் புரிந்தவேங் கடனே
என்னுளே யுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௬

பொய்க்கன வாகப் புலப்படு முலகிற்
புரைபடு மங்கணத் தமிழ்தம்
உக்கென யான்வீழ்ந் தொழிந்திடா வகையா
லுன்னுளே யென்னைநீ யுய்த்தாய்
கைக்கனி நெல்லி கடுப்பவிவ் வெளியேன்
கருத்திடை வந்தவேங் கடனே
இக்கென வுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௭

சொல்லிடி னமுதைச் சுவையென நின்னைத்
துதைந்திருந் தொன்றிய வென்னைப்
புல்லிடு மின்பம் புதியதா நின்னிற்
புதுமையாப் பிரித்தனை போலும்
அல்லிடை நன்காட் டலகையின் வளாகத்
தழகுறக் குனிக்கும்வேங் கடனே
எல்லிடை யுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. ௮

உண்மையா முணர்வோ டுளத்திற லொன்று
முவந்திடாப் பெருக்கமு முதவி
வண்மையா லிந்த வறியனேன் றன்னை
வளவற்கு மேம்பட வைத்தாய்
திண்மையா லுனது திருவடித் துணையென்
சிந்தையிற் செறித்தவேங் கடனே
எண்மையா லுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. க

சோம்பலாய்ச் சும்மா தூங்கிவீழ்ந் தேனைச்
சோகமோ காதியாற் செத்துச்
சாம்பலா முன்னே சச்சிதா னந்தத்
தற்பத நிலைதரிப் பித்தாய்
தீம்பலாக் கொத்தின் சிறையிடை யெற்குத்
திருவருள் புரிந்தவேங் கடனே
ஏம்பலா லுன்னை யிறுகுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. க௦

நறுமுறு தேவ நாயகர் பல்லோர்
நாசிமேல் விரலிடு வாராச்
சிறுகுறு நாயைச் சிவிகைமே லேற்றிப்
பெருமிதச் சிறப்புகள் செய்தாய்
குறுகுறு நோக்குங் கோலவாள் விழியாற்
கொடியெனை யாண்டவேங் கடனே
இறுகுற வுன்னை யிசைவுறப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே. கக

திருச்சிற்றம்பலம்

உஎ. அருணைவாழ்வு

(ஆசிரியவிருத்தம்)

† பண்: திருநேரிசை (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

பற்பல சமயந் தாமும்
பதைபதைத் தொடுங்கு மாறு
கற்பனை கடந்த தெய்வக்
கடவுளே ரமணப் பேரால்
அற்பனை யாண்டு கொண்டா
யசடனென் றினிக்கை விட்டாற்
சொற்பழி தொடுப்பேன் கண்டாய்
சோதிசே ரருணை வாழ்வே. க

சீர்த்தியை யுற்ற தேவர்
சென்னிமேற் கரங்கள் கூப்பி
ஆர்த்தியி னடைந்து போற்று
மண்ணலே ரமணப் பேராற்
கோத்தைய னுகு மென்னைக்
குறிக்கொண்டா யினிக்கை விட்டால்
வார்த்தைகள் பொழிவேன் கண்டாய்
வண்மைசே ரருணை வாழ்வே. உ

† வெண்ணிலா மதியந் தன்னை—என்பது போன்ற திருநேரிசைப் பண்.

புலவர்கள் புலரு முன்பு
 பொன்னுல கிழிந்து போந்து
மலர்சொரிந் திறைஞ்சி வாழ்த்து
 மாண்பனே ரமணப் பேராற்
சலவருட் சிறந்த வென்னைத்
 தலையளித் தாய்கை விட்டால்
அலர்மிகத் தொடுப்பேன் கண்டா
 யசைவிலா வருணை வாழ்வே. ங

திசைபல பாது காக்குந்
 தேவர்க ளேவன் மேற்கொண்
டிசைபல பாடி யேத்து
 மிறைவனே ரமணப் பேரால்
இசைவிலா வென்னை யாண்டா
 யிகழ்ந்துநீ யினிக்கை விட்டால்
வசைபல தொடுப்பேன் கண்டாய்
 வசையிலா வருணை வாழ்வே. ச

நால்வகைப் பட்ட நாகர்
 நானிலத் திழிந்து நண்ணி
நால்வகைப் பாக்கள் பாடு
 நாதனே ரமணப் பேரால்
மால்வழிப் பட்ட வென்னை
 வரைந்தனை யினிக்கை விட்டால்
மேல்வசை தொடுப்பேன் கண்டாய்
 விளங்குசீ ரருணை வாழ்வே. ரு

புகழ்ச்சிசேர் மறைக ளாய்ந்த
பூசுர ராவார் போற்றும்
திகழ்ச்சிசே ருண்மை ஞானத்
தேசனே ரமணப் பேரால்
நெகிழ்ச்சியில் கன்னெஞ் சேனை
நேர்ந்தனை யினிக்கை விட்டால்
இகழ்ச்சியே யிசைப்பேன் கண்டா
யிகழ்விலா வருணை வாழ்வே. சு

விழிவழி யருவி சோர
வேதகீ தங்கள் பாடித்
தொழுதெழு மவர்க்கு நல்ல
துணைவனே ரமணப் பேரால்
வழிநடை யிகந்த வென்னை
வரைந்தனை யினிக்கை விட்டால்
மொழியலர் தொடுப்பேன் கண்டாய்
முட்டிலா வருணை வாழ்வே. எ

பத்திமை பூண்ட நல்லோர்
பலபல துதிகள் பாடி
நித்தமு மிறைஞ்சித் தாழு
நீதனே ரமணப் பேராற்
பித்தனை யாண்டு கொண்டாய்
பிறகினைந் தினிக்கை விட்டாற்
கொத்தலர் தொடுப்பேன் கண்டாய்
கோதிலா வருணை வாழ்வே. அ

தளியெலா மகற்றி நாடித்
தராதலத் தன்பர் பல்லோர்
விளிகிலா வினைகள் சாய்க்கும்
விமலனே ரமணப் பேரால்
எளியெனை யாண்டு கொண்டா
யிகழ்ந் துநீ யினிக்கை விட்டால்
இளிவர லிசைப்பேன் கண்டா
யிளிவிலா வருணை வாழ்வே. ௬

தர்க்கமோ வல்ல மாந்தர்
தாமெனு மகந்தை சாய்ந்து
நிற்கவே கடைக்க ணிக்கு
நிட்டனே ரமணப் பேரால்
ஒற்கமே யோரா வென்னை
யுவந்தனை யினிக்கை விட்டாற்
சொற்கனை தொடுப்பேன் கண்டாய்
சூதிலா வருணை வாழ்வே. ௧0

திருச்சிற்றம்பலம்

உஅ. *உண்மைவாழ்வு

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

மண்ணல்லை விண்ணல்லை மானு மல்லை
மதியல்லை கதிரல்லை மாய மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பேச்சல்லை மூச்சல்லை பிறவு மல்லை
கண்ணல்லை கருத்தல்லை கருத்தா வல்லை
கரணங்கள் மமுமல்லைவேங் கடவா நீதான்
உண்ணல்லை யுள்குவார்க் குளநா மென்ன
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. க

ஏகமல்லை துவிதமல்லை யிரண்டு மொன்று
யிணைந்தவிசிட் டாத்துவிதந் தானு மல்லை
தேகமல்லை யுயிரல்லையிந் திரிய மல்லை
சித்தமனம் புத்தியகங் கார மல்லை
மோகமல்லை கனவல்லை நனவு மல்லை
முடிந்ததுரி யமுமல்லைவேங் கடவா நீதான்
ஊகமல்லை யுய்த்துணர்வார்க் குளநா மென்ன
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. உ

---

† மண்ணல்லை விண்ணல்லை-என்னும் திருத்தாண்டகத்தைத் தழுவியது.

பொருவில்லை பூதமலை பொறியு மல்லை
புந்தியலை புந்தியறி பொருளு மல்லை
குருவல்லை சீடனலை யுண்மை நோக்கிற்
குருசீடர் தமுண்மாறும் பண்ட மல்லை
கருவல்லை யுலகநோக் கத்தி னன்றிக்
கடவுளியல் பாங்கனவேங் கடவா நீதான்
உருவல்லை யருவல்லை யுபயந் தீர்ந்த
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. ௩

தள்ளலலை கொள்ளலலை தஞ்ச மல்லை
தருமூல சுபாசுபவா தனையு மல்லை
நள்ளலலை பகையல்லை நொதும லல்லை
ஞானமலை ஞேயஞா துருவு மல்லை
கள்ளமலை புலவிடயக் காட்சி யல்லை
கற்பதுங்கேட் பதுமலைவேங் கடவா நீதான்
உள்ளலலை யுள்ளலற்றூர்க் குளநா மென்ன
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. ௪

ஆவதலை யழிவதலை யகந்தை யல்லை
யளவைகளா லறிபடுமெய்ப் பொருளு மல்லை
ஈவதலை யேற்பதலை யிருவே றல்லை
யெம்மையுமே செம்மையலா லிழுக்க லில்லை
போவதலை வருவதலை புதுமை யல்லை
புரிமகத்தாற் பொருந்தலைவேங் கடவா நீதான்
ஓர்வதலை யநுபவத்தா லுளநா மென்ன
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. ௫

இலையல்லை யுளையல்லை யியல்பே யாவை
யெவ்வுயிர்க்கு மயலல்லை யாத லாலே
தொலையல்லை சமீபமலை மாயா பேதச்
சுட்டறிவு பேர்ந்தக்காற் றோன்ற லாவை
மலைவில்லை மலைவிலையெம் மதத்தி னோடும்
மறைமுடிவாஞ் சமரசவேங் கடவா நீதான்
உலைவில்லை யொருபடித்தா யுளநா மென்ன
வுள்ளமா யுளத்தொளிரு முண்மை வாழ்வே. சு

திருச்சிற்றம்பலம்

———:o:———

உகூ. அடைக்கலப் பத்து

(கட்டளைக்கலித்துறை)

† திருவிருத்தப் பண் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

வழிவந்த தொண்டர் வளம்பட வாழ்ந்தனர்
வான்கருணை
விழிநின் றருள்பொழி வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
பழிநின்ற யாக்கையைப் பார்மேற் சுமந்து
பதைபதைப்புற்
றழிகின் றனனுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. க

† பார்கொண்டு மூடி - என்பது போன்ற திருவிருத்தப் பண்; திருவாசகம் அடைக்கலப் பத்தின் கருத்தைத் தழுவியது.

கட்குப் புலப்படுங் காசினி யும்பின்ன
மாக்கருத
வெட்குந் திருவடி வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
கொட்குந் தெருமரல் கூட்டும் பிறவிக்
கொடுங்கலியால்
உட்குவன் காணுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. உ

உஞ்சுநின் ருருன துத்தமத் தொண்டர்க
ளோகையிடை
விஞ்சுகின் றெங்கள் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
நஞ்சுநின் றுள்ள நடுநடுக் கெய்தி
நலிதுயர்கட்
கஞ்சுகின் றேனுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. ௩

மலங்கிட லாக்கும்பொய்ம் மானுபி மான
மயற்கைநின்று
விலங்கின ரன்பர்கள் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
இலங்கிய நின்கட் கிலக்காகப் பெற்று
மிறைபணிவிட்
டலங்கினன் காணுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. ச

பசைந்தன பற்றெழி யப்பர போகப்
பராவமுதம்
மிசைந்தன ரன்பர்கள் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
இசைந்தநின் னுள்ளத் திருக்குறிப் பின்வழி
யெய்தப்பெற்றும்
அசைந்தனன் காணுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. ரு

மயர்ந்திடச் செய்யுமா மாயையைப் பீறிநின்
மாணடியார்
வியந்திட நின்றனர் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
உயர்ந்தநின் சேவையை யுற்றிடப் பெற்றுநா
னேரொருகால்
அயர்ந்தனன் காணுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. ௬

பொறையா லுயர்ந்தநின் பொன்னடித் தொண்டர்
புவனமெல்லாம்
மிறையா வொழிந்தனர் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
கறையா லுயர்ந்தபொய்க் காட்சியை மெய்யாக்
கலங்கலுற்றேன்
அறையோ வறையுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. எ

தெள்ளிய சித்தநின் சேவடி யார்க்கோர்
செழுஞ்சிலம்பு
வெள்ளிடை நின்றன்ன வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
கள்ளுடை மாமலர்க் கஞ்சத் திருவடி
காணப்பெற்றும்
உள்ளுடைந் தேனுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. அ

செழித்திருக் குந்திருத் தொண்டர்க ளோயநின்
சேவடிக்கீழ்
விழித்திருந் தாரெங்கள் வேங்கட நாதவிவ்
வெவ்வினையேன்
இழித்திருந் தென்னையு மென்றனு தார
விறையுனையும்
அழித்திருந் தேனுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. கூ

மருளுரு வாகிய மத்தனென் சிந்தை
மயக்கறுத்த
தெருளுரு வாந்திரு வேங்கடச் செல்வ
திரும்பவுநான்
இருளுரு வாய விரும்பிற விக்கடல்
வாயிழியா
தருளுகண் டாயுடை யாயடி யேனுன்
னடைக்கலமே. கo

திருச்சிற்றம்பலம்

௩௦. புணர்ச்சிப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண்: கொல்லிக்கௌவாணம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

ஓவி யம்மா வுயிர்சே ருலகை
யோருந் திறல்சே ருணர்வோராச்
சேவிக் கின்ற மடவோர் தம்மைத்
திகழ்வித் தருளுஞ் செங்கண்ணன்
ஆவிக் கின்ற வாசை தீர
வடியே னுடைவேங் கடனின்பம்
மேவிக் கிடப்ப தென்றோ யானவ்
வேந்தன் மார்பம் புணர்வுற்றே. ௧

ஆளிக் கண்ணு லடியா ராவி
யவிக்குங் குரவோ னளியார்ந்து
கூளிக் குழாத்தோ டொன்றுக் கூடிக்
குனிக்கும் பெருமான் கோலஞ்சேர்
வேளிற் காட்டில் வேட்கை விளைக்கும்
விநோதத் திருவேங் கடனோடே
கேளித் திருப்ப தென்றோ யானக்
கேள்வன் மார்பம் புணர்வுற்றே. ௨

---

† முதுவா யோரி—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் புணர்ச்சிப் பத்தைத் தழுவியது.

வளைத்தற் கரிய மலைவில் லாக
 மதிலைச் செற்ற வல்லாளன்
முளைத்துக் கிடந்த முகிழ்வெண் டிங்கண்
 முடிமேற் சூடி மோகத்தாற்
களைத்துப் போயார் களைதீர்த் தருளுங்
 களைக ணன்வேங் கடனின்பம்
திளைத்துக் கிடப்ப தென்றோ யானத்
 தேவன் மார்பம் புணர்வுற்றே. ௩

நீந்திக் கடத்தற் கரிய கடலாய்
 நிகழுங் காம நெருப்பாலே
காந்திக் கனன்ற கண்ணுங் கருத்துங்
 களைப்புத் தீரக் கண்ணேடிச்
சாந்திப் பதத்தைச் சாரு மடியார்
 தமக்குத் தருவேங் கடனின்பம்
மாந்திக் கிடப்ப தென்றோ யானம்
 மணாளன் மார்பம் புணர்வுற்றே. ௪

உயங்கிப் போகிப் பற்றுக் கோடா
 வுற்றா ருள்ளக் கமலப்பூக்
கயங்கிப் போகா தருள்வேங் கடவன்
 கண்ணிற் கருத்திற் பராசத்தி
முயங்கிக் கிடக்கு மோகப் பரத்தன்
 முகப்புன் முறுவ லமுதுண்டு
மயங்கிக் கிடப்ப தென்றோ யானம்
 மகிணன் மார்பம் புணர்வுற்றே. ௫

எல்லைக் கல்லா வன்மைக் கேய்ந்த
வென்போ லியர்தம் வன்னெஞ்சக்
கல்லைக் கண்ணுற் கனியச் செய்து
கன்னு ருரிக்குங் கனசித்தன்
தில்லைக் கணுமென் சிந்தைக் கண்ணுங்
குனிக்குந் திருவேங் கடனின்பம்
புல்லிக் கிடப்ப தென்றே யானப்
புனிதன் மார்பம் புணர்வுற்றே. சு

வைத்துக் கிடந்த வைப்பே போல்வான்
வானோர் மகளிர் தாலிக்கா
மைத்துக் கிடந்த மணிமா மிடற்றன்
மதியின் னமுது மடியேற்குக்
கைத்துப் போகத் தித்திப் பாவென்
கருத்தி லுறைவேங் கடனின்பம்
துய்த்துக் கிடப்ப தென்றே யானத்
துணைவன் மார்பம் புணர்வுற்றே. எ

அளவில் லாப்பே ராற்றல் சான்ற
வயன்மா லுள்ளிட் டறியாத
பளகில் லாமெய்ப் பரஞ்சோ திப்பர்ப்
பதமாய் நின்ற படிவத்தான்
களவில் வந்தென் கன்னி யழித்துக்
கழிந்தான் கனவேங் கடனின்பப்
புளகங் கற்பிற் போர்ப்ப தென்றே
புலப்பந் தீரப் புணர்வுற்றே. அ

இலவு காத்த கிளியா யிப்பொய்
யுலகு காத்திங் கிளைத்தேனைக்
கலவி யின்பங் கடுகக் காட்டிக்
கலந்தான் புலந்து கரந்திட்டான்
புலவர் போற்றும் புகழ்வேங் கடன்பே
ரின்ப மீட்டும் பொறியில்லேன்
குலவி மகிழ்த லென்றோ யானக்
கொழுநன் மார்பம் புணர்வுற்றே. கூ

அறுவா யொழியா மறுவின் மதிபோ
லவிருங் கழல்சே ரடியாயுந்
தொறுமாங் கெய்துந் துரிய போகந்
தோயத் தோயப் புதிதேயாய்
உறுமா றமுதா லியன்ற வுருவோ
னுடைவேங் கடன்பே ருவகையால்
இறுமாந் திருப்ப தென்றோ யானவ்
விறைவன் மார்பம் புணர்வுற்றே. கഠ

திருச்சிற்றம்பலம்

ருக. ஆசைப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : தக்கேசி (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

கூற்றின் னுயிர்போ லடியே னுயிருங்
கொள்ளை கொண்டோங்கும்
ஏற்றின் கொடியா யெல்லாம் வல்ல
விறைவேங் கடவாவோ
நீற்றின் கவின்சேர் நெற்றிப் பெருமா
னின்றன் னன்பின்பே
ராற்றின் மூழ்க வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே. க

வேளுங் காண வெட்கு மெழில்சேர்
விமலா தேருங்காற்
றாளுந் தலையுந் தம்மிற் சார்தத்
துவவேங் கடவாவோ
நீளுங் கழனின் னடியார் குழுவுள்
ளெனையு மொருவேனாய்
ஆளும் பரிசே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே. உ

---

† பூவார் மலர்கோண் டடியார் தொழுவார்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் ஆசைப் பத்தைத் தழுவியது.

கடிதற் கரிய காரா ரிருளைக்
கடியே னுண்ணின் று
விடியச் செற்ற விளியா ஞான
வெளிவேங் கடவாவென்
முடியிற் பிறங்க முளையா முடியா
மூவாச் சிங்காநின்
அடியைச் சூட்ட வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே. ௩

தளவின் மாலை தலைவாய்ச் சூடித்
தயவா யடிச்சிக்காக்
களவில் வந்தென் னகங் கலந்த
கனவேங் கடவாவோ
பளகில் லாநின் பரஞ்சோ திப்பர்ப்
பதத்தின் வளங்காண
அளவில் லாப்பே ராசைப் பட்டேன்
கண்டா யம்மானே. ௪

கனவல் லாத நனவில் வந்தென்
னகங் கலந்தேபோய்
நனவல் லாத கனவா வதைச்செய்
நயவேங் கடவாவோ
கனவல் லாப்பொய்ந் நனவின் றன்மை
கண்டே னதுபோன்மெய்ந்
நனவுங் காண நசைப்பட் டேனான்
கண்டா யம்மானே. ௫

வேழக் கருப்பு வில்லோ னுடல்
விளியச் செற்றென்னை
வாழச் செய்த வயஞ்சே ரங்கண்
ணுதல்வேங் கடவாவோ
சூழத் துலங்குந் துரியச் சுடர்நின்
னுருவாஞ் சோதிக்கண்
ஆழச் சேர வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே. ௬

சீரார் வளஞ்சேர் சிவனே மற்றைத்
தேவ ரெவரானும்
தீராப் பிறவி தீரத் துடைக்குந்
திருவேங் கடவாவோ
பேரா யிரஞ்சேர் பெருமா னுன்றன்
பேராப் பேரின்ப
ஆரா வமுதுக் காசைப் பட்டேன்
கண்டா யம்மானே. ௭

ஊக்கங் கொண்ட வுரவோ ராய
வொருமுப் பெரியோரும்
ஏக்கங் கொளப்பே ரெழில்சே ரழலா
வெழுவேங் கடவாவோ
மோக்கப் பொருடன் னேக்காற் றருமின்
முகவா வருளின்பே
ராக்கம் பெறநா னசைப் பட்டேன்
கண்டா யம்மானே. ௮

*நந்தா வொளிசேர் நம்பா தன்பா
லன்பாய் வந்தார்தம்
சிந்தா குலங்கள் சிந்தா மலங்கச்
செயும்வேங் கடவாவோ
வந்தா யருட்சீர் தந்தாட் கொண்ட
வளஞ்சேர் முகத்துக்கே
எந்தா யென்று மிச்சைப் பட்டேன்
கண்டா யம்மானே. கூ

பிழிந்த தேன்பால் பிறக்கிட் டொழியப்
பிரியாப் பேரின்பம்
பொழிந்த வானப் புனிதப் புயலே
புகழ்வேங் கடவாவோ
இழிந்த விந்தப் பொல்லா யாக்கை
தன்னை யானென்கை
அழிந்தே போக வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே. கO

அடல்சே ராண்மை யரிமா நோக்கா
லடியா ருயிர்தம்மைச்
சுடலா லவைதாஞ் சொக்கப் பொன்னுப்
புரிவேங் கடவாவோ
உடல்சேர் மாய வுடலைக் கெடுத்தென்
னுடையாய் பேரின்பக்
கடல்வா யாடக் காதல் கொண்டேன்
கண்டா யம்மானே. கக

*தடைக்கே டெல்லாந் தகர நூறித்
தஞ்சத் தவரைத்தன்
புடைக்கே யருளின் போக நுகரப்
புரிவேங் கடவாவோ
நடைக்கூ டாமிந் நடலை யுடலை
யுடைத்து நலஞ்சேருங்
குடைக்கீழ் வாழக் காதல் கூர்ந்தேன்
கண்டா யம்மானே. கஉ

திருச்சிற்றம்பலம்

——:o:——

நஉ. *அடிமைப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : கொல்லிக்கௌவாணம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

தன்பக் கலில்வந் தன்பிற் கரையுந்
தன்மெய் யடியர் தாழ்ப்பத்தான்
என்பக் கலில்வந் தென்கண் ணோக்கி
யின்சொற் கூறி யினிதாண்டான்
இன்பக் கடலோ ருருக்கொண் டேய்ந்த
விறைவேங் கடப்பே ரெம்மான்பே
ரன்புக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. க

† மூதுவா யோரி—என்னும் தேவாரப் பண்.

வெருளப் பட்டு விழிகண் குருடாய்
விளியுங் காலவ் வஞ்ஞான
இருளுக் கிடையென் னிதயச் சுடரா
யிருந்தென் னியல்பை யொளிர்வித்தான்
மருளைக் கடியும் மணிமந் திரமும்
மருந்து மாம்வேங் கடன்கூறின்
னருளுக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. உ

நாண்மிக் குறுமிந் நடலை வாழ்வை
நயக்கும் போலி நாகரிக
வீண்மை யலையென் னுளத்துட் சேரா
விதந்தா னேட்டி வெரிங்கண்டான்
கேண்மைக் குரியோன் கேள்விக் குடையோன்
கெடிவேங் கடவன் கிளர்த்தும்பே
ராண்மைக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. ௩

மீட்சிக் கிடம்வே றறுமெய்ஞ் ஞான
மேலை வீட்டிற் குடியேற்றி
மாட்சிக் குரிய மவுன நிலைக்கே
மடவேன் றன்னை வாழ்வித்தான்
பூட்சிக் கடம்பூண் டாட்செய் யடியார்ப்
புரக்கும் புகழ்வேங் கடன்செங்கோல்
ஆட்சிக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. ௪

ஒருமைக் கல்ல விருமைக் கல்ல
வுழுவல் சேரு மெழுமைக்கும்
உரிமைக் கழும லுற்றுற் போல
வுவகை யூட்டி யுரைசெய்தான்
ஒருமைக் குறியோ ருணர்வேங் கடன்றன்
னுழையோ ரிடத்துப் பாராட்டவ்
வருமைக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. ரு

எழிலுக் கொருபே ரெல்லை யெனவே
யிமையா தென்கண் ணிணைநோக்கக்
குழகக் கோலங் கொண்டென் னுயிரைக்
கோல விழியாற் குழைவித்தான்
விழவுக் கெனமெய் யடியர் வேட்கை
மீக்கூர் கனவேங் கடவன்கட்
டழகுக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. சா

சேர்பத் தங்கத் திருவேங் கடனிச்
சிறியே னுயிரைப் பெரிதாண்டான்
ஆபத் தணுகா தருளு மடிக்கே
யன்றி மதாணி யசைந்தாடும்
மார்பத் துக்கே மதர்த்த விழிக்கே
மணிமுறு வற்கே யவைசெய்மெய்
ஆர்வத் துக்கே வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. எ

ஏக்கத் துக்கோ ரிடனே யின்றி
யென்றன் னுணர்வை யிதயத்துட்
போக்கச் சொல்லிப் புலையேன் வாழ்வைப்
புதுக்கி மேன்மேற் பொலிவித்தான்
காக்கக் கடமை பூண்டோ னன்பர்
கவல்கள் கடிவேங் கடன்செய்சீர்
ஆக்கத் துக்கே வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. அ

வெறியுற் றூடு களம்போற் றுளும்பிவ்
வியன்கா சினியை வெளித்தோற்றும்
குறுவித் தாமென் குடில மனத்துக்
குறும்பை யடர்த்துக் குலைவித்தான்
செறிவித் துளத்துட் சிவத்தை யிலக்கத்
திருவேங் கடன்செய் யுபதேச
அறிவுக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. கூ

கமைதக் கோன்றன் கழலைக் கருதாப்
பிழையைப் பொறுத்துக் கடைநாயேன்
அமைதற் கறியா வகந்தை வாழ்வை
யடர்த்தான் மாவிற் சுடர்வித்தான்
இமையச் செல்வி யெனையீன் றூடன்
னிடவேங் கடனல் குபசாந்த
அமைதிக் கேதான் வயப்பட் டாற்போன்
றடிமைப் பட்டே னறநானே. க0

திருச்சிற்றம்பலம்

௩௩. ரமண கீதம்

(வஞ்சித்துறை)

† பண்: குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

சமய மீதுநீ, நிமல வாழ்வுதா
அமல வேங்கட, ரமண தேவனே. ௧

திமிர மாயையைத், துமிய வெட்டுவாய்
அமித வேங்கட, ரமண தேயனே. ௨

எமனை வென்றதாட், கமல நல்குவாய்
இமய மேலுறை, ரமண வீசனே. ௩

சமன மாய்நின்றாட், கமல நீழல்வாய்
அமர நல்குவாய், ரமண சாந்தனே. ௪

குமுத வாயினால், அமுத மென்மொழி
சமுக நின்றுதா, ரமண ராயனே. ௫

இமிழு மென்மொழிக், குமிழ மாலைகொள்
தமிழ வேங்கட, ரமண சாமியே. ௬

கமல மார்புசேர், தமல மாலைதா
எமது வேங்கட, ரமண நாதனே. ௭

குமுத வாயிதழ், அமுத நல்குவாய்
ரமண வேங்கட, அமுத வாயனே. ௮

† அரனை யுள்குவீர்—என்னும் தேவாரப் பண்.

இமங்கை நின்பிரி, வமங்க ளம்மற
ஞெமுங்கப் புல்லுவாய், சுமங்க ளேசனே. கூ

ஊமைய தற்றவித், தமிய ளாறிட
அமைதி தந்தருள், ரமண காந்தனே. க0

விமல வெள்ளிடை, அமளி மீதிலே
ரமிய மாவணை, ரமண ராமனே. கக

கமக மென்னவே, கமழு மென்மலர்
அமளி யேறுவாய், ரமண நாதனே. கஉ

ஆன்ம ஞமுனே, யான்ம ணந்ததே
ஆன்ம லாபமென், ஆன்ம நாதனே. கங

திருச்சிற்றம்பலம்

——:o:——

நச. காட்சிப் பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

தூல சூக்கும தேக மோடு
தொடக்க றுத்தவர் தோழனே
ஓல மிட்டுவந் துன்னை நம்பி
யொழுகி னேற்கு ரமணநீ

---

† மற்றுப் பற்றெனக் கின்றி—என்னும் தேவாரப் பண்; பிணக்கி லாத பெருந்துறை—என்னும் திருவாசகத் திருக்கழுக் குன்றப் பதிகத்தைத் தழுவியது.

போலி யற்றநின் பொன்னின் மேனியிற்
புந்தி மூழ்கிய போழ்தின்வாய்க்
கால மேபெறக் காட்சி பற்பல
காட்டி னுய்மனக் கண்ணுளே. க

துளங்க லாத்துற வாதி யாய்
குணத்த வர்தொழுந் தூயனே
விளங்கு ஞான விருப்பி னுலுனே
மேவி னேற்கு ரமணநீ
வளங்கு லாவுநின் வண்ண மேனியிற்
சிந்தை வைகிய வைகல்வாய்க்
களங்கி லாதகண் காட்சி பற்பல
காட்டி னுய்மனக் கண்ணுளே. உ

வெள்ள லாக வரம்ம கிழ்ந்து
வழங்கு கின்ற வரதனே
உள்ள மோடுனே யுற்ற டைந்தநல்
லூழி னேற்கு ரமணநீ
நள்ள லாகியுன் னல்வ னப்பை
நயந்து நோக்கிய நள்ளிராக்
கள்ள மற்றகண் காட்சி பற்பல
காட்டி னுய்மனக் கண்ணுளே. ங

கரைய லுற்ற கருத்தர் தங்கள்
கருத்தி லுற்ற கருத்தனே
புரையி லாதசெம் பொன்ன டிச்சரண்
புக்க வெற்கு ரமணநீ

விரைய லாகியுன் மெய்வ னப்பை
விழைந்து நோக்கிய வேலைவாய்க்
கரையி லாதகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. ச

அண்டி னார்க்குநன் றூற்று கின்ற
வருட்பெ ருங்கட லண்ணலே
தொண்டு பூண்டு துணைம லர்ப்பதந்
துன்னி னேற்கு ரமணநீ
கொண்ட புன்னகை கூடு நின்முகங்
கூர்ந்து நோக்கிய காலையிற்
கண்டி லாதகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. ரு

மாசி லாத குணத்து மாதவர்
வாழ்த்து கின்ற திவாகரா
ஆசி லாதநல் லன்பி னுனை
யண்டி னேற்கு ரமணநீ
ஏசி லாவெழி லேய்ந்த நின்முக
மேன்று நோக்கிய வேல்வையிற்
காசி லாதகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. சா

மனம வித்து மடித்து ளோரு
மதித்தி டத்தகு மாண்பனே
நினது தாட்டுணை நேர்ந்த டைந்தவிந்
நேய னேற்கு ரமணநீ

வனமி குத்த மதிமு கத்தினை
வாய்ப்ப நோக்கிய வைகல்வாய்க்
கனமி குத்தகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. எ

நாம ரூப நயப்பி லாதமெய்ஞ்
ஞான யோகியர் நாதனே
சேம முற்ற சிவம்மெ னாவுனைத்
தேறி னேற்கு ரமணநீ
வாம முற்றநின் வாண்மு கத்தை
மகிழ்ந்து நோக்கிய வைகல்வாய்க்
காம ருற்றகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. அ

ஒருத்த ரானு முணர்க லாத
வொருமை யாய வொருத்தனே
அருத்தி யாயநல் லன்பி னாலுனை
யண்டி னேற்கு ரமணநீ
திருத்த மாமெழில் சேர்ந்த நின்முகந்
தேற நோக்கிய போழ்தின்வாய்க்
கருத்து மாழ்குறுங் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. கூ

மாணெ ணாத மயக்க றுத்தவர்
மாசி லாத மனத்துளாய்
நாணெ ணாத நயப்பி னாலுனை
நாடி னேற்கு ரமணநீ

பூணு ணுதநின் போத மேற்படப்
போந்த போழ்திலென் கட்புலம்
காணு ணுதகண் காட்சி பற்பல
காட்டி னுய்மனக் கண்ணுளே. கO

திருச்சிற்றம்பலம்

———:o:———

௩௫. கொண்ட பத்து

(கோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

காலைநாட் கொண்ட கடிமலர்தூஉய்ப் பூசனைநான்
மேலைநாட் செய்ந்நல் வினையென் வியக்கேனே
வேலை விடமுண்ட வேங்கடவன் மெய்ஞ்ஞானக்
கோலங் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே. க

இருவரன் றேறிறங்கப் பறந்திடந் துங் காணுது
பருவரன் மண்டிப் பரிபவமு மீக்கூர்ந்து
வெருவரன் முற்றநின்ற வேங்கடவன் மெய்ஞ்ஞான
குருவரன் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே. உ

உறங்கலான் விழிக்கலா னென்றுமே கனவலான்
இறங்கலா னிவரலா னிருந்தவா றிருப்பனல்
மறங்கலான் றெளிகலான் வேங்கடவன் மெய்ஞ்ஞானப்
பிறங்கலாங் குலாச்சோணைப் பெம்மானைக் கொண்டன்றே. ௩

---

† பாலூரு மலைப்பாம்பும்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் துலாப்பத்தைத் தழுவியது.

நேதித் தலாதறிய நேராதான் கண்ணிமைக்கும்
போதிற்கு ணெஞ்சக் கருங்கல்செம் பொன்னுக
வேதித் தருள்செய்த வேங்கடவன் மெய்ஞ்ஞான
சோதிக் குலாச்சோணைச் சொக்கனையுட் கொண்டன்றே. ச

நாணமே விட்டு நறுஞ்சாந்தத் தொய்யில்சேர்
தோணலா ரின்பந் துறந்தார்க்கு வீட்டின்ப
வேணவா வீடேற்றும் வேங்கடவன் மெய்ஞ்ஞானத்
தூணமாங் குலாச்சோணைத் துப்போனைக் கொண்டன்றே.

விழுந்தார் தமையந்த வெம்பிறவி யாழ்கடல்வாய்
அழுந்தா வகைதன் னடிப்புணையா லீடேற்றி
விழைந்தார்க் கருள்புரியும் வேங்கடவன் மெய்ஞ்ஞானக்
கொழுந்தாங் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே.

இலகுங் கருணைநோக் கென்பாலே பாலித்து
மலகுங் கடையேனை மாணு மயற்கைநின்று
விலகும் படிசெய்த வேங்கடவன் மெய்ஞ்ஞானம்
குலவுங் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே. எ

பொறியாங் கிளைத்துப் புலனெய்த்துப் புன்குரம்பை
பறியாமுற் கண்ணோக்கம் பாலித்துப் பேரின்ப
வெறியாங் கொளவைத்த வேங்கடவன் மெய்ஞ்ஞானக்
குறியாங் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே. அ

தவாஅப் பிறப்பினும் வித்தாய்ச் சதிசெயும்பே
ரவாஅக் கடல்சுவற்று மங்கண்ணு லென்னுள்ளத்
துவாஅக் கடலூற்றும் வேங்கடவன் மெய்ஞ்ஞானக்
குவாஅற் குலாச்சோணை யாண்டானைக் கொண்டன்றே. கூ

இடர்தா மிடர்ப்பட் டிரிந்தோடப் பேரின்பக்
கடலாக் கருணைபொழி கண்ணாலே பொய்ஞ்ஞானம்
விடலாக வோட்டுகந்த வேங்கடவன் மெய்ஞ்ஞானச்
சுடராங் குலாச்சோணைத் தொல்லோனைக் கொண்டன்றே.

திருச்சிற்றம்பலம்

—:o:—

ந௨சுய. திருப்படை யாட்சி

(ஆசிரியவிருத்தம்)

† பண்: இந்தளம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

கோல விழிப்படை யாட்சி வளம்பல
கூறுது மாகாதே
கோமள மாயை தனது குடர்கள்
குமைந்திடு மாகாதே
ஆலமு நல்லமு தாயடி யோங்களுக்
காயிடு மாகாதே
அளவு படாத வகண்டமு நெஞ்சு
ளகப்படு மாகாதே
சீல மனைத்துமென் சிந்தையில் வந்து
செறிந்திடு மாகாதே
சிந்தை மகிழ்ந்திடச் சீரடி யார்குழுச்
சேர்ந்திடு மாகாதே

---

† தேனெய் புரிந்துழல்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்படை யாட்சியைத் தழுவியது.

மூல விருட்டொகை மூண்டு கிடந்தது
முற்றிலு மாய்ந்திடவே
முச்சுட ருக்கு முதற்சுடர் வேங்கடன்
முற்படு மாயிடிலே. க

மன்பதை யாவு மகேந்திர போக
மடுத்திடு மாகாதே
மாதர் மயற்கை மனத்தி லிருந்து
மறிந்திடு மாகாதே
அன்பர்க ளேத்து மருந்துதி வானை
யளாவிடு மாகாதே
ஆக்க மனைத்து மதரை விஞவி
யடைந்திடு மாகாதே
இன்ப மெனுங்கட லெங்கணு மோங்கி
யெழுந்திடு மாகாதே
இம்மையி லேயருட் செல்வமு ஞானமு
மெய்திடு மாகாதே
என்பழை யோர்க ளியற்றிய நல்வினை
யின்று பலித்திடவே
இறைரம ணேசனென் கண்ணிணை காண
வெதிர்ப்படு மாயிடிலே. உ

கொய்யு நறுங்கொழு மாமலர் மாரி
கொழித்திடு மாகாதே
கோழெரி கூடு மெழுகெனச் சிந்தை
குழைந்திடு மாகாதே

மெய்யடி யார்குழு மேவிய பேறு
விளைந்திடு மாகாதே
மிச்சை யெனுவிழி மேவுவ திப்பெரு
மேதினி யாகாதே
ஓய்யென வென்குடி யோர்க ளனைவரு
முய்வர்க ளாகாதே
உத்தம சாந்தி யுளத்தை விழுங்கி
யொளிர்ந்திடு மாகாதே
வெய்ய சுரத்தில் விடாது திரிந்த
விடாயற வீந்திடவே
வேங்கட கற்பக நற்றரு வெற்கு
வெளிப்படு மாயிடிலே. ௩

மட்டவிழ் மாமலர்ப் பாத மனத்து
மணக்குறு மாகாதே
வாதனை யாவு மனத்திடை நின்று
மடிந்திடு மாகாதே
கட்ட சுகங்கள் கருத்திடை நின்று
கழன்றிடு மாகாதே
கனவினு முட்படக் கால மெனும்பொருள்
காண்கல மாகாதே
சுட்ட வொருத்த சுகானு பவங்க
டுதைந்திடு மாகாதே
சோக மெனும்மது சொல்லள வாகத்
தொலைந்திடு மாகாதே

இட்ட மனிட்ட மிரண்டு மனத்தினின்
றேகி யொழிந்திடவே
ரமண சிகாமணி யென்னுடை நெஞ்சி
லெழுந்தரு ளப்பெறிலே. ௪

ஊன வுடற்பொறி யுற்ற புலன்க
ளொடுங்கிடு மாகாதே
உள்ள மெனுங்கட லுற்ற நினைப்பலை
யோய்ந்திடு மாகாதே
கானலி னீரெனக் காசினி யென்னிடங்
காண்குறு மாகாதே
கனத்த வுளத்தின் கடுத்த முடிச்சுக்
கழன்றிடு மாகாதே
வேனலி னுற்ற விடாய்மன வேதனை
விண்டிடு மாகாதே
வேட்கை விளிந்து விளைந்திடு சாந்தி
விரைந்திடு மாகாதே
யானென தென்னு மிரண்டு செருக்குக
ளெட்டுணை யும்மறவே
யானவ னென்னு மிரண்டற வொன்றி
யிருந்து விடப்பெறிலே. ரு

மானத வாவி மனத்திடை வந்து
மடுத்திடு மாகாதே
மனத்தை வருத்திய மையல் வியாய்ற
மாய்ந்திடு மாகாதே

ஈனவ ரின்பமொ ரிம்மியிற் காட்டி
விழிந்திடு மாகாதே
இந்திர போக மிரவிமுன் மின்மினி
யேய்ந்திடு மாகாதே

வானமு தச்சுவை வந்து கயந்து
வழிந்திடு மாகாதே
மற்றிணை யற்றதொர் வாழ்வது வந்து
மலிந்திடு மாகாதே

யானவ ளுதி யிரட்டை யனைத்து
மிரிந்தன போயிடவே
ரமண மணாள னெனுதித யத்தி
லெழுந்தரு ளப்பெறிலே. உ

அன்னிய முற்று மனனிய மாக
வமைந்திடு மாகாதே
அச்ச மகத்து ளணைந்திட வஞ்சி
யகன்றிடு மாகாதே

துன்னிய சித்திக டிச்ச மெனும்பொரு
டோன்றிடு மாகாதே
துரிய நிலைநனி துய்த்திடு மாறு
துதைந்திடு மாகாதே

மன்னிய கன்ம மலத்தடை மாய்ந்துயிர்
வாழ்ந்திடு மாகாதே
மாதவர் வாழ்த்தொலி மாநில முற்று
மலிந்திடு மாகாதே

என்னியல் யாவு மிறந்து பரத்தியல்
பென்னு ளெழுந்திடவே
இறைரம ணேச னெனுதித யத்தி
லெழுந்தரு ளப்பெறிலே. எ

பனித்த கொடுந்துயர்ப் பண்டை வினைத்திரள்
பாறிடு மாகாதே
பண்ணவ ருஞ்சுவை பார்த்தறி யாத
பராவமு தாகாதே
மனித்த விழுப்பிற விப்பயன் மாண்புற
வாய்ந்திடு மாகாதே
மலத்திர ளாகிய மையிரு ளோடி
மறைந்திடு மாகாதே
நுனித்த வறிஞரு நோக்கரு நுண்பொரு
ளேைக்குது மாகாதே
நூலுணர் வாலு நுனித்துண ராவதி
நுண்பொரு ளாகாதே
இனித்த கனிச்சுவை யின்னமு தச்சுவை
யாவு மிழிந்திடவே
இறைரம ணேச னெனுதித யத்தி
லெழுந்தரு ளப்பெறிலே. அ

புன்சொ லொழிந்தடி போற்றியென் வாக்குப்
பொலிந்திடு மாகாதே
புற்கை கிடைப்பினும் போனக மாமுகம்
பூத்திடு மாகாதே

இன்சுவை மீதி லிருந்திடு மிச்சை
யிரிந்திடு மாகாதே
எவ்வித தொந்தமு மெட்டுணே யும்மற
வேகிடு மாகாதே
வன்சிறை நின்றுயிர் மாண விமோசனம்
வாய்த்திடு மாகாதே
வைய மிசைப்பல் வகைப்படு மாசையும்
வற்றிடு மாகாதே
என்செய லென்பவை யாவு மிழந்தவ
னேவலி னின்றிடவே
இறைரம ணேச னிரங்கியென் னெஞ்சி
லெழுந்தரு ளப்பெறிலே. சு

அற்புத சத்திக ளாயிர மாக
வடைந்திடு மாகாதே
அடைந்தவை யாவு மகத்தையொர் சற்று
மசைக்கல வாகாதே
சற்பனே யாகிய சாதி மதங்க
டவிர்ந்திடு மாகாதே
சாத்திர மாய சழக்குக ளுந்தலே
சாய்ந்திடு மாகாதே
கற்பனே யாகிய கால விடங்கள்
கழன்றிடு மாகாதே
கதிரொளி யோடுற கண்ணொளி சேர்ந்த
கணக்கது வாகாதே

எற்பிடை தோறு மெழுந்தமு தப்பெருந்
 தாரைக ளேறிடவே
இறைரம ணேச னெனுதித யத்தி
 லெழுந்தரு ளப்பெறிலே. க0

திருச்சிற்றம்பலம்

—:o:—

ந௭. சென்னிப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பழம்பஞ்சுரம் (சங்காபரணம்)

திருச்சிற்றம்பலம்

ஆவ லாயெனே யாண்டு கொண்ட
 வருட்பெ ருங்கட லண்ணலார்
யாவ ராலுமெய் தற்க ரியவ
 ரெங்கள் வேங்கட வீசனர்
பாவ டித்த பனுவ லந்தமும்
 பார்த்தி டாச்செழும் பங்கயச்
சேவ டிக்கலன் சேர்ந்து சென்னி
 சிறப்பி னேடு திகழுமே. க

† மற்றுப் பற்றெனக் கின்றி—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் சென்னிப் பத்தைத் தழுவியது.

நெய்யி லாவெறுஞ் சோற்றை யொக்கமெய்ந்
நீர்மை யற்றபொய்ந் நூல்களை
ஐய மற்றிட வாய்ந்த மூடனை
யாண்ட வேங்கட வையனார்
மைய லற்ற மறையு முற்ற
வழுத்தொ ணாவளத் தாமரைத்
துய்ய சேவடி சூடி யென்றலை
சொல்லி றந்து சுடருமே. ௨

பருவ நோக்கியென் பால டைந்தவென்
பாங்க னார்பழம் பாண்டியார்
ஒருவ ராலு முணர்க லாத
வுதித வேங்கட வோதியார்
பருவ தப்பனு வற்ற லைகளும்
பற்றி டாச்செழும் பங்கயத்
திருவ டித்துணை சேர்ந்து சென்னி
சிறப்பி னோடு திகழுமே. ௩

அன்ன மோடு வராக மும்மறி
யாத மாமலை யப்பனார்
தென்ன னார்மகிழ் வாயென் சிந்தையிற்
சேர்ந்த வேங்கட தேவனார்
வன்ன மாமறை வாக்கு மேதடு
மாற நின்றொளிர் வாரிசப்
பொன்ன டிக்கலன் பூண்டு சென்னி
புகழி னோடு பொலியுமே. ௪

காள கூட மிளிர்த ருங்கறைக்
கண்ட ஞர்வெண் கருப்புவில்
வேள தாகம்வெண் ணீற தாப்புரி
வித்த வேங்கட வெங்கணூர்
கீள தாக மறைக்க லைபெய்த
கேவ லர்கிளர் தாமரைத்
தாள ணிந்து தமிய னேன்றலை
தால மீது தழையுமே. ரு

நீங்க கன்றமெய்ஞ் ஞான நன்னெறிச்
செல்லு வார்கடஞ் சிந்தைவாய்த்
தூங்க லுற்ற துரீய ரைனத்
தோய்ந்த வேங்கட நாதனூர்
ஓங்க லாமறை யுச்சி தாமு
முணர்க லாச்செழுந் தாமரைப்
பூங்க ழன்முடி பூண்டு சென்னி
புகழி னேடு பொலியுமே. சா

உஞ்சு போகு முபாய முற்றவர்க்
கோது கின்ற வுவாத்தியார்
நெஞ்சு ளேயெனை நேர்ந்து கூடிய
நேய வேங்கட நீதனூர்
விஞ்சு வேத வியன்சி ரங்களு
மேவொ ணச்செழுந் தாமரைச்
செஞ்சு டர்ப்பதஞ் சேர்ந்து சென்னி
சிறப்பி னேடு திகழுமே. எ

காய லற்ற கருத்தி ணூர்கதி
காட்டு மொண்சுடர்க் கண்ணினார்
நேய மற்றகன் னெஞ்ச னேனையு
நேர்ந்த வேங்கட நீதனார்
தேய முற்ற மறைச்சி ரங்களுந்
தேர்ந்தி டாச்செழுந் தாமரைத்
தூய சேவடி சூடி யென்றலை
சொல்லி றந்து சுடருமே. அ

அங்க மேறி யகங்க ரித்திடு
மாண வாதி யசுரரைச்
செங்க னல்விழித் தீயி னூற்பொடி
செய்த வேங்கட தேவனார்
சங்கை யற்ற சதும றைத்தலை
தாமு நாடிய தாமரைத்
துங்க நல்லடி சூடி யென்றலை
சொல்லி றந்து சுடருமே. கூ

அண்டை யுற்றநல் லன்பர் காண
வடிய னேனது புன்சொலைக்
கொண்டை மேற்கொழுங் கொன்றை யோடணி
கோல வேங்கட தேவனார்
பண்டை நான்மறைப் பைந்த லைகளும்
பார்த்தி டாச்செழும் பங்கயத்
தண்டை யம்பதஞ் சார்ந்து சென்னியித்
தால மீது தழையுமே. கO

திருச்சிற்றம்பலம்

௩அ. *அற்புதப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : நட்டராகம் (பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

வம்ப ரூமலர் கொண்டருச் சிக்கிலேன்
வழுத்திலேன் வணங்கில்லேன்
செம்ப தத்துணை சிந்தனை செய்கிலேன்
சீர்பெறச் சிவனுமம்
நம்பி நாடொறு நமவென வோதிலே
னயந்துவேங் கடதேவன்
அம்ப லத்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே. ௬

பரசு கின்றிலேன் பரசிவ வேங்கடன்
பாங்கறிந் தொழுகில்லேன்
சிரசு மேற்செழுந் திருவடி சூட்டியித்
தியனை யருளோடு

---

† என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே—என்னும் தேவாரப் பண்; அப்பதிகத்தில், கறைகோள் கண்டத்தர்—எனத் தொடங்கும் நான்காவது திருப்பாட்டு ஈண்டுக் கவனித்தற் பாலது; திருவாசகம் அற்புதப் பத்தைத் தழுவியது.

முரச நாடொறு முழங்குசோ ணைப்பதி
 முன்னவன் முகநோக்கி
அரச னுயுவந் தாண்டுகொண் டருளிய
 வற்புத மறியேனே. ௨

சாள ரப்பொறி சார்மதி யார்புலஞ்
 சருவுபெண் சனத்தோடி
நாள வம்படு நாய்க்கடை யேனைவன்
 னஞ்சினுங் கொடியேனை
வேள தாகமுன் வெண்பொடி யாக்கிய
 வேங்கட னருளந்த
ணாள னுய்மகிழ்ந் தாண்டுகொண் டருளிய
 வற்புத மறியேனே. ௩

நிலக்க ணெஞ்சிடை நேரிழை யார்திற
 நேயமே நிகழ்வித்துக்
கலக்க முற்றபொய்க் கலதியென் றெனைப்புறக்
 கணித்திடான் கனமாயப்
புலக்க ணுசையைப் பொருண்மலர்க் கழலிடைப்
 புகுத்திவேங் கடநாதன்
அலக்க ணற்றிட வாண்டுகொண் டருளிய
 வற்புத மறியேனே. ௪

நெஞ்ச மொன்றிநா னிகழ்வுறு நெறியிடை
 நேர்தடைக் காற்றாது
தஞ்ச மென்றலுந் தாழ்த்திடான் வீரமார்த்
 தாண்டவேங் கடதேவன்

உஞ்சு போம்வழி யூடுபோந் தலைப்புறு
முட்பகைக் குலைந்தேபோய்
அஞ்சு ருதெனக் கபயநன் கருளிய
வற்புத மறியேனே. ரு

செய்ய லாந்திறந் தேர்வகை கண்டிடாச்
சிதடனுய் முழுமூடக்
கைய னுயெழிற் காரிகை யார்திறங்
கதியெனக் காத்தேனை
உய்ய வென்னுயி ரூழ்முறை நல்லுணர்
வுதவிவேங் கடநாதன்
ஐய னுயெனக் கரும்பத நல்கிய
வற்புத மறியேனே. சு

வியர்வு கொள்ளவிம் மேதினி வாழ்க்கையில்
வெறுவிழற் கிறைத்திட்டு
மயர்வு கொண்டுள மனைமக வாசையாம்
வலையிடை யகப்பட்டேற்
குயர்வு கொண்டமெய் யுணர்வுர வாட்படை
யுதவிவேங் கடவீரன்
தக்க சதுட்டய சாதனஞ் சாராச்
சழக்கனென
மிக்க தயாபர வேங்கட வாவிட்
டிடுதிகண்டாய்
நக்கபுன் மூரலின் முப்புரந் தீப்பட
நள்ளிருள்வாய்த்
தொக்கபுன் கூளிக் குழாத்துட் குனிக்கின்ற
தூமணியே. எ

தூயதென் பாண்டிச் சுழியற் பதிநின்ற
தொல்லருணை
மேயவின் பக்கடல் வேங்கட வாவிட்
டிடுதிகண்டாய்
மாயவன் பாசத்தை வாள்விழி யாலெறிந்
தன்பர்மனக்
கோயிலின் ஞானச் சுடராக் குனிக்கின்ற
கோமளமே. அ

கோமள மாயைக் குடர்குமைத் தென்னையாட்
கொண்டநின்றாள்
ஏமரு வார்கழ லெண்ணமை மாற்றி
யெனதுமுடி
மீமிசை மேவடி வேங்கட வாவிட்
டிடுதிகண்டாய்
யாமளை யாய்ச்சிக் கிடந்தந்த சோணை
யிறையவனே. கூ

இறையவ நெக்குரு கேழையர்க் கன்றிமற்
றேனையர்க்கு
மிறையவ வென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவ
மறையவ வானோர்க் களிசெய்ய வல்விட
முண்டகண்டக்
கறையவ நீயெனைக் கைவிடப் போகாது
கள்வனென்றே. கO

என்றிவ் வெளியனை யெள்ளத் தகாதன்
றிறையவர்மேல்
வென்றிப் புகழ்கொண்ட வேங்கட வாவிட்
டிடுதிகண்டாய்
பன்றி யுருக்கொண்ட பச்சையும் பாராநின்
பங்கயத்தாள்
துன்றுந் திறலினன் யான்போலு நீயேதோற்
றுவிடினே. கக

விடியல்கா ணாது வெருளுறு மூடனை
மெய்யுணரா
மிடியனென் றெள்ளி விடுதிகண் டாயருள்
வேங்கடவா
அடியனென் றுன்னை யடைந்தியான் சேவித்த
லாணவம்போய்
விடியலின் மல்குன் சொரூபமா மெய்ம்மை
விளங்கவன்றே. ௧௨

விளங்கிலா துன்னுரு வேணவா வீணாவிம்
மிக்கலுழ்நீர்
வெளங்குலா மென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
களங்கிலா மெய்ப்பொருட் காட்சிதந் தென்னைக்
கடைக்கணிப்பாய்
உளங்கொளா வூத்தை யுலகியல் வாய்ப்பட்
டுளைந்தனனே. ௧௩

உளைந்திலா னுள்ள முருகிலா னுய்யநாங்
கொள்வதற்கு
விளைந்திலா னென்ன விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தளைந்தவா கண்டிரங் கித்தறித் தென்றன்
வினைத்தளையைக்
களைந்திலா யென்னினென் னாருயிர் காண்டிநின்
காலடிக்கே. ௧௪

அடிக்கன்பு செய்யா தழிவந்த செய்தமை
யாய்ந்துநெஞ்சம்
வெடிக்கின்ற வென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
பொடுக்கென் றுரைப்பிற் பொறுதவென் னெஞ்சம்
புலம்பியுகத்
துடுக்கனென் றேதுடை யாதுநல் காயென்
றொழுகுலமே. ௧௫

தொழுகுல மாவடி தோய்ந்தநல் லன்பர்தந்
துன்பகற்றும்
விழுமிய வேங்கட விம்மிநா னேங்க
விடுதிகண்டாய்
அழுதழு தாவினைந் தஞ்சு மொடுங்கி
யடியடைந்து
தழுதழுத் துன்புகழ் சாற்றிடச் செய்திநின்
றண்ணளிக்கே. ௧௬

அளிகிலா னெஞ்ச மழிகிலான் பொல்லா
வகமமதை
விளிகிலா னென்ன விடுதிகண் டாயருள்
வேங்கடவா
சுளிகலா தென்னைச் சுடருமெய்ஞ் ஞான
சுகத்திருத்தாய்
தெளிகலா தாரைத் தெளித்தலன் றோதெளிந்
தோர்செயலே. ௧௭

செயப்படு மன்பு செயாத்தவற் றூலறச்
செங்கதிர்முன்
வெயிற்புழு வாக வெதும்புகின் றேனை
விடுதிகண்டாய்
கயப்புலை நாயன் கடியனென் றாதுன்
கனவருளால்
உயக்கொளு வாயென் னுடைவேங் கடநின்
னுளமுவந்தே. க௮

வந்திக் கிலாதவுன் மத்தனே னென்னினும்
வாதனையால்
வெந்துக்க வென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
முந்திக் கிளர்ந்தெழு முந்நீ ருவாவின்
முழுமதியைச்
சந்தித் தெனநிற்கென் னெஞ்சந் ததும்பித்
தளும்புற்றதே. க௯

உற்றது மன்றி யுறுதது மோரா
தவனெனினும்
விற்றுக்கொள் வாய்விட் டிடுதிகண் டாயருள்
வேங்கடவா
கற்றது மன்றிக் கலாதது நின்பர
மாக்கழித்துச்
சற்றுப சாந்திநான் சாரக்கண் ணேக்கநீ
சாத்துதியே. உ0

துதியொடு நின்னடி தோய்ந்தே னுலகத்
        தொடர்புகளால்
மிதிபடு மாறு விடுதிகண் டாயருள்
        வேங்கடவா
பதியெனு மெய்யபொய் யாம்பசு வேற்கருள்
        பாலித்தியென்
உதிதல நின்பத மோர்ந்துணர்ந் தொன்றி
        யொடுங்குறவே. உக

ஒடுங்குறி னுள்ளக் கவலோயு மென்றுணர்ந்
        தும்மொடுங்கா
விடுங்கய வேனை விடுதிகண் டாயருள்
        வேங்கடவா
கடங்கவிழ் மத்தக் கயப்புல னூற்கது
        மென்றடர்ப்புண்
டிடுங்குகின் றேனிடுக் கந்தவிர்த் தாளுதி
        யேற்புறவே. உஉ

உறவுக ளல்ல வுழப்பிக்கு மென்றெம்ம
        னோர்க்குணர்த்த
விறலுள நீயவை விட்டதற் கேற்ப
        விடுதிகண்டாய்
திறவுகோ லாத்திரு வேங்கட நின்னருட்
        சீர்திறக்கத்
துறவுதாங் தோயப்பெற் றூரெளி தாப்பல
        தொண்டர்களே. உ௩

தொண்டனுக்கேற்பத் தொழும்புசெய்யான்வெறுஞ்
சொல்லளக்கும்
மிண்டனென் றென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தண்டமென் றன்னைச் சரணடைந் தேனுக்குச்
சால்வதுகாண்
பண்டமென் றிவ்வுல கைப்பரித் தியான்பெற்ற
பாக்கியமே. உச

பாக்கிய மாப்பயில் கன்மமே பாசமாப்
பல்லுயிரை
வீக்கிய வாநீ விடுவியா தென்னை
விடுதிகண்டாய்
ஊக்கிய வைந்து மொறுத்தொளிர் வேங்கட
யோகொழுக்கா
ஆக்கிய நூல நுட் டிக்கவல் லாரேவ
ரத்தகவே. உரு

அத்தக நிற்கு மடைவறி விக்குநல்
லாசிரிய
வித்தக வென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
புத்தக ஞானமல் லாதநு பூதியில்
புல்லனென்னை
உய்த்தக மீள வுறுத்துதி யுள்ளத்
துரம்பெறவே. உசு

பெறல்விட லன்னவெப் பெற்றியு மில்லாப்
பெருமிதஞ்சால்
விறல்விபு வாந்திரு வேங்கட வென்னை
விடுதிகண்டாய்
உறலா யுவத்தலி னும்முப சாந்தியே
சாலவுறும்
அறலே யறப்பெரி தன்றேமேன் மேலூ
ணயிறலினே. உஎ

ஊணனென் றேதன் னுயிர்க்கோ ருறுதியோ
ராதுறங்கும்
வீணனென் றென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
நாணமொன் றின்றியூர் நாயா வுழன்றுநல்
லோர்பழிக்க
மாணவிவ் வாறழி யின்வசை யன்றேநின்
மாணடிக்கே. உஅ

மாணுச் செருக்கான் மதியுரங் கெட்டுயிர்
மங்கியந்தோ
வீணுக் கெடவிட் டிடுதிகண் டாயருள்
வேங்கடவா
தூணுப் பொருந்துனைத் துப்பா வுறுதொண்ட
ருள்ளொருவன்
ஆணுப் பிறந்தவ மாவது வோவந்த
ணுதியனே. உகூ

ஆதிய னேநடு வந்தம தாய்ப்பின்
னவைகடந்த
வேதிய னேவிட் டிடுதிகண் டாய்விழுச்
சீரடியார்
போதிய வுன்னைப் புணர்தரு மந்தப்
புரவிதய
வீதியி லேயெனைக் கூட்டுகெண் டாயருள்
வேங்கடனே. ௩0

கடனன் றெனப்புலங் காவா திளையரைக்
கண்டுமகிழ்
விடனென் றெனைவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கடவா
அடலொன் றியவல் லபவறி வாற்புல
மைந்தவித்துக்
சுடலொன் றுலகுக்கொர் காட்டாக நின்றொளிர்
கண்ணியனே. ௩௧

கண்ணிற் கருமணி யாக்கலந் தாயெங்
கணுங்கலந்த
விண்ணிற் பெருவெளி வேங்கட வாநீ
விடுதிகண்டாய்
விண்ணிற் புதைந்தபல் சித்திக் குழாங்கள்
வெளிப்படவிம்
மண்ணிற் பரந்து மணங்கம ழாநின்ற
மாதவனே. ௩௨

தவத்தியல் சாற்றித் தழும்புற்று நாச்சரி
தத்திடையவ்
விவத்தைகெட் டேனை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
அவத்தமே போயவா ளினி யேனு
மழகுபெறும்
சிவத்தை யுறத்தவஞ் சேர்ப்பிகண் டாயெஞ்
சிவக்கொழுந்தே. ருரு

கொழுந்தெழு மொண்மணி யேகுடும் பத்திடைக்
கண்குருடாய்
விழுந்தவி தாவிடு வேனையந் தோநீ
விடுதிகண்டாய்
எழுந்திட மாட்டா திறைவேங் கடதொண்ட
ரின்னொருவன்
அழுந்துறல் கண்டமை வோநின் னருட்கழ
காவதுவே. ருசு

ஆவலி னின்னளி நீர்மைநா டாதுநல்
லாத்தமொழிக்
காவலை நீவிக் கடந்துபொல் லாக்காமக்
கட்டழற்கே
வீவுற வேனை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தோய்வுற வெற்குநீ தோற்றுவி சாந்த
சுகக்கடலே. ருஎ

கடல்படிந் தாடக் கருணைகந் தாவுன்
கழலடைந்தேன்
மிடல்புரிந் தென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
உடல்படு வெப்ப முழப்பினும் வெப்பா
லுளமுழக்கப்
படல்பொறே னென்பரி தாபந் தணித்தல்
பரமுனக்கே. ௩௬

உனக்கே தொழும்புகந் தும்மட வோர்துடி
யொக்குமிடை
மினற்கே குருடு படுமிடி யேனை
விடுதிகண்டாய்
தனக்கே யொளிர்தரு தற்பர வேங்கட
தண்ணளிகூர்ந்
தெனக்கே யிலக்கா யெனது சொரூபமா
நின்னியல்பே. ௩௭

இயல்பாய தண்ணீ ரிதயத்தி லாடவிச்
சித்தவெனை
வெயில்பா லியகானல் வேற்றுநீ ராட
விடுதிகண்டாய்
மயல்பாய நெஞ்சான் மடம்பட்டு வேங்கட
வாமலர்த்தாட்
கயல்பாயுங் காற்றடுத் தாள்வா யுயிரழ
லாப்படிக்கே. ௩௮

அழலுமிழ் வாழ்வை யழகிதென் றெண்ணி
யவாவுறுவீண்
விழலனென் றென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தழலணித் தாயிடத் தம்மகார் தாவித்
தழற்கொழுந்தில்
விழலறிந் தும்பயந் தோர்வெறி தேகல்
விழுமிதன்றே. ௩௯

அன்றே யடியடைந் தேனையெந் தாயைவ
ராறலைத்து
வென்றேவல் கொள்ள விடுதிகண் டாயருள்
வேங்கடவா
நன்றே பிழையே நடப்பவெல் லாமடிக்
கேநயப்பாய்
என்றே யிருக்கவென் னுள்ளே யெழில்பெற்
றிலங்குதியே. ௪0

இலங்குநூல் கல்லாது கேட்கவுஞ் செய்யா
திழிந்தகடை
விலங்கனை யேனை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
அலங்கலிற் றேன்று மராப்போ லகத்தி
னகிலங்கண்டு
கலங்குகின் றேன்றன் கலக்கந் தெளித்தல்
கடனுனக்கே. ௪௧

உனைக்கேள்வி யாலொரு வாறுணர்ந் தும்மைக்
குறுதியுள்ளி
வினைக்கேடு செய்கென வேட்டடைந் தேனை
விடுதிகண்டாய்
அனைக்கேயு மிக்கநல் லன்புடை யாயடி
யேனகத்தெம்
முனைக்கே முறிபட வேங்கட வாமுறை
யேமுறையே. சஉ

முறையிடக் கேட்டுநின் முன்னடி யார்முழு
மோகமுற்றி
மிறைபட வென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தறையிலன் ஞேரினித் தாமேயு முய்வர்க
டாய்ப்பறைமுன்
சிறைபடை யாச்சிறு பார்ப்பையன் ஞேசிறந்
தோம்புவதே. சங

ஓம்பென் றுரைத்துமோம் பாதைம் புலத்தா
றுழலுமட
வீம்பனென் றென்னை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
எம்பலி னுன்னு லினிதாளப் பெற்றே
னிழிந்தகடைத்
தீம்பனென் ருலுமத் தீம்பொழித் தென்னைத்
திருத்துதியே. சச

துதியொடு நின்னடி தோய்ந்துநின் றேனைத்
        தொழும்புசெயும்
விதியில னென்ன விடுதிகண் டாயருள்
        வேங்கடவா
சுதிமுடி வாய சொரூபமா நின்னடி
        தோய்ந்தபின்பும்
விதிவிளி யாதவ் விமுத்தரை மேவின்
        வியத்தக்கதே. சரு

தக்கநல் லாயடி யாரொடுங் கூட்டத்
        தகாளெனவிம்
மிக்கபொல் லேனை விடுதிகண் டாயருள்
        வேங்கடவா
தொக்கபுல் லோர்தந் தொடர்பாலென் னெஞ்சந்
        துடிதுடித்த
துக்கமெல் லாங்கரி யாமுனக் குத்துலங்
        காததுண்டே. சகூ

உண்டவுண் ணுவா யொழியப் பிழையுள்ளி
        யுள்ளுடைந்து
விண்டவென் றன்னை விடுதிகண் டாயருள்
        வேங்கடவா
புண்டருஞ் சிந்தை புழுங்குகின் றேன்புழுக்
        கந்தணியாய்
அண்டருங் கண்டறி யாதவண் ணமலை
        யங்கணனே. சஎ

அங்கண னேயுன் னுருவா முயிர்த்தொகைக்
கன்பகன்ற
வெங்கண னென்ன விடுதிகண் டாயருள்
வேங்கடவா
பைங்கண னேயொளிர் பற்ப நுதற்கனற்
பார்வையுடைச்
செங்கணி னன்பர்தஞ் சீவத் துவஞ்சுடுந்
தேசினனே. சஅ

தேசுறு ஞானந் திகழப் பெருமையிற்
சிந்தைநைந்து
வேசறு வேனை விடுதிகண் டாயருள்
வேங்கடவா
மாசுறு மாணவ மையிரு ளான்மனக்
கண்மயங்கிப்
பேசறு வீடுபோய்ச் சேர்வறி யாதுபே
துற்றனனே. சகூ

பேதுற வாற்செய் பிழைகள் பெருந்தகாய்
பேணலுற்றென்
மீதுகண் ணேடா விடுதிகண் டாயருள்
வேங்கடவா
தீதொடு நல்வினை யென்னையே போகமாத்
தின்னலுற்றுக்
காதுறு சிந்தைக் கவல்கெடுத் தாள்ககள்
ளங்கடிந்தே. ருo

திருச்சிற்றம்பலம்

௬௨. திருவார்த்தை

(ஆசிரியவிருத்தம்)

† பண்: நட்டபாடை (நாட்டை)

திருச்சிற்றம்பலம்

ஈமப் புறங்காட்டு ளேம்பலாய்த்தொக்
கீண்டிய கூளிக் குழாத்திடைநள்
ளியாமத் தெரியேந்தி யாடும்பிரா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
சேமத் திருநாட்டுச் செல்வமெல்லாஞ்
சேவிப்போர் சிந்தையிற் சேர்க்கும்வள்ளல்
ஏமப் பதத்தி லிறந்தமனத்
தியல்பறி வாரெம் பிரானாவாரே. ௧

குடிகே டியற்றுங் கொடுமைமீக்கூர்
குடில மனவைந் தலையரவை
இடியே றெனக்கொல் லெறுழ்வலியா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
கடிசேர் கமலத் தயன்முதலாங்
கடவுள ரானுந்தான் காண்பரியான்
அடியே னிதயத் தடைந்தமர்ந்த
வழகறி வாரெம் பிரானாவாரே. ௨

† புண்ணியர் பூதியர் பூதநாதர்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருவார்த்தையைத் தழுவியது.

*கேடிக்கடை முன்றில் கறங்கவுடன்
கிடந்ததிர் மும்முர சின்னெலியான்
இடிக்கிடை யாவர வின்பணியா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
குடிக்குடை யோன்கொடுங் குற்றமெல்லாங்
குணமெனக் கொண்டு கொளுங்களியான்
அடிக்கடை யோங்களை யாண்டுகந்த
வருளறி வாரெம் பிரானவாரே. ௩

பொறியறு சூத்திரப் பாவைபோலப்
புடைபெய ராமையென் புந்தியையன்
றெறியுறு வாள்விழி வீரப்பிரா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
செறிவுறு சின்மயச் செம்பொருளான்
சீவர்கள் செய்வினை தேர்கரியாப்
பிறிவற வெங்கணுந் தோய்ந்துநிற்கும்
பெட்பறி வாரெம் பிரானவாரே. ௪

ஊனே யுயிரே யுறுபொருளே
யுள்ள முவந்துறக் கொள்ளைகொண்டான்
யானே யெனதே யெனக்கெடுத்தா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
வானே நிலனே யறிவரியான்
வண்ண வடிவிலாத் தன்னந்தனித்
தானே யனைத்துமாந் தத்துவத்தின்
சதுரறி வாரெம் பிரானவாரே. ௫

*பளிங்கு நிகர்ப்ப வளங்குலவும்
படிவம் படைத்த பரம்பொருளான்
விளங்குமெய்ஞ் ஞான விழியுடையான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
உளங்குலை வுற்றடிக் கும்பரெல்லா
மோல மிடவிட முண்டிருண்ட
களங்கம் பதினெண் கணங்கைதொழுங்
கணக்கறி வாரெம் பிரானாவாரே. சு

*முழுத்த மதிக்குடை மூவுலகும்
முற்றக் கவித்தர சாளும்பிரான்
விழுத்தமெய்ஞ் ஞான விநோதனெம்மான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
கொழுத்த கடுந்திறற் கூற்றுவன்செய்
கொற்ற மடக்கிமார்க் கண்டேயற்குக்
கொழித்த வருள்கெழு கோமளத்தாட்
குலாவறி வாரெம் பிரானாவாரே. எ

*அசுத்தவெம் மாயை யறக்கடிவோ
னன்ப ரகத்தி லுறப்படிவோன்
விசுத்தமெய்ஞ் ஞான விலாசமுடை
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
பசித்தழு ஞானசம் பந்தர்க்குத்தீம்
பாலொடு ஞானம் பரிந்தளித்தோன்
பசுத்துவ நீக்கும் பவித்திரத்தாட்
பரிசறி வாரெம் பிரானாவாரே. அ

*அறக்கள வேள்வி யவாவெகுளி
யழுக்கா றினுச்சொலி னூற்றியதால்
மறக்கள வேள்வியா மாறுகொண்டு
மாமனேச் செற்ற ரமணனெங்கோன்
மறைக்குல மாறனன் மாண்புறச்செய்
மகத்தின் மடையவிப் பாகமுணப்
பறைக்குல வேடம் பரித்தமனப்
பாங்கறி வாரெம் பிரானுவாரே. ௯

*நினைத்துக்கும் பீடு நிகழ்த்துமன்பர்
நெஞ்சிடை நின்று நிறைபதத்தான்
வினைத்துக்க மேவாமெய்ஞ் ஞானவெளி
விண்ணே ரிறைரம ணேசனெங்கோன்
தனைத்தொக்கு முற்ற வளைத்துட்கொள்ளத்
தகுங்கோயி லொன்றுந் தனக்கின்றிமற்
றனைத்துக்குந் தானேபே ராலயமா
யமர்வறி வாரெம் பிரானுவாரே. ௧௦

எய்ப்பினில் வைப்பா யெளியோங்களுக்
கெய்திய வின்னரு ளெம்பெருமான்
எப்பரி சோனென் றியாவருந்தேர்ந்
தியம்பொணுத் தேவ ரமணனெங்கோன்
கைத்தல வாமல கங்கடுப்பக்
கழல்வாய்க் கருத்தழிந் தார்கருத்துள்
மெய்ப்பொரு ளுண்மை புலப்படுக்கும்
விதமறி வாரெம் பிரானுவாரே. ௧௧

அழுங்கி யடைந்தநல் லன்பர்பொல்லா
வகந்தைக் கிழங்ககழ்ந் தாருயிரை
விழுங்கி மகிழ்கூரும் வாள்விழியான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
முழங்குறு மூரிக் கடற்பிறவி
முந்நீ ரிடும்பையிம் மூர்க்கனேற்குப்
பழங்கதை யாக்கிய பாடுயர்மெய்ப்
பாங்கறி வாரெம் பிரானுவாரே. ௧௨

*மண்டவை ராக்கிய மாத்தவத்தீ
மையத் திருந்தொளிர் மெய்யுடையான்
விண்டவை வாய விழைவுடையான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
அண்டர்வை யத்தை யவாவுறவிங்
கடைந்தெறிக் கின்ற வருட்கதிராற்
கண்டவை கேட்டவை கற்பனையாக்
கழிவறி வாரெம் பிரானுவாரே. ௧௩

*மதித்து வணங்கிய மாணடியார்
மலரடிக் கீழின்ப வாழ்வுபெற
விதித்துமற் றுரை மிதிக்கும்பிரான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
கதித்த படிதங் கருத்தகத்துக்
கடுக வுசாவிக் கழலெனுந்தம்
உதித்த விடத்தி லொடுங்குமுயர்
வுறப்பெறு வாரெம் பிரானுவாரே. ௧௪

அருளுரு வாயபே ரந்தணுள
    னமரர்க ளாருயிர் காப்பதற்கா
இருளுறு கோல மிடற்றெம்பிரா
    னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
மருளற மாணடி யார்மனத்தை
    வாள்விழி யாலெறிந் தச்சுதமெய்ப்
பொருளுறு போதம் புலப்படுக்கும்
    பொற்பறி வாரெம் பிரானுவாரே. கரு

விடியிள ஞாயிற்று வாள்விழியால்
    வெய்ய விருள்கெடுக் கும்பெருமான்
குடிமுழு தாளுங் குருபரன்சீ
    ரிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
படிற னெனத்தான் பராமுகஞ்செய்
    யாது பயந்ததன் பார்வையினுல்
அடிய னடைந்தவான் மா நுபூதி
    யழகறி வாரெம் பிரானுவாரே. கசு

* நிரந்தர மன்பு நிகழ்த்துசிவ
    நேயர் கருத்திடை நின்றகலான்
இரந்த விரவலர்க் கேற்றநல்கு
    மிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
சுரந்தகண் ணேக்க வருட்டுணையாற்
    சோகமோ கங்கெழு தொல்பிறவி
அரந்தை யழிக்குஞா னநுபவத்
    தழுந்துறு வாரெம் பிரானுவாரே. கஎ

பராசரர் தந்நற் பழங்குடியின்
பண்புமேன் மேலுமேம் பாடுபெற
இராவண நெஞ்சர்க் கரும்பெருமா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
தராதல மீதொரு மானிடப்பூஞ்
சட்டைமேற் சாத்திவந் தாண்டுகொண்டு
பராவமு தாப்படி றேனைச்செய்த
பரிசறி வாரெம் பிரானுவாரே. கஅ

* துணிந்து மறைகளுஞ் சொல்லவொண்ணுத்
தொல்புக ழான்பரஞ் சோதியைத்தான்
மணந்த திருக்கோல வாழ்வுடையான்
வானோ ரிறைரம ணேசனெங்கோன்
பணிந்து துதித்து நினைந்தடியேன்
பாக்கியத் தாற்றலைப் பாலணியா
அணிந்த வருட்சே வடிநிழற்க
ணமைவறி வாரெம் பிரானுவாரே. கசு

*சொப்பன மென்னத் துறந்துலகைத்
துரிய வெளியிற் றயிலுணர்ந்த
விற்பனர் நெஞ்சில் விளங்கொளியான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
ஒப்பனை சேர்ந்த யுவதியரோ
டடம்படு யோகத் துயிலுறமிவ்
வற்பனை யாண்ட வருட்பரிசே
யவாவுறு வாரெம் பிரானுவாரே. உ0

மதத்துத் திரிந்தவுன் மத்தனேனை
வாள்விழி யோச்சி மடித்தொழித்தான்
இதத்துக் குறைவிட மென்னும்பிரா
னிறையோ ரிறைரம ணேசனெங்கோன்
சதத்தைக் கருதிய தற்பரராய்ச்
சச்சிதா னந்த தயாபரன்சீர்ப்
பதத்துப் பணிவழி நின்றெழுகும்
பரிசறி வாரெம் பிரானுவாரே. உக

*வெகுதுறை யாயபல் வேறுமதம்
மேவு முடிபாய மெய்ப்பொருளான்
மிகுதறை வாழ்வை விளக்கவந்த
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
நகைமுறு வற்கே நவையுறுபொய்ந்
நானென தென்ப நசித்தொளிர்மெய்த்
தகைபெறு மோன சமாதிநிலை
தாமறி வாரெம் பிரானுவாரே. உஉ

*சற்பனை யோவயன் கற்பனையோ
தாண்மலர்க் கன்பு தரிப்பதில்லை
மெய்ப்பனை யெண்ண மொழிந்துமெய்யே
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
கற்பனை முற்றுங் கடந்தொளிர்பொற்
கழற்சே வடிக்கொரு வேட்டுவக்கண்
ணப்பன தன்பா யிரத்தொருகூ
றுற்றவல் லாரெம் பிரானுவாரே. உங

*குழையுறு மன்புமெய்ஞ் ஞானமொடு
குறைவறப் பெற்றவர் பாக்கியர்காண்
விழையுறு முள்ளத் தொழுகருளான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
உழையுறு முள்ளங் கசிந்துருக
வுடையா னடியே யுணர்ந் துணர்ந்து
மழையுறு மின்னருள் வாரிவளம்
மடுத்திடு வாரெம் பிரானுவாரே. உச

*ஆசைக் கவற்சிக் கவதியின்றென்
றறிந்து மடியனேன் மூடமனம்
பாசக் கழிவுறப் பார்ப்பதன்று
பரத்தைப் புகழ்ச்சிபாற் பாசத்தினால்
வேசற் றடைந்தவர் வெவ்வினைதீர்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
நேசத் தமிழ்ந்துதந் நெஞ்சுறைத்து
நிற்கவல் லாரெம் பிரானுவாரே. உரு

*மூள்வினை யாதிய மும்மலத்தின்
முயக்கமெய் யன்பர்பான் முற்றுமற
வாள்விழி யேதன் வயப்படையா
மாளச் செகுக்கு மதவலியோன்
வேள்வி யவிவேட்டா ராவியன்றி
வேறாக வாத ரமணனெங்கோன்
கேள்வியி னன்னேன் கிளரடிக்கீழ்க்
கிடந்தமை வாரெம் பிரானுவாரே. உசா

*நச்சத் தகுங்குண நாகரிகன்
நலியவிச் சைக்குமெய்ஞ் ஞானரவி
மிச்சப் பொருளாய் விளங்குசிவன்
விண்ணே ரிறைரம ணேசனெங்கோன்
மெச்சத் தகுந்த வியன்சிறப்பு
வேறொன் றுமில்லா வெறியரேனும்
பிச்சைப் பெருமான் பெரும்புகழைப்
பேணுவ ரேலெம் பிரானுவாரே. உஎ

*சிறந்தமெய் யன்பர்க்குத் தேன்சுரக்குந்
தேவாதி தேவ ரமணனடிக்
கறந்தவ ருதநன் னெஞ்சினரா
யாற்றுந் தியானத்தா லல்லிமுகை
திறந்த வுளத்தி லவன்சொருபந்
தேறத் தெளியத் திகழ்வதனை
அறிந்தமெய்ஞ் ஞான வருட்செல்வருக்
காட்படு வாரெம் பிரானுவாரே. உஅ

*கன்ம கலாபக் கடைவிரித்துக்
கருத்தத் துவத்தாற் கடைகெடாது
தன்ம சொரூப தயாபரன்மெய்த்
தத்துவ ஞானி ரமணனெங்கோன்
மன்மமா மாணடிச் சிந்தனையால்
வாதனை மாண்டு மனத்தியல்போய்
நின்மல ஞான நிறைவெளியாய்
நிகழ்வுறு வாரெம் பிரானுவாரே. உசு

*உவளகப் பள்ளி யறையுளமா
வுமையோ டுவகை யுறக்களிப்போன்
பவளத் தடவரை போலுமெய்யன்
பண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
அவலக் கவலைகை யாறழுங்க
லறுவுல கத்தை யவாவியோடும்
சவலக் கருத்துச் சதாசிவமாச்
சாம்பதத் தாரெம் பிரானுவாரே. ௩0

*ஆவித் தருகுமெய் யார்வமில்லா
வடியேன் சொலும்மணி வாசகம்போல்
மேவிக் களித்த விருப்புடையோன்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
தாவிக் கடந்த தனிமுதலோன்
றனதா லயத்துத் தழைத்தொளிர்செங்
காவிக் கொடியின் கருத்தறிந்து
கடைப்பிடிப் பாரெம் பிரானுவாரே. ௩க

*வீண்டருக் கத்து வெளிப்படாதான்
விண்ணோ ரிறைரம ணேசனெங்கோன்
தாண்டவ மாடச் சதுமறையுந்
தமியனேன் சாற்று முறையுமரங்
காண்டவன் றுள்செய் யணிநிழற்கீ
ழுவாவி நமோரம ணுயவென
மாண்ட மனத்தபி மந்திரித்து
வைகுறு வாரெம் பிரானுவாரே. ௩உ

*ஒட்ப முடைக்கூ ருணர்ச்சியர்த
முள்ளக் கிழியி னெழு துருவம்
தட்ப முடையுப சாந்திதருந்
தண்ணருட் சோதி பழுத்தொழுகும்
கட்புலங் காணுக் கதிரொளிவேங்
கடன்கட் டழகிற் கடுகளவே
விட்புல மிக்கமெய்ஞ் ஞானவெளி
மெய்ய னெழிலோ வியத்தக்கதே.

திருச்சிற்றம்பலம்

——:O:——

சூ௩. திருப்பாண்டிப் பதிகம்

(கட்டளைக்கலித்துறை)

† பண்: நட்டராகம் (பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

சிறவாத மாந்தர் சிறக்குமா றெண்ணித்தெண்
ணீர்வரைப்பிற்
பிறவாத பாண்டிப் பிரான்வேங்க டேசன்
பிறந்துவந்திங்
கிறவா தவரை யிறப்பிக்குஞ் சோர்வை
யிறவிறுத்துத்
திறவாத வீட்டைத் திறப்பிக்கு மீது
திருக்குறிப்பே. சு

† முப்பது மில்லை—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்பாண்டிப் பதிகத்தைத் தழுவியது.

கவ்விய மாயையைக் கால்கடிந் துய்யக்
கருதுதிரேல்
எவ்வெவ ரெவ்வெவை யெண்ணின ரவ்வவர்க்
கவ்வவையீந்
திவ்வய மாந்தரை யேவல்கொள் கின்ற
விறைரமணன்
செவ்விய பாண்டியன் சேவடி சிக்கெனச்
சேர்மின்களே. உ

பலவாப் பணிவிட்டுப் பார்ப்பார் மனத்தைப்
பரிசழிக்கும்
மலமாயை யால்வறு மைப்பட்ட மாந்தீர்
மனமெனும்புன்
புலமாயை தன்னைப் பொடிகண்ட வேங்கடன்
போதநிதி
உலவாக் கிழியுத வுஞ்செழி யோன்கிடைத்
துய்ம்மின்களே. ௩

உய்யுங் கருத்துடை யுத்தமத் தொண்டீர்க்
குறுதிசொல்கேன்
வையங் குலவுசீர் வண்பாண்டி நாடன்றன்
வாள்விழியால்
மெய்யென்று பொய்யை வியப்பிக்கு மாயையை
வெட்டியிறச்
செய்யுந் திறல்வல்ல வேங்கடன் சேவடி
சேர்மின்களே. ச

பேச்சி லடங்காப் பெரும்புகழ்ப் பாண்டிப்
பிரான்பிரம்பின்
வீச்சி லடங்காமெய் வித்தக வேங்கடன்
வீணர்கள்சொல்
ஏச்சற மாவூர்ந் திமையின் னுறைகழித்
தீர்விழிவாள்
ஓச்ச லுந் தொண்ட ருளக்கா ரிருளுடைந்
துக்கதுவே. ௫

அப்போ லெழுத்துல கங்களுக் காதி
யனைத்துயிரும்
எப்போல் வளைதிரு வேங்கடன் பாண்டிநன்
னுடனெரு
கைப்போ தகமெனச் சார்ந்தோரைத் தாங்குங்
கழலிணையை
இப்போ திறைஞ்சினி ரீறில்பே ரின்பவீ
டேறினிரே. ௬

கேடே யிலாக்கிள ரண்ணு மலையனைக்
கிஞ்சிலுந்தற்
கீடே யிலாரம ணேசனைப் பாண்டி
யிறையவனை
வீடே யுறப்புரி வேட்கையிர் தாட்டுணை
மேவிடிற்கூட்
டோடே விமுத்தி யுறப்பெறு வீருங்கள்
கட்டொழிந்தே. ௭

பூட்டியல் புந்தியின் கந்தியைப் போழுங்கண்
வேங்கடவன்
பாட்டியல் கின்றதென் பாண்டிப் பிரான்பாற்
பயின்றவர்கள்
கேட்டலுங் காண்டலு மில்லாத வீடே
கிடைக்கப்பெறல்
வீட்டினு மேற்பட்ட வேறோர் விழுச்செல்வ
மின்மையினே. அ

*குருந்துங்கல் லாலுமாக் கொண்டென்சித் தத்துட்
குருரமணன்
பொருந்தும் பதாம்புயம் பில்குஞ் சிவானந்தப்
புத்தமுதம்
அருந்துந் தொறும்புதி தாகச் சுவைத்தென
தாருயிர்க்கு
விருந்தும் மருந்து மொருங்கேதா னுகை
விளைந்ததுவே. சு

பார்ப்பினுக் குற்றநற் றுய்ப்பறை போற்பரிந்
தாருயிரைப்
பூப்பினுட் பூஞ்சுரும் பாய்ப்புணர் வேங்கடப்
புண்ணியனார்
ஞாட்பினுட் கோழெரி யாய்முன் னெரித்த
நயனமிப்போ
தியாப்பினு ளட்டிய நீராயிற் றன்றென
தின்னுயிர்க்கே. க0

வான்மானு மற்ருெரு வானிலா வாறிந்த
வையகத்திற்
ருன்மானு மற்ருெர்தா னில்லாத் தனிமுதல்
சாரநுதற்
பான்மானு நீற்றின் ஞெளிபடர் வேங்கடன்
பார்க்குநர்கட்
கான்மாறு பூதி யடைவிக்கும் பார்வை
யழகிதன்றே. கக

*ஆலுங் குருந்தி னடியுமெய் யன்பர்க்
கறவொளிமுன்
காலுங் கதிர்முக வேங்கடன் வண்கழல்
கண்மயங்கி
ஓலஞ் சொலுங்கடை யோர்தலை வாய்விழி
யோடுளத்தின்
பாலும் படர்ந்தெமை வாழ்விக்கப் பெற்றனம்
பாக்கியமே. கஉ

திருச்சிற்றம்பலம்

௩௪௪. *வாழ்வறிவுறூஉ

(ஆசிரியவிருத்தம்)

†பண்: நட்டராகம் (பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

எண்ணி லாத வெண்ண மெண்ணி யேங்கு மேழை மாந்தரே
மண்ணி லேக வலை யற்று வாழ்த லோவ றுங்கனு
கண்ணி யிட்ட யாவை யுங்க னிந்து நல்கு வேங்கடப்
புண்ணி யத்தி யாக மூர்த்தி பொன்ன ருளின் வாழுமே. க

வளந்த தும்பு வாழ்வ வாவி வஞ்ச மெண்ணி நெஞ்சனைந்
துளைந்து குற்ற மற்ற நோக்கி யூக்க லுற்ற வோட்டைகாள்
களந்து றந்து வேங்க டக்க திர வன்றன் சந்நிதிக்
குளந்தி றந்து றுதி கொண்டு வகை பூத்து வாழுமே. உ

பெண்டு பிள்ளை கன்று காலிப் பேற னைத்து மேமனுர்
செண்டு கொண்ட டிக்கு ஞான்று சீர்கு லைந்து வீழுமே
மண்டு நீர்வ ளாக மீதிவ் வாழ்வு மாய மாதலிற்
கண்டு வேங்க டேசர் தாளைக் கைதொ ழுது வாழுமே.

சாவ தோச ரத மென்னத் தாமெ ணுது செய்கொடும்
பாவ வாழ்வி னுற்ப ரித விக்க லுற்ற மாந்தரே
ஏவ லேற்று வேங்க டேசர் செய்யு மின்ன ருளின்முத்
தாவ வேட்கை தாந்த ணிந்து சாந்த ராக வாழுமே. ச

---

† நம்போ நுணம் மக்க ளேன்று—என்னும் தேவாரப் பண்.

குடம்பை விட்ட குஞ்சு போலு டம்பை விட்டு யிரெம
னிடம்ப றந்தெ ழுந்த ஞான்றி யற்ற லாவ தொன்றிலை
அடம்பு ரிந்த கங்க ரித்த தற்ப வாழ்வ நித்தியம்
திடம்ப டத்தெ ளிந்து சீர மணர் தாளில் வாழுமே. ௫

நேம மற்று நாட்டி லேறி நீண்ட மானி டத்துளே
காம மாய்க்க ரந்த குள்ளக் கள்ள மார்ந ரிகளே
தீமை வஞ்சந் தீர்ந்த ணாம லைக்க ணேர மணச்செந்
நாம மார்ந றவ மாந்தி நல்ல வண்ணம் வாழுமே. ௬

சூதி யைந்து வாதி யைந்து சுற்ற முற்றஞ் சூழ்ச்சியே
நீதி யாநி னையு மானி டர்கள் சூழ்நி லத்திலே
சாதி யாதி பேத வாத சாத னைச தம்மெனா
தோதி வேங்க டேசர் சீரை யுய்தி சேர வாழுமே. ௭

மறப்பி னால டைந்த மோக மாய மாம கிதலம்
உறப்பி றந்தி றந்து யிரு லைந்து போன மாந்தரே
சிறப்பு றக்கை வல்லி யந்தெ ரிந்து வேங்க டேசர்பாற்
பிறப்பி றப்ப றப்பெ றும்பெ ருமி தத்து வாழுமே. ௮

செம்பொ ருட்சி வப தச்சி றப்பை யோர்ந்தி டாதுநீர்
ஐம்பு லத்தி லாசை கொண்ட டிமை யாகு மாந்தரே
இம்ப ரும்ப ரெம்ப ரும்மி லாத தொர்பே ரின்பமாத்
தம்ப வேங்க டன்ன டிச்ச ரண டைந்து வாழுமே. ௯

அழகு செல்வ மாண்மை கீர்த்தி யன்றி யோங்கு பல்கலைக்
கழக மேய்ந்து கற்ற றிந்த கல்வி யும்ப யனிலை
பழகு வார்க்க ணிக்கும் பாத வேங்க டர்க்குப் பாசமாய்
ஒழுக வல்ல டியர் தம்மு ழைப்ப யின்று வாழுமே. ௧௦

திருச்சிற்றம்பலம்

சூ௫. *உறுதியுரை

(விருத்தக்கலித்துறை)

† பண்: கௌசிகம் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

வெருக்கொளா தன்பின் விழைந்தாருயிர் மல்க ஞான
அருக்கனு மென்று மகக்காரிருள் செற்று நின்றான்
ஒருக்கமா யுள்ள முடையானொளி யோர்ந்து வாழ்மின்
தருக்கஞா னத்தாற் றருக்காமை யகந்த விர்ந்தே. க

இருளின் புலத்தா லெதிர்கற்பனை யென்று கொண்டே
மருளின் கருத்தான் மலைவுற்றுள மாழ்க லென்னே
வெருளின் மிறைச்சுட் டறவீயி னியற்கை ஞான
அருளின் சொரூப மதுவேயதைக் காட்டு மன்றே. உ

மதப்பித்து விட்டு மனமூலமுற் றோங்கு வாய்மைப்
பதப்பற்று வாய்ந்து பரபோக நுகர்ந்தி ருத்தல்
உதிப்புற் றுழல்சுட் டுணர்வாமகங் கார மோகப்
பதைப்பற்றுத் தெய்வப் பணிநின் றிடும் பாக்கி யர்க்கே. ௩

ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலு மேலச்
சோதிக்க வொண்ணுச் சுடர்விட்டுள சோதி பாதம்
சாதிக்க நன்மை தருமின்னருள் சார்ந்த தக்கோர்
மேதக்க ஞான விழியல்லது வேறு முண்டே. ச

---

† வாழ்க வந்தணர்—என்னும் தேவாரத்தில் 4-12-ஆம் திருப் பாடல்களின் பண்.

பகலி னெறிக்கும் பரஞ்சோதி ரமண மூர்த்தி
நகலின் முகத்தாற் கலாவல்லவ யாரை நீயென்
றகில கலாவல் லவர்ஞான மசதி யாடத்
தகுநன் பொருளாய்த் தடுமாறு தல் காண்டு மன்றே. ௫

ஒட்டற்ற சிந்தை யுதியத்தல மோர்ந்து பேணி
எட்டுற்ற வுள்ளத் தியல்பேயெழு மோன மொன்றே
சுட்டற்ற வுண்மை சுயமேயொளிர் சோதி தன்னை
முட்டற்று வாழ்த்தும் மொழியல்லது மற்று முண்டே. ௬

உண்மை யதனை யுளத்தாருயிர் தன்னெ டொன்ற
நுண்மை யுணர்வின் னிருபாதிக மாக நோக்கி
அண்மை யுறமிவ் வகமாரென வாய்ந்து பார்ப்பார்
விண்மெய்ய ராகி யமுதத்துவ மேவு வாரே. ௭

மொய்ம்மா மலரின் முளரிக்கழன் முன்பு மூன்றும்
சும்மா விருக்கு மதுவேதொழ லாக வுட்கொண்
டம்மா தவர்க்கின் னருணல்கிடு மத்த னென்னச்
செம்மாண் கடவு ளெவருந்தெரி சித்த துண்டே. ௮

எங்கெங் கியாவ ரெதிர்நோக்கினு மின்ப வுண்மை
அங்கங்கு ஞான வருளின்வெளி யாகு முன்னைப்
பொங்குங்கண் மூடிப் புலரிக்கதிர் பொய்யெ னல்போல்
வன்கண்ண னென்ன வழங்கற்கொரு நீதி யுண்டே. ௯

தானந் தவமுந் தலைப்பட்டத னூல கந்தை
ஊனந் தனைமுன் னுவர்த்துன்னடி யோர்ந்த மாந்தர்
பானந் திகழ்மெய்ப் பரிபூரண வுன்னை யன்றி
யானென் றெருகான் மறந்தென்னினு மெண்ண லுண்டே.

திருச்சிற்றம்பலம்

சுசு. திருப்படை யெழுச்சி

(கோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

தேரத் தெளிரமண தேசிகன்றாட் காட்பட்டீர்
சாரத் தருசா தனநாற் படையேழுமின்
சேரப் பகைகண்டு சிந்தை சிதையாதீர்
வீரக் கழலணிந்து வெம்பகையைச் சாடுமினே. க

வெலப்படா விறல்வீர வேங்கடன்றாட் காட்பட்டீர்
கலப்பாலிற் சொட்டுக் கடுவிடம்போ னம்படையுட்
கலப்புறு தேதிலரைக் காத்தல்கட னுக்கொளுமின்
மலப்படா நம்படைஞர் மாசூர்ந்து போகாமே. உ

எப்பகையுஞ் செற்றரம ணேசன்றாட் காட்பட்டீர்
எட்பகவின் னனிசிறுமைத் தேனுந்தன் னெய்ப்பிடத்து
மட்பகையின் மாணத் தெறுதலான் மாணுத
உட்பகையை யுட்கித்தற் காத்த லுறுதியதே. ந

மெய்ஞ்ஞான வேங்கடன்றாண் மேவினீர் விராகத்தாற்
பொய்ஞ்ஞால வாழ்க்கைப்புன் புலநசையை வீட்டிடீர்
பைஞ்ஞீலி தம்மைப் பதைபதைப்பச் செய்யும்பாழ்
அஞ்ஞான வேந்தன்பே ரல்லற்படை வாராமே. ச

---

† அக்கிருந்த வாரழும்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்படை யெழுச்சியைத் தழுவியது.

அரனென்ன வயனென்ன வரியென்ன வான்றபரா
பரனென்ன வித்தகர்காண் பதிரமணற் காட்பட்டீர்
உரனென்னுந் தோட்டியா னுரைந்துங் காத்தோம்பி
வரனென்னும் வைப்பிற்கோர் வித்தாக வளர்வீரே. ரு

உகப்பற்று வெறுப்பற்ற வுளரமணற் கொருப்பட்டீர்
மகப்பற்றே பொருட்பற்றே மனைப்பற்றே மற்றுமுற்ற
இகப்பற்றே யிகந்தெறிமின் பரபோக முவர்த்தொழிமின்
அகப்பற்றை யறக்களைந்து புறப்பற்று மகற்றுமினே. சா

அன்பராய் வேங்கடன்றாட் காட்பட்ட ரருள்வாளால்
வன்பராய் முருட்டுமன வன்பகையை மாய்ப்பீரே
துன்பவா ரிதிகடந்து தொண்டர்காள் சோர்வில்பே
ரின்பவீ டாள்வோநா மேதப்படை வாராமே. எ

களைகணும் வேங்கடவன் கற்பிப்பா ரின்றிக்கே
இளையனுய் முதுக்குறைந்த வெம்மான்றாட் காட்பட்டீர்
களைகுவார் கைகொல்லுங் காழ்த்தவிடத் தாதலால்
இளையதா முண்மரத்தை யெளிதாகக் கொல்வீரே. அ

வேகங் கெடுத்தாண்ட வேங்கடன்றாட் காட்பட்டீர்
ஏகப் பொருளுணர்வா லிருட்படலங் கீண்டெழுமின்
மாகத் தலத்தோர் மதிமயங்கப் பொங்கிவரும்
மோகப் படையானம் மோனவரண் வீழாமே. கூ

பகைப்பற்று முப்புரமும் பாழ்படுத்தான் பத்தரகக்
குகைப்பற்றே பற்றுமெங் குருரமணற் காட்பட்டீர்
நகைப்புற்ற நானிலத்தோர் தாநாண நாமவர்போற்
றிகைப்பற்றுச் செம்மாந்து திருநாட்டுக் கெழுவோமே.

திருச்சிற்றம்பலம்

௬௭. சந்நிதிச் சிறப்பு

(ஆசிரியவிருத்தம்)

† பண் : கொல்லி (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

நீத மோரடனை நேர்ந்து சின்மொழி
நெஞ்ச மோடுரை நேயரே
ஏத லன்னிவ னென்ப டும்மென
வெண்ணி நீர்பரி வெய்தலீர்
ஆதர் தங்களை யாட்டி வைத்திடு
மாண வக்கெளி யேனலேன்
வேத நன்முடி மேவு பொன்னடி
வேங்க டேசன்முன் னிற்கவே. க

மெத்த நட்பொடு மேவு சில்லுரை
விள்ளு மேதகு நண்பரே
எத்த ரம்மிவ னெற்று தற்கதை
யென்று நீர்பரி வெய்தலீர்
மத்த மாக்களை மாட்டு மைம்மகி
மாயை முன்னெளி யேனலேன்
வித்த கக்கடல் வேலை யாகிய
வேங்க டேசன்முன் னிற்கவே. உ

திருச்சிற்றம்பலம்

† மானி னேர்விழி மாதராய்—என்னும் தேவாரப் பண்.

௬௮. யாத்திரைப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

அவலோ கனத்தா லடியோங்க
ளடிப்புன் குடில்க ளழிவித்துத்
தவலா வாய்மைத் தற்பதமே
தயவாய்த் தந்தான் வேங்கடவன்
கவலோ மவலக் கடலழுந்தோங்
கையா றெய்தோங் கண்கலுழோம்
சிவலோ கத்துச் சேர்ந்தின்பந்
துய்த்துச் செம்மாந் திருப்போமே. க

செம்மாந் திருக்குஞ் சிவஞானச்
செல்வப் பெருமான் செழுங்கமலச்
செம்மா ணடியே சிந்திக்குஞ்
செல்வ முடையீர் குச்சிதமாம்
பொய்ம்மா யத்தைப் புறம்போக்கிப்
போதச் சுடராம் வேங்கடநல்
லம்மா னருளான் முத்திப்பே
றடைவே யடைவோம் வாரீரே. உ

† முத்தா முத்தி தாவல்ல—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் யாத்திரைப் பத்தைத் தழுவியது.

வாரா விருந்தாய் வலிவந்து
மனத்தே புகுந்தென் மடமதியை
ஆரா வமுதா வறப்புசித்தா
ஞன்ம நாதன் வேங்கடவன்
சீரார் செல்வச் செழுங்கழலே
சிந்தித் துலகைப் பண்டமாப்
பாரா தொழித்துப் பரமபதங்
குறித்துப் பயணப் படுவோமே. ௩

படுமா யப்பாழ்ம் பொய்யுலகைப்
பண்ட மாக்கிப் பலபுரிந்து
கொடுமா நிரயக் குழிவீழுங்
கொடியோங் களைத்தான் குறிக்கொண்டான்
அடுமா றெண்ணி யருள்வாளா
லவிச்சை தன்னை யறவடர்த்து
நடுவே யெழுவோ நமையாண்ட
ரமணன் றிருநன் ஞட்டுக்கே. ௪

நாட்டார் மருள நங்கட்கா
ஞாலத் துற்று நல்லன்பாய்க்
காட்டா வதனைக் காண்பித்துங்
கேளா வதனைக் கேட்பித்தும்
ஆட்டான் கொண்ட வேங்கடன்றன்
னடியார் பிறவிக் கரும்புணையாம்
தாட்டா மரையே தாரகமாத்
தமர்காள் வீடு சார்வோமே. ௫

சாரக் கடவ நோயெம்மைச்
 சாரா வகையாற் சார்புணர்த்திப்
பாரக் கருணை பாலித்தான்
 பாண்டிச் சுழியல் வேங்கடவன்
வீரக் கழலே மிகநினைமின்
 வேறோர் கால மினியில்லை
நேரப் பெறுவீர் நிகரில்பே
 ரின்பப் பெருநீர் வாணமே. சூ

வாணக் குரிசின் மாவலியை
 மண்ணாள் வித்தா னன்றின்றிவ்
வீணக் கடையாம் வெறியேனை
 விண்ணாள் வித்தான் வேங்கடவன்
காணக் கழனீர் கடவீரேற்
 காண்டற் கரிய கடுந்தூரச்
சேணிற் கிடந்த சிவலோகஞ்
 செறிந்து கிடக்கும் முன்னடிக்கே. எ

அடியார்க் கெளியா னம்பலத்தா
 னவுணர் புரம்போ லென்புரமும்
பொடியாப் புரிந்து புன்முறுவல்
 பொங்கு முகத்தான் வேங்கடவன்
விடியா விருள்சே ரிருவினையை
 வீட்டுங் கதிர்வாள் விழிநோக்கம்
படியா நின்றார் பரந்தாமப்
 பவிசு கண்டார் படியிடத்தே. அ

படியும் படிபார்ப் பானுமவன்
பார்க்கும் பார்வை தன்னொடுமுப்
புடியுந் தன்னுட் புலப்படுமோர்
படிமக் கலனைப் புரிந்தெம்மை
விடியச் செய்த வேங்கடவன்
விளங்கு மிளஞ்செஞ் ஞாயிற்றைக்
கடியுங் கனகக் கருங்கழல்வாய்க்
கலக்கக் கடவீர் கடுகுமினே. க

மின்னார் மென்றோட் டுயில்வாய்த்தம்
வேட்கைத் திறத்தா யிரத்தொருகூ
றன்னான் றனுக் கமைத்திட்டா
ரகல்வா னளக் கொத்தடியோம்
இன்னாப் பிறவி யிடர்தீர
வெமையாட் கொண்ட வேங்கடன்றாள்
இன்னே கருதி யெழுவோம்பே
ரின்பத் திருநாட் டியாத்திரையே. க0

திருச்சிற்றம்பலம்

சூகூ. அன்னை

(கலிவிருத்தம்)

† பண் : சாதாரி (பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

உஞ்சிடச் சார்ந்தா ருயிர்கவர் வேங்கடர்
வஞ்சர்கன் னெஞ்சரா லன்னே யென்னும்
வஞ்சர்கன் னெஞ்சர்கண் மையலை யெண்ணியென்
நெஞ்சம்புண் ணாகுமா லன்னே யென்னும். க

வால்வளை மால்வழி பாட்டுக் களித்தகூர்ங்
கால்வள ராழிய ரன்னே யென்னும்
கால்வள ராழிக் கனவேங் கடவரென்
கோல்வளை கொள்வரா லன்னே யென்னும். உ

மாசு மறுவற்ற மாழையின் மிக்கமாத்
தேசுடை மேனிய ரன்னே யென்னும்
தேசுடை மேனித் திருவேங் கடவரென்
தூசு கவர்வரா லன்னே யென்னும். ங

புத்தமு தச்சுவை பொங்குந் திருவடி
வித்தக மெய்யரா லன்னே யென்னும்
வித்தக மெய்யுடை வேங்கட நாதரென்
சித்த முறைவரா லன்னே யென்னும். ச

---

† எண்டிசைக் கும்புகழ்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் அன்னைப் பத்தைத் தழுவியது.

நஞ்சைக் கரந்த களத்துநல் லார்திரு
அஞ்சைக் களத்தரா லன்னே யென்னும்
அஞ்சைக் களத்தவ் வழக ரமணரென்
நெஞ்சக் களத்தரா லன்னே யென்னும். ரு

அசித்தபுன் மூரலா லாவி புசிக்க
விசித்தமெய்க் கச்சைய ரன்னே யென்னும்
விசித்தமெய்க் கச்சைசேர் வேங்கட ரென்றன்
பசித்துயர் தீர்ப்பரா லன்னே யென்னும். சா

பூசலிட் டார்புரம் பொன்றப்புன் மூரல்செய்
தேசற் றிருப்பரா லன்னே யென்னும்
ஏசற் றிருக்க ரமணர்க்கென் னங்கம்பொன்
ஊசற் பலகையா மன்னே யென்னும். எ

தாழ்க்கை யறக்கண்ணுற் றற்கண்ட நல்லார்க்கு
வேட்கை விளைப்பரா லன்னே யென்னும்
வேட்கை விளைக்குமவ் வேங்கட நாதரென்
பூட்கை யுடைப்பரா லன்னே யென்னும். அ

பற்ப நுதலினர் பாடுசான் மாமேரு
வெற்பை வளைப்பரா லன்னே யென்னும்
வெற்பை வளைக்குமவ் வேங்கட நாதரென்
பொற்பை யழிப்பரா லன்னே யென்னும். கூ

கோணை யணிந்துகோற் கோண்போலன் பர்மனக்
கோணை நிமிர்ப்பரா லன்னே யென்னும்
கோணை நிமிர்க்குமக் கோல ரமணரென்
ஊணை யொழிப்பரா லன்னே யென்னும். க0

*பச்சைமா லோடு பகிர்ந்தசெம் மேனியர்
விச்சை விளைப்பரா லன்னே யென்னும்
விச்சை விளக்குமவ் வேங்கட ரென்றனைப்
பிச்சியாச் செய்தன ரன்னே யென்னும். ௧௧

*விச்சையில் வல்லவர் வெள்ளி மலையினர்
பிச்சை யிரந்துண்ப ரன்னே யென்னும்
பிச்சை யிரக்குமப் பித்துக் கொளியைக்கண்
டிச்சை யெழுமெனக் கன்னே யென்னும். ௧௨

*விருப்புக் குரியவர் வேங்கடர் வெள்ளிப்
பொருப்புக் குடையவ ரன்னே யென்னும்
பொருப்புக் குடையரோ டுள்ளப் புணர்ச்சிக்
கொருப்படு மென்னுள மன்னே யென்னும். ௧௩

அயன்முத லார்க்கு மறிதற் கதீதர்
வியன்முத லாவரா லன்னே யென்னும்
வியன்முத லாகுமவ் வேங்கட ரென்னு
ருயிர்முதல் காண்டியென் னன்னே யென்னும். ௧௪

மந்தையாக் கோடியான் மாக்களைக் காப்பவர்
எந்தை ரமணக்கோ னன்னே யென்னும்
எந்தை ரமண ரிரவும் பகலுமென்
சிந்தை குடைவரா லன்னே யென்னும். ௧௫

பாண்டிச் சுழியற் பசுபதி வேங்கடர்
காண்டியென் காதல ரன்னே யென்னும்
காண்டியக் காதலர் கண்டுயில் காலெனைத்
தீண்டித் திளைப்பரா லன்னே யென்னும். ௧௬

நண்புஞ் சிரிப்புமாய் நல்கி ரமணரிப்
பெண்பஞ் சையைநீத்தா ரன்னே யென்னும்
பெண்பஞ் சையைநீத்தார் பேரும் வழிநோக்கிக்
கண்பஞ் சடையுமா லன்னே யென்னும். கஎ

மீதவா வுற்றவர் மேவுயி ரைக்கொலும்
வேதபா ரங்கத ரன்னே யென்னும்
வேதபா ரங்கத வேங்கட நாதரென்
காதல் கவர்வரா லன்னே யென்னும். சஅ

நேதிநே தியென்னச் சாற்றி நிகமாந்த
வீதிவாய்ச் சேர்வரா லன்னே யென்னும்
வீதிவாய்ச் சேருமவ் வேங்கட ரூனுயிர்
பேதித் திடுவரா லன்னே யென்னும். கசு

சத்தோடு சித்தானந் தத்து ரமணர்வாய்
தத்தோ மசியென்று ரன்னே யென்னும்
தத்தோ மசியெனச் சாற்றிய சொல்லெற்குப்
பித்தேற்றி விட்டதென் னன்னே யென்னும். உ0

நுண்மை யுணர்வானு நோக்கரு மெய்ஞ்ஞான
வெண்மை யுடையரா லன்னே யென்னும்
வெண்மை யுடையவவ் வேங்கட நாதரென்
பெண்மை யுடைப்பரா லன்னே யென்னும். உக

சிம்மை யுடைய சுடுவினை யால்வரு
வெம்மை தணிப்பரா லன்னே யென்னும்
வெம்மை தணிக்குமவ் வேங்கட நாதரென்
செம்மை யழிப்பரா லன்னே யென்னும். உஉ

சோகம் பொறுத்தற் றேய்ந்தவர் வெந்துயர்
வேகந் தடுப்பரா லன்னே யென்னும்
வேகந் தடுக்குமவ் வேங்கட நாதரென்
தாகந் தணிப்பரா லன்னே யென்னும். உ௩

கள்ளங் கவடற்ற காதலர்க் கானந்த
வெள்ளங் கொடுப்பரா லன்னே யென்னும்
வெள்ளங் கொடுக்குமவ் வேங்கட நாதரென்
உள்ளங் கவர்வரா லன்னே யென்னும். உ௪

நட்குந் திருத்தக்க நல்லாரைப் பல்லார்முன்
வெட்கங் கெடுப்பரா லன்னே யென்னும்
வெட்கங் கெடுக்குமவ் வேங்கட நாதரென்
உட்கலந் தீவரா லன்னே யென்னும். உ௫

வீரப் பெருமித வேங்கட ரன்பர்பால்
வாரத் திறைகொள்வ ரன்னே யென்னும்
வாரத் திறைகொள்ள வந்தவர் தாமென்னை
ஆரத் தழுவின ரன்னே யென்னும். உ௬

கோடையி லேமழைக் கொண்டல்போ லன்பர்தம்
வேடை தணிப்பரா லன்னே யென்னும்
வேடை தணிக்குமவ் வேங்கட ரென்னுடை
ஆடை குலைப்பரா லன்னே யென்னும். உ௭

துன்பந் தொலைந்த துரீய ரடிச்சியோ
டன்பின் முயங்குவ ரன்னே யென்னும்
அன்பின் முயங்கு மவரரு ளாலெனக்
கின்பஞ் செனிக்குமா லன்னே யென்னும். உ௮

தூக்க விழிப்பறத் தோயும் பரஞ்சுடர்த்
தேக்க மிகுத்தவ ரன்னே யென்னும்
தேக்க மிகுத்த திருவேங் கடரெனக்
காக்க மளிப்பரா லன்னே யென்னும். ௨௯

உண்மயல் போக்கி யுதவுறு மெய்ஞ்ஞான
விண்மணி யாவரா லன்னே யென்னும்
விண்மணி யாகுமவ் வேங்கட ரென்மனக்
கண்மணி யாவரா லன்னே யென்னும். ௩௦

சூரியர் கோடி சுடர்வது போற்சுடர்
வீரிய மிக்கவ ரன்னே யென்னும்
வீரிய மிக்கவவ் வேங்கடர் தாமென்னே
டோரியல் பாயின ரன்னே யென்னும். ௩௧

நீக்க மிலாது நிறைந்த சிதானந்த
மீக்கிளர் மெய்யரா லன்னே யென்னும்
மீக்கிளர் மெய்கெழு வேங்கடர் பேரின்ப
ஆக்க மளிப்பரா லன்னே யென்னும். ௩௨

திருச்சிற்றம்பலம்

எ0. நற்றா யிரங்கல்

(கலிவிருத்தம்)

† பண்: இந்தளம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

அறவோ யெனுமா லடிகே ளெனுமால்
இறவாப் பிறவா ரமணா வெனுமால்
உறவோ யெனுமா லுலறா விழுமால்
சிறவா விதியேன் சிறுமா மகளே. க

கதியே யெனுமால் கழல்வாழ் கெனுமால்
எதியோர் தலைவா ரமணா வெனுமால்
பதியே யெனுமால் பதறா விழுமால்
சதியா திவளைச் சதியா ளுதியே. உ

புகனீ யெனுமால் புரவா யெனுமால்
இகநீ பரநீ ரமணா வெனுமால்
முகநோக் குறமோ கமுறா விழுமால்
தகவோ நினடித் தமியாள் விரகே. ௩

சிவமே யெனுமால் செயலற் றடியேன்
எவமே படுகோ ரமணா வெனுமால்
தவமா வழிபட் டவணின் பெயர்கூஉய்
அவமே யழித லறவோய்க் கறனே. ௪

---

† சடையா யெனுமால்—என்னும் தேவாரப் பண்.

சதநீ யெனுமால் சரணீ யெனுமால்
பதநீ ரமணா பரநீ யெனுமால்
சதகோ டிகதிர் சததஞ் சுடர்நல்
இதயா விவளை யெழில்வவ் வினையே. ௫

பன்னா கணியாய் பரமா ரமணா
தென்னா வெனவுன் றிகழ்சீர் மதுரக்
கன்னா முதமாக் கரைவாட் கினமிழ்
தின்னாக் கடுவா வியல்வித் தனையே. ௬

அடியார் திரளோ டகல்வா னவர்தம்
முடிதோய்ந் துதொழும் முளரிக் கழலோய்
துடிபோ லுமிடை ரமணா தொழுகைத்
தொடிசோர்ந் துவிழத் துயராக் கினையே. ௭

படலின் றிபிமை பரிபூ ரணமாம்
கடவுட் கரிவேங் கடகாண் கலையோ
உடலின் னொளிபுற் கெனவொண் கணிராப்
படலின் றியிவள் படுபா டுகளே. ௮

தொழுவாள் விழுமந் துடையா விடின்வல்
எழுவா குவொடென் னியைபோ ரமணா
விழுவா ளழுவாள் வெளிதோற் றுருவைத்
தொழுவா ளயலா ரலர்தூற் றிடவே. ௯

பொறிகட் குருவாய்ப் பொறிவா யிலுறு
அறிவுக் கருவா யவிருஞ் சொருபா
வெறியுற் றவளை ரமணா விழியாற்
குறிவைத் திவணங் கொலுதல் குணமே. ௧௦

திருச்சிற்றம்பலம்

எக. *நற்ரு யேங்கல்

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

அண்ணு மலேரமண னருமைப் பெற்றி
யடிக்கடியெம் போலுமவர் சாற்றக் கேட்டும்
கண்ணுய வென்போல்வார் கழறிச் சொன்ன
கட்டுரையைக் கட்டுரைபோற் கட்டி வைத்தவ்
விண்ணுய மெய்யனுரு வெளியின் ரேற்றம்
விளங்கத்தன் னுள்வெளிக்கே விதும்ப லாகிப்
பெண்ணுய வென்பேதை பிறர்ந கைப்பப்
பிறமருந்திற் பேராத பித்துற் ருளே. க

கருவண்ணு தருளிமனக் கவலே மாற்றிக்
கண்டவர்தங் கருத்தகத்துக் கடுஞ்சாக் காட்டு
வெருவண்ணு மெய்ஞ்ஞான வீட்டு வாழ்க்கை
விளக்கமுற விளேக்குமுயர் வீறு சான்ற
திருவண்ணு மலேவிளக்காய்த் திகழுந் தெய்வத்
திருவளர்வேங் கடரமணன் செம்பொற் பாதம்
பெருவிண்ணு டொருங்குதொழும் பெருமை பேசிப்
பித்தேறித் திரிவாளென் பெண்ண ணங்கே. உ

---

† முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்—என்னும் திருத்தாண்டகப் பண்.

சங்கரவென் னுயிர்த்தலைவ ரமண யானேற்
சாம்போது தரிசனந்தந் தஞ்சே லென்ன
நின்கரமென் னெஞ்சமுற நிகழ்த்தி நின்ற
ணிழற்கணென தாருயிர்தா னீங்கா தென்றும்
தங்குவிப்ப தாவொருசொல் லுறுதி தந்தாற்
றவனியாத் தனித்தேனுங் கழிவே னென்றன்
மங்கலவின் னருள்வாழ்க்கை மனத்த டைத்தாள்
வாய்விட்டுன் னுருவெளிக்கே மறகு வாளே. ௩

இரும்பாக மனம்படைத்த வேதி லாரு
மெரிசேர்ந்த மெழுகாக மனமி ரங்கத்
துரும்பாக வுடன்மெலிந்து தொன்று தொட்ட
தோழமையை மறந்தாயோ ரமணத் தோன்றல்
கரும்பாக முன்னினித்த காத லேனைக்
கடுவாக வின்றுவெறுத் தாயோ வென்றிவ்
வரும்பாவி யீன்றமக ளாவி சோர
வலமந்து தடுமாறி யரற்று வாளே. ௪

திருக்குள்ளா ரெளிதினவர் தெரியக் காணர்
திகைப்பிப்பா ரெனப்பலதன் செவியிற் கேட்டும்
உருக்கொள்ளா நின்றசிவ யோகி தன்மெய்
யுருவெளியின் றேற்றமிரண் டொருகாற் கண்டே
அருட்கண்ணு லவன்வடிவைக் கண்டாள் போல
வகலிடத்தா ராசார முதலே நீத்தாள்
வெருக்கொள்ளாத் தானுயிர்க்கும் விதமுந் தேருள்
விழிக்கின்ற ளென்பேதை விதிதா னென்னே. ௫

நேதியா லெஞ்சியதன் னிட்டை கூடி
நிற்பார்சேர் நிர்க்குணவேங் கடனே யாரோ
தீதிலா னன்றுடையான் சேர்ந்தார் தம்மைச்
சிறப்பிக்குஞ் சீராள னெனலு மாங்கே
சாதியா சாரமெலாந் தணந்து முற்றத்
தஞ்சமா யவனடிக்கே யவன்பேர் சாற்றி
ஏதிலா ரேசிடத்தன் னியல்பு கெட்டிவ்
வேந்திழையே மாந்தழியா நிற்கின் றாளே. ௬

காண்டலுமே கண்டவர்தங் கருத்தை முற்றக்
கவர்ந்துகொள்வான் கருத்திலொரு சிறிது காதல்
பூண்டலுமே பூண்டவர்தம் புந்தி நைந்து
பொற்பழிந்து கற்பழிந்து புலம்பச் செய்வான்
மீண்டவர்தா மொருத்தருமில் விஞ்சை வல்ல
வேங்கடன்று னிசைத்தமொழி விநயத் தாலே
மூண்டெழுபே ராசைகெழு மோகத் தீயான்
முடிகின்று ளிவளுக்கோ ருய்தி யுண்டே. ௭

தெளிசான்ற சித்தமுறத் தெய்வக் காதல்
சிகைசான்று படர்ந்தெரியுந் தேசி னோடு
களிசான்ற கதிர்முகமுங் கழலுங் கண்ணுங்
கடிசான்ற மலர்மார்புங் கண்ட போதே
அளிசான்ற வறவாழ்க்கை நடாத்தி வந்த
வருள்சான்ற வேங்கடனிவ் வடியேன் பெற்ற
ஒளிசான்ற வோவியப்பூம் பாவை தன்னை
யுயிர்த்துலவு வெற்றங்க மாக்கி னானே. ௮

கவலையறப் பேரின்பங் கனிந்து நல்குங்
கண்ணுடைவேங் கடனுகக் கயிலை நீங்கிச்
சிவனுலகத் தெழுந் தருளிச் செங்கோ லோச்சிச்
சிறுத்தொண்டர் தமைப்பெரிதுஞ் சிறக்க ணிக்கும்
பவனிமிகத் தொழுதமடப் பாவை நல்லாள்
பல்லோரும் பரிதவித்து மனம்ப தைப்பத்
தவநியமச் சான்ருர்போற் சருகாய் வாடிச்
சார்பனைத்துங் கடிந்துணர்வுஞ் சாம்பி ஞளே.

அஞ்சவியத் தனிச்செங்கோ லரசு செய்யு
மதிவீரச் சிங்கக்கண் ணேக்கத் தாலே
தஞ்சவயத் தாலடிக்கீழ்த் தவக்கோ லத்தாற்
சார்பனைத்துந் துறந்துமிகத் தனித்து வாழ்ந்தாள்
விஞ்சைவயத் தாலடைந்த வேறு பாட்டின்
மேன்மேலு மிகமெலிவு மேவ லாலே
எஞ்சுவியத் தித்துவமு மிறந்தே போமென்
றியாமஞ்ச வின்னுமுயிர்த் திருக்கின் ருளே. ௧௦

திருச்சிற்றம்பலம்

எ௨. நற்றாய் பரிதல்

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

என்னலா தேதுமிலை யென்கின் றாளா
 லெல்லாமு மென்னுருவே யென்கின் றாளால்
என்னறிவி லேதுமிலை யென்கின் றாளா
 லெல்லாமென் கற்பனையே யென்கின் றாளால்
என்னறிவார் யாருமிலை யென்கின் றாளா
 லென்னறிவார் யானேதா னென்கின் றாளால்
என்னுரைக்கே னேகான்ம ரமண னேற
 வென்சிறுமி முதுக்குறைந்த வியல்பு தானே. க

எவற்றுக்குங் கருவாவேன் யானே யென்னு
 மெக்கருவு மெனக்கில்லேன் யானே யென்னும்
எவற்றுக்கு மொளியாவேன் யானே யென்னு
 மெவ்வொளியு மெனக்கில்லேன் யானே யென்னும்
எவற்றுக்கு மின்பாவேன் யானே யென்னு
 மெவ்வின்பு மெனக்கில்லேன் யானே யென்னும்
எவற்றுளும்வா ழேகசத்தாம் வேங்க டேச
 னேறப்போன் மிவள்வேறா யியங்குற் றாளே. ௨

---

† முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்—என்னும் திருத்தாண்டகப் பண்; கடன்ஞாலஞ் செய்தேனும்—என்னும் திருவாய்மொழியைத் தழுவியது.

கோயிலாந் தேகமுந்தான் யானே யென்னுங்
 கோயில்வாழ் கூடத்தன் யானே யென்னும்
கோயிலா மரண்மனையும் யானே யென்னுங்
 கோயில்வாழ் கோமகனும் யானே யென்னும்
கோயிலா மிவ்வுலகும் யானே யென்னுங்
 குருலிங்க சங்கமமும் யானே யென்னும்
கோயிலா வென்னுளங்கொள் வேங்க டன்மேற்
 கொள்ளப்போன் மிவளிங்ஙன் குலவுற் ருளே.

வாளுக வளர்கின்றேன் யானே யென்னும்
 மண்ணீர்தீக் காலாவேன் யானே யென்னும்
ஊனுக வுருக்கொள்வேன் யானே யென்னு
 முயிருணர்வா யொழுகுறுவேன் யானே யென்னும்
யானுக வியங்குகின்றேன் யானே யென்னு
 மிதயமா யிருந்தொளிர்வேன் யானே யென்னும்
தானுய வேகான்ம ரமணன் சன்ன
 தத்தாற்போன் மிவளிங்ஙன் சாற்று மாறே. ௪

எவற்றோடுங் கலந்துறைவேன் யானே யென்னு
 மெதனேடுங் கலவாதேன் யானே யென்னும்
எவற்றையுமோ கிப்பிப்பேன் யானே யென்னு
 மெதனுலு மோகமுறேன் யானே யென்னும்
எவற்றையுந்தான் வெளிப்படுப்பேன் யானே யென்னு
 மெதனுலும் வெளிப்படேன் யானே யென்னும்
எவற்றுளும்வா ழேகசத்தாம் வேங்க டேச
 னேறப்போன் மிவளிங்ஙனிசைக்குற் ருளே. ௫

வானமாய் வழங்குகின்றேன் யானே யென்னும்
வையமாய்ப் பயக்கின்றேன் யானே யென்னும்
தானமாய்த் தழைக்கின்றேன் யானே யென்னுந்
தன்மமாய்த் தரிக்கின்றேன் யானே யென்னும்
மோனமாய் முழங்குகின்றேன் யானே யென்னு
மோக்கவுரு வாவேனும் யானே யென்னும்
வேனலான் விழவிழித்த வேங்க டேசன்
மேற்கொளப்போன் மிவள்வேறாய் விளம்புற்றாளே.

நாதமாய் நடக்கின்றேன் யானே யென்னு
நவில்விந்து வாவேனும் யானே யென்னும்
வேதமார் பனுவலொடு மெய்ம்மை பேசும்
வேதசிகை யாவேனும் யானே யென்னும்
கேதமார் சகலகே வலங்க ளோடு
கேதமறு சுத்தமுந்தான் யானே யென்னும்
மேதக்க வேகசத்தாம் வேங்க டேசன்
மேற்கொளப்போன் மிவள்வேறாய் மேவுற்றாளே.

புலங்களாய்ப் புலப்படுவேன் யானே யென்னும்
புலப்படாப் புலமாவேன் யானே யென்னும்
அலங்கலா யமர்கின்றேன் யானே யென்னு
மராத்தோற்ற மாவேனும் யானே யென்னும்
மலங்கலாம் பொய்யுயிரும் யானே யென்னு
மலங்கலறு மெய்யுயிரும் யானே யென்னும்
இலங்கலா மேகசத்தாம் வேங்க டன்மே
லேறப்போன் மிவளிவ்வா றிசைக்கு மாறே. அ

ஒருமுகத்தாற் படைக்கின்றேன் யானே யென்னு
மொருமுகத்தா லளிக்கின்றேன் யானே யென்னும்
ஒருமுகத்தாற் றுடைக்கின்றேன் யானே யென்னு
மொருமுகத்தா லொளிக்கின்றேன் யானே யென்னும்
ஒருமுகத்தாற் றெளிக்கின்றேன் யானே யென்னும்
ஒருமுகத்தா லுரவோர்தே றுண்மை ஞான
ஒருமுதலாம் பெருமிதவேங் கடப்பே ராவி
யுளமுறப்போன் மிவள்வேறு யொழுகு மாறே.

பல்சமயக் கடவுளரும் யானே யென்னும்
பார்க்கினவர் சத்திகளும் யானே யென்னும்
பல்சமயச் சித்தர்களும் யானே யென்னும்
பார்க்கினவர் சித்திகளும் யானே யென்னும்
பல்சமய வாதிகளும் யானே யென்னும்
பார்க்கினவர் கொள்கைகளும் யானே யென்னும்
பல்சமய பராங்கதனும் வேங்க டேசன்
படரப்போன் மிவள்பட்ட வேறு பாடே. ௧௦

குருநாத னவேனும் யானே யென்னுங்
குருநாடு சீடனுந்தான் யானே யென்னும்
குருபாத மாவேனும் யானே யென்னுங்
குருபாத சேவையுந்தான் யானே யென்னும்
குருவோது முபதேசம் யானே யென்னுங்
குருவுபதே சப்பொருளும் யானே யென்னும்
குருவாய திருக்கோல வேங்க டன்மேற்
கொளப்போலுங் குருவருளாய்க் குலவுற் றாளே.

எதுவுமே செய்யாதேன் யானே யென்னு
மெனினுமெல் லாஞ்செய்வேன் யானே யென்னும்
எதுவுமே நுகராதேன் யானே யென்னு
மெனினுமெல் லா நுகர்வேன் யானே யென்னும்
எதுவுமே யில்லாதேன் யானே யென்னு
மெனினுமெல் லாமுடையேன் யானே யென்னும்
எதிவரனு மேகான்ம ரமணன் றன்மே
லேறப்போன் மிவளிவ்வா றிசைக்கின் றாளே.

திருச்சிற்றம்பலம்

—:o:—

௭௩. இயற்பழித்தல்

(கலிவிருத்தம்)

† பண்: திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

உண்டி யுண்டுகொ லோவென் றசாவிவந்
தண்டி யிட்டவென் னுசைச் சிறமியை
மிண்டு செய்தவவ் வேங்கட நாதனோர்
கொண்டி யன்றிக் குணாளனு மாகுமே. க

இட்ட மாயுற்ற வின்பலி யிச்சைபோய்க்
கட்டி போன்றவென் கட்டிளங் கன்னியை
நட்டு நின்றவவ் வேங்கட நாதனோர்
பட்டி யன்றிப் பவித்திர னாகுமே. உ

† பெருக லாந்தவம்—என்னும் தேவாரப் பண்.

நகைமு கத்தொடென் னங்கையைக் காமுறீஇத்
தொகைகொள் சொல்லலர் தூற்றிடத் தோகைமார்
மிகைகள் செய்தவவ் வேங்கட நாதன்கா
முகவ னன்றி முனீந்திர னாகுமே. ௩

ஏம்ப லாய்ப்பலி யிட்டவென் னேந்திழைக்
கோம்பு முண்டியு மின்க ணுறக்கமும்
வேம்பு செய்தவவ் வேங்கட நாதனோர்
தீம்ப னன்றிமெய்த் தேசிக னாகுமே. ௪

யாம வேளையி லின்பலிக் கெய்தியென்
காம வல்லியைக் கன்னி யழித்தவவ்
வேய்ம லர்த்தொடை வேங்கட நாதன்மா
காமி யன்றிநிட் காமியு மாகுமே. ௫

பிச்சை பேணிய பெட்பொடு வந்துவந்
திச்சை மால்கொள வேற்றி யிளம்பெணை
விச்சை செய்யுமவ் வேங்கட நாதனோர்
கொச்சை யன்றிக் குருபர னாகுமே. ௬

ஐயம் பேணி யடிக்கடி வந்துவந்
துய்யொ ணாதென தின்னுயிர்ச் செல்வியை
வெய்து செய்யுமவ் வேங்கட நாதனோர்
பைத லன்றிப் பரமனு மாகுமே. ௭

இடுமின் பிச்சையென் றிட்டவென் பேதையைக்
கடிகொள் கங்குலிற் கைகலந் திட்டுநாள்
விடிமுன் னேடுமவ் வேங்கட நாதனோர்
படிற னன்றிப் பகவனு மாகுமே. ௮

இரத்த லுற்ற பலிமறந் தேந்திழை
கரத்து வெள்வளை முற்றுங் கவர்ந்துபோய்
விரத்த னேய்க்குமவ் வேங்கட நாதனோர்
பரத்த னன்றிப் பரத்தனு மாகுமே. ௯

நள்ளி ராப்பலி நாடிவந் திட்டவென்
தெள்வ ளைச்சிறு மங்கையைச் செங்கைசேர்
வெள்வ ளைகவர் வேங்கட நாதனோர்
கள்வ னன்றிக் கடவுளு மாகுமே. ௧௦

திருச்சிற்றம்பலம்

——:o:——

எச. திருவோலக்கப் பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

சூளோ திருவர் துறுமண்விண்
டொட்டும் பறந்து முனதுதிருத்
தாளோ தலையோ தாமொன்றுஞ்
சற்றுங் காணு தழிவாரால்
வேளோ ணுகம் வெண்ணீறு
விழித்த நுதற்கண் வேங்கடநின்
நாளோ லக்கஞ் சேவிக்க
நயக்கின் றுளென் மடமகளே. ௧

† முத்தா முத்தி தரவல்ல—என்னும் தேவாரப் பண்.

பொல்லார் தங்கள் புரமூன்றும்
　　பொடித்த சிறுபுன் மூரலாற்
பல்லோ ராய பரிசனத்துப்
　　பண்ணோர் பரிசு கெடுவாரால்
சொல்லா லொன்றுஞ் சுட்டவொணாத்
　　துரியத் துயில்கூர் வேங்கடநின்
நல்லோ லக்கஞ் சேவிக்க
　　நசையுற் றாளென் மடமகளே. ௨

பாரா யனலாய்ப் பவனனாய்ப்
　　பரிதிக் கதிரா யியமானாய்
நீராய் மதியாய் நீள்விசும்பாய்
　　நிறைந்தாய் நீயே காட்டினன்றி
யாரே யறிவா ருன்னிறைமை
　　யியல்பே யொளிரும் வேங்கடநின்
சீரோ லக்கஞ் சேவிக்கச்
　　சிந்திப் பாளென் மடமகளே. ௩

சூறா வளியாய்த் தொல்லுயிரைச்
　　சுழற்றும் வினையாற் றொடக்குண்டோர்
நூறா யிரநூல் கற்றாலு
　　நுன்னை நுனிக்கக் கடவாரோ
மாறா வொன்றுஞ் சிதாகாய
　　வாய்மைப் பதமாம் வேங்கடநின்
வீறோ லக்கஞ் சேவிக்க
　　விதுப்புற் றாளென் மடமகளே. ௪

குருவோ ரெல்லாந் தமிழ்குழுமிக்
கூகூ வென்று முனதுண்மை
உருவோ வருவோ வுருவருவோ
வொன்று முணரா துளேவாரால்
பொருவோ ரில்லாத் தற்போதப்
பூன்றப் பொருளாம் வேங்கடநின்
திருவோ லக்கஞ் சேவிக்கச்
சிந்திப் பாளென் மடமகளே. ௫

புருகூ தன்போற் புத்தேளிர்
புழுதித் திரள்போ லெண்ணற்றோர்
கருவூ டுழந்த கடுந்துயரங்
கண்டும் வாயில் காப்பாரால்
கருவூ லத்துக் கனவருளேக்
காமுற் றுருகி வேங்கடநின்
திருவோ லக்கஞ் சேவிக்கச்
சிந்திப் பாளென் மடமகளே. ௬

பொழிலோ ரேழும் புலப்படுத்துப்
புரத்த லோடு துடைத்தலுமாம்
தொழிலோர் தாமுந் திருமுன்பு
தோயப் பெறுது தொலேவாரால்
விழியாற் கரும்பொன் செம்பொன்னு
வேதிக் கின்ற வேங்கடநின்
எழிலோ லக்கஞ் சேவிக்க
விச்சிப் பாளென் மடமகளே. ௭

எழுதாக் கிளவி யுபநிடமு
மெனைத்துப் பலபே ரூழிகளாய்
எழுவா யாய விதயாநின்
னியல்கா ணுமை யிரங்குவதா
விழவோ ரன்ன வித்தகமா
மேனிப் பெருமான் வேங்கடநின்
அழகோ லக்கஞ் சேவிக்க
வவாவுற் றுளென் மடமகளே. அ

பணவா ளரவக் கச்சையினுய்
பளிக்குக் குழையாய் படர்சடையாய்
விணவா விண்ணோர்க் கறிவரியாய்
வேத கீதா வேங்கடநீ
தணவா தென்றுந் தழுவுபரா
சத்தி தன்னை யாண்டதிரு
மணவோ லக்கஞ் சேவிக்க
மனங்கொண் டாளென் மடமகளே. கூ

செவ்வே யுன்னைச் சேவிக்கச்
சென்றுள் சீர்மை தொடக்கூவல்
வெவ்வாய்ப் பூதம் வெளிப்பட்ட
விதமா யிற்றே வேங்கடநின்
அவ்வோ லக்கத் தவிசின்மே
லையா நின்னோ டருங்கற்பின்
மவ்வல் சூடி யமர்தற்கே
மயல்கொண் டாளென் மடமகளே. கO

திருச்சிற்றம்பலம்

எரு. செவிலி யிரங்கல்

(கலிவிருத்தம்)

† பண்: திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

*ஆதி சோதி யருமந்த நாயகன்
வேதி யத்திரு வேங்கட வித்தகன்
மாதி மைசெய் தகன்றனன் மாயனென்
றோதி யுள்ள முருகிக் கரையுமே. க

*அரக்கு மெத்தென் றடிக்குற வூட்டினும்
சரக்கெ னுந்தளிர்ச் சாயலை வேங்கடத்
திரக்க மின்றிக்கொண் டேகிய வேங்கடன்
சுரக்கு மின்னருள் சொற்பிர மாணமே. உ

*புக்க விவ்வவ மானம் பொறுக்கலென்
அக்க ரையனை யாண்ட ரமணனை
நக்க னைக்கண்டு நாணிழந் தென்மகள்
சொக்கி யேபின் றொடர்ந்தனள் காண்மினே. ந

*சுத்த ஞான சொரூப ரமணனை
உத்த மப்பக் குவர்க்குரு வாயெதிர்
சித்த னைக்கண்டு சித்தந் திகைத்துப்போய்ப்
பித்தி யாய்ப்பின் றொடர்ந்தனள் பேதையே. ச

---

† பெருக லாந்தவம்—என்னும் தேவாரப் பண்.

குருந்த ஞாளைச் சுரங்கொடு போயினீர்
பொருந்து குற்றம் பொறுத்து ரமணரே
மருந்த ஞாளை மகட்கொடை நேர்கின்றோம்
திருந்த வேட்டுச் சிறத்திர் திருமியே. ௫

நக்க ராகி நயந்து ரமணரே
புக்குப் பிச்சை புலம்பித் திரிவதேன்
தக்க வாறொரு தைய லுதவியாற்
சிக்கெ னக்குடி வாழ்க்கை செலுத்துமே. ௬

திருச்சிற்றம்பலம்

——:O:——

எ௬. ரமண மாயவன்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: புறநீர்மை (பூபாளம்)

திருச்சிற்றம்பலம்

காதலா லென்னைக் கலந்தநீ பின்னர்க்
கணக்கிலாப் பற்பல காலம்
ஏதிலார் போல விப்புறந் திரும்பா
திருந்தனை யவற்றையா னிப்போ
தோதினு லெல்லா முறுகணு வென்ன
வுரைசெய்வா யுன்னிலை யென்போல்
மாதரார் தம்மான் மதித்திடப் படுமோ
மறையுறை ரமணமா யவனே. க

---

† மங்கையர்க் கரசி — என்னும் தேவாரப் பண்.

மையலா லென்னை மணந்தநீ பின்னர்
மதிப்பிலாப் பற்பல காலம்
உய்யலாம் படியா னுவந்துநீ வாரா
தொழிந்தனை யவற்றையா னுன்னி
மெய்யதா வுரைத்தாற் பொய்யதாங் கனவா
விளம்புதி யுன்னிலை யென்போற்
றையலார் தம்மாற் றலைப்படத் தகுமோ
சதுரனே ரமணமா யவனே. ௨

அன்பினு லென்னை யணைந்தநீ பின்ன
ரநேகநா ளடிச்சியை யாசைத்
துன்பவா ரிதிவாய்த் தோயவே விட்டுத்
துறந்தனை யவற்றையா னிப்போ
துன்புடை யுரைத்தா லுறங்கணு வென்ன
வுரைசெய்வா யுன்னிலை யென்போற்
புன்புலத் தவராற் புணர்ந்திடப் படுமோ
போதனே ரமணமா யவனே. ௩

இச்சையா லென்னோ டிசைந்தநீ பின்ன
ரெண்ணரும் பற்பல காலம்
விச்சையா லென்னை விரைந்துகண் மாறி
விலகினை யவற்றையான் விண்டால்
மிச்சையா லுற்ற வெறுங்கனு வென்ன
விளம்புதி யுன்னிலை யென்போற்
கொச்சையார் தம்மாற் குறிக்கவும் படுமோ
குகையுறை ரமணமா யவனே. ௪

உவகையா லென்னே டுற்றநீ பின்ன
　　ருலப்பிலாப் பற்பல காலம்
கவலையா மூரிக் கடலினுள் மூழ்கக்
　　காட்டினை யவற்றையிப் போது
தவறிலா துரைத்தாற் றவறுடைக் கனவாச்
　　சாற்றுதி யுன்னிலை யென்போல்
அவலையார் தம்மா லடைந்திடப் படுமோ
　　வண்ணலே ரமணமா யவனே. ௫

எம்பலா லென்னே டிசைந்தநீ பின்ன
　　ரெண்ணிலாக் காலமிவ் வேழை
தேம்பலா யுள்ளந் தியங்கியே தவிப்பத்
　　தீர்ந்தனை யவற்றையா னிப்போ
தோம்பலா யுரைத்தா லோட்டையாங் கனவென்
　　றோதுவா யுன்னிலை யென்போற்
சோம்பலார் தம்மாற் றேயவும் படுமோ
　　தோன்றலே ரமணமா யவனே. ௬

நேயமோ டென்னை நேர்ந்தநீ பின்னர்
　　நெடும்பல நாளடி யேற்குத்
தோயலார் போலத் துன்பமே காட்டித்
　　துறந்தனை யவற்றையா னிப்போ
தாயவே யுரைத்தா லாயலாக் கனவென்
　　றறைகுதி யுன்னிலை யென்போற்
சாயலார் தம்மாற் சாரவும் படுமோ
　　சதுரனே ரமணமா யவனே. ௭

ஓகையா லென்னோ டுற்றநீ பின்ன
　　ருணர்விலாப் பேதையேன் பலநாள்
சோகவா ரிதிவாய்த் தோயவே நீத்துத்
　　துறந்தனை யவற்றையா னிப்போ
தூகமா யுரைத்தா லூகமில் கனவென்
　　றுரைசெய்வா யுன்னிலை யென்போற்
றோகையார் தம்மாற் றோய்ந்திடப் படுமோ
　　துரியனே ரமணமா யவனே. ௮

ஆவலா யென்னோ டமர்ந்தநீ பின்பல்
　　லாயிரங் காலமா நீங்கி
மேவலார் போல விழுமவா ரிதிவாய்
　　வீட்டினை யவற்றையா னுன்றன்
ஏவலா லுரைத்தா லேய்ந்ததோர் கனவென்
　　றியம்புதி யுன்னிலை யென்போற்
பூவையார் தம்மாற் பொருந்திடப் படுமோ
　　போகியே ரமணமா யவனே. ௯

ஒருமையா யென்னோ டொழிந்தநீ பின்ன
　　ருழுவலன் புருதகா முகர்போற்
றெருவிலே பல்லோர் சிரிப்பவே விட்டுத்
　　திரிந்தனை யவற்றையா னிப்போ
துரிமையா லுரைத்தா லுற்றதோர் கனவென்
　　றுரைசெய்வா யுன்னிலை யென்போல்
அரிவையார் தம்மா லடைந்திடப் படுமோ
　　வண்ணலே ரமணமா யவனே. ௧0

† பண்: நட்டராகம் (பந்துவராளி)

பிலங்காண நின்ற பெரும்பாந்த டாங்குமிப் பேரகிலத்
தலங்காவ லாயிச் சராசரங் காக்குந் தயாபரனே
குலங்காவ லாங்குக வேளே ரமண குருபரனே
புலங்காண வென்னைப் புலப்படுத் தோய்நீ புகலுதியென்
கலங்காத நெஞ்சங் கலங்கத் தலைப்பட்ட காரணமே.

திருச்சிற்றம்பலம்

——:o:——

எஎ. *தலைவி யிரத்தல்

(ஆசிரியவிருத்தக்குறட்டுறை)

‡ பண்: மேகராகக் குறிஞ்சி (நீலாம்புரி)

திருச்சிற்றம்பலம்

தோன்று தொட்டிரண் டற்ற ரமணரே
வென்றி சேர்தரு வேதநீர்
ஒன்று மின்றியு மெல்லா முடையிராய்
நன்று போற்றலென் ஞாயமே. க

மயலா லென்னை மயக்கி யிழைந்தநீர்
அயலார் போல வகன்றனிர்
தயலார் கூடித் தடுப்பினு மூர்மடற்
செயலா லும்மடி சேர்வெனே. உ

† அற்றவ னாரடி—என்னும் தேவாரப் பண்.

‡ நீறு சேர்வதோர் மேனியர்—என்னும் தேவாரப் பண்.

பெண்டிர் தாமட லூரப் பெருரெனக்
கண்டித் திட்ட கடுங்கணர்
பண்டி தன்னை வளர்க்க நும் பாற்பெற்றுக்
கொண்ட தென்னகைக் கூலியே. ௩

அந்த மாற்றமாண் மக்கள தாகலிற்
சொந்த நன்மைதாந் தூக்கலுற்
றெந்த ரத்தினை யந்தர மாக்கலில்
விந்தை யில்லை வியக்கவே. ௪

துன்றி நும்மடி தோய்ந்தவென் னுருயிர்
நின்று நோக்கினீர் நீக்கினீர்
மன்று ளேநட மாடு நும் மானுவார்க்
கன்று நன்றி தறிதிரே. ௫

நல்லம் நாமென வெல்லவ ரானுமே
சொல்லல் பெற்றன மென்னவோ
அல்லல் போற்று தவலையென் னுருயிர்
கொல்ல நீர்துணி கொண்டதே. ௬

நீதி கூறநுந் தம்பி னிவந்தவர்
மேதி னிக்க ணிலரென்றே
தீதி லாரெனச் சேர்ந்து செகுத்தனிர்
பேதை யோமது பெண்மையே. ௭

காயி ரேகணிற் காமனை யேமனைப்
பாயி ரேபதஞ் சற்றுநற்
றாயி ரேயொருங் காருயிர்த் தந்தையாய்
ஆயி ரேயரு ளாற்றுமே. ௮

மாசி லாமணி வண்ண மொளிர்மிடற்
றேசி லாரம ணேசரே
ஆசி லாவடி யோங்கள்பா லற்பமும்
கூசி டாதருள் கூர்திரே. ௯

பாச மோடத்தன் பார்வையிற் பாற்றுவி
மோச ரேயெங்க ணேசரே
ஈச ரேமிக் கிருந்தொளிர் சின்மயத்
தேச ரேயருள் செய்யுமே. ௧0

திருச்சிற்றம்பலம்

—:o:—

௭அ. வண்டுவிடு தூது

(ஆசிரியவிருத்தம்)

† பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

காமங் கதுவிக் கைகடந்தேன்
கங்குற் போழ்திற் கலந்ததுதான்
ஊமன் கண்ட கனவாகி
யுள்ளே யுயங்கி யுலேகின்றேன்
ஆமை போல வைந்தடக்கு
மடல்வேங் கடனே யடிச்சியேன்
மாமை கவர்ந்த மாயோனே
யழைத்து வாரும் வண்டேரே. ௧

† முத்தா முத்தி தரவல்ல—என்னும் தேவாரப் பண்.

கண்ணின் கயிற்று லகப்படுத்தான்
கடிமார் பகலந் தோய்வெண்ணித்
தண்ணஞ் சாந்தந் தழலாகித்
தளிர்ப்பா யற்கட் சாகின்றேன்
எண்ணங் கலந்தென் னுள்ளிருந்த
விறைவேங் கடனை யடிச்சியேன்
வண்ணங் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௨

தேனும் பாலுந் தித்திக்குந்
தேவா முதமுங் கயக்குமிதழ்ப்
பானஞ் செய்த பாக்கியத்தேன்
விழித்துப் பார்த்துப் பதைக்கின்றேன்
மோனந் தோய்ந்த முழுமூல
முதல்வேங் கடனை யடிச்சியேன்
மானங் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௩

நீவிப் பின்னி நென்னலிரா
நேயன் புனைந்த குழற்செய்கை
பாவிப் பேதை விழித்ததூஉம்
பாரேன் பதறிப் பதைக்கின்றேன்
ஓவி யம்மென் றுலகுயிரை
யுணர்வேங் கடனை யடிச்சியேன்
ஆவி கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௪

காணந் தூசோ டருங்கலங்கள்
காலிற் கலத்திற் கொணர்தருவான்
சேணங் ககன்று நெடுநாளாத்
திரும்பக் காணேன் செயலறியேன்
தூணங் கடுப்பத் தோள்வலிசேர்
துரைவேங் கடனை யடிச்சியேன்
ஆணங் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௫

பொதியை யுடைக்கு மினன்போலென்
புந்திப் பூட்டை யுடைத்தெறிந்து
சதிசெய் தகன்ற கண்ணாளன்
சமயங் கருதித் தவிக்கின்றேன்
சுதியின் முடிமேற் றுயில்வதியுந்
துரைவேங் கடனை யடிச்சியேன்
மதியைக் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௬

குறிவைத் தென்னைக் குற்றுயிராக்
கொன்று கழிந்த கொடியோன்றன்
மறிவைப் பார்த்து மதிகெட்டு
மாழாந் தேங்கி மடிகின்றேன்
கிறிவைத் துள்ளாற் கீழறுக்குங்
கெடிவேங் கடனை யடிச்சியேன்
அறிவைக் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௭

ஆனை யுண்ட விளங்கனியா
வன்றென் னுயிரை யுட்கொண்டான்
பூனை போல்வான் புலிபோல்வான்
புடைபோ மனத்தாற் புலம்புறுவேன்
ஊனை யுருக்கி யுளமுருக்கு
முரைவேங் கடனை யடிச்சியேன்
தானை கவர்ந்த மாயோனை
யழைத்துத் தாரும் வண்டீரே. ௮

ஆளையுண் டுகந்த வாயன்போ
லடியே னகத்தைக் குழைவித்துக்
கொளைகொண் டொழிந்தான் கொல்லாதே
கொல்லுங் குறிமேற் கோளாளன்
தளைகண் பரிய வாள்விழியாற்
றகர்வேங் கடனை யடியேன்கை
வளைகள் கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௯

துன்ப மெனக்கு மீதூரத்
துறந்தான் கண்டீர் முத்திமகள்
இன்ப நுகர்ந்து கிடக்கின்றான்
யானிங் கிருந்து புலம்புறுவேன்
என்பின் புரைதோ றமுதேற்று
மிறைவேங் கடனை யடிச்சியேன்
அன்பு கவர்ந்த மாயோனை
யழைத்து வாரும் வண்டீரே. ௧௦

திருச்சிற்றம்பலம்

எசு. வண்டுதரு மாற்றம்

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

பண்டுபல நாளாப் பகிரதன்போற் பாடுபட்டுத்
தொண்டுளுற்றுந் தூயோருந் தோய்ந்தறியார்—பெண்டகாய்
வண்டுருப் பூமேல் வதிகின்றான் யாமவனைக்
கண்டழைத்த லெங்ஙன் கழறு. க

இன்பா யிருந்த நிலையினின் றேமாந்து
துன்பா லெறிபட்டுத் தூதுரையும்—அன்பே
சொலிக்கும் பிடுவாய்நீ சொல்லறநில் வாளா
சலிக்கு மனத்தைத் தடுத்து. உ

தன்னிலையை விட்டுத் தடுமாறிச் சாற்றுபல
இன்னுரைகள் சொல்லி யிறைஞ்சுகின்றாய்—பொன்னே
திருந்து முபாயந் தெரியுங்காற் சும்மா
இருந்த படிக்கே யிரு. ௩

அகத்தே யுளனுப் புறமெங்குந் தூது
மிகப்பே துறவால் விடுப்பாய்—சகப்பேதாய்
ஐயுணர்வாற் சற்று மலமரா தன்னகத்து
மெய்யுணர்வாற் போகம் விதும்பு. ச

மீதன்பி னூற்றிரு வேங்கட நாதன்மாட்
டோதற்கா வெம்மைநீ யுய்த்திடுவாய்—மாதராய்
காதன்மிக் காற்கைக் கனியும் மறைபொருளாய்ப்
போதல்கண் ணஞ்சனத்தைப் போன்ம். ரு

ஆயன் பிடர்மறியை யாயாதவ் வூர்முழுதும்
போய கதையின் புணர்ப்பாமே—சாயலாய்
நின்னகத்தே யுள்ளநின் னேயனை நீ கண்டுமிகத்
துன்னுதற்கெந் தம்மைவிடுந் தூது. சு

தூங்குங்கா லுண்மகிழத் தோய்வானைத் தோய்வானீ
ஏங்குவதென் னோவெளிவந் தெண்ணியெண்ணி-வேங்கனியே
மோக்கத்தி னூங்கு முடிவில்லை யாங்கிலையுள்
ஊக்கத்தி னூங்கு முயல். எ

நெஞ்சினு ராயநின் னேயர்க்கா வெய்துண்டல்
அஞ்சினுய் நீயே னலமந்தாய்—வஞ்சிநீ
நெஞ்சுள்ளே நின்றொளிரந் நின்மலரைத் தோய்ந்துநின்
றஞ்சுவரு துன்ப மகற்று. அ

அளியே யுருவா யகமுறைபெம் மானை
வெளியேவிட் டெம்மை விடுப்பாய்—எளியாய்
முகக்கண்ணாற் காண முயலாது மெய்ம்மை
அகக்கண்ணாற் காண்ட லறிவு. கூ

அகவிழியாற் காண்ட லவாவுதியே லந்த
அகவிழியே தானு வமைவாய்—அகமே
பெருங்கண்ணைப் பெற்றுயேற் பெம்மான்பே ரின்பம்
ஒருங்குண்ண லாகு முவந்து. ௧0

திருச்சிற்றம்பலம்

அ௦. அமுதானுபவம்

(கலிவிருத்தம்)

† பண்: திருக்குறுந்தொகை (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

வெங்க னல்விழி வேங்கட ரேயுடற்
றங்கு மாவிச்சந் தாபந் தணிக்குறும்
துங்க நோக்கத்துத் தோய்ந்த குளிர்ச்சியை
எங்குக் கொள்ளைகொண் டீரெம் பிரானிரே. க

*அயர்தி யற்ற வறிவா லணைதொறும்
உயிர்த ளிர்ப்ப வுவகை தழைத்தலால்
அயர்வ கற்று மமிழ்தி னியன்றதாம்
உயர்தி ருத்தக்க தேவர் சொரூபமே. உ

*ஏந்த லாய ரமண னெழில்வடி
வாய்ந்த நெஞ்ச மயல்விட யங்களிற்
பாய்ந்தி டாவமு தாநு பவத்தியல்
ஏய்ந்து ளார்க்கு மிசைத்தற் கியல்வதே. ௩

திருச்சிற்றம்பலம்

† பேருக லாந்தவம்—என்னும் தேவாரப் பண்.

அக. ஆனந்த மாலை

(ஆசிரியவிருத்தம்)

† பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

நலியா நின்றே னல்லுயிர்தீ
நஞ்சுண் டாற்போ லுயங்கிப்போய்
மெலியா நின்றேன் வேங்கடவா
வீத சோகா நின்னடியார்
சலியா தென்றுந் தவஞ்செய்யக்
கண்டு மவஞ்செய் சதிகாரக்
கலியே னுன்றன் சிவானந்தக்
கடல்வா யென்றோ கலப்பதுவே. சு

நல்லா ரெல்லா நின்னருளான்
ஞான னந்தந் துய்ப்பாரா
நில்லா தவற்றை நிலையினவா
நெஞ்சா னினைந்து வேங்கடவா
கல்லாப் பொல்லேன் மோகாந்த
காரக் கடல்வாய்க் கலங்கினேன்
அல்லாப் பொழிந்துன் சிவா நுபவ
மடையும் படிநீ யருள்வாயே. உ

---

† முத்தா முத்தி தாவல்ல—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் ஆனந்த மாலையைத் தழுவியது.

பிடியா நின்றார் வெம்பிறவிப்
பீழை முற்றும் பிரிந்தோடக்
கடியா நின்ற கதிரொளிசேர்
கழல்வேங் கடவா கண்ணேடிக்
குடியோ டென்னைக் குறிக்கொண்டாய்
குணுங்கர் நாயாக் குலைவேனே
முடியா முதலா முழுமோன
வெளியா யொழிய முன்னுதியே. ௩

புரசை யானை போன்மதத்தாற்
பொங்கி யெழுந்த புலைநாயேன்
குரிசி லுடையாய் வேங்கடநின்
கோல விழியாற் குணங்கெட்டேன்
வரிசை கெட்டேன் வதங்கெட்டேன்
மதியுங் கெட்டே னடியோடும்
கிரிசை கெட்டுன் கிளரடிக்கீழ்க்
கிடப்ப தென்றோ கிட்டுவதே. ௪

தூண்டா விளக்கே சுயஞ்சோதித்
துரியச் சுடரே சுரும்புசுதிப்
பாண்டா மிழற்றும் பதரமணு
பாசத் தளையைப் பிறரெல்லாம்
கீண்டா ரெறிந்து நின்னருளாற்
கிடைத்தா ராக முத்திப்பே
றுண்டா யடியே னறவழுங்க
லடிகே ளருளுக் கழகாமே. ௫

உருவன் றருவன் றுருவருவன்
றுளதன் றிலதன் றுளதிலதன்
றிருளன் றொளியன் றிருளொளியன்
றெனநின் றொளிரும் வேங்கடவா
தெருளின் னுருவாந் திருவிழியா
லடியேன் சிந்தைத் தெருமரன்மாய்த்
தருளின் னமுத வார்கலிவா
யாடித் திளைக்க வருளுதியே. ௬

யானே யானே யிறையென்று
றிறுமாப் பழிய வேகவிறை
தானென் றெழுந்த சயஞ்சோதித்
தம்ப வுருவாம் வேங்கடவா
யானென் றேதோ வெழுந்ததனா
லன்றோ வெளியேன் படும்பாடவ்
யானென் றதுநின் னிணையடிவா
யிறந்தே போக விரங்குதியே. ௭

பள்ளங் கருதும் பைம்புனல்போற்
பரியுந் தெய்வப் பரங்கருணை
வெள்ளந் தீனர் மேற்பாயும்
விழியின் கடைசேர் வேங்கடவா
உள்ளன் பில்லா துடையேன்போ
லுண்மை யடியா ரொடுங்கூடிக்
கள்ளம் புரிந்துன் கழல்புகநான்
காதல் கூர்ந்தேன் கடையேனே. ௮

நீளத் தொடர்ந்த வல்வினையி
　　னிகளத் தளையை மன்னுயிர்ப்பால்
மீளத் தொடரா விதமறுக்கும்
　　விழிவாள் வீர வேங்கடவா
ஆளப் பெற்ற வடிநாயே
　　னவலக் கடல்வீழ்ந் தயலார்போல்
மாளப் பெற்றுன் மாணடிக்கு
　　வள்ளா லஃதோர் வசையன்றே. ௯

மூரன் முளரி யாற்புரங்கண்
　　முற்றக் கரைத்து மூவுலகும்
வீரங் கொண்ட வேளாகம்
　　விழியாற் கரைத்த வேங்கடவா
வாரங் கொண்டுன் வார்கழல்வாய்
　　மனத்தை வைத்த யானுங்கர்ப்
பூரந் தன்னைப் பொங்கெரியாப்
　　பொன்றக் கரைப்பாய் புண்ணியனே. ௧௰

திருச்சிற்றம்பலம்

அஉ. திருப்புலம்பல்

(கோச்சகக்கலிப்பா)

† பண்: பழந்தக்கராகம் (ஆரபி)

திருச்சிற்றம்பலம்

ஆண்டானே முப்புரிநூ லணியாகப் பொங்கரவம்
பூண்டானே யடியேன்புன் புலச்சேற்றிற் புக்கழுந்தி
வீண்டானே கெட்டொழிந்தேன் வெறிகொண்டு வேங்கடவா
வேண்டாமை யல்லானுன் வேறொன்றும் வேண்டேனே. க

கஞ்சத்தான் முதலோருங் காணுதாய் கடலெழுந்த
நஞ்சத்தா னல்லமுதஞ் செய்தவேங் கடநாதா
நெஞ்சத்தா லுன்னடியே நினையாது நினைந்திருக்கும்
தஞ்சத்தார் தாமரைப்பூந் தாளிணையென் றலைக்கணியே. உ

கறிதின்று கள்ளுண்ட கடுவன்போற் கலங்கிப்போய்
அறிகொன்று தானேயு மறியாதே கெட்டொழிந்தேன்
வெறிகொன்று மெய்ம்மைநிலை வெளிப்படுத்த வேங்கடநின்
குறியன்றி யென்குறிப்பிற் குறியொன்றுங் குறியேனே. ந

வெள்ளிலாய் மோகமத வேழத்தா லுணப்பட்டேற்
குள்ளவா றுண்மைநிலை யுணர்வித்த வேங்கடவா
துள்ளுமா மனமறிநின் றுணையடிக்குப் பலிகொடுத்தேன்
கள்ளமா முலகியலைக் கனவினுநான் கருதேனே. ச

---

† சோன்மாலை பயில்கின்ற — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்புலம்பலைத் தழுவியது.

களிற்றுமதச் செருக்கனேன் கடும்பென்னுங் காலாழ்பே
ரளற்றிலகப் பட்டந்தோ வவாநரியா லடைப்பட்டேன்
வெளிற்றுமனத் தெனையாண்ட வேங்கடவா பேழ்வாயாற்
பிளிற்றுமுழக் குன்செவிக்கே பேர்ந்திலதோ பெம்மானே.

களங்கனியாய்க் கறுத்தமனக் கடையேனைக் கனிந்தபத
விளங்கனியா யுண்டமத வேழமாம் வேங்கடவா
பளிங்கனைய சுயஞ்சோதிப் பருப்பதநின் றிருப்பதத்து
வளங்கெழுமோர் வண்டாக வளர்த்தியெனை யுடையானே.

பொன்மலையும் யான்வேண்டேன் போகாதி யான்வேண்டேன்
தன்மமொடு பல்குப்பைச் சாத்திரமும் யான்வேண்டேன்
கன்மமலக் கட்டறுத்துக் கதிகாட்டும் வேங்கடவா
நின்மதிக்கா நின்னடிக்கீழ் நெஞ்சழிந்து நிற்பேனே. ௭

ஏன்றகூர் வாள்விழியா லிதயத்திற் கொண்டுய்த்துப்
பூன்றமா மோனநிலை போதித்த வேங்கடவா
ஆன்றவான் மாவா யவிர்வதலா லன்னியமாத்
தோன்றலா மெய்த்துணைநின் றுணையல்லாற் றேற்றேனே.

அனல்கண்ட வாள்விழியா லந்தனேன் றன்னகத்துப்
பினல்கண்ட கடும்பாசப் பிணக்கறுத்த வேங்கடவா
புனல்கண்ட செழுஞ்சடைநின் பூங்கமலப் பொன்னடிக்கே
கனல்கண்ட விழுதாகக் கசிந்துருக வேண்டுவனே. ௯

களவுறுமைம் மாயையிடைக் கண்கலுழா வண்ணமெனக்
களவறுமெய் விழியளித்த வருட்சோதி வேங்கடவா
உளமுவந்து நல்குதிநீ யுடையாயெற் குதவியவப்
பளகறுமெய் யறிவுகொடும் பாடறியாப் படிதானே. ௰

திருச்சிற்றம்பலம்

அரு. * அருணை ரமணேசன்

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

மருளுறுமன் னுயிர்த்தொகைதம் மாயை மாற்று
மந்திரமு மணியுமரு மருந்து மாமே
பொருளுறுமெய்ஞ் ஞானநு பூதி பொங்கிப்
பொலியுமுளப் புண்டரிக புரத்த னாமே
இருளுறுமஞ் ஞானத்தோ டேய்ந்த வாழ்க்கை
யிடர்கெடவண் சுடர்விடுகண் ணிறைவ னாமே
அருளடியென் றலைமேல்வைத் தாண்ட பெம்மா
னவனாகி லருணைரம ணேச னாமே. க

வெங்கணார் முப்புரமோர் விநாடிக் குள்ளே
வெறுநகையா லெரித்தவதி வீர னாமே
பைங்கணு கத்தையிளம் பாவை யார்முற்
பரிந்தாட்டிப் பலியேற்கும் பிடார னாமே
செங்கணா னன்முகனுந் தேடிக் காணாச்
செழுஞ்சுடர்த்தூ ணாவெழுந்த சிவன்று னாமே
அங்கணா லென்னையடிக் காண்ட பெம்மா
னவனாகி லருணைரம ணேச னாமே. உ

---

† சந்திரனை மாகங்கை—என்னும் திருத்தாண்டகப் பண்.

வன்பாலே கல்லெறியால் வழிபட் டார்க்கும்
மனப்பான்மை குறித்தருள்செய் வள்ள லாமே
என்பாலே பூம்பாவை யாக்க லாதி
யிருத்திபல வன்பரைக்கொண் டியற்று மாமே
துன்பாலே சுடச்சுடநோற் கிற்பா ருள்ளே
சுடச்சுடர்பொன் போலொளிர்சிற் சொரூப னாமே
அன்பாலே மகிழ்ந்தென்னை யாண்ட பெம்மா
னவனுகி லருணைரம ணேச னாமே. ௩

உரிமைபா ராட்டியுல கேழுந் தானே
யொருமொழியா லொருகுடைக்கீ ழுடைய னாமே
பெருமைபா ராட்டியரி பிரமர் தாமும்
பெய்கழற்றம் முடிக்கணியும் பெரும னாமே
இருமைபா ராட்டித்தன் னிடத்தி னீங்கா
திழுத்தொருதன் மயப்படுத்து மிறைவ னாமே
அருமைபா ராட்டியெனை யாண்ட பெம்மா
னவனுகி லருணைரம ணேச னாமே. ௪

தஞ்சமெனத் தாள்சேர்ந்தார் பார மெல்லாந்
தன்றலைமேற் றலைவிதியாத் தாங்கு மாமே
சஞ்சலமற் றேங்குமுப சாந்த வாழ்க்கை
தற்சார்ந்தார் தமக்கியல்பிற் சமையு மாமே
நஞ்சுகுடித் தாலுங்கைந் நாகக் கோட்டு
நாப்பணகப் பட்டாலு நவையின் றாமே
அஞ்சலெனச் சொல்லியெனை யாண்ட பெம்மா
னவனுகி லருணைரம ணேச னாமே. ௫

வலக்கணுற வண்டமிழு மிடக்கண் ணாக
மாண்புசா லாரியமு மகிழ்வ னாமே
புலக்கணுற வற்றதுற வோர்தெ ளிந்த
புந்திக்குட் சந்திக்கும் போத னாமே
மலர்க்கணற வொழுகலென வருள்ப ழுத்து
வழியுமலர்க் கண்ணுடைய வள்ள லாமே
அலக்கணற வடியேனை யாண்ட பெம்மா
னவனாகி லருணைரம ணேச னாமே. ௬

சென்னியா லுறவணங்கிச் சேர்வார்க் கீடில்
செல்வமாஞ் சீர்ப்பாதச் செம்ம லாமே
முன்னியா ராய்ந்திடின்யா னென்னும் பேரே
முதன்மூல வியற்பெயரா முயங்கு மாமே
தன்னையா ரொருவருமொப் பாவா ரில்லாத்
தனிமுதலாந் தான்றோன்றி யீச னாமே
அன்னையா யென்னையினி தாண்ட பெம்மா
னவனாகி லருணைரம ணேச னாமே. ௭

சொப்பனமா யெதிர்ப்பட்டுத் தோற்றும் பொல்லாச்
சூதிலகப் பட்டடியர் சுழலா வாறு
கற்பனையா மாயையறக் கடியுந் தெய்வக்
கதிர்முகமுன் வெயின்முறுகக் கழலு மற்பப்
புற்பனியோ ரன்னவிதம் பற்று விட்டுப்
புலம்புறவென் பழவினையைப் போக்கிப் பொற்றாட்
கற்பனையோர் பொருளாக்கி யாண்ட பெம்மா
னவனாகி லருணைரம ணேச னாமே. ௮

மதனகம் பொடியாக மாநி லத்தின்
மடிந்துவிழத் தீவிழித்த மன்ன னமே
சுதனகக் களிற்றுமுகத் தோன்ற லோடு
சுடர்விடுசுப் பிரமணியு முடைய னமே
கதநாகங் கயிறுகக் கடைய லுற்ற
கடல்வருநஞ் சமுதாகக் காத லித்த
அதனலென் றனையுமுவந் தாண்ட பெம்மா
னவனகி லருணைரம ணேச னமே. ௯

செழுங்காதல் சேர்ந்தமனச் செந்நெ றிக்கே
சிறுரையடித் தக்காரந் தீற்று மாபோல்
முழங்கோத வெம்பிறவி முந்நீ ருள்ளே
மோகத்தான் மூழ்கியதன் முத்தா பத்தாற்
புழுங்காது சிவஞான போத மூட்டிப்
பொன்னடிக்கீ ழென்ஞான்றும் பொருந்தி வாழ
அழுங்காது நாயேனை யாண்ட பெம்மா
னவனகி லருணைரம ணேச னமே. ௧௦

திருச்சிற்றம்பலம்

அச. *ரமண வைபவம்

(இசைப்பாட்டு)

† யாழ்மூரிப் பண் (அடாணா)

திருச்சிற்றம்பலம்

தாயவர் தந்தையவர் பெருந் தக்கவர் மிக்கவர்
சரா சர சக லமுந் தருமொரு கருவர்
சேயவர் செல்வமவர் செழுங் கல்வியர் கேள்வியர்
தினங் கனஞ் சடை யுருத் திரமுரை மறையோர்
வாயவர் வாழ்த்துமவர் மனக் கண்ணவர் விண்ணவர்
மனத் தொடு நினைத் தவர் மனமணி யொளியாய்
மேயவர் வேங்கடவர் மிகு மெய்த்தவர் வித்தகர்
வியன் பெரும் பயன் றருந் தயவுறு நயவரே. க

விஞ்சிய வத்துவித வநு பூதியர் மேதையர்
வெளி மயத் தெளி வுணர் வொளிர்தரு முளவர்
எஞ்சிய மெய்ப்பொருளா ரெமக் கெய்ப்பினில் வைப்பினர்
இறை யவர் குறை யில ரிசைகெழு ரமணர்
அஞ்சிய வாருயிர்கட் கப யந்தரு சுந்தரர்
அறி வரு பெரு மைய ரழிவறு மமுதர்
கொஞ்சிய மென்மொழியாள் வளர் கூறொடு யாறுடைக்
குளிர் சடைக் கட வுளர் குவலய வரதரே. உ

---

† மாதர் மடப்பிடியும்—என்னும் தேவாரப் பண்.

கண்ணுறு வார்மலக்கங் கடி யொண்கதிர்க் கண்ணுதல்
கடல் கடை கடு விடக் கறைமிட றுடையார்
பெண்ணுமை யஞ்சமலை பெயர்த் திட்டவ ரக்கனைப்
பிழை யுணர் வுற வடர்த் தருள்புரி பெரியார்
தண்ணுமை யின்னருவி தழங் கும்மொலி விம்மலிற்
றட பட தட பட தடபட வெனவே
எண்ணுறு வார்பழவல் வினை யேங்குறப் பாங்குற
எதிர் குதிர் முழை யழை யிசைமலை ரமணரே.

தாமரை வைகுபொய்கை மலர்ந் தானிகர் மேனியர்
சது மறை யுப நிடப் பொருடரு மொழியர்
பூமரு வுந்திருமார் புண ரெண்புயர் பண்புயர்
புனை கழல் கழு மவர் புனைமுடி யெனலாம்
நீர்மரு வுஞ்சடைவே ணியர் நேரியர் சீரியர்
நிதி கதி நினை பவர்க் கினிதரு ணிமலர்
பார்மரு வுந்திருவேங் கடப் பண்ணவர் புண்ணியப்
பரி சனர் புரி வன பரசிவப் பணிகளே. ௪

அன்னிய நாட்டமறப் பர மான்மநாட் டம்முறும்
அதி சய மதி சய மடைவதி சுலபம்
நின்னியல் பென்னியல்பென் றுளிர் சின்மயத் தன்மயர்
நினை பவ ரநு பவ நிசரத சொருபர்
இன்னிசை யாழ்முரிப்பண் ணிலயத்தொடி சைக்கெனும்
ரம ணிய பத சுகர் தொழுதெழு கழலர்
மன்னிய மாண்புதரு சிவ மாதவ ராதவர்
மலர் முக தரி சன மகிழ்வொடு புரிநரே. ௫

பொத்தக ஞானமொரு பொருளென்றென நன்றுணர்
புல வரே நில வரை யருள்பெற வுரியர்
எத்தக நின்றிடுமெய்ப் பொருளத்தக நிற்பவர்
இத யமுற் றில கறி வெனுமெழி லுருவர்
வித்தக முத்திதரு பர வேங்கடர் தீங்கடர்
வெடிக் குரல் விடைக் கொடியிறைவர்வெல் கழல்வாய்ச்
செத்தக மாய்ந்தறவே மனச் சேட்டைந சித்தவர்
சிவ மயச் சிதம் பர ரகசிய மறிவரே. ௬

மங்கல நல்லடியார் மனம் மல்கவ ழுங்கவே
வர வொடு செல வுமில் வளமிக வுடையார்
பைங்கம லத்துறைபார்ப் பன வாதியைக் காதிய
படு தலை யிடு பலி பரிவொடு மிசைவார்
பிங்கல வண்ணரருள் பெறிற் பேதையர் மேதையர்
பிதிர் மதிக் கதிர் நதி பொதுளிய சடையார்
எங்களை யாண்டினிதே யெமக் கின்னருள் பண்ணிய
எதி வரர் துதி குரு பரசிவ ரமணரே. ௭

ஆங்கட னின்னதெனத் தம தாருயிர் வாழ்வகை
அடி வழி படு தொழி லயர்வறு மடியார்
ஊன்கட வும்மயல்சே ருணர் வோய்ந்திட வோர்மொழி
உரை செய வவ ருணர் வுடனக முகமாய்
யான்கெட வேனையிரண் டிட முங்கெட வெஞ்சிய
இயல் பெறு சிவ கதி யுயலுற வடைவார்
வேங்கட நாதரெனை மிக வாளுடை வித்தகர்
விதி மதி யது முத லிருள்கடி வினையரே. ௮

சீர்வளர் தேசுமிகத் திகழ் தேசிகச் செம்மலார்
சில பல கலை சொலி யிலகுசந் நிதியார்
நீர்வளர் கங்கைசடை நிகழ் வித்தவர் மெய்த்தவர்
நிசி யொடு பக லறு நெடுநில விறைவர்
பார்வளர் செல்வமும்விண் பரி பாலகர் செல்வமும்
பலி கொளு மவ ரடி யவர்கொள நினையார்
ஊர்வள முற்றெளிர்தன் னுளம் மீக்குயர் பாக்கியர்
உணர் பவர் நுகர் சுக ரமணிய சொருபரே. ௯

ஒன்பது வாயிலுட லுழை யுற்றதொ ராருயிர்
பொளற் குடப் புனலென வொழுகுறு முனமே
மன்பது வுய்யவழி யுரை சீர்த்திய மூர்த்தியாய்
மகி தல மவ தரி மறைமுதற் பொருளோன்
இன்பதுன் பங்களிலா விறை யெம்பிரான் றம்பிரான்
எழு மையு மடி யவர்க் கினிதுசெய் ரமணன்
தன்பது மக்கழலே சரண் மிக்கது வாமெனத்
தவ முயல் சிவ மயத் தலைவரெந் தலைவரே. ௧0

திருச்சிற்றம்பலம்

அ௲. *ரமண லீலை

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

நலியாதே யென்னுயிரை நன்று காக்கு
    ஞானதிவா கரரமண நாதர் வேத
ஒலியாலே யுடுக்கடிப்போ ராகி மோக
    வூத்தையகங் காரமய லோட்டி நாட்டிற்
பலியாலே யிரந்துண்டு கரந்த வேடப்
    பரமனூர் கீளொடுகோ வணமே தற்றுச்
சலியாதே யிங்குமங்குந் தாணு சோண
    சயிலமே புக்கிடமாத் தரித்தார் தாமே. க

உத்தார மொன்றுரையார் கேட்ட கேள்விக்
    குழுவலொடு மௌனயாண்ட ரமண நாதர்
முத்தார மென்றணிந்தோர் மூர்க்கப் பாம்பை
    முத்திதரு வார்போலே முன்ன ணைந்தார்
வித்தார மின்றிவெறு மெய்யே காட்டி
    மின்னார்பால் வேட்கைமயல் விளைத்துத் தாமோர்
தத்தாரி போற்சரித்துத் தாணு சோண
    சயிலமே புக்கிடமாத் தரித்தார் தாமே. உ

---

† அலையார் புனற்கங்கை—என்னும் திருத்தாண்டகப் பண்.

பருதியொளி வண்ணமுடை ஞானத் தோன்றல்
பார்ப்பாரைப் பரிசழிக்கும் பார்வை யாளர்
சுருதிகளைப் பதர்களெனத் தூற்றி மெய்தத்
துவமசியென் றொருமொழிமுன் சொலாது சொல்லி
விருதுரைத்தென் னுருவகத்தை விளியச் செற்று
மிஞ்சியதன் சொருபமொன்றே விளங்கக் காட்டிச்
சரிதைபல தாமுடையார் தாணு சோண
சயிலமே புக்கிடமாத் தரித்தார் தாமே. ௩

திருச்சிற்றம்பலம்

———:o:———

அ௬. சோணைத் திருப்பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பஞ்சமம் (ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

உச்சமாந் தவிசை யூத்தைநாய்க் கிட்டா
லொப்பவுன் றுடலைக் குதவி
அச்சமா யடைந்த வடிக்கடை யேனை
யஞ்சலென் றுண்டவேங் கடவா
சொச்சமாந் துரிய சுகப்பெருங் கடலே
சோணைவாய்ச் சுடர்கொழுஞ் சுடரே
பொச்சமா மிகுகர்ப் பூரமோ டப்பாப்
புசித்தெனைப் பொன்றுவித் தருளே. ௧

---

† உயர்கோடி யாடை—என்னும் திருவிசைப்பாப் பண்; இப் பதிகம் அந்தாதியாய்த் திருவாசகம் கோயிற் றிருப்பதிகத்தைத் தழுவியது.

அருட்செயல் பூண்ட வங்கணு வதுல
வந்தண்வேங் கடவனே யரவச்
சுருட்பொலங் குழையெண் டோளிடை யலம்பச்
சோணவாய்ச் சுடர்கொழுஞ் சோதீ
பொருட்குறை நிரப்பும் பூட்கையே பூண்ட
புலையனென் றெனைப்புறம் போக்கா
திருட்குலங் கீண்டென் னிதயமூ டெழுந்தா
யினியுன்னை யென்னிரக் கேனே. உ

இரந்தபி னீகை யிளிவர லாமென்
றெண்ணுமு னடியவர்க் கிரங்கிச்
சுரந்தருள் பொழியுந் தொழிற்றுறை வல்லோய்
சோணவாய்ச் சுடர்சுயஞ் சுடரே
கரந்துசெல் லாமைக் காதலார் கருத்திற்
கலந்தொளிர் கள்வவேங் கடவா
நிரந்தரந் தாளே நினைந்துநைந் துருகு
நெஞ்சமே யருளுதி நீயே. ௩

நீதனே பிறவோ டியானுமா நிறைந்து
நின்றுமெற் கிதுவரை காணுச்
சூதனே நின்போற் சூதர்நான் காணேன்
சோணவாய்ச் சுடர்சுயஞ் சோதீ
ஆதனே னுனைநீ யெளியையாய் வெளிப்பட்
டருளலா லறிந்ததை யன்றி
வேதனே முதலோர் வீறுகெட் டனரேல்
வேறியா ரறியகிற் பாரே. ச

பார்தருந் தவத்தின் பயனெலாந் திரண்டு
படைத்ததோர் படிவவேங் கடவா
வூர்தரும் பிறவிக் கொடுந்துயர்க் குட்கி
யுற்றவ ருளங்குலை வுற்றச்
சோர்தருங் காலச் சோர்வுதீர்த் தருள்வோய்
சோணைவாய்ச் சுடர்செழுஞ் சுடரே
கார்தருங் காள கண்டநின் னருளாற்
களித்தனன் கருத்தினிற் கலந்தே. ௫

நிற்கலந் துற்ற வாதவூர்ச் செல்வர்
நிகர்மணி வார்த்தையோ டென்புன்
சொற்கலந் துற்ற தொடையலெண் டோளாய்
சோணைவாய்ச் சுடர்செழுஞ் சோதீ
தற்கலந் துற்ற சராசரம் யாவுந்
தன்மய மாக்குவேங் கடவா
எற்கலந் துற்ற விருவினை தீர்த்தாய்க்
கென்னகைம் மாறுசெய் கேனே. ௬

செய்யமே னியனே சிவபுரத் தரசே
செஞ்செவே யாண்டவேங் கடனே
உய்யுமா றுள்ளி யுரங்கெழு முளத்தோர்
தொன்றுதொட் டுலப்பிலா துளுற்றும்
துய்யமா தவத்தாற் றுரியமே வடிவாய்ச்
சோணைவாய்ச் சுடர்பரஞ் சுடரே
நொய்யனே னெனினு நோக்கரு நின்று
ளேக்கினேற் கினியென்ன குறையே. ௭

குறையுறு மிந்தக் குக்கலை மோனக்
குறியினு லாண்டவேங் கடவா
தறையிடை யறிவுஞ் சழக்கிலா வொழுக்குஞ்
சான்றபல் கணக்கர்தஞ் சமயத்
துறைதொறுந் துணிந்த துணிவுமா யன்றாய்ச்
சோணைவாய்ச் சுடர்பரஞ் சோதீ
இறைவனே நின்னோ டிரண்டறக் கலந்தெஞ்
ஞான்றிறு மாந்திருக் கேனே. அ

நேயமே யறியா நெஞ்சினே னோடா
நெடுமரக் கண்ணினேன் றனது
காயமே யன்றிக் கண்ணொடு கருத்துங்
கோயிலாக் கண்டவேங் கடவா
தூயமா மறையுந் தோயொணாத் துரியச்
சோணைவாய்ச் சுடருமெய்ச் சுடரே
மாயமா முலகை மறித்துநான் காணு
வகையெனக் கருளுதி மன்னே. கூ

மன்னலா வுடம்பே மன்னுநா னென்ற
மத்தனை யாண்டவேங் கடவா
துன்னுமா மறையுந் தொடர்வதற் கரிய
சோணைவாய்ச் சுடருமெய்ச் சோதீ
இன்னமும் பிறவிச் சிறையிடைச் சிக்கி
யிடருறு தின்பநல் வீட்டு
மன்னுல காளச் சூட்டினை பொற்றாண்
மலர்முடி யடியெனுச் சிக்கே. ௧0

*திணிந்தகா ரிருளிற் றெளிந்ததூ வெளியாந்
திருவணு மலையுறை தேவன்
தணிந்தமூ வாசைத் தபோதனர்க் கார்வந்
தருமுப சாந்தவேங் கடவன்
பணிந்தசீ ரடியார் பரனுல காளப்
பைம்பொலங் கழலடி முடியா
அணிந்ததோர் தலையா லாரையோ வழிபட்
டடையுமோர் பேறுமற் றண்டே.

திருச்சிற்றம்பலம்

—:o:—

அஎ. இறைபணி நிற்றல்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளம்)

திருச்சிற்றம்பலம்

சென்ற சென்ற திசையெல்லாஞ்
செல்வா வுனது திருப்புகழ்கேட்
டுன்ற னடிக்கே யொப்படைத்தே
னுடலும் பொருளு முயிருமெலாம்
குன்ற மனைய குணக்கடலே
குலவு நிலையென் கூறென்றேன்
நின்ற நிலைக்கே நில்லென்று
னீத ரமண நெடியோனே. க

† பரவும் பரிசொன் றறியேனுன்—என்னும் தேவாரப் பண்.

இடந்தும் பறந்து மெட்டுணையு
மிறையோ ரிருவர்க் கெய்தரியாய்
நடந்து நடந்து பல்கதிக்கே
நலிந்தே னந்தோ வுயிர்ஞானம்
கடந்த பொருளாங் கழலுக்கே
கலக்கு முபாயங் கழறென்றேன்
கிடந்த படிக்கே கிடவென்றான்
கேம ரமணக் கேவலனே. ௨

வலுத்துப் போய வினையாற்பல்
வகையாம் பிறப்பிற் சென்றுசென்றிங்
கலுத்துப் போனே னம்மானே
யடையு நெறியென் னறைகென்றேன்
சிலுத்த லுவத்தல் செய்யாயாய்ச்
சிந்தை யொன்றி யிறைவனருள்
செலுத்தும் படிக்கே செல்கென்றான்
சேம ரமணச் சின்மயனே. ௩

படத்திற் படரும் படம்போலப்
படர்ந்தே னந்தப் படம்படரும்
படத்திற் கொப்பாப் படர்ச்சியறும்
பரிசே தெனக்குப் பகர்கென்றேன்
குடத்துத் தீபங் குலைவற்றுக்
குலவு மாறவ் விறைவனருள்
நடத்தும் படிக்கே நடக்கென்றான்
ஞான ரமண நாயகனே. ௪

மயக்குந் தீய வல்வினையை
மாயச் செகுக்கு நல்வினைமேற்
பயக்கும் பரிசே தெங்கள்பரம்
பரனே யெனக்குப் பகர்கென்றேன்
நயக்குங் கயக்கு நலிவின்றி
நடுவே நின்றவ் விறைவனருள்
இயக்கும் படிக்கே யியங்கென்று
னெந்தை ரமண வினியோனே. ௫

ஆக்குந் தொழிலு மளித்தழிக்குந்
தொழிலு மவற்றோ டேனையவும்
ஊக்கு முதலா முரவோனே
யுய்யு முபாய முரைக்கென்றேன்
வாக்கு மனமு மறிந்துள்ளே
மலர்மே லுறையு மிறைவனருள்
போக்கும் படிக்கே போகென்றான்
போத ரமணப் புண்ணியனே. ௬

மீட்டு மீட்டும் வெம்பிறப்பில்
வீழ்த்தி யெனது நல்லுயிரை
வாட்டும் பழைய வல்வினையை
மாய்க்கும் பரிசென் வழங்கென்றேன்
நாட்டும் பண்டை நன்னெறிதான்
ஞான னந்த நாதனருள்
கூட்டும் படிக்கே கூடென்றான்
கோல ரமண குருமணியே. ௭

பெய்யுங் கருணைப் பெருமுகிலே
பிறவிப் பெருநீர்க் கரையேறி
உய்யும் படிக்கோ ருபாயமெனக்
குள்ள படிக்கே யுரைக்கென்றேன்
மெய்யும் பொய்யும் விழையாதே
வெறுதே நடுநின் றிறைவனருள்
செய்யும் படிக்கே செய்கென்றான்
சேம ரமணச் சின்மயனே. ௮

பார்க்கு மெல்லாப் படிவமுநின்
படிவ மாயும் பண்ணவர்க்கும்
யார்க்கு மறிதற் கரியோனே
யெனக்கோ ருறுதி யிசைக்கென்றேன்
ஈர்க்கும் பிறவிக் கடன்மூழ்கா
தேறற் குபாய மிறைவனருள்
சேர்க்கும் படிக்கே சேர்கென்றான்
சேம ரமணச் சின்மயனே. ௯

வருந்தி மலர்த்தாள் வழிபட்ட
வாத வூரர்க் கற்முரைப்பான்
குருந்த மரத்தின் குளிர்நீழற்
குலவி யிருந்த குருமணியே
பொருந்த விளங்கு மான்மாநு
பூதி யெனக்குப் புகலென்றேன்
இருந்த படிக்கே யிருவென்றா
னெந்தை ரமண விறையோனே. ௧௦

திருச்சிற்றம்பலம்

௩௯. அநுபூதி

(கலிவிருத்தம்)

† பண் : கொல்லி (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

தீயேன் மடவே னருள்செய் யெனயான்
நீயே யறிவா நிகழா விடினஃ
தேயே மடனீ யெனனந் தெரிவை
வாய்தே ரறிவா வுனையென் றனனே. ௧

தன்னை யலதொன் றுமிறற் பரனும்
அன்னை ரமணன் னருள்கோத் ததனுல்
என்னை யலதோ ரிடனும் பொழுதும்
பின்னை யிலவாய்ப் பிழைபட் டனவே. ௨

மருள்போற் பொறியும் மதிகா லுணர்வும்
பொருள்போற் புலனு கிமருட் டியவை
வெருள்போக் குறவேங் கடனீள் விழியால்
இருள்போற் குலைவுற் றிலவா யினவே. ௩

உருவம் பெயரா லுறுபல் வகையாய்ப்
பொருவஞ் சசரா சரபூ தமெலாம்
மருவம் பலமா ரமணன் னருளால்
ஒருவந் தவுணர் வுருவா யினவே. ௪

திருச்சிற்றம்பலம்

---

† கூற்ற யினவாறு—என்னும் தேவாரப் பண்; கந்தாநுபூதியைத் தழுவியது.

அகூ. உயிருண்ணி

(கலிவிருத்தம்)

† பண் : வியாழக்குறிஞ்சி (சௌராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

தெருளாறு தேருத சிறுநா யேன்றன்
உருளாய மொக்குமுயிர்ச் சேட்டை யோய
இருளாறு காணுத ரமணு னந்தப்
பொருளாள னுண்டதிறம் போற்ற லாமே.

(வேறு)

‡ பண் : நட்டபாடை (நாட்டை)

முடியாமுழு முதலாம்பழ மூலப்பொரு ளருளாற்
படிசேரவ தரமாயதற் பரவேங்கட பகவன்
அடிசேருமெய் யடியார்க்கவன் விழியேகதி காண
விடியாவிருள் விடிவிக்குறு மின்சார விளக்கே. க

பரனல்லது பாராதிகள் பாராதமெய்ப் பார்ப்பான்
உரனல்லது துணையின்றியிவ் வுலகியாவையும் வென்ருன்
அரணம்மென வடியார்க்கரு ளண்ணுமலை ரமணன்
சரணல்லது மற்றும்மொரு சரணில்லை நமக்கே. உ

---

† முள்ளின்மேன் முதுகூகை—என்னும் தேவாரப் பண்.

‡ உண்ணுமுலை யுமையாளோடும்—என்னும் தேவாரப் பண்; திருவாசகம் உயிருண்ணிப் பத்தைத் தழுவியது.

அக்காலற முரைப்பான்வட வாலின்குளிர் நிழல்வாய்த்
தெற்கா லுறு முகவாவொளிர் திருவேங்கட தேவா
சொக்காசுயஞ் சோதிப்பெருஞ் சோணாசல முறைவாய்
எக்காலினி யிரண்டற்றொரு மிக்கேனுனை யானே. ௫

உண்ணேக்கிய வுணர்வோர்களு முணர்தற்கரு ஞானப்
பெண்ணேக்கிய புடையான்சிறு பிறைநோக்கிய சடையான்
மண்ணேக்கிய வானோர்வரு மண்ணுமலை ரமணன்
கண்ணேக்கிய வளவேயடி யேன்கண்டனன் மெய்யே. ௬

ஆள்வேட்டுழல் கூற்றம்மென வடர்நோக்கிய ரம்மென்
றோள்வேட்டதி லுறங்கத்திரி தூர்த்தன்னென விகழான்
சூள்சாட்டிநல் லுயிரைக்கொலுஞ் சோணாசல ரமணன்
தாள்சூட்டலு மழிந்திட்டதென் றலைமேலய னெழுத்தே.

வாயின்சுவை வளமல்லது மற்றோர்சுவை தேருத்
தீயன்னென நினையாதருள் செய்வேங்கட தேவன்
தோயன்பினர் தோயுஞ்சுயஞ் சோதிம்மலை தோய்வான்
நாயின்மிசைத் தவிசிட்டதொர் நலமீந்தன னெற்கே. ௬

காவாயென வடிசேருமுற் கனிவாயடி யேனை
ஏவாவினி தாண்டானெம திறைவேங்கட தேவன்
தேவாதியர் தாமுந்தெரி யாச்சீர்மலை சேர்வான்
சாவாநிலை தந்தான்சதி மாயைச்சழக் கறவே. ௭

நாணம்மற நன்றல்லவை நாளும்புரிந் தேனை
வீணன்னென விலக்காதரு டிருவேங்கட விமலன்
சோணம்மென வுலகம்புகழ் துரியத்தல முறைவான்
ஊணம்மென வடியேனுயி ரொருங்குண்டன னுவந்தே. ௮

அடியேமடிக் குடிலைத்தன தருட்டையது கொளுவப்
படிமேலருட் குருவாயவிற் பனவன்பதி ரமணன்
சுடுதோறுயிர் சுடரச்செயுஞ் சோணாசல முறைவான்
கடிதேயென துயிர்சுட்டொரு கரியாக்கிய பரிசே. ௯

விளையாதபல் லுயிரையருள் விழியால்விளை வித்துக்
களையார்தரு கருவாதனை கடிவேங்கட ரமணன்
உளைசேர்தர வடியேனுல கெழுமூன்றுளொன் றாடும்
முளையாவித முடிவித்தனன் முளரிக்கழ லுக்கே. ௧௦

கோனுங்குரு பரனும்மிரு குரவோர்களு மாயென்
ஊனும்பொரு ளுயிரும்முவந் துண்டான்சிவ ரமணன்
தேனுங்கட லமுதுங்கயந் திடுமாறுதித் திப்பாய்
யானும்மறி யாதேயென திதயத்திருந் தானே. ௧௧

கொச்சைமதி மடவேன்மனக் கோயில்குடி கொண்டான்
செச்சைமலர் புரையுந்திரு மேனிச்சிவ ரமணன்
மிச்சைதரு விடயங்களை மெய்யென்றவெ னகந்தை
விச்சைவறு வல்செய்துவெஞ் சனமாமிசைந் தனனே. ௧௨

தேகம்மக மென்னச்சுழல் சிந்தைத்தெரு மரலாம்
மோகம்மற முடிவித்தனன் முனிவேங்கட ரமணன்
போகம்மென நுவலும்மநு பூதிப்புண ரியிலே
சோகம்மெனா நினைவும்மறத் தோய்வித்தன னெனையே. ௧௩

அறியாமட வேனையடிக் காட்கொள்பவ ணைத்துச்
சிறியாரின நீக்கித்திரு வடியார்குழுச் சேர்த்தான்
வெறிமால்கொள வேற்றிப்பசு விஞ்ஞான மறுத்துக்
குறியாயுயிர் கொன்றானிது போலும்மருட் குணமே. ௧௪

இடிசேர்தரு குரலார்புர மெரிசேர்தர நக்கான்
துடிசேர்தரு கரத்தான்சுடர் சுடிகைம்மணி நாகத்
தொடிசேர்தரு தோளான்புகழ்ச் சோணாசல ரமணன்
அடியார்கழ லடியேனடை வண்ணம்மரு ளினனே. ௧௫

தண்ணென்றுப சாந்தப்புன றமியேற்குற வார்க்கும்
தெண்ணின்றசிற் பரையாள்புணர் திருவேங்கட தேவன்
துண்ணென்றுயிர் தம்மைக்கொ ளுஞ் சோணாசல முறைவான்
கண்ணின்றதொர் காட்சிக்கொரு கரையாகிநின் றானே.

அருவாயவல் வினைநோயெனை யடராவகை ஞானக்
குருவாயெளி வந்தென்குடி முழுதாண்டவேங் கடவன்
சொருபானந்த வுருவாய்த்திகழ் சோணாசல முறைவான்
கருவாயிடை வாராவழி காண்பித்தன னெற்கே. ௧௭

கடவாதிகள் படவாதிகள் கருவந்தலை சாயக்
கடவாரெனி னடிநாய்ச்சிறு கடையேனொரு பொருளோ
சுடர்வாரொளி சூழுஞ்செழுஞ் சோணாசல ரமணன்
படர்தீரொரு படமாக்கிய பரிசென்பகர் கேனே. ௧௮

கார்மல்கிய களத்தான்முகங் காண்பார்மனக் கடியைக்
கூர்மல்கிய விழியாற்படு கொலைதேர்குறிக் கோளான்
சூர்மல்கிய தெய்வப்பெருஞ் சோணாசல ரமணன்
பார்மல்கிய பதமேயுப நிடதம்பகர் பதமே. ௧௯

நானாரென வறியேன்சிறு நாயிற்கடைப் பட்டேன்
வானோர்முடி யிறைஞ்சச்சுடர் வண்மாக்கழ லுடையான்
ஊனாருயி ருள்ளேயொளிர் சோணாசல ரமணன்
தானாவடி யேனையுறச் சமைவித்ததொர் சதுரே. ௨௦

ஒன்றுந்தெரி யாதேகுழ றுன்மத்தனெ னுரையை
மன்றந்திகழ் மணிவாசக மானச்செவி மடுத்தான்
கன்றுங்கடை நாயேனுயிர் கனவேங்கடன் விழியாற்
றுன்றுஞ்சுவை யமுதென்று துணிந்துண்டன னியல்பே.

சிறுமாமட வியர்தம்மொடு சேர்ந்தேவிளை யாடுந்
தொறுமாயிடை யெய்திக்குறுந் தொடியைக்குல ரமணன்
மறுதாரக மறியாமயல் பூட்டிக்களி யூட்டிக்
குறுவாணகை யாலேயுயிர் கொளுவான்குண மிதுவே.

பயிலுர்தல மெதுவோகொலை பயில்வித்தவ ரெவரோ
தயையின்சொரு பந்தாங்குமந் தணர்தம்பெரு மரபான்
உயலின்னுள முடையோருயி ரொழியப்பிறி துகவான்
இயலுங்குரு பரவேங்கட னிடமுய்ந்திட லாமே. உங

உண்டோபலி யென்றெம்மை யுசாவிக்கடி மனைபுக்
கெண்டோளிறை ரமணன்சிறு நகையாலுயிர் வாங்கி
உண்டோதன மாகத்தன துதரத்துள டைக்கக்
கண்டோமினி யாமாரவன் கழலைக்கரு தற்கே. உச

நெஞ்சாலுனை யெஞ்ஞான்று நினைந்துள்கிய தற்கோ
நஞ்சாலமு தஞ்செய்திரு நல்வேங்கட நாதா
துஞ்சாதுளத் தென்றும்மொளிர் சோணாசல முறைவாய்
எஞ்சாதடி யெனதின்னுயி ரெனைத்தும்புசித் ததுவே. உரு

வேண்டாமையை வேண்டிப்பெறும் விழுத்தூய்மைய ரல்லார்
தீண்டாதகக் குகையுள்ளுறை திருவேங்கட தேவா
தூண்டாமணிச் சுடராஞ்செழுஞ் சோணாசல முறைவாய்
ஆண்டாயுனை யகத்தின்புற மினிப்போகலொட் டேனே.

துன்பென்பது தோயாதமெய்த் துரியத்திடை வைகும்
இன்பின்பெரு மிதவாவெம திறைவேங்கட தேவா
அன்பென்பதொ ருருவாயநல் லண்ணுமலை யமர்வாய்
என்பின்புரை தோறும்மமு தேற்றிட்டனை யெனக்கே. உஎ

பாலாமென மொழிகோசெழும் பாகாமெனப் பகர்கோ
சீலாதிகள் யாவும்புணர் திருவேங்கட தேவா
தோலாமொழி மோனஞ்சொ லுஞ் சோணசல முறைவாய்
கோலாகல ரமணுவுனைக் கூடுஞ்சுவை யதையே. உஅ

உன்னுலடி யேனுற்றன னுறுதிப்பொருள் யாவும்
தென்னுதிசை நாலும்புகழ் திருவேங்கட தேவா
துன்னுதெழு பவமுந்தொலை சோணசல முறைவாய்
என்னுலதற் கீடாகவெம் மானெய்திய தென்னே. உகூ

ஊனுகியவ் வூனுள்ளுறு முயிரோடுணர் வாகித்
தேனுய்மது ரிக்கும்பதத் திருவேங்கட தேவா
சோணமலை யெனுமின்னருட் சோணசல முறைவாய்
யானுகிநின் றுயையெங னெளியேனினைக் கேனே. ௩0

திருச்சிற்றம்பலம்

௬௦. சோணைமூத்த திருப்பதிகம்

(ஆசிரியவிருத்தம்)

† பண் : காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளம்)

திருச்சிற்றம்பலம்

தேனும் பாலுந் திரண்டசெழும்
பாகுங் கைக்கத் தித்திப்பாய்
ஊனு முருக்கி யுளமுருக்கி
யுயிரு முருக்கி யென்னிதய
வானு முயர்சோ ணைப்பதியும்
வாழ்வேங் கடச்செம் மாமணியே
யானுந் தானு வொழிந்தாயை
யேத்த யாவ னடியேனே. க

அடியார் குழாத்து ளடியேனை
யன்பாற் கூட்டி யருட்கண்ணால்
விடியா மோக வல்லிருளை
விடியச் செற்று வினையேற்குக்
கடியார் கமலப் பூங்கழல்கள்
காட்டிக் கொடுத்தாய் சோணையிடைத்
துடியா ரிடையாட் கொருகூறு
தோயக் கொடுத்த வேங்கடனே. உ

---

† பாவும் பரிசோன் றறியேனுன்—என்னும் தேவாரப் பண்; இப்பதிகம் அந்தாதியாய்த் திருவாசகம் கோயின்மூத்த திருப்பதிகத்தைத் தழுவியது.

ஏற்றுக் கொடியாய் விணெயிலா
லெறிபட் டார்க்கு மாக்கருணே
ஊற்றுக் கிடந்த விழியுடையா
யுடையாய் வாத வூரடிகள்
சாற்றுத் துதிக்குச் சாய்த்தசெவி
யெனக்குஞ் சாய்த்தாய் வேங்கடவா
சோற்றுத் துறையாய் சோணப்பா
சுரந்த வருளென் பெருந்தகையே. ௩

தகையு மியல்சேர் வெம்பாசத்
தளேகண் பரியத் தாமரைதன்
முகையி னிதய முடிச்சவிழ
முறுக நோக்கி முறுவலித்தாய்
பகையு முண்டோ வெனதுயிரும்
பசிபோற் புசித்தாய் மன்னுயிர்தம்
தொகையி னிதய குகைதோறுந்
தோயுஞ் சோணே வேங்கடனே. ௪

கடக்குங் கருத்தாற் கதித்தெழுந்த
கடுங்கட் கால னடலாண்மை
அடக்குந் திறல்வல் லாளாவல்
லாளன் குமரா வாருயிரைத்
தொடக்கும் பிறவித் தொகையைச்சுட்
டெரிக்குஞ் சோணே வேங்கடவா
விடக்குங் கொடியேற் கக்கார
மடித்துத் தீற்றும் விரகென்னே. ௫

என்னிற் காட்டி லெனக்கினியா
 ரியாரு மில்லை யென்றாலும்
என்னிற் காட்டி லிறப்பவெனக்
 கெந்தை பெருமா னினியாய்நீ
என்னிற் சோணை வேங்கடவா
 வென்னின் வேறு படுதியென
உன்னிப் போலு முன்னடியே
 னொழிந்து சும்மா விருப்பதே. ௬

இருக்கு முதலா மெனைப்பலநூ
 லிந்நீ ணிலத்தி லிருக்கினுமே
இருக்கு மவற்றா லெட்டுணையு
 மேகா வென்போன் மாக்களுளத்
திருக்கை யுனது திப்பியமாந்
 திட்டிக் கதிராற் சிதறடித்தாய்
அருக்க சோணை வேங்கடநின்
 னல்லா லென்னைக் காணேனே. ௭

காணுங் கண்ணே முதலாகக்
 கண்ட பொறிக ளைந்தற்கும்
பேணுங் கண்ணா மனத்துக்கும்
 பெரிய கண்ணாய் விண்ணாகிப்
பூணுங் கருத்துப் பிரிதரவுட்
 புக்கோய்ந் திருப்பா ருட்பொலிநின்
தாணுந் தாத சுடரேபோற்
 றமியே னுள்ளஞ் சுடருமன்றே. ௮

அன்றன் றென்ன வருமறையா
லறையப் படுத லன்றிக்கே
நன்றென் றென்று நவிலாதாய்
நானே வுன்னை நயக்கிற்பேன்
என்றென் றெண்ணு மெண்ணமும்போ
யெந்தாய் சோணை வேங்கடவா
உன்ற னடிக்கீ ழொடுங்குறவிவ்
வூத்தை யேனைப் பணியாயே. ௯

ஆய வுண்மை யாய்ந்தறியா
தழிந்த தெல்லா மறப்போதும்
மேய மெய்ம்மை விழுப்பதநான்
மேவுந் திறமே யினிவேண்டும்
தூய சோணை வேங்கடவா
துங்க வடியார் தோய்தோறும்
ஏய விதயத் தினிக்கும்பே
ரின்பத் திணையில் கோற்றேனே. ௧௦

திருச்சிற்றம்பலம்

௬௧. திருச்சதகம்

க. †மெய்யுணர்தல்

(கட்டளைக்கலித்துறை)

‡ திருவிருத்தப் பண் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

தூண்டா மணித்துரி யச்சுட ரேதுச் சரிதர்களோ
டண்டாமை யெவ்வப் படருழ வாமையிவ் வேழையைநன்
றூண்டா யுனதடிக் கன்புகுன் றாமை யருளுதியேல்
வேண்டாத சென்மமும் வேண்டிக்கொள் வேன்சிவ வேங்கடனே.

சித்தச் செயலுன் செயலாகு மாற்றுற் செயல்பிறிதாய்
மெத்தப் படித்தநன் மேதா விகளென்ற மேதினியோர்
பித்துப் பிடித்தவுன் மத்தனென் றேசப் பெரிதுவந்து
செத்துத் திரியுந் திறனல்கு வாய்சிவ வேங்கடனே. ௨

மாலே படைத்த மனத்தே னெனினுமிம் மாயவுல
காலே யிடர்ப்பட் டழிகின் றிலேனெனை யாண்டவரு
ளாலே யிருக்கப் பெறிலஞ்ச லேனிர யத்துமெனின்
மேலே திருவரு ளன்றியும் வேண்டலென் வேங்கடனே. ௩

---

† இதுமுதற் பத்துப் பதிகங்களும் அந்தாதியின்றித் திருவாசகம் திருச்சதகத்தைத் தழுவியன.

‡ பார்கொண்டு மூடி—என்னும் திருவிருத்தப் பண்.

தன்னை நழுவித் தயங்கு முயிர்த்தொகை தற்பரமாம்
தன்னை யடைந்திடத் தக்க வுபாயமத் தன்மயமாம்
தன்னை யொழியத் தழுவற் கிலாமையின் றன்னருளாற்
றன்னை யுசாவி யுடைவேங் கடதனைச் சார்ந்தனனே. ௪

கன்றுக்கு நல்குங் கறவையின் வேங்கட காசினிவாய்
ஒன்றுக்கும் பற்றுவிவ் வூத்தைச் சிறியனை யுள்ளுவந்து
நன்றிக்கு வித்தா நயந்துகொண் டாயை நழுவியுமென்
றென்றைக்குஞ் சற்று மிகழாத் திறமெனக் கீந்தருளே. ௫

கன்மத்தை யன்றிக் கடவுளை யெண்ணுது கங்குல்பகல்
வன்மத்தை மேற்கொண்டு வாளா கலங்கு மயன்மனமே
கன்மத்தை நம்பிக் கடைகெட் டழிந்தோர் கணக்கிலரம்
மன்மத்தை யாய்ந்தெண்ணி வாழ்தியவ் வேங்கடன் மாணடிக்கே.

முயலய லுற்றுர் முயங்கற் கரியவன் முத்திநெறி
இயலுய வெண்ணுந ரெய்தற் கெளியவ னென்னொடுதான்
அயகய மானவ னன்புகந் தாவெனை யாண்டுகொண்டான்
சயசய வென்றவன் சந்தத் திருப்புகழ் சாற்றுதுமே. ௭

மிடிமைத் தமந்தடி வாள்விழி வேங்கட வேதனொடு
மடிமைக் கிடங்கொடா மாயனுங் காணுமின் மாமலர்த்தாள்
கொடுமைப் பரிசெலாங் கூடித் திரண்டு குணங்கெழுநல்
அடிமைத் திறமி லகந்தையேற் குற்ற ததிசயமே. ௮

பெண்மைப் பகுதியைப் பெய்தும்பெய் யாது பிறங்கிதய
விண்மெய்ப் படிவா விளங்குறு வேங்கட வெவ்வினையால்
வெண்மைப் படுமதி யேனின் விழியெதிர் மேவியதால்
உண்மைப் பொருளுன் னொழிந்தொன்று மின்மை யுணர்ந்தனனே.

பணியே பணியா வணிபர னேமற்றுப் பற்றெனக்குத்
துணியே னுனது துணைமலர்த் தாளன்றிச் சொப்பனத்தும்
பணியேன் பரவேன் பழமைக்கெல் லாம்பழ வேங்கடமா
மணியே யுனையன்றி யில்லையன் றேமற்றொர் வண்பொருளே.

திருச்சிற்றம்பலம்

உ. அறிவுறுத்தல்

(கோச்சகக்கலிப்பா)

† பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

நஞ்சேநல் லமுதாக நயந்தாற்போ லொன்றுக்கும்
கிஞ்சேலும் பற்றாத கிறியேனைக் கிழமையினாற்
றஞ்சேயென் றாண்டவருட் டற்பரனும் வேங்கடற்கு
நெஞ்சேநன் னீராள மாயுருகி நில்லாயே. க

பொய்யன்ப னாகியது புலப்படா வாற்றாலுள்
நையன்ப னாப்புறத்து நடிப்பேனை வேங்கடவா
மெய்யன்ப னாக்கிமேல் வீட்டுக்கோர் விச்சாகச்
செய்கென்றுன் சேவடிக்கே தீர்ந்தேனித் தீயேனே. உ

அனையாண்ட வறவாழி யந்தணவேங் கடன்பாலோர்
பனையாண்ட பயன்பெற்றாய் தினையாண்ட பத்திமைக்கே
வினையாண்ட நெஞ்சேநீ வெறியாண்டு வீழாது
தனையாண்ட தயாபரன்றா டலையாண்டு வாழ்வாயே. ௩

---

† பத்திமையு மடிமையையும்—என்னும் தேவாரப் பண்.

நின்பாலே யானிரந்து நிற்குறுதி சொல்கின்றேன்
முன்போலே மோகாந்த காரத்தின் மூழ்காதே
உன்பாலே யுறைரமண வுடையான்றாட் குள்ளமே
அன்பாலே யழிவாயே லழிந்தாலு மழியாயே. ௪

உறவோரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
மறவாத கேள்வியொடு மாண்பொருளு நான்வேண்டேன்
இறவாத வேங்கடநின் னிதயத்தே யல்லாமற்
பிறவாமை யஃதன்றிப் பிறிதொன்றும் வேண்டேனே. ௫

மருளவாய்க் கழலடைந்த மன்னுயிரம் மருடீர்ந்து
தெருளவாக் கியமுரைக்குந் திப்பியவேங் கடதேவா
பொருளவாப் பூணுகிலேன் புரவலா புண்ணியநின்
அருளவாக் கொண்டடியே னழிகின்றேன் கண்டாயே. ௬

கண்டாயே காணாத கருத்தேநீ கவல்கொள்ள
உண்டாயே னழிகின்று யுண்டாகா தெஞ்ஞான்றும்
பண்டாய வேங்கடன்றாட் பதிக்கண்ணே பாய்ந்துறைந்து
தொண்டாய வானந்தந் தொலையாது துய்ப்பாயே. ௭

தேனுமாய்ப் பாலுமாய்த் தித்திக்கும் வேங்கடவா
வானுமாய் மண்ணீராய் வளியாகி யொளியாயொண்
பானுவாய் மதியாகிப் பாடெய்து மியமானும்
யானுமாய் நின்றுயை யென்சொலினா னேத்துவதே. ௮

பதியாய வேங்கடவா பராக்காகி யான்பாவி
உதியாத முன்னுறும்பே ரோகைமுற்றும் பாழாகக்
கதியாய நின்கழலென் னெஞ்சகத்துக் கண்மாறிச்
சதியாய மாயையாற் றவிக்கின்றேன் றமியேனே. ௯

காமாதி கட்டழித்த கண்ணுதல்வேங் கடவாநிற்
காமாறுன் னுச்சிரமத் தலகிடேன் மெழுக்குமிடேன்
ஓமாதி யுட்கோளா வுழவார முஞற்றுகிலேன்
சாமாறே விரைகின்றேன் செத்தானிற் சார்வேனே. ௧0

திருச்சிற்றம்பலம்

௩. சுட்டறுத்தல்

(ஆசிரியவிருத்தம்)

† திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

ஆணாகப் பெண்ணாக வலிதா னாக
வணுவாக மாமேரு வதுதா னாகச்
சேணாக வணித்தாகச் சேர்ந்து நின்ற
சின்மயமாம் வேங்கடவன் சிறியே னுக்குக்
காணாத மெய்ப்பொருளைக் கடைக்கண் ணோக்காற்
காட்டினான் கேட்பித்தான் கழலி னோசை
மாணாத மடியேனை யிதயத் துள்ளே
மறித்துக்கொண் டாடினான் மகிமை யென்னே.

எவ்வறிவு ளிருதிணைமூ விடனும் போழ்து
மிலங்குவன தன்மயமாய் வேறு போல
அவ்வறிவே நானாக வாக்கி யத்தா
லறிவதற்கோ ரயலணுவு மின்மை யாக்கி

† அப்பனீ யம்மைநீ—என்னும் திருத்தாண்டகப் பண்.

எவ்வமுறு சலனந்தா னெனைத்தொன் ருனு
மெய்தாத பேரின்ப வசல மாக்கிச்
செவ்விதின்வந் தாண்டசிவ வேங்க டேசச்
செல்வனைநா னெவ்வாற்றுற் சிந்திக் கேனே. உ

யானென்ன வெழுந்தவத னியல்பே னீரி
லெழுங்குமிழி போன்றதோ ரெண்ண மட்டே
யானென்னு மக்குமிழி யெழாச்சு ழுத்தி
யிடையுமது பவத்தானீ யில்லை யல்லை
யானென்ன வெழுந்தொடங்கி யியலு மன்னோ
னன்மைநீ யிவ்வாற்று லிலங்கிற் றன்றே
யானென்ன வெழாதொடங்கா தென்று முள்ள
வியற்கைமுழு முதனீதான் சித்து மாமே. ந

உள்ளதா லுருக்கொண்ட வுனையோர் தற்கவ்
வுனையன்றி யுனக்கயலா யுணர்வொன் றில்லாத்
தெள்ளிதா லும்மறிவின் சேட்டை யாச்சேர்
சிந்தையெழுந் தொடங்கிடஞ்சித் தாத லாலும்
வள்ளிதா முனையன்றி மற்றென் றில்லா
வண்டுயில்வா யின்பத்தா லதூஉநீ யென்றுன்
கள்ளதா லருவிபாய் கடுக்கைத் தார்வேங்
கடன்சொருப மென்சொல்லிக் கருது கேனே.

தானார்க்குங் குடியல்லாத் தன்மை யாய
தனித்தலைமை முனிமுகடு சான்ற வீசன்
வானார்க்கு மண்ணார்க்கும் பிலமு மார்க்கும்
வண்புகழ்சேர் வேங்கடவ னெய்ப்பில் வைப்பாய்

யானுர்க்குங் குடியல்லா வியல்பா லென்னை
யின்னருளாற் ருணிழற்கே வாழ வைத்தான்
தேனுர்க்குஞ் செழுங்கமலச் செல்வப் பாதச்
சீர்பாடிச் சிந்தித்து வந்திப் போமே. ௫

நின்னாலே நின்பாத நேரப் பெற்றே
னேயத்தால் வேங்கடவா வாண்டு கொண்டாய்
உன்னாலே யாட்கொள்ளப் பட்ட நாயே
னுணர்விலே னுயினுமுன் னருட்கண் ணேக்கால்
தன்னாலே சராசரங்கள் சலிப்ப வன்றித்
தாமாகச் சலியாமை கண்ட தாலே
என்னாலே யாதொன்று மியலா தென்றுன்
னிடத்தேயென் கடமையெலா மேற்பித் தேனே.

தனக்கென்றோர் வண்ணமிலான் வடிவ மில்லான்
சராசரங்கட் கவ்வெல்லாந் தானே தந்தான்
மனக்கென்றோர் மதியில்லான் மறதி யில்லான்
மன்னுயிர்கட் கவ்வெல்லாந் தானே யீந்தான்
நினக்கென்று நீயென்று நினைத்தி டற்கு
நீயாவ னெனநிகழ்த்தி வேங்க டேசன்
எனக்கென்றோ ரியலேயுஞ் செயலே தானு
மில்லாமற் செய்திட்ட விச்சை யென்னே. எ

ஊனுக்கு முறக்குக்கு முவகை யாயிங்
குழன்றேனைப் பொருளாக்கி யுள்ளத் துய்த்து
வீணுக்கென் றனைக்கொல்வெவ் வினையொ ழித்துன்
விரைமலர்த்தாட் காட்கொண்டாய் வேங்க டேச

மாணிக்க மாமலையே மலைமருந்தே
மாறுக வவ்வுதவிக் கென்னைத் தானே
காணிக்கை யாக்கொண்டாய் காசி னிக்கோர்
களிறுண்ட விளங்கனியாக் கழிந்தே னன்றே.

அண்டையா லடைந்தேனை யருட்கண் ணோக்கா
லளிப்பாய்போ லழித்தாயே யபய மென்று
விண்டையா விப்படியு மேவி னோரை
வேரழிப்பார் தாமுளரோ வேங்க டேசா
பண்டையா லுணர்வுடையோ ருயிர்க்கொ லிப்பேர்
பறைந்துய்யப் போயதுதா னுன்னி னன்றே
அண்டமாய்ப் பிண்டமா யண்ட பிண்டத்
தப்பாலா யிப்பாலா யடைந்த வொன்றே. ௬

ஆண்டவா வுனைப்பரமா வடைந்தார் தம்மு
ளடியேன்போ லழிவுற்று ரலகில் லாரே
மூண்டவா ரழல்வடவை மூரி தானு
மொய்ம்புடைநின் விழிபோல முடுகா தன்றே
வேண்டவா முற்றுதார் விளிய வேண்டின்
வேங்கடநின் விழிப்பட்டா லமையு மன்றே
பூண்டவா றிதுவன்றிப் புலவர் மீளாப்
பொருண்மேவு சாவுக்குப் புகன்ற துண்டே. ௧0

திருச்சிற்றம்பலம்

௪. ஆத்தும சுத்தி

(ஆசிரியவிருத்தம்)

† பண் : நட்டராகம் (பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

சோதி மாமலைச் சோணையை யல்லது
தனக்கொரு துணையில்லா
ஆதி வானவ னவனியை யடைந்துபே
ரந்தண்மா னிடனாகி
நேதி நேதியென் றியாவையுங் களைந்துதன்
னின்மல வுருக்காட்டி
நீதி யற்றவிந் நீசனை யாண்டவந்
நீர்மையி னழகென்னே. ௧

இரைந்த தோத்திர மேழ்கட லொலியின்மிக்
கெழுதர நாடோறும்
கரைந்த நேயரைக் காக்கவைத் திவ்வெறுங்
கயவனைக் கண்ணுக்கால்
விரைந்து நாடிவெவ் வினையிருள் விடியநன்
காண்டவேங் கடன்றாட்கே
வரைந்தி டாமன வன்மையுந் தின்மையும்
வரையறக் கில்லேனே. ௨

---

† என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே—என்னும் தேவாரப் பண்.

வரைய றுப்பதற் கரியவ னெளியவன்
வானவர்க் கடியோங்கட்
கரைய ஞருயிர்த் தொகைகளுக் காயவ
னழகிய ரமணேசன்
குரைக ழற்பதங் கூடியுங் கூடிலேன்
கூடவு முயல்கில்லேன்
இரைமி சைந்தகோ கண்டுயி லிசைந்துநா
ளேகவீண் கழித்தேனே. ௩

எய்தி வைத்துமிங் குருவண மின்னதென்
றியாவரு மறியாதான்
செய்தி யிற்பல விசித்திர முள்ளவன்
வேங்கட தேவேசன்
பைத லுற்றுநான் பாழ்படு மாயையாற்
பரிபவ மடையாதே
உய்தி யின்னதென் றுணர்த்தியு முற்றிடே
னூழ்வினை யுலவாதே. ௪

உறுதி யாவதவ் வுத்தமன் கழலென
வோர்ந்துணர்ந் திருந்தேயும்
இறுதி யேயுனக் கிதுவரை சூழ்ந்தனை
ரமணனை யெண்ணுமே
அறுதி யாகவிவ் வவனியி லாசையை
யறவிடுத் தினியேனும்
மறதி யற்றவன் மாணடி யெண்ணுதி
மதியிலி மடநெஞ்சே. ௫

காணி யேமனை யேமட மக்களே
கண்டவை சதமாகப்
பேணி யேபிற வித்துயர்ப் பட்டுழல்
கின்றனை பிணநெஞ்சே
வீணி லேயினி மேலுமிம் மேதினி
வாழ்க்கைமேல் விருப்புற்றுப்
பாணி யாமையப் பரம்பொருள் வேங்கடன்
பதமலர் பணியாயே. ௬

அருவ ருப்பொடு மாசைகொண் டெய்த்துமா
றுடுதி யகமேகேள்
ஒருவ கைப்படு மொண்பொரு ளின்பல
விகற்பமா மிவையெல்லாம்
இருவ கைப்பட யாவது மெண்ணலை
யிறைரம ணேசன்றன்
திருவ ருட்செய லின்படி சேர்கெனுந்
திருப்பணி நில்லாயே. ௭

எந்தை யெம்பிராற் கியானொரு கணமெனுந்
தன்னைவிட் டியானென்று
மந்தை யாடுபோன் மனிசர்பின் சென்றிட
ருழப்பது மதியன்று
தந்தை தாயொடு தம்பிரா னுவெனைத்
தாங்கிய ரமணேசன்
கந்த மாமலர்க் கழல்பிரிந் திருந்துநான்
கழிந்திலேன் கடையேனே. ௮

பொருத்த மில்லெனை யருள்புரிந் தாண்டவ
னென்னுளெப் போதுஞ்செய்
நிருத்த வார்கழ னினைந்துநைந் துருகிலே
னெக்கிலேன் கன்னெஞ்சம்
வருத்த மின்றிவா யாரவுண் டுடுத்துவா
ணாளெலாம் வீணாளாத்
திருத்த மொன்றறச் செலவழித் தேன்மலைத்
திண்குவ டருளேனே. ௯

புகட்டி நல்லறி வுச்சுடர் கொளுத்திய
போதவேங் கடநாத
கவட்டு நெஞ்சினேன் கசட்டுள மத்தனே
னுயிர்களைத் தன்காலாற்
சவட்டு மாயையின் சழக்கினு ளுன்னடி
தணந்தது தவிர்தற்காக்
குவட்டு நின்றுகீழ்ப் பாய்ந்திலேன் கொழுந்தழல்
குரைகடற் குதியேனே. ௧௦

திருச்சிற்றம்பலம்

ரு. கைம்மாறு கொடுத்தல்

(கலிவிருத்தம்)

† பண் : கௌசிகம் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

வன்ம மிக்க வலவையை யாண்டனை
தன்ம மேயுருச் சார்தரு வேங்கட
சொன்ம திப்படி தோய்த லொழிந்துநான்
புன்ம னப்படி போகி யழிவெனே. க

கடப்ப தன்றென நின்கழ லென்கணே
நடப்ப தாக நயந்தனை வேங்கட
திடப்ப டாத்திறத் தாலது தீர்ந்துபோய்ப்
படப்ப டாத்துயர்ப் பட்டுக் கிடப்பெனே. உ

அதுநீ யாவை யெனுமெனக் கோதினை
அதுநா னுக வடங்கிட லற்றுநான்
அதுநா னென்றிறு மாந்தழி வேனையோ
அதுதா னுவொளிர் வேங்கட வையனே. ந

குடம்பை விட்டதிற் கூடலற் றென்றுமே
இடம்ப டும்விசும் பெய்திய புள்ளென
உடம்பை விட்டுனை யுற்றிட வோர்கிலேன்
மடம்ப டும்பொலேன் வேங்கட மன்னனே. ச

---

† விரும்புந் திங்களும்—என்னும் தேவாரப் பண்.

விண்ணு லாவு முருவெளித் தோற்றமஃ
தெண்ணி யுண்மையென் றேங்குமிவ் வேழையை
உண்ணு ழைகென வோதினை வேங்கட
கண்ணி லேன்கதி காண்கிலன் காண்பியே. ௫

குருட்டை யூர்வழிக் கூட்ட லொழிந்ததன்
பொருட்டு மார்க்கம் புகல்வதா லென்பயன்
இருட்டி லேகிடந் தேங்கு மெளியனைத்
தெருட்டு வாய்திரு வேங்கட தேவனே. ௬

ஒருக்கி யுள்ளு ளுருத்துருத் தோரவும்
இருக்கு நின்னியல் பியோகிக்கு மெய்தலே
அருட்க லப்பில் வெறுங்கட் கறிபடா
அருக்க னேயுனை யாரறி கிற்பரே. ௭

பொறியி னுலன்றி யப்பொறிக் கூற்றமாம்
அறிவி னுலு மறிதற் கமைகலே
அறிவி றப்பிடத் தன்றி யவிர்ந்திடாக்
கிறிக டந்துனைக் கிற்பவ ரியாவரே. ௮

உள்ளத் தானு முணர்வரு மின்பமா
வெள்ள வேங்கட மெய்ய னருளினுற்
பொள்ளெ னப்புறம் போந்திப் புலையனை
எள்ளி டாதுவந் தேற்றதென் விந்தையே. ௯

ஆவ வென்றெனை யாண்டுதன் பொன்னடிக்
கேவல் கொண்ட விறைரம ணேசனுக்
காவ லாயவ் வருமையை யாய்ந்துநான்
சாவ லாதன்பு சாற்றுஞ் சழக்கென்னே. ௧௦

திருச்சிற்றம்பலம்

கூ. அநுபோக சுத்தி

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

தக்க மாட்சி சற்றமிலாச்
சழக்க னேனை யாண்டாய்க்குத்
தக்க வாறு தக்கிருக்க
கில்லேன் றலைவா தையலர்தாம்
நக்க வாறு நகிற்றகில்போய்
நழுவு மாறு நச்சுவிழி
சொக்கு மாறு மிவையோர்ந்து
சூதென் றனக்கே சூழ்ந்தேனே. க

என்ற னடிநின் றிகந்தேனை
யேற்ற ரமண சிதாகாய
மன்ற ளிருந்து மகிழ்நட்ட
மருவுங் கூத்த வுருப்பெயருள்
ஒன்று மில்லாச் சூனியமா
முண்மைப் பொருளே யுன்னடிக்குட்
பொன்றிக் கிடக்குங் கிடையன்றிப்
பொன்று திருக்குந் திறமென்னே. உ

---

† மூத்தா மூத்தி தாவல்ல—என்னும் தேவாரப் பண்.

உண்ணுந் தொழிலும் வண்ணவுடை
யுடுக்குந் தொழிலு மழுக்குடம்பை
மண்ணுந் தொழிலு மடவார்பான்
மயங்குந் தொழிலு மிவையல்லாற்
பண்ணுந் தொழிலொன் றறியேனைப்
பணிகொண் டாண்டா யாண்டாயை
எண்ணுந் தொழிலு மியற்றுதே
னென்கொண் டுய்கேன் வேங்கடனே. ௩

கயிலை நீங்கிக் காசினிக்கே
கனசிற் சத்தி யுடனாகப்
பயிலுங் கானின் பரங்கருணைப்
பார்வை தம்மேற் பட்டோர்தம்
செயலொன் றின்றிச் சிவானந்தந்
திளைக்கக் கண்டும் வேங்கடவ
உயலொன் றின்றி யுண்டுடுத்திங்
கூர்நா யாக வுழல்வேனே. ௪

அழுக்கா றின்னாச் சொல்வெகுளி
யவாவின் நான்குந் தலையாய
ஒழுக்கா றாகக் கொண்டொழுகு
மூத்தை யேனை யுழுவலன்பால்
இழுக்கா தாண்டா யிறைரமண
வேமாந் துன்றாள் போற்றுது
புழுக்கூ டிதனைப் புறங்காத்துப்
போனேன் காலம் புலையேனே. ௫

செய்வ தறியாச் சிறுநாய்மேற்
செம்பொற் றவிசைச் சேர்த்தாற்போல்
உய்வ தாக வாண்டாயை
யுன்னி யுள்ள முருகுகிலேன்
வைவ தன்றி வாழ்த்துகிலேன்
வணங்க கில்லேன் வஞ்சனேன்
தெய்வ மணியே வேங்கடவ
நீயே னுயிர்தான் வீயாதே. சு

உகுதற் கொத்த வன்பில்லா
வூத்தைப் புலையே னுன்னடிவாய்ப்
புகுதற் கன்றிப் புறம்போகப்
புரியும் பொல்லேன் புன்மையேன்
நகுதற் கன்றி நல்லோரா
னயத்தற் கில்லா ஞாயத்தேன்
நெகுதற் கொவ்வா னேயத்தா
னெடுவேங் கடவ தரியேனே. எ

செத்துப் பிறந்து சீரழியுஞ்
சிறியேன் றன்னைச் சாவாத
நித்தப் பொருளா நிகழ்வித்தாய்
நெடுவேங் கடவ நிகழ்வித்தாய்க்
கொத்துத் திருத்தொண் டியாதொன்று
முனுற்ற கில்லே னுன்னடிவாய்ப்
பித்துக் கொண்ட வித்தகர்போற்
பிதற்றித் திரிவேன் பேயேனே. அ

என்னைத் தானு மறியாத
வென்னுண் ஞானச் செழுஞ்சுடராம்
உன்னைத் தோற்றி யொளிர்வித்தாய்க்
கூத்தை நாயே னொளிர்வித்த
பின்னைத் தானுஞ் சிந்தையாற்
பேணிக் கிடவாப் பித்தனேன்
பொன்னைப் புரையுந் திருமேனிப்
புயல்வேங் கடவென் புரிகேனே. ௯

உள்ளற் கரிதா யுள்ளுக்கு
முள்ளா முணர்வா யோர்த்தார்க்குத்
தெள்ளத் தெளிதீந் தேறலாந்
திருவேங் கடப்பே ரெம்மானே
எள்ளற் கில்லா வின்புருவா
வெளியேன் றன்னைச் செய்தாய்க்குக்
கள்ளக் குரம்பை யிதுதானுங்
கழிக்க மாட்டேன் கடையேனே. ௧0

திருச்சிற்றம்பலம்

எ. காருண்யத் திரங்கல்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: திருநேரிசை (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

எந்தையே யானென் சொல்லுக்
கிலக்கித மாக நின்ற
தந்தையே சார்ந்த விந்தச்
சராசரப் பொருள்கட் கெல்லாம்
விந்தையாந் தாயே வேறு
வெறியினு லிவற்றை யெண்ணிச்
சிந்தையான் கலங்கா தாள்வாய்
சிற்பர ரமண நீயே. க

விழைவொடு வெறுப்பு மில்லா
வேங்கட நாதா மிக்க
பிழையுள பேணு தாண்ட
பேரருட் கடலே யந்தக்
கிழமையா னவிச்சை யாலே
கீழுறப் புண்டு நாயேன்
அழிவுறு தருளிக் காப்பா
யடியனேற் கருட்கண் டந்தே. உ

---

† ஓம்பினேன் கூட்டை வாளா—என்னும் திருநேரிசைப் பண்.

விழிபடு நோக்கத் தாலிவ்
வீணனை யாண்டு நின்றாள்
வழிபடு மன்பர் கூட்டத்
தொருவனு வைத்தாய் வைத்தும்
பழிபடு நெறியிற் பாய்ந்து
பாதகம் பயிற்று திந்தத்
தெழிபடு செத்தை யேனைத்
தேற்றுவாய் ரமண தேவே. ௩

என்னுடை முன்னோர் தம்மோ
டியானுஞ்செய் புண்ணி யத்தால்
உன்னுடை நோன்று ளுற்றுப்
புணையென வுகைக்க லுற்றேன்
முன்னுடைப் பிறவி வெள்ள
முழுக்கடல் கடக்குங் காறும்
நின்னுடைக் கருணை நோக்க
நிகழ்த்துவாய் ரமண தேவே. ௪

பொய்யையே மெய்யா நம்பிப்
பொழுதுவீண் போக்கி நின்ற
கையனேற் குறுதி யுன்றன்
கழலலாற் பிறிதொன் றில்லை
பொய்யனென் றெள்ளி யென்னைப்
புறஞ்சற்றும் போக்கல் போக்கின்
ஐயகோ யாது செய்கே
னண்ணலே ரமண தேவே. ௫

முந்தையென் மலமோ சித்து
மோனமுத் திரையா லாண்ட
விந்தையி னுரிமை யாய
விதத்தினல் வெஃகி யென்னை
வெந்தையி னேர்ந்துட் கொண்டாய்
வேங்கட வெளிவிட் டென்னை
நிந்தையி னிரங்கச் செய்பி
னின்னருட் சிறப்பு நன்றே. ௬

போதவம் போனேன் புந்திப்
புதையிருள் போக்கும் போத
ஆதவ னாகப் போந்த
வையநின் னருளை யன்றி
மாதவ வேங்க டேச
மற்றுமோர் களைக ணில்லேன்
ஆதர மாயென் னெஞ்சை
யலர்த்திடாய் போற்றி போற்றி. ௭

தன்னுளே யண்ட பிண்ட
சராசர மெல்லா நொய்தாத்
துன்னியே கருக்கொண் டீன்ற
தோகையோர் பாக போற்றி
என்னுளே யுன்னை வைத்த
வியல்பென வேங்க டேச
உன்னுளே யொடுக்கி யென்னை
யுருப்பட வாள்வாய் போற்றி. ௮

கத்தனே போற்றி காக்குங்
　　கடவுளே போற்றி சாவா
நித்தனே போற்றி யிந்த
　　நீசனை வலிவந் தாண்ட
பித்தனே போற்றி தாயிற்
　　பெரிதருள் வேங்க டப்பேர்
அத்தனே போற்றி யென்னை
　　யாளுடை யடிகள் போற்றி. ௯

போற்றியோ புலைப்புன் காயப்
　　பொதிச்சுமை பொறுக்க லாற்றேன்
போற்றிநின் பொற்று ளன்றிப்
　　புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியான் சுமக்க லாற்றாப்
　　பொதிச்சுமை யிறக்கு கண்டாய்
போற்றியோ வேங்க டேசப்
　　புங்கவ போற்றி போற்றி. ௧௦

திருச்சிற்றம்பலம்

அ. ஆனந்தத் தழுந்தல்

(ஆசிரியவிருத்தம்)

† பண் : கொல்லிக்கௌவாணம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

அழற்கண் ணிழுதா யழிவே னல்லே
னகந்தை நாயே னெனையாண்ட
கழற்கண் ணன்பாய்க் கசிவே னல்லேன்
கனவேங் கடவ கயவேனிற்
றெழற்கண் ணெஞ்சந் துணிவே னல்லேன்
சுடுமுத் தாபந் தணிக்குந்தாள்
நிழற்கண் ணுசை நெடிதுங் கொண்டேன்
ஞேய மிக்க வழகாமே. க

(வேறு)

‡ பண் : நட்டராகம் (பந்துவராளி)

தூச கன்ற தூம ணித்து ரீய வேங்க டேசநிற்
காச கன்ற வன்ப னுகை யாவி நைந்த ழிந்திடா
தோசை யுற்ற வாரி போலொ லித்தெ னக்கு முன்கழற்
காசை யுண்டெ னக்க ரைந்த கங்க ரித்தி ருப்பதே. உ

---

† முதுவா யோரி — என்னும் தேவாரப் பண்.
‡ நம்போ நுணம் மக்க ளேன்று — என்னும் தேவாரப் பண்.

செருப்பு கன்ற கண்ணி யோர்தஞ் சேர்க்கை யன்றிச் சேர்வதற்
கொருப்ப டாத வூத்தை யேனை யாண்ட வோகை வேங்கட
திருப்பு கழ்த்தி ருப்ப தங்கள் சிந்தி யாத வாதியேன்
நெருப்பில் வீழ்ந்தி றக்கி லாத ஞேய மென்ன ஞேயமே.

அன்பு மட்ட கத்தி லூற வாவி யோடி யாக்கையும்
என்பு தோற மிழ்த மேற வேத்து முண்மை யன்பரில்
வன்பு சேருன் மத்த னேனை யும்மொ ருத்த னாகென
நின்பு டைநி றுத்த நீர்மை யென்ன வேங்க டேசனே. ௪

நென்ன லோடு நாளை யற்று நின்ற விற்றை யென்றுமாய்க்
கன்ன லோடு தீங்க னிச்சு வைக லந்த வேங்கட
பின்ன மோட பின்ன மென்று பேச லாத பெற்றிசேர்
வன்ன முற்று ணர்ந்து னைவ ழுத்த லெங்ங னாவதே. ௫

கங்கு லோடு மொண்ப கல்க டந்த கால வேகமாய்
இங்கு மங்கு மெங்கு மாயெ ழுந்த சோதி வெள்ளமே
பொங்க ராவ ணிந்த வெண்பு யப்பு ராரி வேங்கட
மங்க லற்ற பூன்ற நின்னை யார்கொ லோம திப்பதே. ௬

ஈச நின்னை யல்ல தில்லை யானு மீதும் யாவுமாம்
ஈச நின்னை யல்ல தில்லை யின்று மன்று மென்றுமாம்
ஈச நின்னை யல்ல தில்லை யிங்கு மங்கு மெங்குமாம்
ஈச நின்னை யாவ ரெங்க ணென்று காண்ப ரெங்ஙனே. ௭

அங்க ணாள வேங்க டேச வென்னை யாண்ட வையநின்
புங்க மான போக மெங்க ணும்பு ரண்டு பொங்கவும்
பங்க முற்ற நாயி னேன்ப ருக லாவ தில்லையான்
மங்கு றாது வாழ்வ ளித்த ருண்ம லர்க்கண் வைத்தியே. ௮

படியி லாப்ப டிமை யோடு சிற்ப ரவி சும்பிடைத்
தொடிய ணிந்த தோள்கள் வீசி யாடு துங்க வேங்கட
கொடிய ணிந்த மாம தில்கு லாய சோணை மன்னநின்
அடியர் தங்க ளன்பெ னக்கு நாளு மாக வேண்டுமே. ௯

எனக்கெ னக்கி டந்த யாவு மன்றி யவ்வெ னையுமே
தனக்கெ னப்பு சித்த மைதி சான்ற பூன்ற வேங்கட
மனக்கி யாவ தும்ம கிழ்ச்சி யெஞ்சி டாத்தி ருத்தனும்
நினக்கி யாது தொண்டு செய்ய நீணி லங்கி டப்பதே. ௧௦

சிந்தை யற்ற செல்வ நேர்தி னைத்து ணைசி றக்குமோ
புந்தி யாற்பு ணர்ந்து போம்பு ரந்த ராதி போகமும்
எந்தை யாய வேங்க டேச வெம்ம னோர்க்க ளிக்குமவ்
விந்தை யாய போக மேதி னிக்க ணெங்கு மல்கவே. ௧௧

திருச்சிற்றம்பலம்

---

௯. ஆனந்த பரவசம்

(கலிநிலைத்துறை)

† பண்: காந்தாரம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

பச்சை யொருபாற் படர்ந்திவ் வுலகம் பாலிக்கும்
செச்சைப் பெருமான் பிச்சைப் பெருமான் செங்கண்ணுற்
கச்சை விசித்துக் காண்பார் தங்கள் கலிதீர்க்கும்
விச்சைப் பெருமான் விநோத ரமணப் பெருமானே. ௧

---

† சிந்தை யிடையார் தலையின் மிசையார் — என்னும் தேவாரப் பண்.

உன்று ஏல்லா தொன்றுங் கருதா வுழுவலினர்
கன்று யென்றுங் கசிந்துள் ளுருகிக் கழல்சேர்ந்தார்
சென்றார் தம்பின் செலவுந் தேற்றேன் சிவலோகா
பொன்று தின்னும் புவிக்கோர் பொறையாப் போனேனே.

அடைந்த நேயர் தம்மை யருளி யவலத்தால்
இடைந்து போகா தன்ன ரிதய மெனுங்கல்லைக்
கடைந்து மேன்மேற் சுடரக் காட்டுங் கதிர்க்கண்ண
மிடைந்த வினையான் மிடிப்பட் டேன்வேங் கடவோனே.

உறவா வுன்று ளுற்றார்க் கவ்வுன் னுறவேமெய்த்
துறவா வொழியுந் தூயோய் துரியோய் பிறர்போலப்
பிறவா யாக்கைப் பெருவேங் கடவோ யருள்பெய்யாய்
சிறவா யாக்கைச் சிறியே னுனைச்சேர்ந் திடுமாறே. ௪

சேரா யெனின்மெய் நீரா யுருகித் திகைத்துக்கண்
ணீராற் றமிழ்ந்து நிலைகெட் டழிவே னெடுஞ்சொற்பூந்
தாரா யென்னைச் சாரா யகில தருவைத்தான்
வேராய்த் தாங்கும் வியன்வேங் கடமா முதலோனே. ௫

வாளா வாணுள் விழலுக் கிறைத்த வறியேனைத்
தோளா மணியே தோளாச் சுரையாத் தொலையாதே
ஆளா வேற்று யடியேற் காவென் றருள்செய்தி
கேளா தளிநின் கேடில் புகழ்தான் கெடாவாறே. ௬

ஊத்தை நாயே னுன்ற னுண்மை யடியாரைக்
கோத்தை வாயாற் கொடுமை சிறிதே கூறினேன்
போத்தை விலங்காய்ப் புலப்பின் னடந்தேன் புந்திக்குட்
கூத்தை யுகந்தாய் குலவேங் கடநின் குணமென்னே. ௭

தானே மெய்யாத் தானே காட்டித் தந்தாய்க்குத்
தேனே பாலே தெளிவே போல்வேங் கடதேவா
ஊனே யுருகே னுளமும் பதையே னுயிர்சோரேன்
போனே னவநாள் பொற்ற ளெங்ஙன் புகுவேனே. அ

தூங்கி மடிந்த சோம்ப லேனைத் துயினீங்க
வாங்கி நோக்கா லென்னைத் தனது வயமாக்கி
மூங்கை யேனைக் கொண்டு தன்சீர் மொழிவித்த
வேங்க டேசன் விச்சைக் கிணையும் வேறுண்டே. கூ

கயமென் றெள்ளிக் கழியா திந்தக் கடையேனை
உயவென் றுள்ளங் கொண்டா யுடையாய் கொளலுநான்
வயமொன் றின்றி யனைத்து முனக்கே வயப்பட்டேன்
செயவேங் கடநின் சிந்தைப் படிநீ செய்வாயே. க௦

திருச்சிற்றம்பலம்

க௦. ஆனந்தாதீதம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

தாள தாமரை தலையில் வேய்ந்துநல்
வாத வூரனுர் முதலி யோர்களை
ஆளு டைப்பிரா னுதி வேங்கட
னருளி னுழியா னுட்கொள் வானெனை

---

† மன்னி யூரிறை — என்னும் தேவாரப் பண்.

நீள வந்துமா னிடவு ருக்கொடு
நேர்ப டப்பெற்று நெறிப்ப டாத்தியேன்
மாளு கின்றிலேன் மைய னெஞ்சினேன்
மாய நேயனேன் வஞ்ச மென்னையே. க

ஆது மென்றனை யடைந்த வன்பருக்
காக்க மேற்பட வருள்செய் வண்மைகேட்
டோதி யுன்புக ழுன்ன டிச்சர
ணென்றி யுய்ந்திட வுன்னை நண்ணினேன்
ஏது கொண்டுநா னேது செய்யினு
மெம்பி ரானுனை யெணன்ம றக்கிலேன்
மூது ணர்வுடை மோன வேங்கட
முகம்பு ரிந்தருண் மூட னேனையே. உ

நேய ராவுனை நேர்ந்த வேனையோர்
நிமல வானிடை நிலவ வென்னையிம்
மாய வாழ்விடை மங்க வைத்தியே
லென்ப யத்ததோ மாண்பு னக்கினிப்
பேய னாயினும் பிள்ளை தம்மிடைப்
பெற்ற தாய்க்கொரு பேத மாகுமோ
தீய னென்றெனைத் தெழித்தி டாதருள்
செய்தி வேங்கட தேவ தேவனே. ௩

ஏவ லோரைநன் கேவல் கொண்டவர்க்
கிறைமை யீந்துவா ழுவித்தவா
பாவ லோரைநிற் பாடு வித்துமேற்
பட்டி மண்டப மேற்று வித்தவா

ஆவ லோரகங் குழைய வைத்தறி
வந்த மாங்கழ லடைய வைத்தவா
காவ லாக்கழல் கடையென் சென்னியிற்
கவித்த வேங்கட கருணை யென்னையே. ௪

என்கை நிற்கலா லேனை வானவர்க்
கெழுந்து கூம்பலா தென்னை யாண்டபின்
முன்கை யானைவாய்க் கன்ன லாவுனன்
முகந்து கொண்டநா னரிய முத்திதான்
அங்கை தன்னிலா மலக மென்றலா
லரும்பெ றற்பொரு ளாகி னைகிலேன்
கங்கை பாய்சடைக் காட்டி லம்புலி
கரக்கும் வேங்கடக் கடவுள் வானனே. ௫

விச்சை மிக்கநின் வீர வாள்விழி
வீசி மன்மமேல் வேறு செய்தனை
கொச்சை யென்றெனைக் கூற வூரர்நின்
கோயில் வாயிலிற் கூட்டி வைத்தனை
பிச்சை யேற்றுணும் பிச்ச னுக்கிநின்
பெரிய வன்பருக் குரிய னுக்கினை
மிச்சை வாழ்விடை மீள வும்புகுத்
தற்க வேங்கட தெய்வ மெய்யனே. ௬

பாட்டி தன்னைமுன் பார றிந்திடப்
பறித்த பாரிதன் பறியி தாமெனக்
கேட்டி லெற்குநல் லுறுதி யாம்படி
கேடி லாவிழுப் பொருளி தாவெனக்

காட்டி யிந்தநின் கழலே யென்கணே
காண்க லாமையென் கருத்து ணின்றநீ
மீட்டு நின்றெனை மீள வும்பரி
தவிக்க விட்டிடேல் வேங்க டேசனே. எ

உன்னை விட்டொரு காலும் வேறுபட்
டொழிக லாதயா னொழிந்த தாமருண்
டுன்னை மீட்டுமீட் டுறவ தற்குனு
முளக்க வல்கெட வுறுதி யீந்தருள்
என்னை யீன்றநல் லியாயு மாகிமா
ணெந்தை யாகியெம் பிரானு மானவா
என்னை யென்னித யத்த லத்திடை
யென்று நிற்கவைத் திறைர மணனே. அ

பிஞ்சி லேபழுத் திட்ட பேதையேன்
பிரானு னக்குண வாப்பெய் தேன்மனம்
நஞ்ச மாயினு முண்ட மைந்திடாய்
நயத்த குங்குண நாக ரீகனே
உஞ்சு போகவிவ் வூத்தை யேற்கரு
ளுதவு கென்றநா னுன்னை யோர்தலும்
விஞ்சு நல்விருந் தாக வேன்றெனை
யாண்ட வேங்கட வீர சிங்கமே. ௯

ஆண்ட வள்ளலே போற்றி யாருயிர்க்
கெய்ப்பில் வைப்பனே போற்றி யம்பலத்
தாண்ட வாகழல் போற்றி தந்தைதாய்
போற்றி தம்பிரான் போற்றி தஞ்சனேன்

மூண்ட வல்வினை மூடுக லாததன்
 மூல மோகமா மூளைக்கி மூங்கொடும்
நீண்ட வேங்கட போற்றி நின்பெருங்
 கிழமை நாடொறும் போற்றி போற்றியே. ௧0

திருச்சிற்றம்பலம்

௬௨. தேவ பாணி

௧. ஒன்றி யொன்றுமை

(கோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

எதனாலே காணுங்கண் ணதுவெதனைக் காணாதோ
எதனாலே கேட்குங்கா ததுவெதனைக் கேளாதோ
எதனாலே யுண்ணும்வா யதுவெதனை யுண்ணாதோ
அதுதானே ரமணப்பெ ரம்மான் கண்டீர். ௧

எதனாலே யுணுற்றுமுடம் பதுவெதனை யுணுற்றாதோ
எதனாலே யிசைக்கும்வா யதுவெதனை யிசைக்காதோ
எதனாலே யெண்ணுமன மதுவெதனை யெண்ணாதோ
அதுதானே ரமணப்பெ ரம்மான் கண்டீர். ௨

† எம்பிரா னெனக்கமுதம் — என்னும் தேவாரப் பண்.

எதனாலே யியலுமியல் பதுவெதனை யியற்றாதோ
எதனாலே யறியுமதி யதுவெதனை யறியாதோ
எதனாலே நுகருமுயி ரதுவெதனை நுகராதோ
அதுதானே ரமணப்பே ரம்மான் கண்டீர். ௩

திருச்சிற்றம்பலம்

---

௨. இன்றியமையாமை

(கோச்சகக்கலிப்பா)

† பண்: கொல்லிக்கௌவாணம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

எவனன்றி யெம்மனமு மெண்ணாதோ வின்னும்
எவனன்றி யெவ்வாயு மியம்பாதோ பின்னும்
எவனன்றி யெவ்வுடம்பு மியங்காதோ வென்னும்
அவனன்றே ரமணப்பே ரம்மான் கண்டீர். ௧

எவனன்றி யெச்சுதியுங் கேளாதோ வின்னும்
எவனன்றி யெவ்வுலகுங் காணாதோ பின்னும்
எவனன்றி யிம்மாயை யியலாதோ வென்னும்
அவனன்றே ரமணப்பே ரம்மான் கண்டீர். ௨

எவனன்றி விசும்பாதி யிலவாமோ வின்னும்
எவனன்றி யிருசுடரு மிலங்காவோ பின்னும்
எவனன்றி யியமானு மியையானோ வென்னும்
அவனன்றே ரமணப்பே ரம்மான் கண்டீர். ௩

திருச்சிற்றம்பலம்

---

† தம்மானை யறியாத — என்னும் தேவாரப் பண்.

௩. அடிச்சார்ந்தார்

(கலிவிருத்தம்)

† பண்: குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

பல்லோர் முனிவெய்தப் பயனில்லவைசொல்லும்
புல்லோ ரறியாத புகழ்சால் செழுஞ்சோணைக்
கொல்லா நலஞ்சான்ற குணவேங் கடநாத
நல்லா னடியேத்த வல்லார் நல்லாரே. க

கருமா யங்கொண்ட களவின் மிகவல்ல
திருமா லறியாமெய்த் திறஞ்சால் செழுஞ்சோணைக்
குருமார் தமக்கெல்லாங் குருவேங் கடநாதப்
பெருமா னடியேத்தப் பெறுவார் பெரியாரே. உ

குறியா தொன்றேயுங் குறியார் குறிப்பின்கட்
பிறியா தெஞ்ஞான்றும் பிறங்குஞ் செழுஞ்சோணைச்
செறிவார் தரிசிக்குந் திருவேங் கடநாத
அறிவோ னடியேத்த வறிவா ரறிவாரே. ௩

திருச்சிற்றம்பலம்

---

† கற்றங் கேரியோம்பி — என்னும் தேவாரப் பண்.

௪. உலகியல்

(கலிவிருத்தம்)

† பண்: குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

வன்மங் கெடவேவை தார்க்கும் பரிவெய்தித்
தன்மஞ் செயுமக்கள் சாருஞ் செழுஞ்சோணைக்
கன்மங் கழல்விக்குங் கனவேங் கடநாத
தன்மன் கழலேத்துந் தன்மந் தன்மமே. ௧

நல்குங் கொடையாலே நாளும் பெரிதோங்கும்
செல்வந் திகழ்மக்கள் சேருஞ் செழுஞ்சோணை
வில்வங் கமழ்வேணி வியன்வேங் கடநாதச்
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. ௨

அன்பின் வழிவந்த வறத்தான் மகிழ்கின்ற
இன்பங் கெழுமக்க ளியையுஞ் செழுஞ்சோணைத்
துன்பந் துடைப்பிக்குந் துணைவேங் கடநாத
இன்பன் கழலேத்து மின்ப மின்பமே. ௩

திருச்சிற்றம்பலம்

---

† கற்றங் கெரியோம்பி — என்னும் தேவாரப் பண்.

ரு. வீட்டியல்

(கோச்சகக்கலிப்பா)

† பண்: *சாளரபாணி (சக்கரவாகம்)*

திருச்சிற்றம்பலம்

மித்தைக்குண் மித்தையா மேதினியாற் கட்டுண்ட
பெத்தர்க்காத் தம்மைப் பிறப்பிக்கு மனுதிமல
முத்தர்க்குண் முத்தனு முழுமோனி வேங்கடப்பேர்
அத்தனருள் சிந்திப்பார்க் கரும்பெறல்வீ டெளிதன்றே.

பெய்தாரை போற்கருணை பெய்ம்முகிலா னைந்தொழிலும்
நொய்தாகச் செய்கடைக்கண் ணோக்கத்தான் வெய்தாக
வைதாரை வாழ்த்துமுயர் வாய்மையான் வேங்கடன்சீர்
ஐதாகப் பேசுவார்க் கரும்பெறல்வீ டெளிதன்றே. உ

நீற்றி னொளிபடர்ந்த நீணுதலோன் மாணிக்காக்
கூற்றி னுயிரைக் குமைகழலோன் கூற்றுறழ்கொல்
ஏற்றின் கொடியுயர்த்த வேற்றத்தோன் வேங்கடனல்
லாற்றின் படிநிற்பார்க் கரும்பெறல்வீ டெளிதன்றே. ங.

திருச்சிற்றம்பலம்

---

† முத்து வயிரமணி — என்னும் திருவிசைப்பாப் பண்.

௯. உரைச்சிறப்பு

(கட்டளைக்கலித்துறை)

† திருவிருத்தப் பண் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

கோலா கலவிழிக் கொள்ளை கொளப்பட்டுக்
கோதையர்மாட்
டாலாய்ப் பறந்த வடியார் கவற்சிக்
கருமருந்தாம்
மாலா மயற்றுகை மாய்க்குங் கதிர்க்கணன்
மாவலஞ்சேர்
தோலா மொழிப்புல வோன்றிரு வேங்கடன்
சொற்பொருளே. க

கையா லடங்காத கண்ணு லழிவெய்திக்
கன்னியர்மாட்
டையோ வருந்து மடியார் துயர்க்கலிக்
காரமுதாம்
மையா மயற்றுகை மாய்க்குங் கதிர்க்கணன்
மாண்பயன்சேர்
செய்யா மொழிப்புல வோன்றிரு வேங்கடன்
செம்பொருளே. உ

---

† சிந்திப் பரியன — என்னும் திருவிருத்தப் பண்.

வெருளா வியங்கும் விழியான் மயங்கிமா
மேனியர்மாட்

டுருளா வுழன்ற வடியா ருயக்கத்துக்
கோர்மருந்தாம்

மருளா மயற்றொகை மாய்க்குங் கதிர்க்கணன்
மங்கலநற்

பொருளா மொழிப்புல வோனருள் பூத்துப்
புகல்பொருளே. ௯

திருச்சிற்றம்பலம்

எ. அருட்சிறப்பு

---

† (இன்னிசைவெண்பா)

திருச்சிற்றம்பலம்

வாரிதிசூழ் வையத்தை வாழ்விக்கும் பன்னிரண்டு
சூரியர் போலச் சுடர்பூத்த லல்லது
காரிருள்வாய்க் கப்புமோ கண்கருத்து வேங்கடவன்
பேரருள்வாய்ப் பட்டதன் பின்பு. ௧

மாயிரு ஞாலத்தை வாழ்விக்கும் பன்னிரண்டு
ஞாயிறு போலச் சுடர்பூத்த லல்லது
தீயிருள்வாய்ச் சேருமோ சிந்தை யொளிரமணச்
சேயருள்வாய்ச் சேர்ந்ததன் பின்பு. ௨

---

† கார்த்திகை காதில் — என்னும் பரிபாடற் பகுதியைத் தழுவியது.

மொய்திரைசூழ் வையத்தை மோதஞ்செய் பன்னிரண்டு
துய்யசுடர் போலச் சுடர்பூத்த லல்லது
மையிருள்வாய்ப் பட்டுமன மங்குமோ வேங்கடவன்
பெய்யருள்வாய்ப் பட்டதன் பின்பு. ௩

திருச்சிற்றம்பலம்

அ. அனைத்து நீ

(கோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

பண்டாய மன்னுயிர்க்குப் பரமபிதா நீயாயிற்
பெண்டாய மாதாவார் பிறங்குசீர் வேங்கடவா
பெண்டாய மாதாவும் பேணுங்கா னீயாயின்
உண்டாய வெச்சமா முயிர்த்தொகையு நீயன்றே. ௧

அவத்தைக் கிடனாகா வருவமே நீயாயிற்
கவற்றும் பலவுருவார் கனமாய வேங்கடவா
கவற்றும் பலவுருவுங் காணுங்கா னீயாயின்
அவற்றுக் கலப்பாய வருவுருவு நீயன்றே. ௨

நிகிலங்கட் கெல்லாமோர் நிமித்தமே நீயாயின்
அகிலங்கட் கொருமுதலா ரறிவாய வேங்கடவா
அகிலங்கட் கொருமுதலு மறியுங்கா னீயாயின்
அகிலங்க ளாயவக் காரியமு நீயன்றே. ௩

திருச்சிற்றம்பலம்

---

† எம்பிரா னெனக்கமுதம் — என்னும் தேவாரப் பண்.

௬. பேத வபேதம்

(கோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

நீயே பதியாவாய் நீயே பசுவாவாய்
நீயே நிகளமுமா நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
நீயே யவையாத னீங்கியோ நீங்காதோ
நீயே நிகழ்த்துதியென் னெஞ்சந் தெளிவுறவே. ௧

நீயேயச் சித்தாவாய் நீயே யசித்தாவாய்
நீயே மகேச்சுரனு நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
நீயே யவையாத னீங்கியோ நீங்காதோ
நீயே நிகழ்த்துதியென் னெஞ்சந் தெளிவுறவே. ௨

நீயே யுலகாவாய் நீயே யுயிராவாய்
நீயே யிறைவனுமா நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
நீயே யவையாத னீங்கியோ நீங்காதோ
நீயே நிகழ்த்துதியென் னெஞ்சந் தெளிவுறவே. ௩

திருச்சிற்றம்பலம்

---

† துன்னம்பெய் கோவணமும் — என்னும் தேவாரப் பண்.

கo. அறிதற் கருமை

(கோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

நீயே யடியாவாய் நீயே நடுவாவாய்
நீயே முடியுமா நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
சேயேநின் னுண்மைநிலை தினையளவுந் தேருதோர்
ஏயே யவற்றியல்பை யெண்ணமிடல் யாண்டையதே. க

நீயேதா னவ்வாவாய் நீயேதா னுவ்வாவாய்
நீயேதான் மவ்வுமா நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
சேயேநின் னுண்மைநிலை தினையளவுந் தேருதோர்
ஏயே யவற்றியல்பை யெண்ணமிடல் யாண்டையதே. உ

நீயே யயனுவாய் நீயே யரியாவாய்
நீயே யரனுமா நிகழ்ந்திடுவாய் வேங்கடவா
சேயேநின் னுண்மைநிலை தினையளவுந் தேருதோர்
ஏயே யவரியல்பை யெண்ணமிடல் யாண்டையதே. ங

திருச்சிற்றம்பலம்

---

† துன்னம்பெய் கோவணமும் — என்னும் தேவாரப் பண்.

கக. விடுதலை வேட்கை

(கோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

நீயாதி யுயிர்த்தொகையு நீயாதி யுடம்புகளும்
நீயாதி பரவெளியு நிறைவாய வேங்கடவா
நீயாமவ் வுடம்பொழிய நீயாமவ் வுயிர்த்தொகைதாம்
நீயாமப் பரவெளியா நிறைந்திடத்தா னுகாதோ. க

நீயாதி யுள்வளியு நீயாதி புற்புதமும்
நீயாதி நெடுவெளியு நிறைவாய வேங்கடவா
நீயாமப் புற்புதம்போய் நீயாமவ் வுள்வளிதான்
நீயாமந் நெடுவெளியா நிறைந்திடத்தா னுகாதோ. உ

நீயாதி விளக்கினமு நீயாதி குடத்திரளும்
நீயாதி சுடர்வெளியு நிறைவாய வேங்கடவா
நீயாமக் குடமுடைய நீயாமவ் விளக்கினந்தாம்
நீயாமச் சுடர்வெளியா நிறைந்திடத்தா னுகாதோ. ந

திருச்சிற்றம்பலம்

---

† எம்பிரா னெனக்கமுதம் — என்னும் தேவாரப் பண்.

கஉ. அசல நிலை

(கோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

சிந்தியா நின்றழலுஞ் சிந்தைமுழுச் சூனியமாய்
முந்தியார் கந்தழியாய் முடிந்ததிரு வேங்கடவா
சந்தியா நின்றார்க டாங்காணத் தானேதோ
புந்தியா னினைகின்றாற் போல்கின்றாய் நினையாதாய். க

ஏகவறி வாயொழிந்த விறையாகிப் பேச்சற்ற
மாகமென நிகழ்கின்ற மறைப்பொருளாம் வேங்கடவா
தாகமுறு மன்பர்க்குத் தாமதுவா நிற்குமது
போகவியல் பேசுகின்றாற் போல்கின்றாய் பேசாதாய். உ

நிலங்காண நின்றவுயிர் நில்லாது தொழிற்படத்தான்
அலங்காது நின்றகாந் தாசலமாம் வேங்கடவா
நலங்காண நாடினர்க்கோர் நரன்போல வேதோகட்
புலங்காண வாற்றுகின்றாற் போல்கின்றா யாற்றாதாய். ந

திருச்சிற்றம்பலம்

---

† எம்பிரா னெனக்கமுதம் — என்னும் தேவாரப் பண்.

கஙு. குணாதீத நிலை

(கோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

காமத்தா லெய்துமனக் கலக்கமறத் தனதுதிரு
நாமத்தாற் கடிகின்ற நன்மைசால் வேங்கடவா
வாமத்தா லுறைகாம வல்லியைநீ நாணாளும்
காமத்தாற் றோய்ந்தவனே கடுக்கின்றாய் தோயாதாய். க

அரங்கவென வடல்புரியு மவுணர்க்கு மகமகிழ்ந்து
வரங்களைமுன் வரையாது வழங்கியநல் வேங்கடவா
கரங்களினா லாய்மலர்தூஉங் காமவே ளழகியபொன்
உரங்களைய வெகுண்டவனே யொக்கின்றாய் வெகுளாதாய். உ

அருளாலு முணருங்கா லடங்கலுமே தன்மயமாம்
தெருளாலு மிசைந்தொழுகுஞ் சின்மயமாம் வேங்கடவா
பொருளாக வுளத்தொளிர்செம் பொருளல்லாப் பொருள்களையும்
பொருளாக மருண்டவனே போல்கின்றாய் மருளாதாய். ங

திருச்சிற்றம்பலம்

---

† எம்பிரா னெனக்கமுதம் — என்னும் தேவாரப் பண்.

கச. முப்பொருண் முடிபு

(ஆசிரியவிருத்தம்)

† பண் : பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

யாது மனத்தா லெண்ணுங்கா
 லுண்டே யுண்டவ் வுயிரென்றி
ஏது மனத்தா லெண்ணுக்கா
 லின்றே யின்றவ் வுயிரென்றி
ஓது மந்த விருவிகற்பத்
 தியற்கை யுண்மை யுணர்த்துகெனப்
பேது கடிவேங் கடரமணப்
 பெருமா னுன்னைத் தொழுதேனே. க

உற்றே யுணரு மிவ்வுலக
 முயிருண் டாமே லுண்டென்றி
மற்றே யந்த மகிதலந்தா
 னுயிரின் றமே லின்றென்றி
எற்றே யந்த விருவெவ்வே
 றியற்கை யியைபென் றியம்புகெனச்
சொற்றேர் பொருள்வேங் கடரமணத்
 தோன்று லுன்னைத் தொழுதேனே. உ

---

† பற்றற் றர்சேர் பழம்பதியை — என்னும் தேவாரப் பண்.

உலகொன் றயலாப் புலனுமே
 னுளனோர் முதல்வ னென்றுரைத்தி
புலனன் றுமே னுலகற்று
 விலனம் முதல்வோ னெனப்புகறி
நிலையன் றுமவ் விருவேறு
 நீதத் தியைபு நிகழ்த்துகென
உலைவின் றும்வேங் கடரமண
 வுடையா யுன்னைத் தொழுதேனே. ௬

திருச்சிற்றம்பலம்

---

௧௫. உண்மை வழிபாடு

(தாழிசைக்கோச்சகவொருபோகு)

† பண்: வியாழக்குறிஞ்சி (சௌராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

நட்பொடு பகையறு நடுநிலை யாகும்
பெட்பது பொருளெனப் பேசிய பெருமனை
பெட்பது பொருளெனப் பேசிய ரமணநின்
நட்பது பொருளென நயந்துனைத் தொழுதும். ௧

உவப்பது முவர்ப்பது மொழியுப சாந்த
நிவப்பது பொருளென நிகழ்த்திய நேயனை
நிவப்பது பொருளென நிகழ்த்திய ரமணநின்
உவப்பது பொருளென வுவந்துனைத் தொழுதும். ௨

---

† பூவியல் புரிகுழல் — என்னும் தேவாரப் பண்.

தொழுவது மொழிவது மெனுமிரு தொழிலற்
றொழிவது பொருளென வோதிய வுறவனை
ஒழிவது பொருளென வோதிய ரமணநிற்
றெழுவது பொருளெனத் துணிந்துகை தொழுதும். ௩

திருச்சிற்றம்பலம்

---

௧௯. உண்மை யுணர்வு

(தாழிசைக்கோச்சகவொருபோகு)

† பண் : வியாழக்குறிஞ்சி (சௌராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

அறிவறி யாமையற் றறிவொரு வடிவாய்ச்
செறிவது தெளிவெனச் செப்பிய செல்வனை
செறிவது தெளிவெனச் செப்பிய ரமணநின்
அறிவரு மரைமல ரடியிணை தொழுதும். ௧

உணர்வுண ராமையற் றுணர்வொரு வடிவாய்ப்
புணர்வது புலமெனப் புகன்றிடு புலவனை
புணர்வது புலமெனப் புகன்றிடு ரமணநின்
உணர்வரு திருப்பத யுகமலர் தொழுதும். ௨

ஆய்வறி யாமையற் றறிவொரு வடிவாய்த்
தேய்வது திகழ்வெனத் தேற்றிய தேவனை
தேய்வது திகழ்வெனத் தேற்றிய ரமணநின்
தோய்வரு மலரடித் துணையுறத் தொழுதும். ௩

திருச்சிற்றம்பலம்

---

† பூவியல் புரிகுழல் — என்னும் தேவாரப் பண்.

கஎ. உண்மை நிலை

(தாழிசைக்கோச்சகவொருபோகு)

† பண்: வியாழக்குறிஞ்சி (செளராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

உள்ள லு மறத்த லு மோய்ந் துணர் வுருவாய்த்
தெள்ளுத நிலையெனத் தெரித்தொளிர் தேவனை
தெள்ளுத நிலையெனத் தெரித்திடு ரமணநின்
கள்ளூறு மலர்க்கழல் கருத்துறத் தொழுதும். க

உறங்க லு முணர்த லு மோய்ந் துணர் வுருவாய்ப்
பிறங்குத னிலையெனப் பேசிய தேவனை
பிறங்குத னிலையெனப் பேசிய ரமணநின்
நிறங்கிளர் பொலங்கழ னெஞ்சுறத் தொழுதும். உ

ஓர்வது மயர்வது மோய்ந் துணர் வுருவாய்த்
தீர்வது நிலையெனத் தேற்றிய தேவனை
தீர்வது நிலையெனத் தேற்றிய ரமணநின்
ஊர்மது மலர்க்கழ லுளமுறத் தொழுதும். ந

திருச்சிற்றம்பலம்

---

† பூவியல் புரிகுழல் — என்னும் தேவாரப் பண்.

௬௩. பண்டாய வேதம்

† (நேரிசைவெண்பா)

திருச்சிற்றம்பலம்

பண்டாய வேதப் பனுவற் சிரத்தாலும்
கண்டாய மாட்டாக் கழலிணைக்குத்—தொண்டாக
நாயா மெனைநயந்து நாய்ச்சிவிகை யேற்றுவித்தான்
தாயான வேங்கடவன் றான். ௧

தானாய பூன்றத் தனிமுதலாம் வேங்கடவன்
யானாகி நின்றே னியல்பழித்தான்—மானாபி
மானங் கெடுத்தான் மதிகெடுத்தான் மாறாத
மோனங் கொடுத்தான் முடித்து. ௨

முடித்துக் கொடுத்தமுழு மோனத்தா லெற்கு
வடித்துக் கொடுத்தான் மறைநூல்—வடித்த
மறைநூற் பொருளென் மனப்பொருளா யாயிற்
றிறைவேங் கடனின் னருள். ௩

அருள்கூர் விழியா லடியே னிதயத்
திருள்சே ரகப்பற் றெறிந்து—பொருள்விளக்கம்
பற்றக் கொளுவியெனைப் பாலித்தான் மோனவெண்
கொற்றக் குடைரமணக் கோன். ௪

---

† பண்டாய நான்மறை — என்னும் திருவாசகத்தைத் தழுவியது.

கோனாகி யொண்பொருளைக் கொள்ளைகொண்டான் சற்குருவும்
தானாகி யாருயிரைத் தான்புசித்தான்—ஊனார்
குரவரா யென்னுடம்பைக் குற்றேலுங் கொண்டான்
கரவாக் கரவேங் கடன். ௫

கடக்குஞ் சரத்தைக் கடக்குங் கடுங்கண்
அடற்கே சரிநோக்கத் தாலே—விடக்கும்
கடையேனைச் சுட்டுக் கரியாக்கி னான்சிற்
புடைதோய் ரமணப் புமான். ௬

புமான்வேங் கடரமண பூமான் பெருமை
எமாலெடுத் துச் சாற்ற லெளிதோ—இமாசலத்தின்
மேலா மவனடிச்சீர் விஞ்சி யுலகளந்த
மாலா லரிதேன் மதிப்பு. ௭

மதித்தற் கரியமுழு மாணிக்கச் சோதி
கதித்தெழுந்தாற் போன்ற கதிரோ—டுதித்த
தெருள்வேங் கடரமணச் செஞ்சுடரைக் காண்பார்க்
கிருள்போமெய்ஞ் ஞான மெழும். ௮

எழுதற்கு வாரா வெழினலத்தான் சற்றும்
தொழுதற்கு வாராத் துரீயன்—கழுதுக்
கெளியனா யிமத் தெதிர்வேங் கடவன்
அளிய னரிய னலன். ௯

அலனாகி யொன்று மனைத்துமாய் நிற்கும்
குலவேங் கடரமணக் கோமான்—நிலமீது
வந்தருளித் தாடலைமேல் வைத்தருளி வாழ்வித்தான்
பந்தனையை முற்றும் பறித்து. ௧0

திருச்சிற்றம்பலம்

கூச. திருவெண்பா

†(நேரிசைவெண்பா)

திருச்சிற்றம்பலம்

*எந்தை ரமண னியல்புணரின் யாவருளும்
பந்தமறு ஞானப் பரம்பொருள்காண்—அந்தப்
பொருண்முடிவு தேறவப் பொய்யா மொழியோன்
அருண்மொழியே யாகமச்சான் றாம். ௬

நன்றன் றுலகியனீ நாட லெனக்குரியாய்
என்றென் றியம்பி யிருங்கழற்கே—என்றென்றும்
பொல்லேனை யாண்ட புகழ்வேங் கடரமண
நல்லோனை நாடிற்றென் னெஞ்சு. ௨

*கரிசனத்தி னெப்பறுமெய்க் கண்ணுடைய வள்ளல்
பரிசனத்து மெய்யன்பர் பார்க்கத்—தரிசனத்து
வாயிலாற் புக்குமதி மத்தனேன் சித்தமே
கோயிலாக் கொண்டான் குறித்து. ௩

*மாண்டகுபொன் னம்பலமா மாணிக்க வாசகர்நெஞ்
சீண்டி யுறைந்த விறைரமணன்—பாண்டித்
தகுவெள்ளி யம்பலமாச் சார்ந்தானென் வெள்ளை
மிகுமுள்ள மீதும் விழைந்து. ௪

---

† திருவாசகம் திருவெண்பாவைத் தழுவியது.

என்னைக் கரந்த வெவற்றின் கணும்பொருளா
என்னைக்காண் பித்த வியல்பதனால்—என்னையொன்
றின்றியவை யில்பொருளாக் கண்டே னிதுவதுவாத்
துன்றுரம ணன்செய்த சூது. ரு

தாதாடு தாமரைப்பொற் றாட்குத் தவறியுநான்
தீதோ கனவினுமே தேர்ந்தறியேன்—யாதோமுற்
செய்தேன்போற் சிந்தித்தென் சிந்தனைக்கே கோத்திட்டான்
கைதேர்ந்த வேங்கடன்வேற் கண். சு

கொலையுலா மென்றன் கொடும்பிறவித் தாவக்
கலையெலாம் போக்கிற்றுக் கண்டீர்—குளிர்மதியம்
போல்கின்ற வேங்கடன்கண் பொங்குந் திருவருளாற்
கால்கின்ற தண்ணென் கதிர். எ

*வெறியா ணவத்தால் விடயத்தைப் பற்றிப்
பெறலாகு மின்பமுழுப் பித்தாம்—பிறவா
இறவாமெய்ஞ் ஞானரம ணேசனடி யென்றும்
மறவாமை யொன்றே மகிழ்வு. அ

*ஒழுங்குபெறத் தன்னை யுபாசிப்போர்க் கின்பம்
வழங்கு முதாரகுண வள்ளல்—தொழுங்குலமாய்
யார்க்குஞ் சரணா மிறைரமணன் றாளேயென்
வாக்குமனஞ் சாரும் வழி. கூ

*தேனொழுகு தாமதுரச் செம்பதமன் பர்க்குமகப்
பேய்நடன மாடும் பிறர்களுக்கு—யானெனென
தென்பதுமுற் றீத்துவக்கு மின்பரம ணேசவள்ளல்
தன்பதுமத் தாளே சரண். கO

தாழ்வற்ற வேங்கடன்றற் சார்ந்தோரைத் தற்பதத்து
வாழ்விக்குஞ் செந்தா மரைக்கழல்கள்—ஊழ்வகையாற்
சேவிக்கத் தித்திக்குஞ் செந்தேனே யெம்மனோர்
ஆவிக்கு நல்ல வமுது. கக

*ஆபாத சூடமா ராவமுத வேங்கடன்றன்
சீபாத சிந்தனையாற் சேருமே—சாவாத
புத்தமுத முண்டுவக்கும் புத்தேளிர்க் கும்புதிதாம்
சுத்தசிவ ஞான சுகம். கஉ

பற்றற்ற பற்றுமப் பற்றன்றிப் பற்றுந்தீத்
தொற்றற்ற நீர்மையாற் றாயோரராய்ச்—சற்றும்
வழுவாத வாய்மையால் வேங்கடவன் பாதம்
தொழுவார்கட் கில்லை துயர். கங

*காலையொடு மாலையுமெக் காலு மியன்றவரை
வாலரம ணேசனருள் வாழ்த்தியே—மூலமாய்
மன்னுமவன் பாதம் வழிபடுமாற் றுனுயிர்க்குத்
துன்னு மமுதத் துவம். கச

அமுத வுருவா வடியேனை யாண்ட
அமித முழுமுதலா மண்ணல்—கமலமது
வெள்ளஞ் சுரக்குந்தாள் வேங்கடனை யுள்ளுவார்
உள்ளஞ் சுரக்குமின்ப வூற்று. கரு

*இதயத் தடத்தூ டெழினலம்பெற் றோங்கும்
சதத மலர்ந்துபசாந் தத்தேன்—எதிரும்
பரிபக் குவர்க்குப் பரமோப காரம்
புரிவித் தகரமணப் பூ. கசு

*குன்றின்மே லிட்ட குலவிளக்குப் போலன்பர்
மன்றன்மே லிட்ட மனத்தொளிர்வோன்—என்றன்மேல்
ஆர்வமொடு காரா ரகவிருளைப் போக்கினன்
தேவரம ணேசன் சிறந்து. கஎ

குருவாந் திருக்கோலங் கொண்டென்னை யாண்ட
திருவேங் கடரமண தேவன்—அருளாம்
தெருள்சே ரிதயத்தார் சேராரென் ஞான்றும்
மருள்சே ருலக மயல். கஅ

*ஆண்டுக் கொருமுறைதன் னண்ணா மலைப்படிவத்
தீண்டுபரஞ் சோதி யிலக்குவான்—ஆண்டுயக்கொண்
டென்னை யளித்தரம ணேசன் முழுமதிசேர்
நன்னயமார் கார்த்திகை நாள். கசு

*அந்தநன் னாளொன்றே யல்லா லநுதினமும்
தொந்தமறு சொந்த சொரூபமாய்—அந்தவொளி
சிந்தைக் கபிமுகமாய்ச் சேரவுபா சிப்பார்தம்
புந்தித் திமிரமறப் போம். உ0

பொன்மயமாஞ் சோணைப் பொருப்பரசாம் வேங்கடவன்
பன்மயமாக் காண்குறுமிப் பாரிடத்தைச்—சின்மயமாம்
தன்மயமாக் காட்டுஞ் சதுரறிந்த நல்லடியார்க்
கின்மையதாம் பொல்லா விருள். உக

*பன்றியோ டன்னப் பறவையுங்கா ணாததனி
வென்றிசேர் மெய்ஞ்ஞான வேங்கடன்றாள்—என்றுபோல்
என்று மொளிவிடுமே யெஞ்சா முழுமனத்தோ
டொன்றுமடி யார்த முளத்து. உஉ

*எங்குமுக மேய்ந்த விறையோ டுயிர்கலக்கும்
சங்கமுக வேங்கடவன் சந்நிதிக்கே—துங்கமிகு
பத்தியிற் றேய்வார் பசுத்துவம்போ யான்மபர
சித்தியுற் றுய்வர் தெளிந்து. உங

*யாவரே தம்மிதயத் தெந்தை ரமணனைத்தாம்
ஓர்வரோ வன்னா ருறப்பெறுவர்—மேவும்
அவன்சொருப மாமின் னருள்விழியால் யாவும்
சிவசொருப மாமெய்த் தெளிவு. உச

மன்றஞ்சிற் றம்பலமா மாணிக்கக் கூத்துகந்தான்
இன்றுஞ்சிந் தாகுலங்க ளீடழியப்—பொன்றுங்காண்
என்றென்று நோக்கி யெதிர்நின்ற வேங்கடனை
நன்றொன்றக் காண்மி னயந்து. உரு

*உன்முகமோர் காற்கண் டுளமகிழ்ந்தோர் மேன்மேலும்
நின்மகிமை யன்றி நினைவரோ—தன்மயமாம்
தேசகத்தி னன்றிவெளிச் சேர்வதா மோவுனது
வாசகத்தை யாய்ந்தோர் மனம். உசா

*ஆண்டரம ணாநின் னடியார்மிக் கார்ப்பரித்தல்
பாண்டவர்தூ தோடுமலர்ப் பங்கயனும்—காண்டலிலா
தன்றிடைந்த நின்று ளருள்வலத்தா லின்றியாம்
சென்றடைந்தே மென்னுஞ் செருக்கு. உஎ

*அடியேன் வழிபாட்டுக் காகமகிழ்ந் தேதும்
கொடையாக நல்கக் குறிக்கிற்—சடைமேற்
குழந்தைமதி சூடுங் குழகரம ணேச
குழந்தைமதி யென்றுங் கொடு. உஅ

*ஆண்டாயென் கும்பீ டரைக்கும்பி டாகாது
தூண்டா மணிவிளக்காந் தோன்றலே—மூண்டகந்தை
உன்னினுநா னென்னும்வே றோர்முதலுண் டென்னுமயற்
பின்னமதி பொன்றப் பிள. உகூ

*அண்ணு மலையிற்போன் றுதிபரா சத்தியோ
டெண்ணுவார்க் கெல்லா மிதநல்கித்—தண்ணார்
முகவா புரிக்கண்ணு மூர்த்திரம ணேசன்
தகவீற் றிருந்தருள்வன் றான். ௩0

சென்னைரம ணாச்சிரமச் சீர்பெறவென் சித்தத்தை
நன்னரொளிர் விக்குமெய்ஞ் ஞானகுரு—என்னவந்
தாண்டரம ணேசனரு ளாழி மடைதிறந்து
மூண்டெழுக ஞால முழுது. ௩க

திருச்சிற்றம்பலம்

—:o:—

கூரு. திருவுந்தியார் (க)

(கலித்தாழிசை)

† பண் : இந்தளம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

அச்சிறுத்தருளல்

கொச்சையர் போற்குறிக் கொள்ளாத தந்தைதேர்
அச்சை யிறுத்தன னுந்தீபற
அழகம்மை காண்முனே யுந்தீபற. க

---

†செய்யர்வெண் ணூலர்—என்பது போன்ற தேவாரப் பண்;
திருவாசகம் திருவுந்தியாரைத் தழுவியது.

பெற்றி யுணர்ந்துபின் பேணலுந் தன்னடி
வெற்றி யருளின னுந்தீபற
விநாயக வேங்கட னுந்தீபற. உ

அயனகமடக்கல்

எட்டோ டிரண்டறி யானென வேதனைக்
குட்டிச் சிறையிட்டா னுந்தீபற
குழந்தைப் பருவத்தி லுந்தீபற. ௩

சிவனுக்குபதேசம்

அந்தக் கணக்கை யறிதியோ நீயெனக்
கந்தக் குமரனை யுந்தீபற
காதலாய்க் கேட்டன னுந்தீபற. ச

முறைப்படி யுற்றுக்கேண் மோவெனச் சொற்றுன்
மறைப்பொருள் வேங்கட னுந்தீபற
மழலை மொழிகளா லுந்தீபற. ரு

குவியக் கருத்துக் குறிக்கொண்டு கேட்கச்
செவியிற் புகட்டின னுந்தீபற
சிவனுக் குபதேச முந்தீபற. சா

கோட்ட மிலாது குலவுமச் செம்பொருட்
பூட்டை விடுத்தன னுந்தீபற
புலவர் புகழவே யுந்தீபற. எ

சிவகுரு வாகத் திகழும் படிவத்
தவவுரு வத்துட னுந்தீபற
சந்தத நிற்பவ னுந்தீபற. அ

ஞான குருவாயிந் நாய்க்கு முணர்த்தினன்
மோன வொருமொழி யுந்தீபற
மோக முசிக்கவே யுந்தீபற. ௯

மாமனோடு குலவல்

மாதவ னோடு மலர்மக ளோடுநம்
மேதகு வேங்கட னுந்தீபற
மிகவிளை யாடுவ னுந்தீபற. ௧௦

செம்மான் மகளைத் திருடுந் திருடனல்
லம்மானம் மாமியென் றுந்தீபற
அழைத்துக் குலாவுவ னுந்தீபற. ௧௧

இரணிய சங்காரம்

பிள்ளையைக் கொண்டு பிதாவுயிர் கொல்வித்த
கள்ளக் கருமாய னுந்தீபற
கனமாய வேங்கட னுந்தீபற. ௧௨

மாவலிக் கருளல்

வாமன னாகியம் மாவலி பாற்சென்று
பூமி யிரந்தன னுந்தீபற
பூதல முய்யவே யுந்தீபற. ௧௩

கோடியென் றோர்மொழி கூறக் குறளுரு
நீடி நிமிர்ந்தன னுந்தீபற
நினைவுமுற் றற்றதென் றுந்தீபற. ௧௪

எத்தல முந்தன் னிரண்டடி யாலளந்
துத்தமன் சென்னியி லுந்தீபற
ஓடி யிட்டன னுந்தீபற. ௧௫

அவ்வடி யாலவ் வவுண வரசனைச்
செவ்விதி னுண்டன னுந்தீபற
திருவேங் கடபிரா னுந்தீபற. கசு

பகையிடம் பரிதல்

நகையின னின்றுபோய் நாளைவா வென்றுன்
பகைவ னிடம்பரிந் துந்தீபற
பரங்கரு ணைக்கட லுந்தீபற. கஎ

கடமை நிறுவல்

ஞாட்பிடை ஞான நவின்று மறக்களம்
வேட்பித்தான் வேங்கட னுந்தீபற
விசயனைக் கொண்டுமுன் னுந்தீபற. கஅ

ஆல மருந்தல்

உளைந்த வமரர்க ளோலிட வாழி
விளைந்த விடமுண்டா னுந்தீபற
வேங்கட நாயக னுந்தீபற. கசு

ஆடல் வென்றி

காளி வெகுண்டிந்தக் காசினி தன்னைநீர்த்
தூளி படுப்பலென் றுந்தீபற
துணுக்கென் றெழுந்தன ளுந்தீபற. உ0

ஊடிக் கனன்றவக் காளி யுடனடம்
ஆடிப் பெருஞ்சய முந்தீபற
அடைந்தனன் வேங்கட னுந்தீபற. உக

அயன்றலை கோய்தல்

எள்ளிய வேத னிறுமாப் பழிந்திடக்
கிள்ளின ஞேர்தலை யுந்தீபற
கிளர்சிவ வேங்கட னுந்தீபற. உஉ

அந்தக வதம்

அறைகழ லோடெதி ரந்தகற் செற்றுக்
கறைகெழு வேன்மிசை யுந்தீபற
காயத்தை யேந்தின னுந்தீபற. உங

திரிபுர மெரித்தல்

இலகிய முப்பொன் னெயில்கொடு சில்லோர்
உலகுயிர் யாவையு முந்தீபற
ஒழிக்கத் தொடங்கின ருந்தீபற. உச

இஞ்சிகண் மூன்றினின் றெய்திய துன்பநின்
றுஞ்சிட யாவரு முந்தீபற
ஓலமிட் டார்த்தன ருந்தீபற. உரு

அதெந்துவே யென்றமைத் தவ்வவர் கட்கும்
விதந்தருள் செய்தன னுந்தீபற
விறல்கெழு வேங்கட னுந்தீபற. உசா

அமரரை வெஞ்சன மாக்கொடு சித்த
ரமண சதாசிவ னுந்தீபற
இகன்மேற் படர்ந்தன னுந்தீபற. உஎ

அயர்ந்த மகிழ்வா லமரர் தமைத்தாம்
வியந்து தருக்கின ருந்தீபற
வித்தக ஞேர்ந்தன னுந்தீபற. உஅ

ஓர்தலு மம்மட வோர்பொருட் டாலொளி
ஏர்தரு வெண்ணகை யுந்தீபற
எழுந்து பொடித்ததா லுந்தீபற. ௨௯

பொடித்தெழு புன்னகை யாற்புர மூன்றும்
பொடித்தன பொங்கலொ டுந்தீபற
புராரியென் றேத்தின ருந்தீபற. ௩0

தெரியாத் தனத்தா லெழுந்த செருக்காற்
பரிபவ முற்றன ருந்தீபற
பட்டுப் படிந்தன ருந்தீபற. ௩க

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியி லுந்தீபற
உற்றசோர் வுன்னுங்கா லுந்தீபற. ௩௨

வந்த சிறுமையை வாய்த்த பெருமையா
அந்த விபுதர்க ளுந்தீபற
அணியா வணிந்தன ருந்தீபற. ௩௩

உயிர்களை யாரிரு ளுய்த்து விடுந்தீச்
செயிர்தரு பொய்ம்மான முந்தீபற
தீர வொழிந்தன ருந்தீபற. ௩௪

தக்கனை யொறுத்தல்

முக்கணற் காய்ந்துமுன் வேள்வியில் வீரனாற்
றக்கனு மற்றொரு முந்தீபற
தண்டனை யுற்றன ருந்தீபற. ௩௫

தண்டித்து ஞான முணர்த்திய சாமியென்
றண்டித் துதித்தன ருந்தீபற
ஆண்ட ரமணனை யுந்தீபற. ௩௬

சலந்தர சங்காரம்

சலந்தரற் செற்றெளிர் சக்கர மாயன்
வலம்பெறத் தந்தன னுந்தீபற
வாகை ரமணனன் குந்தீபற. ௩எ

யானை யுரித்தல்

இடத்துமை யஞ்ச வெதிர்ந்த களிற்றை
அடர்த்துரி போர்த்தன னுந்தீபற
ஆண்டகை வேங்கட னுந்தீபற. ௩அ

காமற் காய்தல்

சொற்பன மென்னத் துறந்தநற் றுபதர்
தற்பத நாடின ருந்தீபற
சநகாதி நால்வரு முந்தீபற. ௩௯

அக்கணம் புக்கன னற்ப சமாதியிற்
றக்கணு மூர்த்தியா யுந்தீபற
தற்பத வேங்கட னுந்தீபற. ச0

சிற்பர யோகு செறிந்தன ராய்ச்சிவ
தற்பர ராயின ருந்தீபற
தாபதர் நால்வரு முந்தீபற. சக

அயுதம்பல் கற்ப மகன்றன பின்னும்
பெயர்கிலன் றன்னிலை யுந்தீபற
பேச்சொடு மூச்சிலை யுந்தீபற. சஉ

சூர்தரு துன்பம் பொறுக்கலாத் தேவர்கள்
ஓர்தர லாயின ருந்தீபற
உற்ற வுபாயமொன் றுந்தீபற. ச௩

விண்ணவ ரேவினர் வேளைமெய்ஞ் ஞானத்தீக்
கண்ணுத லோனிட முந்தீபற
கலங்கினன் காமனெஞ் சுந்தீபற. சச

நறுநாற்ற மில்லாத நன்மல ராய
மறுமாற்றம் யாவுந்தா முந்தீபற
மதன்மற்றுச் செய்வதென் னுந்தீபற. சரு

ஈயாடு மோகரு டற்கெதி ரென்றந்தத்
தீயாடு தேவனை யுந்தீபற
சிந்தித் தலமந்தா னுந்தீபற. சசா

புழுக்கள் குளவியைப் போலத் தியான
ஒழுக்க முளோனுகி யுந்தீபற
உற்றடைந் தான்முன முந்தீபற. சஎ

முதற்கணே யேவ முழுமுதன் மூர்த்தி
நுதற்கண் மலர்ந்தன னுந்தீபற
நோக்கம் படர்தர வுந்தீபற. சஅ

பூவாளி தொட்டவன் பொங்கெரி வாய்ப்பட்டுச்
சாவா விழுந்துட னுந்தீபற
சத்தாகி நின்றன னுந்தீபற. சகூ

அருந்ததி போலுந் திருந்திழை மட்டிற்
பொருந்தப் புலப்பட்டா னுந்தீபற
புண்ணிய னணையா னுந்தீபற. ருO

கண்டவர் யாவருங் காமாரி யென்னவே
விண்டு வியந்தன ருந்தீபற
வேங்கட நாதனை யுந்தீபற. ருக

எமனை யுதைத்தல்

வழிபா டியற்றிய மார்க்கண்ட மாணி
யுழிவந்த காலனை யுந்தீபற
ஓங்கி யுதைத்தன னுந்தீபற. ருஉ

உதைத்தலுந் தாங்கா தூரமிக்க காலன்
பதைத்து விழுந்தன னுந்தீபற
பார்முடி சாய்ந்திட வுந்தீபற. ருந

அயன்முத லாய வனைவரும் வேண்ட
வியன்முதல் வேங்கட னுந்தீபற
வெகுளி தணிந்தன னுந்தீபற. ருச

விழுந்து கிடந்தவன் மெல்ல வுணர்வுற்
றெழுந்தனன் கண்டன னுந்தீபற
எதிரி லிறைவனை யுந்தீபற. ருரு

காண்பார் நகைக்கக் கருத்தழிந் தட்கிப்போய்ச்
சேண்பட நின்றன னுந்தீபற
சிந்தை கலங்குற வுந்தீபற. ருசு

கரங்கட்டி வாய்புதைத் தாடை யொதுக்கி
உரங்கெட்ட வக்கால னுந்தீபற
ஓம்படை சொற்றன னுந்தீபற. ருஎ

உன்னடி யோரடி யோரடி யோரையும்
துன்னுவ தில்லையென் றுந்தீபற
சொல்லித் துதித்தன னுந்தீபற. ருஅ

தம்பிரான் புண்ணியந் தன்றலை தப்பிற்றென்
றம்பிகை பாகனை யுந்தீபற
அஞ்சலி செய்தன னுந்தீபற. ருகூ

சாம்பலாய் வீழ்ந்த மதனினுந் தான்மேலென்
றேம்பலோ டேகின னுந்தீபற
எமதன்ம ராயன்று னுந்தீபற. ௬0

மாலய னாதி மகேந்திரர் யாவரும்
காலகா லன்னென்று ருந்தீபற
கனரம ணேசனே யுந்தீபற. ௬க

இராவணற் கருளல்

அமையா தரன்கயி லாயச் சிலம்பை
உமையா ணடுங்குற வுந்தீபற
ஓடி யெடுத்தன னுந்தீபற. ௬௨

எய்திய தந்த விராக்கத னாலென
ஐதி னுணர்ந்தர னுந்தீபற
அழுத்தினன் றாள்விர லுந்தீபற. ௬௩

அதன்பொறை யாலே யடர்ப்புண் டகந்தை
மதன்கெட லாயின னுந்தீபற
மதுகை யிராவண னுந்தீபற. ௬௪

ஏழிசை யாலே யெடுத்து மறைத்துதி
யாழொடு பாடின னுந்தீபற
இரங்கினன் வேங்கட னுந்தீபற. ௬௫

வாளொடு வாணாள் வழங்கினன் மங்கல
நாளணி கொள்கென வுந்தீபற
நவின்று விடுத்தன னுந்தீபற. ௬௬

இருவர்க்கருமை

என்னிக ராரென் றிருவர் கலாஞ்செய
அன்னவர் தம்மிடை யுந்தீபற
ஆரழ லாய்நின்று னுந்தீபற. ௬௭

வெடிதரு சோதி வியனுருத் தூணின்
அடிமுடி காண்கில ருந்தீபற
அரியும் பிரமனு முந்தீபற. சுஅ

அகந்தை தொலைந்தவ ரண்ணு மலையை
உகந்து பணிந்தன ருந்தீபற
உணர்ந்து ரமணனை யுந்தீபற. சுகூ

தவத்தரை யுணர்த்தல்

தாரு வனத்திற் றவஞ்செய் திருந்தவர்
பூருவ கன்மத்தா லுந்தீபற
போக்கறை போயின ருந்தீபற. எ0

கன்மத்தை யன்றிக் கடவு ளிலையென்னும்
வன்மத்த ராயின ருந்தீபற
வஞ்சச் செருக்கினா லுந்தீபற. எக

மாதவர் தம்மொடு வாழ்க்கை நடாத்திய
மாதரார் தாங்களு முந்தீபற
மதிகெட்டுப் போயின ருந்தீபற. எஉ

கொழுநர்த் தொழுதெழு கொள்கையர் தம்போல்
எழுநிலத் தும்மில ருந்தீபற
என்றிறு மாந்தன ருந்தீபற. எங

களங்கங் கதுவாப் பளிங்கது போல
விளங்குறு சின்மய னுந்தீபற
விசித்திர வேங்கட னுந்தீபற. எச

ஆண்மக்கள் பெண்மை யவாவு மழகொடு
பாண்மிக்க வுள்ளாள முந்தீபற
பாடிப் புறப்பட்டா னுந்தீபற. எரு

கோலங்கண் டாருயிர் கொள்ளை கொளுந்திரி
சூலங் கபாலமு முந்தீபற
தூக்கித் திரிந்தன னுந்தீபற. எசு

மாயனு மாயிடை மன்ம மறிந்தோர்மென்
சாயனல் லாளாக வுந்தீபற
சட்டெனத் தோன்றின னுந்தீபற. எஎ

மோகினி தன்னாலே மோகுண் டகங்கார
யோகிய ரெல்லாரு முந்தீபற
உரங்கெட வுட்கின ருந்தீபற. எஅ

ஒண்மை மிகுத்தங் குலாயவவ் வாணுரு
உண்மை யுருவமன் றுந்தீபற
உருவெளித் தோற்றமே யுந்தீபற. எகூ

வாக்கு மனத்துக்கு மட்டுப் படாதது
போக்கு வரத்தில துந்தீபற
பூரண மெய்ப்பொரு ளுந்தீபற. அ0

ஆண்டகை தன்னைத்தாங் காண்டலு மங்கலார்
பூண்டன பூண்டன வுந்தீபற
போயின போயின வுந்தீபற. அக

முருகச் செவியை முகந்துதங் கண்ணாற்
பருகிக் களித்தன ருந்தீபற
பரவசப் பட்டன ருந்தீபற. அஉ

செம்மை மறந்தனர் சீர்மை மறந்தனர்
தம்மை மறந்தன ருந்தீபற
தாம்பின் றொடர்ந்தன ருந்தீபற. அங

அன்ன தறிந்த வருந்தவப் பார்ப்பனர்
பன்னியர் கேடறிந் துந்தீபற
பதைத்துத் துடித்தன ருந்தீபற. அச

உச்சித முற்றதம் வாழ்க்கைத் துணைவியர்
குச்சித முற்றுரென் றுந்தீபற
குதுகுதுப் புற்றன ருந்தீபற. அரு

பெண்டிர் திறத்துப் பிறந்த பிழைநன்கு
கண்டவர் தம்பிழை யுந்தீபற
காணுத தென்கொலோ வுந்தீபற. அசு

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுசற் றுயினு முந்தீபற
சேருமோ மன்னுயிர்க் குந்தீபற. அஎ

பன்னியர் கற்பைப் பழித்தமை யென்னென
முன்னவ னைக்கொல வுந்தீபற
முன்னினர் சூழ்ச்சியொன் றுந்தீபற. அஅ

பாரப் படிவத்தர் மூளும் பழியபி
சாரத்தீ வேள்வியொன் றுந்தீபற
சலமொடு வேட்டன ருந்தீபற. அகூ

பொங்கும் புலியைப் புராரி யுயிரினை
நுங்க விடுத்தன ருந்தீபற
நுட்ப வுணர்வில ருந்தீபற. கூO

உகிரா லுரித்தவ் வுழுவை யுரியைத்
தகுமா றுடுத்தன னுந்தீபற
தவர்வெள்கி நின்றன ருந்தீபற. கூக

வெஞ்சினப் பாம்புகள் வீய விடுத்தனர்
நஞ்சணி கண்டன்மே லுந்தீபற
நல்லணி யாக்கின னுந்தீபற. கூஉ

மற்றவ ரேவிய மான்மழுத் தீத்துடி
பற்றினன் கைகளி லுந்தீபற
பராபர வேங்கட னுந்தீபற. கூரு

உட்கச் சிரித்துரு மென்ன வுரறுபு
கொட்குங்கூர் வெண்டலை யுந்தீபற
குழகன்மே லுய்த்தன ருந்தீபற. கூச

அவ்வெண் டலையை யதிசயிக் கப்பலர்
செவ்வே யணிந்தன னுந்தீபற
சென்னிக் கணியாக வுந்தீபற. கூரு

கூளிக் குழாங்கள் குறுகி யறிவறத்
தாளிற் படிந்தன வுந்தீபற
தானையாக் கொண்டன னுந்தீபற. கூசா

முதல்வனைக் கொல்ல முயலக னென்னும்
பதகனை யேவின ருந்தீபற
பாதத் தொடுக்கின னுந்தீபற. கூஎ

முயற்சி யனைத்து முறிபட வன்னோர்
அயர்ச்சியுற் றன்னோனை யுந்தீபற
அறிந்தா ரிறையென வுந்தீபற. கூஅ

கன்ம பலந்தருங் கர்த்தற் பழித்துச்செய்
கன்ம பலங்கண்டா ருந்தீபற
கர்வ மகன்றன ருந்தீபற. கூகூ

காத்தரு ளென்று கரையக் கருணைக்கண்
சேர்த்தருள் செய்தன னுந்தீபற
சிவனுப தேசமி துந்தீபற. ௧00

உட்கொண் டொழுக வுபதேச சாரத்தை
உட்கொண் டெழுஞ்சுக முந்தீபற
உட்டுன் பொழிந்திடு முந்தீபற. ௧0௧

சார வுபதேச சாரமுட் சாரவே
சேரக் களிசேர வுந்தீபற
தீரத் துயர்தீர வுந்தீபற. ௧0௨

உபதேசம்

கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்
கன்மங் கடவுளோ வுந்தீபற
கன்மஞ் சடமதா லுந்தீபற. ௧0௩

வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்
வினைக்கடல் வீழ்த்திடு முந்தீபற
வீடு தரலிலை யுந்தீபற. ௧0௪

கருத்தனுக் காக்குநிட் காமிய கன்மம்
கருத்தைத் திருத்தியஃ துந்தீபற
கதிவழி காண்பிக்கு முந்தீபற. ௧0௫

திடமிது பூசை செபமுந் தியானம்
உடல்வாக் குளத்தொழி லுந்தீபற
உயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற. ௧0௬

எண்ணுரு யாவு மிறையுரு வாமென
எண்ணி வழிபட லுந்தீபற
ஈசனற் பூசனை யுந்தீபற. க0எ

வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் சேபத்தில்
விழுப்பமா மானத முந்தீபற
விளம்புந் தியானமி துந்தீபற. க0அ

விட்டுக் கருதலி னறுநெய் வீழ்ச்சிபோல்
விட்டிடா துன்னலே யுந்தீபற
விசேடமா முன்னவே யுந்தீபற. க0கூ

அனியபா வத்தி னவனக மாகும்
அனனிய பாவமே யுந்தீபற
அனைத்தினு முத்தம முந்தீபற. கக0

பாவ பலத்தினுற் பாவனு தீதசற்
பாவத் திருத்தலே யுந்தீபற
பரபத்தி தத்துவ முந்தீபற. ககக

உதித்த விடத்தி லொடுங்கி யிருத்தல்
அதுகன்மம் பத்தியு முந்தீபற
அதுயோக ஞானமு முந்தீபற. ககஉ

வளியுள் ளடக்க வலைபடு புட்போல்
உளமு மொடுங்குறு முந்தீபற
ஒடுக்க வுபாயமி துந்தீபற. ககௗ

உளமு முயிரு முணர்வுஞ் செயலும்
உளவாங் கிளையிரண் டுந்தீபற
ஒன்றவற் றின்மூல முந்தீபற. ககச

இலயமு நாச மிரண்டா மோடுக்கம்
இலயித் துளதேழு முந்தீபற
எழாதுரு மாய்ந்ததே லுந்தீபற. ககரு

ஒடுக்க வளியை யொடுங்கு முளத்தை
விடுக்கவே யோர்வழி யுந்தீபற
வீயு மதனுரு வுந்தீபற. ககசா

மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை யுந்தீபற
தன்னியல் சார்ந்தன னுந்தீபற. ககஎ

வெளிவிட யங்களை விட்டு மனந்தன்
ஒளியுரு வோர்தலே யுந்தீபற
உண்மை யுணர்ச்சியா முந்தீபற. ககஅ

மனத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற. ககசு

எண்ணங்க ளேமனம் யாவினு நானெனும்
எண்ணமே மூலமா முந்தீபற
யானா மனமென வுந்தீபற. க௨0

நானென் றெழுமிட மேதென நாடவுள்
நான்றலை சாய்ந்திடு முந்தீபற
ஞான விசாரமி துந்தீபற. க௨க

நானென்று தானத்து நானானென் றேன்றது
தானாகத் தோன்றுமே யுந்தீபற
தானது பூன்றமா முந்தீபற. க௨௨

நானெனுஞ் சொற்பொரு ளாமது நாளுமே
நானற்ற தூக்கத்து முந்தீபற
நமதின்மை நீக்கத்தா லுந்தீபற. கஉந

உடல்பொறி யுள்ள முயிரிரு ளெல்லாம்
சடமசத் தானதா லுந்தீபற
சத்தான நானல்ல வுந்தீபற. கஉச

உள்ள துணர வுணர்வுவே றின்மையின்
உள்ள துணர்வாகு முந்தீபற
உணர்வேநா மாயுள முந்தீபற. கஉரு

இருக்கு மியற்கையா லீசசீ வர்கள்
ஒருபொரு ளேயாவ ருந்தீபற
உபாதி யுணர்வேவே றுந்தீபற. கஉகூ

தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற. கஉஎ

தானா யிருத்தலே தன்னை யறிதலாம்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற. கஉஅ

அறிவறி யாமையு மற்ற வறிவே
அறிவாகு முண்மையீ துந்தீபற
அறிவதற் கொன்றிலை யுந்தீபற. கஉகூ

தனாதியல் யாதெனத் தான்றெரி கிற்பின்
அனாதி யனந்தசத் துந்தீபற
அகண்ட சிதானந்த முந்தீபற. கநo

பந்தவீ டற்ற பரசுக முற்றவா
றிந்த நிலைநிற்ற லுந்தீபற
இறைபணி நிற்றலா முந்தீபற. ௧௬௧

யானற் றியல்வது தேரி னேதுவது
தானற் றவமென்று னுந்தீபற
தானும் ரமணேச னுந்தீபற. ௧௬௨

வாழ்த்து

இருடிக ளெல்லா மிறைவ னடியை
வருடி வணங்கின ருந்தீபற
வாழ்த்து முழங்கின ருந்தீபற. ௧௬௩

உற்றூர்க் குறுதி யுபதேச வுந்தியார்
சொற்ற குருபர னுந்தீபற
சுமங்கள வேங்கட னுந்தீபற. ௧௬௪

பல்லாண்டு பல்லாண்டு பற்பன்னூ றாயிரம்
பல்லாண்டு பல்லாண்டு முந்தீபற
பார்மிசை வாழ்கவே யுந்தீபற. ௧௬௫

இசையெடுப் போருஞ் செவிமடுப் போரும்
வசையறத் தேர்வோரு முந்தீபற
வாழி பலவூழி யுந்தீபற. ௧௬௬

கற்கு மவர்களுங் கற்றுணர்ந் தாங்குத்தாம்
நிற்கு மவர்களு முந்தீபற
நீடூழி வாழியே யுந்தீபற. ௧௬௭

திருச்சிற்றம்பலம்

௬௪. *திருவுந்தியார் (௨)

(கலித்தாழிசை)

† பண் : இந்தளம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

அருளற ணேம்பல்

ஆன்ம சொரூபமா வாருயிர் யாவையும்
தான்மகிழ்ந் தோம்பலே யுந்தீபற
தயாதன்ம தத்துவ முந்தீபற. ௧

அத்தத் துவந்தனை யாரு மழியாது
சுத்தத் துலக்கமா யுந்தீபற
தோன்ற வளர்த்தன னுந்தீபற. ௨

தன்னல முற்றத் தணந்தா னதற்கென
நன்னில நாயக னுந்தீபற
ஞாலஞ் செழிக்கவே யுந்தீபற. ௩

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னெனக்கன மேய்ந்தவ ருந்தீபற
எழுநிலத் தும்மில ருந்தீபற. ௪

---

† செய்யர்வேண் ணூலர் — என்பது போன்ற தேவாரப் பண்; திருவாசகம் திருவுந்தியாரைத் தழுவியது.

அத்த னருங்குண ணுந்திரு வேங்கட
புத்த னருளற முந்தீபற
பொங்கிப் பொலிகவே யுந்தீபற. ரு

சிலுவையறங் காத்தல்

பிறர்பழி பாவப் பிராயச்சித் தம்போல்
அறவழி கூறினோ னுந்தீபற
அறையுண் டுயிர்த்தன னுந்தீபற. சு

அந்தச் சிலுவை யறந்தா னவன்சொன்ன
சொந்தக் கருத்தினி லுந்தீபற
தோய்க வுயிருளத் துந்தீபற. எ

திருச்சிற்றம்பலம்

——:o:——

கூஎ. *திருவுருத்திறம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: திருநேரிசை (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

நிறையலாற் குறையொன் றில்லை
நினைப்பலான் மறப்பொன் றில்லை
பிறையலாற் கண்ணி யில்லை
பேதலாற் கடிவ தில்லை

† தானலா துலக மில்லை — என்னும் தேவாரப் பண்.

மறையலாற் பேச லில்லை
    மாணடித் தொண்டர் நெஞ்சம்
உறையுளாக் கொண்டு நம்மை
    யுடையவேங் கடவ ணூர்க்கே. க

நஞ்சலா லுண்டி யில்லை
    நடுவலா லோர மில்லை
அஞ்சலா லாட லில்லை
    யவாவறு மன்பர் தூய
நெஞ்சலா லிருக்கை யில்லை
    நெடிக்கலா தென்னை மோனச்
செஞ்சொலாற் பணிகொண் டாண்ட
    செல்வவேங் கடவ ணூர்க்கே. உ

ஒழிவலா லுடைமை யில்லை
    யுழிதரு பிச்சைக் கன்ப
ருழையலா லடைவ தில்லை
    யுற்றவர்க் குவந்து ஞானக்
கிழியலா லுதவ லில்லை
    கேளலர் நாடிக் கூறப்
பழியிலா வடிக ளாய
    பரமவேங் கடவ ணூர்க்கே. ங

பெண்ணலாற் பாக மில்லை
    பிழையறு மெய்யன் பர்க்குத்
தண்ணலால் வெம்மை யில்லை
    தாமொரு குடைக்கீ ழாள

விண்ணலா லாட்சி யில்லை
 விசுத்தான்ம சொரூப ஞானக்
கண்ணலாற் காட்சி யில்லாக்
 கடவுள்வேங் கடவ ணர்க்கே. ௪

செறிவலாற் புறம்போக் கில்லை
 செம்பொரு ளாய தன்மெய்க்
குறியலாற் குறிப்பொன் றில்லை
 குலவுமெய் யடியா ருள்ளத்
தறியலா லணைத லில்லை
 தற்பர சொரூப வுண்மை
அறிவலா லயலொன் றில்லா
 வடிகள்வேங் கடவ ணர்க்கே. ௫

இசையலால் வசையொன் றில்லை
 யெங்குமாய்ப் பரந்த வெட்டுத்
திசையலால் வாகு வில்லை
 செழுங்குணச் செம்பொன் மேரு
மிசையலா லிருக்கை யில்லை
 விளங்குசிற் றம்ப லத்துள்
அசைவிலா தாட வல்ல
 வடிகள்வேங் கடவ ணர்க்கே. ௬

திருச்சிற்றம்பலம்

௯௮. திருவருட்டிறம்

(ஆசிரியவிருத்தம்)

† *திருத்தாண்டகப் பண் (ஹரிகாம்போதி)*

திருச்சிற்றம்பலம்

ஆட்டினு லாரொருவ ராடா தாரே
யடக்கினு லாரொருவ ரடங்கா தாரே
ஊட்டினு லாரொருவ ருண்ணு தாரே
யுறக்கினு லாரொருவ ருறங்கா தாரே
வாட்டினு லாரொருவர் வாடா தாரே
வாழ்வித்தா லாரொருவர் வாழா தாரே
காட்டினு லாரொருவர் காணு தாரே
காண்குநரார் வேங்கடவர் காட்டாக் காலே. ௧

ஏற்றினு லாரொருவ ரேரு தாரே
யிறக்கினு லாரொருவ ரிறங்கா தாரே
தோற்றினு லாரொருவர் தோன்று தாரே
துடைப்பித்தா லாரொருவர் துடையா தாரே
மாற்றினு லாரொருவர் மாரு தாரே
மயக்கினு லாரொருவர் மயங்கா தாரே
தேற்றினு லாரொருவர் தேரு தாரே
தேறுநரார் வேங்கடவர் தேற்ருக் காலே. ௨

---

† ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே — என்னும் ***தேவாரத்தின் கருத்தைத் தழுவியது.***

இருத்தினு லாரொருவ ரிரா அ தாரே
யியக்கினு லாரொருவ ரியங்கா தாரே
அருத்தினு லாருடலம் பொலியா தாரே
யரும்பட் டினிவிதித்தா லுணங்கா ராரே
வருத்தினு லாரொருவர் வருந்தா தாரே
மகிழ்வித்தா லாரொருவர் மகிழா தாரே
திருத்தினு லாரொருவர் திருந்தா தாரே
திருந் துநரார் வேங்கடவர் திருத்தாக் காலே. ௩

முளைப்பித்தா லாரொருவர் முளையா தாரே
முடிப்பித்தா லாரொருவர் முடியா தாரே
இளைப்பித்தா லாரொருவ ரிளையா தாரே
யெடுப்பித்தா லாரொருவ ரெடாஅ தாரே
வளைப்பித்தா லாரொருவர் வளையா தாரே
வழுத்துவித்தா லாரொருவர் வழுத்தா தாரே
திளைப்பித்தா லாரொருவர் திளையா தாரே
திளைக்குநரா ரவர்திளைப்பித் தருளாக் காலே. ச

திருச்சிற்றம்பலம்

கூகூ. *அடிமைத்திறம்

(கலிவிருத்தம்)

† பண் : இந்தளம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

அண்டவரு மன்பரறி தற்கென விசேடம்
கொண்டவொரு வார்த்தையில் குருரமண தேவன்
பண்டவறி லாதமொழிப் பாவையிடப் பாகன்
விண்டவெறு மூச்சுமிகு வேதமொழி யன்றே. க

காண்டலரு ஞானகக னத்தினிடை யென்றும்
தாண்டவ நவிற்றுறு தயாரமண மூர்த்தி
ஆண்டவரு ளன்றியறி யாவகை யடிக்கே
மூண்டநினை வாகவெமை யாண்டதவ னன்பே. உ

மண்ணெடுவின் மற்றுமிய மான்கதி ரிரண்டோ
டெண்ணவனை யேனையெழுத் தின்னவனை யின்பப்
பண்ணவனை வேங்கடனைப் பார்ப்பவர்மெய்ஞ் ஞானக்
கண்ணவனைக் காண்டலயற் காட்சியற லன்றே. ங

பேதவுல கந்தனி லபேதநிலை பேணும்
போதசொரு பன்றனது பூரண மினைத்தென்
றோதவுல வாதசிவ யோகிரம ணேசன்
பாதவொளி யாலிதயப் பாசவிருள் போமே. ச

---

† ஏடுமலி கொன்றை — என்னும் தேவாரப் பண்.

செயலற வடங்கலர்கள் சேர்வரிய தாக
முயலுறு மகந்தையர் முடங்குரம ணன்றுள்
பெயலுறு மழைக்கருணை பேணுமடி யாரை
உயலுறு கதிக்கெளிதி னுய்க்குமொளி யாமே. ௫

சத்திய முரைத்தது ரமணகுரு சாமி
துத்திய மெனப்பொருள்கை சோர்ந்துகழி யாதீர்
சித்தியொடு புத்தியொரு சேரவருஞ் சித்த
சுத்தியொ டவன்பதத் துணைதொழு மவர்க்கே. ௬

ஒள்ளிய சராசர வுயிர்த்தொகை யனைத்தின்
தள்ளையொடு மிக்கதனித் தந்தைரம ணேசன்
வள்ளிய மலர்க்கழல் வழுத்துமடி யார்நன்
கள்ளிநுகர் வார்பரசி வாநுபவ மீங்கே. ௭

அன்னிய மலாதபர மான்மரம ணேசன்
கன்மன முருக்குமருட் கண்ணொளியி னாலே
சொன்மய மலாதொளிர் சுகோதய சொரூபத்
தன்மய முணர்ந்தவர் தவப்பெரியர் தாமே. ௮

தன்னையுறு தற்குறு தடைக்கசனி யேறு
மன்னிய புராந்தக மகேசரம ணன்றுள்
சென்னியி லணிந்தசிவ நேசர்பர முத்தி
முன்னையுல காளமுடி சூடியவர் தாமே. ௯

பளிங்குநிக ராயபரி சுத்தவடி வத்து
விளங்குபர ஞானவொளி வேங்கட மகேசன்
உளங்கனி வுறப்பொழி யுறுங்கருணை மாரி
வளங்கொழி மனங்கெழு மவர்க்குநிக ராரே. ௧௦

ஓவலற மூவுல குயிர்த்தொகையு முற்றக்
காவலினி தாற்றுகன வேங்கடர் கழற்கால்
ஏவலினி தாத்தலையி னேற்றிதய முற்றச்
சேவையினி தாற்றுமருட் செல்வரடி சரணே. கக

குழுமிய தொழும்பரொடு கூட்டுறவு பூண்டு
தொழுமியல் புடைப்பர சுகம்பெருக வாழ்வோம்
விழுமிய தனித்தலைமை வேங்கட பிரானுக்
கெழுமையு மடிக்குழுவ லேய்ந்தவடி யோமே. கஉ

திருச்சிற்றம்பலம்

——:o:——

க00. திருப்பள்ளி யெழுச்சி

(ஆசிரியவிருத்தம்)

† பண் : புறநீர்மை (பூபாளம்)

திருச்சிற்றம்பலம்

துலக்க மிகுத்தொளிர் சூரிய னுன்றன்
சோதி முகம்பெறத் துன்னி யெழுந்தான்
பிலக்க ணுறைதரு நாகரும் பிறரும்
பெட்பொடு பத்திமை பேணி யடைந்தார்
இலக்க முடம்பிடும் பைக்கென வஞ்சி
யினிப்பிறப் பொழிகென வெய்திடு மன்பர்
கலக்க மொழித்தருள் களைகணு திருவேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. க

---

† காலைநன் மாமலர் — என்னும் தேவாரப் பண்; குறிஞ்சி (சுருட்டி)ப் பண்ணும் பொருந்தும்; திருவாசகம் திருப்பள்ளி யெழுச்சியைத் தழுவியது.

கிழக்கு வெளுத்தது கிளந்தன கிளிகள்
கிளரொளிச் சேவல்கள் கூவின சங்கின்
முழக்க மெழுந்தது முடவ னெழுந்தான்
மூடிய காரிருண் முற்று மொழிந்த
வழக்க முறைப்படி வானர மகளிர்
வாழ்த்து நலம்பெற வழுத்திநிற் கின்றார்
கழற்கன வொளிதனி னகிலமுங் கவர்வேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. உ

நலத்தகு தாமரை நாயக னெழுந்தான்
நள்ளிரு ளகன்றது நாத்திக ருள்ளத்
தலத்தக மூட்டிய வடிச்சியர் வானின்
றடைந்தனர் சேவை யவாவிநிற் கின்றார்
மலத்தடை நீக்கியிம் மண்ணகத் தோரை
வலியவந் தாட்கொளு மாவருட் கடலே
கலத்தவ முனிவருங் காணருந் திருவேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. ந

நளிகட னின்றமே னணுகினன் கதிரோன்
ஞான திவாகர ணுகவென் சிந்தைத்
தளியி லமர்ந்தவந் தண்குரு நாதா
தாமரை மலர்ந்தன தங்கக்கை யம்மா
எளியனை யாட்கொளத் திருவுளத் தெண்ணி
யிங்கெழுந் தருளிநின் னின்னருள் சுரந்தே
களியமு தூட்டிய கருணையங் கடல்வேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. ச

பங்கய மலர்ந்தன பரிதியி னொளியாற்
பனிமதி மங்கினன் பயின்றன பாடல்
சங்கொடு பேரிகை தழங்குறு மொலியாற்
சாத்திரக் கற்பனை சாய்ந்தன வம்மா
எங்கு மெழுந்தன யாழொடு வீணை
யெத்திசை யோரும்வந் தீண்டின ரீங்கே
கங்கணங் காத்திடக் கட்டிய திருவேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. ரு

மடலணி தாமரை மலர்ந்திட வுன்னை
மறையவர் வாழ்த்தொலி பம்பிய வான
நடன வரங்கிடை நண்ணினன் கதிரோன்
ஞானிகள் சிந்தையி னடநவில் கூத்தா
தடமதில் சூழ்திருச் சுழியலம் பதிவாய்த்
தண்ணளி யாலவ தரித்தவந் தணனே
கடவுள ரனைவருங் கைதொழு கழல்வேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. சு

மாணிக்க மண்டில மான வெழுந்தான்
வாரிச மலர்ந்திடக் கதிரவன் வாழ்த்த
வாணிக்கு மொண்ணுத வண்புக ழெந்தாய்
வாழ்த்தித் தொழுதனர் மறையவ ரென்னை
வீணுக்கு வாட்டிய வெவ்வினை யெல்லாம்
வீட்டிய வீர சிகாமணி விண்ணோர்
காணிக்கை கொண்டுவந் தீண்டினர் திருவேங்
கடரம ணுபள்ளி யெழுந்தரு ளாயே. எ

பரிதியு முதித்தனன் பங்கய மலர்ந்த
பாணருஞ் செந்தமிழ் வாணரும் வந்தார்
அரியய னுதிய வமரரு மறிதற்
கரியவ வடியவர்க் கெளியவ வடியார்
உருகிய வுளத்தையொர் தாரையி னொழுக்கி
யோகமொ டிறக்குதி யுலகொரு கனவாக்
கருதிய கருத்துமே கழன்றொளிர் திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. அ

மலையிலக் காகவந் துதித்தனன் கதிரோன்
மாயிரு ஞாலத்து மன்னிரு ளோட்டி
இலைமறை காயென வெம்மதத் துள்ளு
மியைந்துள வத்துவே யெளியவிவ் வடியேன்
தலைமிசை வைத்தசெந் தாமரைத் தாளா
தாடலை யாகிய தத்துவப் பொருளே
கலைஞர்கள் கற்பனை கடந்தொளிர் திருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. கூ

துலங்கிய செஞ்சுடர் தோன்றினன் முற்றுந்
துன்னிருள் சோர்ந்து தொலைந்தது மாதோ
மலங்கிய முயலக மாயையை மிதித்து
மாநட மாகாளிக் காடிய தேவா
கலங்கிய சீவரைக் கருக்கட னின்று
கவலறு முத்தம கதிக்கரை காட்டும்
கலங்கரை விளக்கமாங் கண்ணுதற் றிருவேங்
கடரம ணாபள்ளி யெழுந்தரு ளாயே. க0

திருச்சிற்றம்பலம்

௧0௧. திருவெம்பாவை

(கோச்சகக்கலிப்பா)

† பண் : புறநீர்மை (பூபாளம்)

திருச்சிற்றம்பலம்

அண்ணா மலேரமணா னன்பர்க் கருண்மாரி
கண்ணாலே பெய்யுங் கருணைத் திறம்பாடி
எண்ணா தனவெண்ணி யேங்கடியர் வெம்பாவத்
திண்ணா சறவே தெறுசே வகம்பாடிப்
பெண்ணா ணலிகளெனும் பேதத்தை நீத்துத்தம்
உண்ணா டொளத்தொளிரு முண்மை வளம்பாடிப்
பண்ணா ரவன்புகழைப் பாடுங்கீ தாமுதம்போற்
றண்ணா ரமைதி தழையேலோ ரெம்பாவாய். ௧

தங்காய் மணிக்கதவந் தாழ்திறவாய் தன்கழல்கள்
சிங்கார மாகவென் சென்னிமேற் சேர்வித்த
கங்கா தரவேங் கடரமணப் பெம்மானைப்
பொங்கா தரத்திற் புகலடியர் தோத்திரம்போய்
மங்கா தெழுந்தட்ட மாதிரமு முற்றெழுப்ப
இங்கே யமைத்தா னெழுப்புவதாப் பேசியநீ
கொங்கா ரமளிக்கே கோப்புண்டு கண்வளர்வாய்
ஏங்காயீ தேநின் னியல்பேலோ ரெம்பாவாய். ௨

---

† துச்சான செய்திடினும் — என்னும் திருவிசைப்பாப் பண்; திருவாசகம் திருவெம்பாவையைத் தழுவியது.

29

தன்னள வில்லாத் தலைமையான் வேங்கடவன்
என்னள வில்லா ரிழிசினரென் றெள்ளாது
நென்னலாற் றன்சந் நிதிமுன் னிகழ்வித்து
நன்னலமா யாண்ட நலத்தைநீ நாடாதே
முன்னந் துயின்றமுழு மோகத்தால் வைகறைக்கே
இன்னந் துயிலுதியோ வெங்காய் துயிலெழாய்
முன்னலா யாண்ட முகவிலா சம்பாடி
அந்நலாய்ப் பூந்தடம்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். ௩

பொங்கமளி மேலாற் புரண்டு புரண்டசையும்
தங்கைச்சீ தாழ்குழலாய் சங்கரவங் கேட்டிலையோ
வங்கமா வூர்ந்தாயேல் வஞ்சத் துயின்மடியால்
மங்குவாய் கண்டாய் மடியா தெழுந்திராய்
சிங்கக்கண் ணேக்கத்தான் செந்தா மரைபோலும்
தங்கக்கை வேங்கடவன் சார்ந்தடைந்த பேதையராம்
எங்கையர்க்கு நல்கும்பே ரின்பத் திறம்பாடிப்
பங்கயப்பூம் பொய்கை படியேலோ ரெம்பாவாய். ௪

கள்ள மிலாய்போற் கரந்துரையால் வஞ்சித்த
கள்வீ யெழுந்திராய் கண்கழுவித் தாழ்திறவாய்
எள்ளி யிகழ்ந்துரையா லேசாதே யம்மங்காய்
வெள்ளப் பரங்கருணை வேங்கடவன் சீர்பாடும்
கிள்ளைமொழி யங்கயற்கட் கேளிரெலாம் போந்தாரோ
பொள்ளென் றனைவருந் தாம் போந்தார்போந் தெண்ணிக்கொள்
வெள்ளி யுதித்ததோ விள்ளாய் விளங்கிரவி
பள்ளியெழுந் தானீ படரேலோ ரெம்பாவாய். ௫

எதிர்குதிரா வேற்றிடியே ருர்த்ததிர்ந்தா லென்ன
மதிகதிர்தோய் சோணை மலைமுழைஞ்சு கூவ
அதிர்குரலா லன்ப ரகவுதுதி யோசை
உதையவுமே காதை யுறங்கலுணர் வாமோ
பதிவிரத மங்கையீர் பார ரமணன்
அதிமதுர வின்பமளித் தாண்டா னடிக்கீழ்
அதிகார வாணைக் கடங்கிரம ணீயக்
கதிர்காம முற்றிக் களியேலோ ரெம்பாவாய். சூ

அட்டமா மூர்த்தியா னட்ட திசாம்பரத்தான்
அட்டமா சித்தியா னட்ட குணசலத்தான்
அட்டவீ ரட்டத்து மண்ணு மலையகத்தும்
சிட்டாது நெஞ்சத்துஞ் சேர்வேங் கடரமணன்
திட்டமா நந்தம்மைத் தீப்பிறவி சேராமே
சட்டமா யாட்கொண்ட தண்ணளியின் சீர்நினைந்தவ்
வட்ட மதிமுகத்தோன் மாணடிக்கே சாந்தான்ம
நிட்டைநீ ராடி நிறையேலோ ரெம்பாவாய். எ

மீதார்வ மோடுபல விண்ணோரைச் சேவித்தும்
ஏதாக வேண்டுமென வென்னைக்கண் ணோக்காதார்
ஆதாளி யன்றியரு ளாற்றலில ராயொழிய
ஆதார வேங்கடனே யஞ்சலென்று ஞதலால்
வாதாட லற்றவ் வரதற்கே யன்பாகிப்
பாதார விந்தந் தலையாற் பணிவோமாய்த்
தூய்தாய தொண்டுபட்டுத் தோழமைக்கே பாங்காகிக்
கோதாய்நீ ராடிக் குளிரேலோ ரெம்பாவாய். அ

கண்ணவாய் நின்ற கனவருளான் காதலார்
எண்ணவாய் நின்ற விதயத்தா னென்றலைமேற்
றிண்ணமா யின்னினியுந் தீப்பிறவி சேராமே
வண்ணமாச் சூட்டிய வார்கழலான் வாரிதிசூழ்
மண்ணவாய் நின்றபல மாண்பினுன் மண்கடந்து
விண்ணவாய் நின்ற விழுப்புகழான் வேங்கடவன்
பண்ணவாய் நின்றபுகழ் பாடிப் பனித்தடம்பாய்ந்
தண்ணலாற் கன்பாகி யாடேலோ ரெம்பாவாய். கூ

*அல்லாத வாணவஞ்சே ராருயிரை வாள்விழியாற்
கொல்லாதே கொன்று கொளுத்துமெய்ஞ் ஞானத்தான்
இல்லாதே யுள்ளனபோற் ருேற்றுமெலா வற்றுக்கும்
இல்லாதாத் தோற்றி யுளதாகுஞ் செம்பொருளான்
கல்லாதே கற்றுணர்ந்த கல்விப் பொருடன்னைச்
சொல்லாதே சொல்லித் துலக்குமொளிர் மோனத்தான்
பொல்லா மணிரமணன் போகமெலா நன்கருள
வல்லா னடிவாழ்த்தி வாழேலோ ரெம்பாவாய். க0

உள்ளற் கரிய வொருமையா னென்ருனும்
தள்ளற் கரியமுழுத் தத்துவத்தான் சார்ந்தார்கண்
மொள்ளத் தகூஉ முகப்பொலிவான் மோகத்தைத்
தெள்ளத் தெளிக்குந் திருநோக்கான் சிந்தையால்
அள்ளக் குறையா வருளுடையா னுண்டதிறம்
விள்ளற் கரிய விழுப்புகழான் வேங்கடன்சீர்
கள்ளப் படாக்களியாற் காரிகையாய் நாம்பாடிப்
பள்ளப் பனிநீர் படியேலோ ரெம்பாவாய். கக

கண்ணின்ற கஞ்சத்தாற் காட்டுகின்ற மெய்யுருவாற்
றண்ணென்ற நீர்மையாற் சங்கஞ்சூழ் கொள்கையாற்
றுண்ணென்றுட் டோய்வார் மலங்கழூஉந் தூய்மையாற்
றெண்ணின்ற வேங்கடனுஞ் சிற்பரையும் போன்றிசைந்த
மண்ணின்ற மானதமா வாவிமா னும்மடுக்கண்
எண்ணில்பே ரின்ப மிதயத் தலம்பொங்க
உண்ணு ரமுதம்போ லுச்சிதமாந் தீம்புகழைப்
பண்ணுர வோதிப் படியேலோ ரெம்பாவாய். கஉ

சேரத் திரண்டு திருவேங் கடரமணன்
பாரச் செழுங்கருணைப் பைங்கடலை நின்னுசை
தீரப் பருகிநீ தேக்கிட்டு மையலிழை
வீரத் தொழில்வல்ல வெம்மாயை போற்கறுத்து
நேர நிமிர்ந்தவென்கன் னெஞ்சத்தின் மீதேறித்
தேரத் தெளிமோனச் செஞ்சொல்லே போற்குமுறி
ஊருந் திருக்கண்ணேக் கொத்தொளிர்ந்து பேரின்பம்
வாரப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். கந

மருவினுர் தங்கண் மனக்களிம்பு மாற்றி
உருவிளங்கு பொன்னு வொளிர்விக்குங் கண்ணுன்
பொருவிலா ஞானபரி பூன்றமுழு மோனி
இருளதுகா ணுத ரமணகுரு நாதன்
அருணிதிய நோக்கியடி யாரார்த்தல் போலக்
குருவிக ளார்ப்பக் குரல்குவிய வேனல்
கருவிமலி சோணே கரைந்தொழுகு தூநீர்
அருவிநீ ராடி யவிரேலோ ரெம்பாவாய். கச

குப்பைகிளைக் குற்றுமுழுக் கோழெரிமா ணிக்கமணி
துப்பறிவில் கோழியெதிர் தோன்றியதை யெள்ளியிகழ்ந்
தொப்பவுயப் போகுமுணர் வோட்டைபோய் நாமுநமக்
கெய்ப்பினிடை வைப்பா வெளிவந்த வேங்கடனைத்
தப்பலறு சச்சிதா னந்தசிவ தத்துவனை
இப்படியின் மானிடனு வெண்ணியெள்ளி யேமாறு
தப்பரமற் காட்செய்து நீராடி யப்பயனும்
அப்பரமன் றூட்கே யடையேயேலோ ரெம்பாவாய். கரு

அனியதெய் வந்தொழல்கல் லாத்தெய்வக் கற்பால்
இனிதுபெய் யப்புயலே யேவல்கொளத் தக்கீர்
முனிமைமுக டாயமுழு மூதறிஞ ராயும்
அனுதிமல முத்தவியல் பாலேயு மன்றி
மனிதவுரு வாமண்ணில் வந்துமல பெத்த
அனுதையைநன் காளுமவ தாரநா ளாலும்
புனிதரம ணன்கமலப் பூந்தாள் கழூஉம்
புனிதநீ ராடிப் பொலியேயேலோ ரெம்பாவாய். கசு

நாதமோர்த் தேவிந்து நாட்டமோர்த் தேநலியும்
பேதமாக் காட்சிமெய்யாப் பேதுறு தோர்முதலாம்
போதவான் போலுயிரின் பொய்யோ டதன்பொருளாம்
போதவான் மெய்ப்புரணப் பூன்றவியல் புந்தெரித்தான்
நீதமாத் தேடுநெறி நேதிப் பயனுக
மீதமா நித்தசித்த மெய்ப்பொருளாம் வேங்கடவன்
பூதமா வேத புருடனித மாடுமவன்
பாததீர்த் தம்படிந் தாடேலோ ரெம்பாவாய். கஎ

ஞையறியா மாக்களொடு காதலரு முண்டாடி
நெய்யு மதுவு நெகிழ்ந்தசெழுஞ் சாந்துமளாய்த்
துய்யவியல் வேருகித் தோயலர்வாய் பூசலராய்
ஐயரொடு மாதவரு மந்தணர்பார்ப் பாருந்தம்
செய்கைசெய் யார்மீளுஞ் செங்கலுழிக் காவேரி
வைகைமுத னீராடல் வாலிதன்று நோற்பார்க்கு
மெய்யறிவா னந்தமய வேங்கடமா தீர்த்தன்றாட்
பொய்கைநீ ராடிப் பொலியேலோ ரெம்பாவாய். கஅ

ஆரா வமுதம்போன் மானந்த வேங்கடர்மெய்
ஆரா வமுதம்போன் மன்பனூர் புன்மூரல்
ஆரா வமுதம்போன் மங்கனூர் கண்ணோக்கம்
ஆரா வமுதம்போன் மாசிரியர் வாய்ச்சொற்கள்
ஆரா வமுதம்போன் மாதியார் சீபாதம்
ஆரா வமுதம்போன் மண்ணலார் சீர்த்திமைகள்
ஆரா வமுதன்ன யன்னூர் குணக்கடல்பாய்ந்
தாரா வமுதநீ ராடேலோ ரெம்பாவாய். கசு

ஆயபிறர் வல்லாண்மை யாலழிந்து போகாது
நாயடிச்சி யோங்களது நாணமொடு மானத்தை
மாயவலி யாற்காத்து வந்த வயிரக்குப்
பாயநிறை பாறப் பரமநிரு வாணமாக்
காயமா முப்புரமுங் காய்ந்துகடைக் கண்ணலே
தூய பரவெளிக்கே தோற்றிய லார்நகைக்க
நாயகனு நம்மை நயந்தாண்ட வேங்கடன்றன்
நேயநீ ராடி நிகழேலோ ரெம்பாவாய். உ0

சகலமொடு கேவலமே சார்ந்துதெளி வாய
சுகலவமு மில்லாத சூனியமா மாயை
முகடிபான் மோகித்து மூதறிஞர் தம்மாற்
பகடிசெய் யப்பட்டுப் பாழ்ம்பிறப்புக் காளாய்
விகடங்கள் பாராட்டி வீண்காலம் போக்கா
தகளங்க னுநம்மை யாண்டா னடியோம்
முகடாய வேங்கடன்றூண் மோனமா முன்னி
அகடா மிதயத் தமிழேலோ ரெம்பாவாய். உக

யான்பரமென் றேசெருக்கா தென்னுள்ளே வேங்கடவன்
தான்கடவு ளாகத் தலைப்பட் டொளிர்வதனுல்
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட் டதுவாய் நடுநின்ற மெய்ஞ்ஞான
வான்கடவு ளாக வழங்குதலை யாரறிவார்
யானெடுதா னென்னு மிருவோரு மன்றிக்கே
நானென்னுஞ் சொற்பொருளை நாடியித யத்தடத்து
நான்கெடநன் காடி நயவேலோ ரெம்பாவாய். உஉ

வன்மமுறத் தாரு வனத்தாரை யேமாற்றும்
கன்மநெறிக் கேபோங் கடையே னிறைபணியாம்
தன்மமறி யாச்சழக்காற் றன்னுன்ம தத்துவமாம்
மன்மமறி யாதிந்த மாநிலத்தே யிந்திரியப்
பன்முகமா யோடிப் பதையா தெனையாண்ட
தென்முகநோக் குஞ்ஞான தேசிகனும் வேங்கடற்கே
புன்மலமா நானெனது புல்லா நிராசையாம்
நின்மலநீ ராடி நிகழேலோ ரெம்பாவாய். உங

பொய்வளம் பூத்தவிடை பொங்குமுலைக் கேமுறியத்
தைவளம் பூத்தநீர் தாமுகந்த தையலர்காள்
ஐவளம் பூத்தசோ ணாசலத்தா னன்னம்பெய்
கைவளம் பூத்த கவிகையான் கண்டார்கண்
மொய்வளம் பூத்த முகப்பொலிவான் முன்னெதிர்ந்தார்
மைவளம் பூத்தமயன் மாய்க்குங்கண் வேங்கடவன்
மெய்வளம் பூத்தகழல் வேட்கையாய் மெய்ஞ்ஞான
தெய்வநீ ராடித் திகழேலோ ரெம்பாவாய். உச

நில்லா தவற்றை நிலையினவாக் கொண்டுவக்கும்
புல்லறி வாண்மை புலம்பெய்த வேங்கடவன்
கல்லா லெனதுளமாக் காதலான் மெய்கேட்ட
நல்லா ரகக்கரண நான்கா வறிதிருந்து
சொல்லா லடங்காச் சுகோதயத்தைச் சோதியிருள்
அல்லா வதீதவித யாகாயத் தாய்வித்தான்
பல்லார் பரவுமுழு மோனப் பரவைபடிந்
தெல்லாநீ ராடியெழுந் தேத்தேலோ ரெம்பாவாய். உரு

செருவிகற்பஞ் சேர்ந்தகளச் சிந்தைமயல் செற்ற
குருவிகற்ப னேனுங் குணங்குறிக ளாக
வருவிகற்ப மொன்றுமரு வாதரம ணற்கே
உருவிகற்ப மாமெவ் வுலகத்துஞ் சூக்கக்
கருவிகற்ப வாதனையாற் காண்கனவின் கண்ணும்
இருவிகற்ப மென்பதோ ரெட்டுணையு மின்றி
ஒருவிகற்ப மாக வொளிர்சகச பாவ
நிருவிகற்ப மாடி நிறையேலோ ரெம்பாவாய். உசு

துணர்மாலை சூடுவேந் தோய்வேந்தோ ளென்றென்
றுணர்வுமிக் கீர்போ லுஞற்றுநோன் பீர்காள்
வணமொன்று மில்லான் வடிவொன்று மில்லான்
குணமொன்று மில்லான் குறியொன்று மில்லான்
உணர்ச்சியொன் றில்லா னுணராமை யில்லான்
கணிச்சிகண் ணுவன்பர் கட்டழிக்க வல்லான்
இணைச்சுவேட் டார்க்கவ் விறைரமண னேடு
புணர்ச்சிதா னும்புணர்ப்பே போன்மேலோ ரெம்பாவாய்.

விஞ்சுங் கருவாய வேங்கடவன் மெல்லடியிற்
றுஞ்சிக் கிடவாதத் தொல்லோன் பெரும்புகழை
வஞ்சச் செருக்கான் மயன்றுரைக்க முற்பட்ட
தஞ்சச் சிறுமியர்காள் சாலச் சதுராத
நெஞ்சுந் தெரியா நிலைமையான் மெய்யுருவைக்
கிஞ்சிலுங் கண்டீரோ கேட்டீரோ வல்லீரே
பிஞ்சிற் பழுத்திட்ட பேதையீர் பேசாதே
அஞ்சி யடிக்க ணடங்கேலோ ரெம்பாவாய். உஅ

நாமநீ ரிட்டதொரு நல்லகழி மற்றுமொரு
நாமநீர் வானுகத்து நற்றுளையிற் கோத்தாற்போல்
ஏமமோ ராக்கா ரிருளோமை யேகபரந்
தாமமா நின்சொருப சந்நிதிக்கே சேர்த்தவருள்
ஆமதனை யன்றிநயப் பாதல் வியப்பாதல்
மாமதுர வேங்கடவா மாட்டேனுன் மன்னுயிர்க்குச்
சேமஞ்செய் பொற்றூட் செழுங்காம மொன்றெழிந்த
காமங்க ளெல்லாங் கடியேலோ ரெம்பாவாய். உகூ

அப்பா லுக் கப்பாலென் றல்லாப்பா ராவயலார்
இப்பா லுக் கிப்பாலா யெங்கட் கெளிவந்து
கைப்பால நெல்லிக் கனியிற் றெளிவுடைத்தாய்த்
துப்பாக வுள்ளத் துட் டோய்ந்தாண்ட வாற்ருலே
மெய்ப்பால நின்முன் வெயின்மஞ்சள் போலாகிப்
பொய்ப்பால வெல்லாம் புலம்பெய்திப் போயிடநீ
எப்பா லு மெம்மை யிகவாமை வேங்கடப்பேர்
அப்பா வருள்செய் தளியேலோ ரெம்பாவாய். ௩௦

எறிபுனந் தீப்பட் டெரியுங்கா னல்ல
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமால்
செறிவேங் கடரமண தேவாநின் னேவல்
நெறிவழிக்கே கோடா து நின்ருெழுகுஞ் சீரார்
அறிஞர்தங் கூட்டுறவை யார்வமொடு பேணிக்
குறியறிந் தன்னார்தங் குற்றேவல் செய்ய
உறுதியா மிந்தவர மொன் றுநீ யீந்தால்
மறுபிறவிக் கஞ்சேம்யா மற்றேலோ ரெம்பாவாய். ௩௧

போற்றியுயிர்ப் போனகநின் பூன்றமா மோனநிலை
போற்றியொளிர் சின்மயநின் பொன்ருத சிற்சத்தி
போற்றியருள் பூத்தொழுகுன் பூங்கமலக் கண்ணேக்கம்
போற்றிபொரு ளந்தணநின் பொய்யாத மெய்யருள்கள்
போற்றிதரி சித்தவர்தம் புந்திகவர் புன்முறுவல்
போற்றிசுரு திப்பொருணின் புத்தமுதாங் கட்டுரைகள்
போற்றிதிரு வேங்கடநின் பொன்னடிதா மார்கழிநீர்
போற்றிவிளை யாடிப் பொலியேலோ ரெம்பாவாய். ௩௨

வாழி மறைவண்மை வாளுட ரந்தணர்கள்
வாழிநிரை நீதி வழுவாத நல்லரசு
வாழி விருந்தயரும் வாழ்க்கைத் துணைநலத்தார்
வாழி யகந்தைமல மாசற்ற மாதவத்தோர்
வாழி சிவரமணன் வன்ன மலர்க்கழல்கள்
வாழியவ னண்ணு மலைப்படிவ மாண்புறவே
வாழியருட் பார்வை வயப்பட்ட நல்லடியார்
வாழிசிவா னந்த மடுத்தேலோ ரெம்பாவாய். ௲௲

திருச்சிற்றம்பலம்

——:0:——

க0உ. திருவம்மானை

(ஆறடித் தரவுகோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

[ஒருத்தி]

பூண்ட புலைநாய்மேற் பொற்றவிசு வைத்தாற்போற்
காண்டற் கரிய கடவுளருஞ் செய்தவங்கள்
ஈண்டப் புரிந்துமோ ரெட்டுணையு மெண்ணலும்
தீண்டற் கரியசெழுஞ் சேவடியென் சென்னிசேர்த்
தாண்டபே ரந்தண்மை யார்வேங் கடரமணப்
பாண்டிச் சுழியலாற் பாடுதுங்கா ணம்மானாய். க

---

† துன்னம்பெய் கோவணமும் — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருவம்மானையைத் தழுவியது.

மறிவித்து ஞால மறப்பித்து நெஞ்சம்
செறிவித்துச் சிந்தை திறப்பித்து மானம்
எறிவித்த வேங்கடனு ரென்னுயிரை நோக்கிக்
குறிவைத்துக் குற்றுயிராக் கொல்வித்து மெய்ம்மை
அறிவித்து வாணு ளடைப்பித்துப் பந்தம்
பறிவித்த வாபரவிப் பாடுதுங்கா ணம்மானாய். உ

தேவாதி தேவத் திருவேங் கடரமணக்
கோவாகி யென்னையாட் கொண்டானைக் கூறுபட்டுச்
சாவாது நின்ற சதாசிவமாய்ச் சட்டமாய்
ஓவாது நின்றொளிரு முள்ளொளியா யெக்காலும்
தாவாத பேரின்பத் தற்பதமாஞ் சந்தமறைப்
பாவானை நாடிப் பழிச்சுதுங்கா ணம்மானாய். ௩

முன்னுக்கு முன்னு முதலோனை மூவர்முடிப்
பின்னுக்கும் பின்னும் பெரியோனைப் பேராமை
என்னுள்ளும் யானென் றிருந்தோனை மற்றேனைத்
தன்னுள்ளுந் தானுத் தரித்தோனை வேங்கடனைப்
பொன்னுக்கும் பொன்னுய புண்ணியனை மோனத்தாற்
பன்னுது பன்னிநாம் பாடுதுங்கா ணம்மானாய். ச

விண்ணுளர் தாமும் வியப்பெய்திப் பூசுரரோ
டெண்ணுத வெண்ணமெலா மெண்ணியெண்ணி நெஞ்சமுங்கிப்
புண்ணுள ராகிப் புலம்பெய்த வெவ்வினையைக்
கண்ணுலே நோக்கிக் கடிந்து பொருள்சேரந்
தண்ணுள ஞகித் தடுத்தாண்ட வேங்கடனைப்
பண்ணுலே பாடிப் பரசுதுங்கா ணம்மானாய். ரு

ஓதற் கரிதாக வோங்கு முபசாந்த
சீதப் புனலாட்டிச் சிற்றம் பலங்காட்டி
ஏதப் படாதிவ் வெளியேனை யாட்கொண்டான்
நாதத் துருவாய் நடக்குறாஉ மேதக்க
வேதச் சிரத்துநட மேவுதிரு வேங்கடவன்
பாதச் சிலம்பொலிநாம் பாடுதுங்கா ணம்மானாய். சா

மற்றேதும் பற்றின்றி மாணடியே தாநினைந்து
கற்றூவா யுள்ளங் கசிந்துருகு வார்நிற்கச்
சற்றேனு மன்பில் சலவனைத்தன் பொன்னடிக்குக்
குற்றேவல் கொண்டருளிக் கோதாட்டி யாட்கொண்டான்
வற்றாத பேரின்ப மாக்கடலான் வேங்கடவன்
பற்றாய பைங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். எ

சந்ததமு நம்மைத் தலையளித்தாட் கொண்டருளி
அந்தகனார் நம்மை யடையா வகையாகச்
சிந்தை மலமொழியச் செற்றுச் சிவமாக்கி
அந்தரத்தார் வேண்டலா லாலால முண்டொளிரும்
கந்தரத்தான் ஞான கனவேங் கடரமண
சுந்தரத்தான் றொல்புகழே தூற்றுதுங்கா ணம்மானாய். அ

காயாது முற்றக் கனிந்தசெழுங் கற்பகமாய்த்
தாயாகி யெந்தையாய்த் தாவாத சற்குருவாய்
மாயாத வல்வினையின் மையிருளை மாய்வித்துத்
தோயாத சாந்தத் துரியசுகந் தோயுமா
றாயாத ஞான வமுதளித்த வேங்கடன்சீர்
வாயார நாம்பாடி வாழ்த்துதுங்கா ணம்மானாய். கூ

தலைகா லறியாத் தடுமாற்றப் பட்டுப்
பலகாலு மெவ்வப் படருழந்து தன்மாட்
டிலம்பாடு கூறி யிரப்பாரை யன்னார்
அலம்பாடு பேசி யமைகாறு மின்பம்
உலவாத ஞான முதவு முதாரம்
சலியாத வேங்கடன்சீர் சாற்றுதுங்கா ணம்மானாய். ௧0

(நாலடித் தரவுகோச்சகக்கலிப்பா)

[இருவர்]

இருந்த வியல்பா யிருப்புற்ற வேங்கடனை
வருந்தி வழிபடூஉம் வழக்கென்னோ வம்மானை
வருந்தி வழிபடலவ் வாய்மையின்க ணின்றிப்
பொருந்தாது நெஞ்சம் புலம்புவதா லம்மானை. ௧௧

அவ்வவர்க்கு மவ்வவர்த மாருயிராம் வேங்கடனை
எவ்வெவருங் காணு வியல்பதே னம்மானை
எவ்வெவர் தாங் காண்பா ரிரண்டற்ற வொன்றனை
வெவ்வேறு வெண்ணி விதிர்விதிர்த்தா லம்மானை. ௧௨

வானோர்க்குங் காண்டலரு மாண்பினன் வேங்கடவன்
ஈனோர்க்குங் காண வெதிர்ப்படுமோ வம்மானை
ஈனோர்க்கே யன்றிமற் றேனோர்க்கு மாங்காரம்
போனக்கா லென்றுமரு பூதன்கா ணம்மானை. ௧௩

காண்டல்கா ணுமை கடந்தகன வேங்கடனைத்
தீண்டலுமா மென்னத் தெரியுமதோ வம்மானை
தீண்டலுமாந் தீண்டித் திளைத்தலுமாஞ் சிந்தையற்று
வேண்டாமை வேண்டிநிற்கும் வித்தகர்கட் கம்மானை. ௧௪

ஆட்டமற வேங்கடவ னாடுங் கழலோசை
கேட்டலுமா மென்னக் கிளக்குமதோ வம்மானை
கேட்டலுமாங் கேட்டுக் கிடத்தலுமா மைம்புலத்தின்
ஓட்டையடைத் துள்ளத்து ளோர்வார்கட் கம்மானை. ௧௫

ஞானத்து நல்லுருவாய் நடக்குறூஉம் வேங்கடவன்
மோனத்தா லுண்மை மொழியுமதே னம்மானை
மோனத்தா லுண்மை மொழிதல்கண் கூடாதி
மானத்தா லளப்பொண்ணா மாண்பதா லம்மானை. ௧௬

மன்மமுறச் சார்ந்தார் மகிழ்சொருப வேங்கடனைக்
கன்மநெறிச் செல்வார் கலப்பரோ வம்மானை
கன்மபலன் றேராக் கருத்தராய் மோக்கமா
தன்மமறிந் தாரேற் றலைப்படுவ ரம்மானை. ௧௭

பதிப்பரம வேங்கடன்றாட் பத்திமையே யல்லாமல்
விதிப்பயனை மீறுநெறி வேறிலையோ வம்மானை
நதிப்புணையை யொத்து நடக்கு மதிவலத்தால்
விதிப்பயனை மீறல் விதிக்குமரி தம்மானை. ௧௮

நல்லோரெல் லோரு நயக்குமுயர் வேங்கடனைப்
புல்லோர்சில் லோர்முன் புடைத்ததே னம்மானை
புல்லோர்சில் லோர்முன் புடைத்ததவன் பூததயை
எல்லோருங் கண்டுவியப் பெய்தவே யம்மானை. ௧௯

வாவென்றும் வாயால் வழங்காத வேங்கடன்மாட்
டோவென்றெல் லோருந்தா மோடுவதே னம்மானை
ஓவென்றெல் லோருந்தா மோடலோ கைக்கடனீர்
பூவென்ற தாளான்முற் பொங்குவதா லம்மானை. ௨௦

(கலித்தாழிசை)

[மூவர்]

அலவலொழித் தென்னையடிக்காட் கொண்ட வேங்கடவன்
தலையளிசெய் தன்பரைத் தாங்குவா னம்மானை
தலையளிசெய் தன்பரைத் தாங்குவா னாமாயிற்
றலையெடுக்க வொட்டாத தன்மையெவ னம்மானை
தன்மயமா யன்னார் தரிக்கக்கா ணம்மானை. உக

*நனந்தலைஞா லத்தெழிலண் ணாமலையான் வேங்கடவன்
இனந்தருமெய் யன்பர்க் கெளியன்கா ணம்மானை
இனந்தருமெய் யன்பர்க் கெளியனே யாயின்மற்
றனந்தனுமே தேடியறி யாததெவ னம்மானை
அறியாமை யோகத் தனந்தலா லம்மானை. உஉ

மிறையணுகா மெய்ஞ்ஞான வேங்கடவன் மன்னுயிரைச்
சிறைவிடுக்க வந்தவருட் செல்வன்கா ணம்மானை
சிறைவிடுக்க வந்தவருட் செல்வனே லவ்வுயிர்முன்
சிறையகப்பட் டின்னல் செறிந்ததென்னே வம்மானை
செறிதமையோ ராமாயைச் சித்திரங்கா ணம்மானை.

தொலையாத நான்மறையுந் தொல்லுயிர்மே னல்லருளாற்
றலையாய வேங்கடவன் சாற்றினா னம்மானை
தலையாய வேங்கடவன் சாற்றினா னேலவற்றுட்
புலையாய வேள்வி புகன்றதெவ னம்மானை
புலானுண் புலைவழக்கைப் போக்கவே யம்மானை. உச

அடிப்படையாம் வேங்கடப்பே ராண்டான் குறிப்பின்றி
மடுப்புற்றார் தாந்துறக்க மாட்டார்கா ணம்மானை
மடுப்புற்றார் தாந்துறக்க மாட்டாமை தான்கிடக்க
விடப்பெற்றார் தாமும் விடாதவெ னம்மானை
விடாமையூ மூட்டா விடாமையா லம்மானை. உரு

விடியா விருளை விடிவிக்கும் வேங்கடன்றன்
அடியார்பாற் குன்றா வருளுடையா னம்மானை
அடியார்பாற் குன்றா வருளுடையா னாமேலவ்
வடியாரைத் துன்பா லடர்த்ததெவ னம்மானை
அடர்த்த லழுக்குவாங் கைக்கேகா ணம்மானை. உசா

*கள்ளப்பார் வைக்கணுவுங் காணப் படாரமணன்
விள்ளப்பா யுங்கருணை மீக்கண னம்மானை
விள்ளாப்பா யுங்கருணை மேலிட்டா லிவ்வுலகம்
வெள்ளப்பா ழாகி விளியாதோ வம்மானை
விளியுமென்றே கண்பால மேற்படைத்தா னம்மானை.

வேர்மடித்த காமஞ்சால் வேங்கடன்றன் பாலன்பு
கூர்மனத்தைக் கொள்ளை கொளுங் கொள்கையா னம்மானை
கூர்மனத்தைக் கொள்ளை கொளுங் கொள்கையா னாயின்மற்
றார்முடிச்சே னுந்தா னவிழ்ப்பனோ வம்மானை
அவிழ்ப்பனடி யார்த மகந்தைமுடிச் சம்மானை. உஅ

ஆன்மநிலை யன்பர்க்கெல் லாமுணர்த்தும் வேங்கடவன்
தேன்மணத்த கொன்றைச் சிவனேகா ணம்மானை
தேன்மணத்த கொன்றைச் சிவனேற்சில் லோரவனை
ஊன்மனித்த னாகத்தா முள்ளலெவ னம்மானை
உசாவியவ னைத்தம்மு ளோராமை யம்மானை. உகூ

என்போற் பலரை யினிதாண்ட வேங்கடன்பே
ரன்போ டருளுடைநல் லந்தணன்கா ணம்மானை
அன்போ டருளுடைநல் லந்தணனே லன்னோனை
வன்கணு னென்னும் வழக்கென்னே யம்மானை
வழக்குக்கா மற்காய்ந்த வன்கணு லம்மானை. ௩௦

விச்சாய் விளைவித்து மீட்டேயும் வேங்கடனுள்
ளச்சா யடங்கலுந்தா ஞட்டுவா னம்மானை
அச்சா மவனையகத் தாய்கில்லார் தாமேயும்
அச்சா வகங்கரிக்கு மாண்மையென்னே யம்மானை
அவ்வாண்மை தானுமவ ஞட்டமன்றே யம்மானை.

அன்பதா லென்னையடிக் காட்படுத்த வேங்கடவன்
இன்பதுன்ப மில்லாப்பே ரின்பமய னம்மானை
இன்பதுன்ப மில்லாப்பே ரின்பமய னேலவனை
மன்பதைக ளெய்துநெறி மன்மமென்னே யம்மானை
மன்மந்தா னவ்வவர்த மன்மமே யம்மானை. ௩௨

துறப்பிலியாய் நின்றே துறந்த ரமணேசன்
பிறப்பிலியாய் நின்றே பிறந்தோன்கா ணம்மானை
பிறப்பிலியாய் நின்றே பிறப்பினுமிப் பேய்ஞாலம்
உறப்புலியா ருட்பட் டுணர்வரோ வம்மானை
உணர்விலிரு ணெஞ்ச ருணரார்கா ணம்மானை. ௩௩

திருச்சிற்றம்பலம்

கஎ௩. திருச்சாழல்

(தரவுகொச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

தேன்காட்டுங் கொன்றைச் சிவரமணன் மாமனித்த
ஊன்காட்டி வந்திங் குலாவுமது வென்னேடி
ஊன்காட்டி வந்திங் குலாவல் பயின்றதொரு
மான்காட்டி மான்பிடிக்கு மாண்பதாற் சாழலோ. க

மாயமொடு மானுடனே மானுகினும் வேங்கடவன்
தேயமொடு காலத்துட் சிக்குறுன் காணேடி
தேயமொடு காலத்துட் சிக்காத் திறனுருவக்
காயமெனத் தானடவாக் காட்சியாற் சாழலோ. உ

பெண்பாகம் வேங்கடவன் பேர்ந்ததனுன் மண்ணேர்கள்
விண்பா லியோகெய்தி வீடாரோ விள்ளேடி
விண்பா லியோகெய்தி வீடினத்தா லேதுகுறை
எண்பாய வேழுலகத் தெவருக்குச் சாழலோ. ௩

குறைபயின்ற செய்தவத்துக் குறைமுடிப்பா னல்லாக்காற்
றறைபயின்று வேங்கடவன் றுன்சரிப்ப தென்னேடி
தறைபயின்று வேங்கடவன் றுன்சரித்தல் பல்யுகமாய்த்
தறைபயின்ற தவப்பயனைத் தந்திடக்காண் சாழலோ. ௪

---

† அக்கிருந்த வாரமும் — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருச்சாழலைத் தழுவியது.

இருந்தவருக் கெல்லாமே யியம்புதிரு வேங்கடவன்
ஒருங்குறநன் குணர்வானோ வுலகியற்கை யுரையேடி
ஒருங்குணரா தேயோவிவ் வுலகறிய வாலின்கீழ்த்
திருந்தவருக் கவ்வியற்கை தெரித்ததுதான் சாழலோ. ரு

அந்தணனா யாலின்கீ ழறமுரைத்த வேங்கடவன்
கொந்தழலாற் புரமூன்றுங் கொளுவியது வென்னேடி
கொந்தழலாற் புரமூன்றுங் கொளுவலவை யுலகுக்கு
வெந்திறலால் விளைவித்த விழுமத்தாற் சாழலோ. சா

வடுவிலா வேங்கடவன் வாய்மைகா வாதிழுக்கி
நடுவணையும் வெகுண்டுதைத்த ஞாயமது வென்னேடி
கெடுவிலாப் பத்திமையான் கிழமையாற் பரிவுளத்து
முடுகலா லங்ஙனவன் முறைபிறழ்ந்தான் சாழலோ. எ

வில்லாளி வேங்கடவன் வீறற்று மேவார்முற்
பல்லையிளித் திட்ட பரிசதுதா னென்னேடி
பல்லையிளித் திட்டதவன் பற்பலமா தேவருள்ளிட்
டெல்லாருங் கருவ மிகந்திடக்காண் சாழலோ. அ

செய்தவனும் வேங்கடவன் சித்தசனைத் தீக்கணையால்
எய்தவனை யீடழித்த வேற்றத்தான் காணேடி
எய்தவனைச் செற்றாலும் யாதுபய னின்பமுறக்
கைதவமாச் சிற்சத்தி கலந்தனள்காண் சாழலோ. கூ

நல்லார்க்கும் பொல்லார்க்கு நடுநின்ற வேங்கடவன்
வல்லோனா யின்பதுன்பம் வகுத்ததுதா னென்னேடி
எல்லோரு மின்பதுன்ப மிருவினைகட் கீடாகப்
புல்லலவன் சத்திப் புணர்ப்பன்றே சாழலோ. கo

அச்சமிலா தும்ப ரமுதுண்ண வவ்வும்பர்
மெச்சுதிரு வேங்கடவன் விடமுண்ட தென்னேடி
மச்சுனனும் மாமாயை வல்லபெரு மாயனுமாம்
அச்சுதனே யஞ்சியதா லருந்தினன்காண் சாழலோ. கக

இச்சையெலாந் தற்சேர்ந்தார்க் கீடேற்றும் வேங்கடவன்
பிச்சையையே நல்லுணவாப் பேணுமது வென்னேடி
பிச்சையையே நல்லுணவாப் பேணலவன் காசினியோர்க்
குச்சிதமா முளத்தூய்மை யுறுத்தக்காண் சாழலோ. கஉ

தேவர்கடஞ் சேகரஞ்சேர் சேவடியான் வேங்கடவன்
கோவணமே நல்லுடையாக் கொள்ளுமது வென்னேடி
தூவணமாஞ் சோதியான் றொல்லுலக வாட்சிக்கோர்
ஆவணமா யன்னதே யாவதனாற் சாழலோ. கங

அருந்தநீ ருணப்பிச்சை யணியக்கோ வணத்தானைப்
பெருந்துப்போ னுப்பெரியோர் பேணுமது வென்னேடி
புரந்தரன்மா லயன்முதலோர் போகமுமவ் வேங்கடனுட்
பொருந்துவகைப் புணரியிலோர் துளிபோலுஞ் சாழலோ.

ஊர்திதா னென்றுமுகந் தூராதே சீபாத
சாரியா வேங்கடவன் சரிக்குமது வென்னேடி
சாரியாத் தான்சரித்தல் சகலசரா சரங்கட்கும்
தாரிதா னுயவற்றைத் தாங்கலாற் சாழலோ. கரு

தன்னையலா லொன்றுமிலாத் தற்பரனும் வேங்கடவன்
அன்னையிலி யப்பனிலி யரும்பிச்சன் காணேடி
அன்னையிலி யப்பனிலி யரும்பிச்ச னயிடினும்
சொன்னசொன்மூ வேழுலகுந் தோயுங்காண் சாழலோ.

அறிந்தோர் பிறவி யழிக்குந்தாள் வேங்கடனைப்
பிறந்தோனாப் பித்தர் பிதற்றுமது வென்னேடி
மறந்தேயு மன்றி நினைந்தேயு மாய்ந்துலகிற்
பிறந்தோராத் தம்மைத்தாம் பேதுறலாற் சாழலோ. கஎ

வல்லாண்மை தோற்றான் வறிதிருக்கும் வேங்கடனை
எல்லாஞ்செய் வோனா விசைக்குமது வென்னேடி
எல்லோ னெதிரிற் சராசரங்கள் யாவும்போல்
எல்லா மவன்முற்சேட் டித்தலாற் சாழலோ. கஅ

வேத்தவைவேந் தினுமேலாய் வீற்றிருக்கும் வேங்கடனை
மாத்துறவோ னானூலோர் மதிக்குமது வென்னேடி
ஆத்தனா மந்தச்சிற் றம்பலத்தா னெஞ்சியல்பாற்
கூத்தருளம் போற்பாரத்துக் கூடுதலாற் சாழலோ. கசு

அன்புசெய வன்னியமி லறிவுருவாம் வேங்கடனை
அன்புருவ னாக வறையுமது வென்னேடி
வன்புசெயு மாயை வயப்பட்ட மன்னுயிர்தம்
புன்புலக்காட் சிக்கனியம் புலப்படலாற் சாழலோ. உ0

மற்றுவமை யில்லாத மாதவத்தான் வேங்கடவன்
அற்றவரை யாதரிக்கு மந்தணிறை காணேடி
அற்றவரை யாதரிக்கு மந்தணிறை யாயிடிலென்
குற்றுயிரா வென்னெஞ்சைக் கொன்றான்காண் சாழலோ.

புண்ணியனாம் வேங்கடவன் பூசுரர்க்குந் தேசுரர்க்கும்
எண்ணியலாப் பெருமைசே ரிறைவனவன் காணேடி
எண்ணியலா னாயிடினு மெளியோங்கட் கெளிவந்தெங்
கண்ணியலர்த் தாம்பாலே கட்டுண்பான் சாழலோ. உஉ

அம்பரமேற் பம்பரமா யாடுநட வேங்கடவன்
மொய்ம்புடைமூ வர்க்குமவன் முற்றரியன் காணேடி
மொய்ம்புடைமூ வர்க்குமவன் முற்றரிய னாயிடினும்
எம்புரையுந் தொண்டர்க் கெளியன்காண் சாழலோ. உரு

ஒன்றுணராப் பேதைநீ யோர்ந்துபர வேங்கடனை
மன்றறிய மாலையிட்டு மணந்ததுதா னென்னேடி
மன்றறிய மாலையிட்டு மணந்தாலும் யாதுபயன்
தன்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

முதலாய வேங்கடவ னோர்முதனூல் கணபதியே
முதலாய கலைஞர்க்கு மொழிந்ததுதா னென்னேடி
முதனூலை மொழியானேன் மூதறிஞ ருணர்வுபல
விதமாகக் கிளைத்திடுங்காண் மேன்மேலுஞ் சாழலோ.

உண்மைக்கு மின்மைக்கு மூங்காய வேங்கடனை
உண்மைநா மத்தா லுரைக்குமது வென்னேடி
திண்மையா மந்தத் திருமூலச் செம்பொருளுக்
கின்மைப்பேர் சற்றுமிலை பின்மையாற் சாழலோ. உசு

அறிவொடறி யாமைக் கதீதமாம் வேங்கடனை
அறிவுநா மத்தா லழைக்குமது வென்னேடி
அறியவறி விக்கவய லற்றவிருஞ் செஞ்சுடரை
அறியாமை யென்ன லடாமையாற் சாழலோ. உஎ

இன்பொடுதுன் பங்க ளிகந்ததிரு வேங்கடனை
இன்பமய னென்ன விசைக்குமது வென்னேடி
துன்பவிட மாந்துவிதத் தோற்றமிலாத் தோன்றல்பே
ரின்பமயந் தானா யியல்வதாற் சாழலோ. உஅ

ஏகமாய் நானாவா யேய்ந்ததிரு வேங்கடனை
ஏகனா நல்லறிஞ ரேத்துமது வென்னேடி
ஏகான்மா வாமவ் விறையன்றி நானாவாம்
தேகான்மா பொய்யாய்ச் சிதைதலாற் சாழலோ. ௨௯

புரணவுரு வங்கடந்த பூரணனும் வேங்கடனைப்
புரணவுரு வாப்புலவோர் போற்றுமது வென்னேடி
புரணவுரு வாப்புலவோர் போற்றலதற் கும்பர்த்தம்
கரணமரு வாதழியுங் காரணத்தாற் சாழலோ. ௩0

மோக்கமா மொன்று முடிந்தமுழு வேங்கடனைச்
சாக்கியாச் சான்றோர்கள் சாற்றுமது வென்னேடி
சாக்கியாச் சான்றோர்கள் சாற்றினுந்தன் சத்தியல்பாற்
சாக்கித் துவங்கடந்த தத்துவன்காண் சாழலோ. ௩௧

திருச்சிற்றம்பலம்

—:o:—

௧௦௪. திருத்தெள்ளேணம்

(தரவுகொச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

நீக்கினா லும்போகா நெஞ்சுரங்கொ ணல்லடியார்
வாக்கினால் வேங்கடவன் வண்புகழ்கேட் டடைந்தாங்கே
நோக்கினா லேயடியே னொண்டுகொளப் பேரின்பம்
தேக்கியவா பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௧

† கள்ளார்ந்த பூங்கொன்றை — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருத்தெள்ளேணத்தைத் தழுவியது.

தெருப்பாலே நாயாத் திரிந்தேனைத் தேடிவந்து
விருப்பாலே யேன்றுகொளும் வேங்கடவன் மெய்ஞ்ஞான
நெருப்பாலே பாவத்தை நீறுக்குங் கண்ணுதலோன்
திருப்பாதச் சீர்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ௨

ஓருருவு மொருபெயரு மொருகுணமு மொருசெயலும்
ஓரணுவு மில்லா வுடையதிரு வேங்கடவன்
நேரெதிரில் வந்துவந்தென் னெஞ்சுருக்கி யாட்கொண்ட
சீரருளை யேத்திநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௩

மந்தார மாலையணி மார்பினன் மணங்கமழும்
கொந்தாய கொன்றையணி குஞ்சியான் வேங்கடவன்
இந்தா வெனக்கூஉ யெளியோமை யாண்டதிறம்
சிந்தா வகைபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ௪

மாயத்தான் வேங்கடவன் வாளைமீன் மேலெழுந்து
பாயத்தேன் பாயும் பலாக்கொத்தின் பாங்கருற்றென்
நேயத்தைக் கொள்ளைகொண்டென் னெஞ்சத்தைக் கொல்வித்த
தேயத்தைப் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௫

ஓம்பலா தைம்புலத்தா றுழன்றேனை வேங்கடன்மாத்
தீம்பலாக் கொத்தடைய வாண்டதிரு வருட்டிறத்தாற்
சாம்பலா மனமாயை சாம்புதலாற் சழக்கனைத்தும்
தேம்பியவா பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௬

நிகழ்ந்தமா னிடவுருவாய் நேர்ந்தவருள் வேங்கடன்யான்
இகழ்ந்தவா தனைத்திரளா லெற்றுண்ணு தென்னகத்தை
அகழ்ந்தசே வகத்தாற்றன் னடியாரோ டகப்பட்டுத்
திகழ்ந்தவா பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௭

அற்றவரை யாதரிக்கு மந்தணனும் வேங்கடவன்
பற்றியதன் னடியேனைப் பாலிப்பான் போனேக்கிக்
குற்றுயிராக் கொன்றதனே டெனதுகொடும் பாடனைத்தும்
தெற்றியவா பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. அ

ஆர்த்தியான் மேயா ரவிச்சையறக் கீதையுரை
வார்த்தையான் மெய்ஞ்ஞான மார்த்தாண்ட வேங்கடவன்
தூர்த்தமன மாசினேந் தொல்லை மலங்கழூஉம்
தீர்த்தனருள் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. கூ

பேசியல் கின்றபெரும் பேச்சுக்கே யன்றிமனம்
வீசிய வீச்சுக்கு மேற்பட்ட வேங்கடவன்
மாசியல் கின்றமன மாயையற மாய்விக்கும்
தேசிகன் சீர்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. க௦

கற்பகப்பூ நாறக் கமலபதங் காதலம்நல்
குற்பலப்பூ மாலைமணக் குற்றதோள் வேங்கடவன்
சொற்பனமா மிவ்வுலகத் தோற்றமெனத் தேற்றியவச்
சிற்பதத்தான் சீர்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

தாம்பா லியன்றவராப் போற்சகமே சத்தியமா
ஓம்பா வெருண்டேனை யுவந்தாண்ட வேங்கடவன்
சோம்பா வுறங்குமுழுச் சோம்பனுக்கும் பேரின்பம்
தேம்பா தருளியவா தெள்ளேணங் கொட்டாமோ. கஉ

எக்கனவு மெந்நனவு மெல்லாமே பொய்யன்றே
நெக்கனவாய் நீரினிடை நிகழாலிக் கட்டிகள்போய்
உக்கெனவேங் கடவுடையா னுழைக்கரைவுற் றென்மனத்தின்
சிக்கெனவு தீர்ந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. கங

விண்ணினுநுண் ணியஞான வெளியுருவாம் வேங்கடவன்
கண்ணெனவு மணியெனவுங் கலந்தாண்டான் காண்குற்ற
கண்ணொளியாற் கர்ப்பூர மலைகடுப்ப மாமாயைத்
திண்ணெனவு தீந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. கச

வீடாகத் தானே விளங்குற்ற வேங்கடவன்
சீடாசா ரங்கல்லாச் சிறியேற்குந் தேசிகனு
வாடாத வாய்மை வளம்பட்ட வருணிதியம்
தேடாது நல்கியவா தெள்ளேணங் கொட்டாமோ. கரு

ஆர்த்தியிற் சேர்ந்த வமரர்க்கு மருமையான்
மூர்த்திகட் கெல்லா முதலாய வேங்கடவன்
நேர்த்தியொன் றில்லாவிந் நீசனைவந் தாட்கொண்ட
சீர்த்திநன் றேத்திநாந் தெள்ளேணங் கொட்டாமோ. கசு

ஒருவருமே காணு வுருவானை யுற்றூர்தம்
பருவரல்பா ராவந்தண் பார்ப்பானை வேங்கடனை
வெருவரல்செய் வெம்பவத்தில் வீழ்ந்தேனை யாட்கொண்ட
திருவருளே பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. கஎ

தோற்றியநா டொட்டு விழற்கிறைத்துத் தோய்ந்தேனுக்
கூற்றியல்பா லூராண்மை யுவந்தாற்றும் வேங்கடவன்
போற்றியமா சிவஞான போதமா மக்காரம்
தீற்றியவா பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. கஅ

பத்தரா லன்றிப் பரவைசூழ் மாஞாலத்
தெத்தரா லாய்ந்தறித லேயாத வேங்கடவன்
பெத்தரா மெம்மைமுழு முத்தராப் பேதிக்கும்
சித்துநா மேத்திநிதந் தெள்ளேணங் கொட்டாமோ. ககூ

தக்கானைத் தாபந் தணிப்பானை யொன்றாக
மிக்கானை வேங்கடனை மெய்யன்பர் சிந்தனையுட்
புக்கானை நாயடியேன் பொல்லா வினைபொடிப்ப
நக்கானை நாம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ௨0

பூத்தானைப் பூத்த புரந்தானை யப்புரந்த
வீத்தானை வேறுஞ்செய் வேங்கடனை வெங்கானிற்
பேய்த்தானை சூழக்கால் பேர்த்தானை யென்வினையைத்
தீத்தானை வாழ்த்திநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

பண்டாட்சிப் பழமொழியின் பாங்காகப் பள்ளநரி
கொண்டாட்டத் தாற்படேஉங் குளிர்போல வேங்கடவன்
கொண்டாட்டத் தாலடியேன் கொடுவினையின் குழாம்பட்ட
திண்டாட்டம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

இயலழித்துச் சார்ந்தோங்க வீடழித்து நங்கற்பின்
முயலழித்துக் கூடினான் முத்தரம ணானந்தன்
மயலழித்து விதிமதியின் வாதமழித் தாங்காரச்
செயலழித்துத் தேற்றியவா தெள்ளேணங் கொட்டாமோ.

மாண்பாய மறையோனுந் தந்தைபோன் மாலாகச்
சேண்பாய வந்தச் சிவரமணன் சீடனேன்
ஊன்பாய வுள்ளத் துணர்வுருவா யுட்புகுதத்
தேன்பாய வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ௨௪

அள்ளக் குறையா வகண்டபர மானந்த
வெள்ளக் கடலாய வேங்கடவப் பெம்மானை
உள்ளத்தை யுள்ளத்தா லுள்ளலுமே யுள்ளம்போம்
தெள்ளத்தைப் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

ஆலத்தை நல்லமுத மாக்குந் திருமிடற்றுக்
கோலத்தை நிர்க்குணக் குன்றாய வேங்கடனை
மூலத்தை நாடி முனைதலுமே யான்செத்த
சீலத்தை யேத்திநாந் தெள்ளேணங் கொட்டாமோ. உசு

வித்தாரம் பேசிவரும் விற்பனரெல் லாருமுழுப்
பித்தாகப் பேதுறக்கும் பெம்மானை வேங்கடனைச்
சத்தாய தத்துவனைச் சந்தித்தேன் சாவாது
செத்தவா நாம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. உஎ

எண்ணியார் தங்க ளிதய கமலத்து
நண்ணியான் வேங்கட நாதனென் னுமணக்கும்
கண்ணியான் கண்ணாலே காண்பார் கருத்தழிக்கும்
திண்ணியான் சீர்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

மன்றலா மாலைகொடு மாகத்தார் மொய்த்துநின்ற
முன்றிலான் மாரமண மூர்த்தியான் மானிடஞ்சேர்
கன்னியான் சூட்டுங் கடுக்கைப்பூங் கண்ணியணி
சென்னியான் சீர்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

சாமப் பிணையற் றளைப்படாத் தாளாளன்
சோமப் பிறைபோலென் சொல்லின்பக் கண்ணியணி
காமத் திருவேங் கடரமணக் கண்ணாளன்
சேமத்தாள் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. ௩௦

திருச்சிற்றம்பலம்

கoரு. திருத்தோணேக்கம்

(தரவுகோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

நீதா ரகமென்ற நின்னடியார் தாமுன்பு
காதாரக் கேட்டதன்மேற் கண்ணாரக் காண்பரன்றே
ஆதேய மனைத்துக்கு மழியாத வேங்கடநின்
ஆதாரச் சீர்பாடி யாடாமோ தோணேக்கம். க

கரியதிரு மாலோற்குங் கமலத்தோன் மற்றெவர்க்கும்
அரியதிரு வடிநிழலை யடைந்தோர்கட் கான்மநிலை
தெரியுமா தெரிவிக்குஞ் சின்மயவேங் கடனியல்பாம்
துரியமா நிலைநாடித் தோணேக்க மாடாமோ. உ

வஞ்சிதனை யடியடைந்த வல்வினையேன் கட்டோடே
உஞ்சிருக்க வேங்கடப்பே ருடையான்கண் ணேக்குதலும்
சஞ்சிதவா காமியமுஞ் சார்ந்ததுந்தீச் சார்பஞ்சாய்த்
துஞ்சியவா பாடிநாந் தோணேக்க மாடாமோ. ௩

கருக்குளடை பட்டுடம்புட் கட்டுண்டோ னுக்கானும்
திருக்குளநீ யாவனெனத் தெரிசிப்பா யென்றெனக்கு
வெருக்கொளுவு மேதினியை வெல்லவிறல் வேங்கடவன்
சுருக்குவழி சொன்னவா தோணேக்க மாடாமோ. ச

---

† கள்ளார்ந்த பூங்கொன்றை — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருத்தோணேக்கத்தைத் தழுவியது.

அடைப்புண்ட கேள்விசே ரகந்தையேன் புறமுகமாப்
படைப்புண்ட வையுணர்வு பராங்கதவேங் கடனோக்காற்
புடைப்புண்ட வைவாய பொறியரவம் போலறவே
துடைப்புண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ. ௫

தந்தம் பரிசு தமக்குதவும் வேங்கடன்கட்
குந்தம் படுதலுமென் குவிமனத்தின் கொளைகுலைந்தே
எந்தம் பரிசழிந்திங் கேளனமே பூடணமாய்த்
தொந்தம் பிரிந்தவா தோணோக்க மாடாமோ. ௬

நடுமணிபோ லும்பர்நடு நாயகமா யுபநிடதக்
கொடுமுடிமே னின்ற குணக்கடலா னென்னிதயப்
படுமுடியாங் கந்திப் பரிசழித்த வெற்றிக்காத்
தொடுகழலான் வேங்கடற்கே தோணோக்க மாடாமோ. ௭

செம்பொனா லேய்ந்த செழும்பணிதாங் தேருங்காற்
செம்பொனே யாகுந் திறம்போல வேங்கடமாத்
தம்பிரான் மெய்யாய தற்பதத்தில் யானும்பொய்த்
தொம்பதம்போய்த் தொக்கவா தோணோக்க மாடாமோ.

எப்பாகில் வைப்பாயென் னுயிர்வாழ்க்கைக் கின்றமையா
உப்பாகி யோர்ந்திடினவ் வுயிர்க்குயிரா யுள்ளொளிரும்
மெய்ப்பால வேங்கடவன் மிஞ்சகில வுயிர்த்தொகைக்கும்
துப்பாய வாபாடித் தோணோக்க மாடாமோ. ௯

பிச்சாக வென்மதியைப் பேதுறுத்துத் தாண்மனத்துப்
பச்சாணி யாமரத்துப் பதிவித்த வேங்கடவன்
தச்சாய பல்லுலக சராசரமா முருள்பெருந்தேர்க்
கச்சாணி யானவா தோணோக்க மாடாமோ. ௧௦

கமையாக வுயிர்காப்புக் கடம்பூண்ட திறத்தாலே
அமையாத கண்ணுலகத் தமைந்தாலுந் தன்னிடத்தில்
இமையாத வேங்கடவ னியைபாலே யுடம்பெமக்குச்
சுமையான வாபாடித் தோணேக்க மாடாமோ. கக

நேதித்து நின்றதனை நேயர்க்கு நெஞ்சிலுறச்
சாதித்தான் றன்னடிசார்ந் தார்சிந்தைக் கருங்கல்லை
வேதித்தான் செம்பொன்னு விழிநோக்கால் வேங்கடப்பேர்
ஆதித்த னேர்நோக்கி யாடாமோ தோணேக்கம். கஉ

நிண்ணயமா யென்னெஞ்சை நீராள மாயுருக்கும்
தண்ணளியா னென்னைத் தடுத்தாண்ட தயாம்புதியான்
எண்ணலருஞ் சித்திகட்கோ ரிடனுய வேங்கடப்பேர்
அண்ணலடி கூடிநா மாடாமோ தோணேக்கம். கங

நீலா மணிமிடற்று னெஞ்சுவந்து நாயேனை
ஏலா வினிதாண்டா னிறைவேங் கடரமணக்
கோலா கலவிழியான் கூர்த்தபொரு ளுபநிடக்கும்
தோலா மொழிவியந்து தோணேக்க மாடாமோ. கச

வாலாமை யென்னுமன மாசொழித்துத் தூய்தாக்கி
ஏலாத வென்னையுங்கொண் டின்னடிச்சீர் பாடுவித்த
மூலாதி வேங்கடவன் மோனந்தா னெம்மொழிக்கும்
தோலாமை கொண்டாடித் தோணேக்க மாடாமோ. கரு

தேவியா நின்றபரா சிற்சத்தி கைவருடிச்
சேவியா நின்றுகன்றுஞ் சேவடியான் வாடாத
காவிமா மலர்போலுங் கண்டத்தான் வேங்கடனெம்
ஆவியா னருள்பாடி யாடாமோ தோணேக்கம். கசு

பண்டாய மூலப் பகுதிப் பராபரையைப்
பெண்டாக வாய்த்தபெரும் பித்தனும் வேங்கடன்மாட்
டுண்டாய நல்லருளா லுடையாற்கிவ் வூத்தையேம்
தொண்டாக வாய்த்தவா தோணேக்க மாடாமோ. கள

சிட்டவாக் கியமொன்றுந் தேருச் சிறுநாயேன்
அட்டபாக் கியத்தும்ப ரான்மாவாம் வேங்கடனே
இட்டபாக் கியநல்கி யீடேற்றுந் திருவருளாற்
றெட்டபாக் கியம்வியந்து தோணேக்க மாடாமோ. கஅ

ஏய்ந்த குசை நுதிக்கூ ரெண்ணுளர் தாமுஞ்சற்
ருய்ந்தறிய லாகா வருமைசால் வேங்கடவன்
வாய்ந்தமுது நல்வினையால் வந்தெம்மைத் தான்வலியத்
தோய்ந்தசுக மெண்ணியெண்ணித் தோணேக்க மாடாமோ.

ஆற்றேனுத் தன்னடைந்த வடியேற்குக் கோட்டுவரைக்
கோற்றேனுத் தித்திக்குங் குரைகழலோன் புலவோர்தம்
போற்றுனைப் புகழ்மலிந்த புண்ணியவேங் கடன்புலமை
தூற்றுநாந் தோள்வளையீர் தோணேக்க மாடாமோ. உ0

எம்மா னெளியோங்கட் கியமான் பிழைபொறுக்கும்
பெம்மான் பிறைவேணிப் பெருமா னெனைத்தொன்றும்
கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டு வேங்கடநல்
லம்மான்சீர் நாம்பாடி யாடாமோ தோணேக்கம். உக

விழவினர் கலியோவா விநோதமா முன்றிலான்
கழறிஞ னன்பரைத்தன் கண்ணேக்கா லெஞ்ஞான்றும்
பழகியா ரல்லாரும் பாராட்டும் வேங்கடன்றன்
அழகிதாங் குணங்கோடித் தாடாமோ தோணேக்கம்.

தூளியா நீற்றிடைச்சிந் துரதிலகந் துலங்குநுதல்
ஆளியான் வேங்கடப்பே ராதியா னந்தமிலா
மீளியா னெய்தாக மேருவைமுற் கோட்டியதிண்
டோளினன் விறல்பாடித் தோணோக்க மாடாமோ. உ௩

வேழம்போற் பணைத்தோளீர் வெண்பொங்கற் சுவையுணரா
மூழைபோன் முழுமூட மோகத்தேம் முட்டில்பே
ரேழைமையோர் சற்றுமெண்ணு தெமைக்கலந்த வேங்கடனற்
றோழமையை வாழ்த்திநாந் தோணோக்க மாடாமோ. உ௪

அயிற்கோல வாள்விழியா லகப்படுத்துச் சேவடிக்கே
உயக்கோட லெண்ணியெனை யுடையானும் வேங்கடவன்
மயிற்கோல மாதருள மங்கவெனைத் தோய்ந்தெழுதும்
தொயிற்கோல நாம்பாடித் தோணோக்க மாடாமோ. உ௫

பொங்கலா யெங்கையர்தாம் பூரித்தல் கண்டுள்ளே
அங்கலாய்த் தூணுறக்கோ டறிவகன்ற வடிச்சியேன்
மங்கலோய்ந் துண்மகிழ மகிழ்ந்தளித்த மகிழம்பூத்
தொங்கலான் வேங்கடற்கே தோணோக்க மாடாமோ. உ௬

ஐயசிறு மைத்தேனு மறிவுக் ககோசரமாம்
மெய்யுருவ வேங்கடனிம் மேதினிக்கா டூஉவரனுய்த்
தையலரா மெம்மைத் தலைப்பெய்து மார்பெழுதும்
தொய்யினலம் பாடிநாந் தோணோக்க மாடாமோ. உ௭

ஆணலன் பெண்ணுமல னயிடனு மெம்போல்வார்
வேணவா வீணாய் விளிந்தொழியா வாற்றாலே
ஆணழக னாகிநமை யாதரித்த வேங்கடவன்
தோணலநாந் தோய்ந்தவா தோணோக்க மாடாமோ. உ௮

அரமியமா மேனிலைநின் றழைத்துப்போ யுள்ளத்தே
இரமியமா யுருகவெனை யிரண்டறத்தான் கலந்ததனாற்
றரமிலியா மெனையாண்ட தயாபரனும் வேங்கடவன்
சுரதசுகந் தோய்ந்தவா தோணோக்க மாடாமோ. ௨௯

அருவினையென் றொன்றமிலா வறிவுருவாம் வேங்கடற்குச்
செருவினையும் வேண்டுங்கொல் செயத்துக்குக் காலமொடு
கருவியிட னின்றியெலாங் கடந்ததுரி யாதீத
சொருபநிலை பாடிநாந் தோணோக்க மாடாமோ. ௩௦

திருச்சிற்றம்பலம்

———:o:———

௧௦௯. திருக்கண்ணோக்கம்

(தரவுகோச்சகக்கலிப்பா)

† பண்: சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

உற்பலமாங் கண்ணீர்மண் ணோடியைந்துங் கண்ணோடும்
பொற்புடைமெய்ஞ் ஞானதருப் புலப்படநீர் கண்டீரோ
மற்புயவான் கவடுவிட்டு மன்னுயிர்மேற் கண்ணோடும்
கற்பகவேங் கடனொடுநாங் கண்ணோக்க மாடாமோ. ௧

எண்ணியவை யெண்ணியவா றெய்திடலா மேழையீர்
மண்ணிடைவண் குளத்துறங்கு மதர்ப்புடைமீன் விழிபோல
உண்ணிலவு நாட்டத்தா லுளத்துறங்கு மோரியல்பாற்
கண்ணிமையா ரமணனொடு கண்ணோக்க மாடாமோ. ௨

† கள்ளார்ந்த பூங்கொன்றை — என்னும் தேவாரப் பண்.

பண்ணுய பணிமொழியீர் பைங்குவளைக் கண்மடவீர்
எண்ணுத வெண்ணமெலா மெண்ண லுறும் பேதைமைசேர்
பெண்ணுமெம் போலியராற் பேசவொணுப் பேருணர்வாம்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்க மாடாமோ. ௩

கண்ணுகி யக்கண்ணிற் கருமணியா யம்மணியிற்
பண்ணுத பாவையாய்ப் பாவையத னூட்டமுமாய்
விண்ணுகி விண்மணியா யித்தனைக்கும் வேருகும்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்க மாடாமோ. ௪

கண்ணுளர் மன்பதையின் கண்ணுகக் காண்டலுறும்
எண்ணுகி யெழுத்தாகி யெவற்ருனுங் கண்டறிய
வொண்ணுத வியல்பாய வுண்மையறி வானந்தக்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்க மாடாமோ. ௫

கண்ணகன்மா ஞாலத்துக் கண்பெற்ற காரிகையீர்
கண்ணுய புலமொன்றே யையுணர்வுங் கவர்ந்துகொளக்
கண்ணனெடு திண்ணனுங் கண்ணியர்தங் கண்ணுக்கும்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்க மாடாமோ. ௬

*கண்ணகன்மா ஞாலத்தோர் கண்மாயங் காண்கெனவே
விண்ணுமண்ணும் பாதலமு மெய்ஞ்ஞானப் பரவெளிக்கூண்
பண்ணியருள் வாழ்வளிக்கும் பரஞான சித்தநடன்
கண்ணுதல்வேங் கடனெடுநாங் கண்ணேக்க மாடாமோ.

கண்ணேடு கண்காட்சி கலக்குங்காற் காதலருள்
எண்ணுத வாய்ச்சொல்லா லேதுபய னெங்கைமீர்
பண்ணுய வாய்ச்சொற்கள் பயனறவேங் கடரமணக்
கண்ணுளன் றன்னெடுநாங் கண்ணேக்க மாடாமோ. ௮

நோக்குருவாய் நோக்குள்ளே நுழைந்தானைத் தந்நோக்கால்
நோக்குறுவார் நோக்காரா நோக்காதார் நோக்குதலால்
நோக்கரிய நோக்கானை நோக்கலுறிற் றடையாமந்
நோக்கறவேங் கடனைக்கண் ணோக்கநா மாடாமோ. கூ

மீட்சியே யில்லாத வீட்டின்ப வேட்கையுடைப்
பூட்சியீர் செங்கமலப் பொன்னனையீர் வீட்டுலக
ஆட்சியான் வேங்கடவ னந்தமிலா மெய்ஞ்ஞானக்
காட்சியான் றன்னைநாங் கண்ணோக்க மாடாமோ. க0

அவிச்சையிருட் படலத்துக் காதித்தன் றன்னடியார்
தவிச்சதவிப் பெல்லாந் தணிப்புற்ற தண்ணளியான்
கவிச்சமுழு மதிக்குடைவேங் கடனொடன னியநோக்கால்
அவிச்சின்ன மாயடியீர் கண்ணோக்க மாடாமோ. கக

ஏவலிடை நின்றெழுகு மெங்கைமீர் கண்ணொளியும்
தாவலறு கதிரொளியுஞ் சார்வதுபோற் சங்கையறச்
சீவபர மான்மாக்கள் சேர்ந்திடவேங் கடரமணக்
காவலனை டொன்றாகக் கண்ணோக்க மாடாமோ. கஉ

கலாநிதிவேங் கடரமணன் கண்ணுதித்த கலாநுபவம்
அலாதுபிறி தோர்நுகர்ச்சி யணுத்துணையு மறியாதீர்
நிலாமுகிபோற் சீரியநன் னீர்மையீர் நீக்கமிலாக்
கலாமதிமா முகனைநாங் கண்ணோக்க மாடாமோ. கங

கடிகமழ்பூங் குவளையிடைக் கமலமுமக் கமலமெனும்
தடமலர்வாய்க் குவளைகளுந் தாமழகாப் பூத்திடவே
மடவரலீர் வாள்விழியான் மயக்கறக்கு மாதவவேங்
கடரமணன் றன்னைநாங் கண்ணோக்க மாடாமோ. கச

தள்ளாதே வேதியருந் தாங்கொள்ளத் தக்கதுகாண்
எள்ளாதே யுள்ளினும்பே ரின்பமொடு சற்றுமுளம்
கொள்ளாதே நோக்கினுமுட் கொள்ளாத வுவகைதரும்
கள்ளாய ரமணனொடு கண்ணோக்க மாடாமோ. கரு

செத்தாலே திறப்படுவோஞ் செத்தாலோ பிறந்திடுவோம்
எத்தாலே வாழ்ந்திடுவோ மெனக்கருதி யேமாப்பீர்
இத்தாலே வாழ்ந்திடலா மெங்கள்வேங் கடரமணக்
கத்தாவோ டொருமுகமாய்க் கண்ணோக்க மாடாமோ.

காக்கையிரு கண்களுக்கு மணியொன்றே கலந்தாற்போற்
ருக்குமிரு நிலையினுக்குஞ் சார்கரியா வென்னிதயச்
சேக்கையிடை யுறைரமணன் சிறப்பெய்தக் காரண்டங்
காக்கைக்குத் தோன்றலொடு கண்ணோக்க மாடாமோ.

அங்கலாய்ப் புற்ற வடியோ முயிர்ப்பயிரை
மங்குலாய்க் காத்தவருண் மார்த்தாண்ட வேங்கடன்பாற்
கொங்குலாங் கார்க்குழலீர் குவிந்தவித யத்துளேசேர்
கங்குலா மவிச்சைகெடக் கண்ணோக்க மாடாமோ. கஅ

உருளாயம் போலோவா துருண்டுருண்டிவ் வுலகத்து
மருளாற் பிறந்திறக்கு மாணு மனத்தேனைத்
தெருளாள னுநெஞ்சந் திறப்பித்த வேங்கடப்பேர்
அருளாளன் கண்ணொடுநாங் கண்ணோக்க மாடாமோ. கசூ

ஈட்டியவல் வினையாணு னிடைந்துபடா தவ்வினையை
வீட்டியவேங் கடப்பெம்மான் விளைந்தேன்போ லென்றலைமேற்
சூட்டியபூந் தாளான்றன் சொருபத்தைக் குருடற்கும்
காட்டியபூங் கண்ணொடுநாங் கண்ணோக்க மாடாமோ.

நகநோக்கி நம்மைவெந் நரகத்து ளாழ்த்தும்பாழ்
முகநோக்கால் வெளிநோக்கி மோகத்துண் மூழ்காதே
தகநோக்கி நம்மைத் தடுத்தாண்ட வேங்கடனே
டகநோக்கா லகமகிழக் கண்ணேக்க மாட்டாமோ. உக

அறப்பேறும் பொருட்பேறு மழிகாமப் பேறுநான்
மறப்பேயு மகிழாது மகிழ்ந்தாண்ட வேங்கடனே
டிறப்பேயும் பிறப்பேயு மின்றாகக் கோசமெலாம்
அறப்பீறு மகநோக்காற் கண்ணேக்க மாட்டாமோ. உஉ

*கட்டுருவ நோக்குறுமெய்க் காட்சியாற் கண்ணியல்பாம்
நிட்டையே மெய்ஞ்ஞான நிண்ணயமா நாட்டினன்
சுட்டரிய வான்ம சொரூபமாம் வேங்கடனே
டொட்டியா மொன்றா யொளிர்கண்ணேக் காட்டாமோ.

இலக்கமெனு வென்னிதயத் தெய்தகண் ணேக்காய
துலக்கமதா லெனையாண்டு தோய்ந்தவேங் கடனேடு
மலக்கமதா லுண்டாய்மற் றேராற்றுன் மாயாத
கலக்கமெலாங் கட்டழியக் கண்ணேக்க மாட்டாமோ. உச

உண்ணுமது ரக்கனியோ டறுசுவைபோ லொன்றியெனைப்
பண்ணெடுபாட் டெப்போற் பரிந்தாண்ட வேங்கடன்பால்
உண்ணுணுகி யுசாவுயிரோ டுணர்வு மொடுங்கொடுங்கக்
கண்ணெடுகண் ணேக்கிநாங் கண்ணேக்க மாட்டாமோ.

உடைவித் தகரமண னுலையா தெனையாண்ட
நடையிற்கை வலியநறு நவநீதம் பசிதீர
அடைவிக்கப் பாற்கடலா வடியே னிதயத்தைக்
கடைவித்த கண்ணெடுநாங் கண்ணேக்க மாட்டாமோ. உரு

கண்ணாகத் தன்னருளே காட்டினான் றன்னடியேற்
கண்ணா மலைரமண னழகார்ந்த பொன்மேனி
எண்ணாலே யெண்ணி யெழுத்தா லெழுதவொணுக்
கண்ணா ரமுதனொடு கண்ணோக்க மாடாமோ. உஎ

வானந்து சித்திகளின் வைபவங்கள் சேர்ந்துகுடி
தானந்து கம்பீரத் தடங்கணான் வேங்கடனென்
ஊனந்த வுயிர்நந்த வுளம்புகுந்தாண் டானொடுபே
ரானந்த மீதூரக் கண்ணோக்க மாடாமோ. உஅ

நரிகளைமுன் பரியாக்கி நவநவமா மப்பரியை
நரியாக்குந் திருகாளி நன்பாண்டி வேங்கடவன்
கரியனைவெண் ணீறாக்கிக் கல்லாத வெளிற்றேனைக்
கரியாக்குங் கண்ணொடுநாங் கண்ணோக்க மாடாமோ. உகூ

மானெனு மருண்டவிழி மாதரீர் நனைகவுள்சேர்
யானையால் யானைபட யாத்தாற்போல் வேங்கடனே
டானவாண் முகநோக்கான் ஞானநோக் கம்பெறுவாம்
ஆனதான் முகநோக்கிக் கண்ணோக்க மாடாமோ. ௩0

சிறக்கணித்து நம்மைச் சிறந்தாண்ட வேங்கடனே
டுறக்களித்தற் குற்றவிடை யூறொழிக்க வுன்னுவீர்
அறக்குளித்தாற் குளிரில்லை யாமாறு நம்மிதயத்
தறக்குளித்துப் பனிப்பகலக் கண்ணோக்க மாடாமோ. ௩க

ஆருயிரா வெம்மா லறிபடுவா னடியேன்சொல்
வேரிமண மாலையா வேய்ந்ததிரு வேங்கடவன்
காரிகையீர் நம்மைக் கலந்தாண்டான் கழிசிறந்த
காரிகைசேர் கண்ணொடுநாங் கண்ணோக்க மாடாமோ.

திருச்சிற்றம்பலம்

கoஎ. திருப்பூவல்லி

(கொச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

ஒன்ருய்க் கிடந்த வுலப்பிலாப் பாழ்கடந்து
சென்ருலே சேரலாஞ் சீபாத வேங்கடவன்
நன்ருய ஞான நடையிஞ னென்றென்றும்
பொன்ருத வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. க

மீட்புற்று வந்தானிம் மேதினிக்கோர் தாழ்விலேயென்
ருட்பட்ட நல்லடியா ரவிச்சையிருட் படலமெலாம்
ஞாட்புற்ற வேங்கடச்செஞ் ஞாயிற்று நாட்காலே
போட்புற்ற வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. உ

தந்தையொடு தாயாய்க் குடிதாங்கிப் பிறலாம்
கந்தையொடு பிச்சையே காதலிக்கும் வேங்கடவன்
சிந்தைக்கு மெட்டாச் சிவமாய சித்தர்பிரான்
புந்திப் பயன்பரவிப் பூவல்லி கொய்யாமோ. ங

சிந்தைக் கொடுஞ்சிறைவாய்ச் சிக்குண்டார் தம்மிதய
கந்தித் தொடக்கறுக்குங் கண்ணுளன் வேங்கடவன்
விந்தைக் கடாக்கட்கு வேண்டும் விடையிறுக்கும்
புந்தித் திறம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. ச

---

† கள்ளார்ந்த பூங்கொன்றை — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்பூவல்லியைத் தழுவியது.

பொறிக்குப் புலப்படூஉம் புறப்பொருள்பொய் யன்றென்னும்
வெறிக்கோளா ருண்மை விவிதமென் றத்துவித
அறிக்கைச் சுடர்தானு மகப்பொருளி னநுபூதக்
குறிக்கோளான் வேங்கடற்கே பூவல்லி கொய்யாமோ. ரு

கலையாய பொருளெல்லாங் கலங்கித் தடுமாறத்
தலையாய வேங்கடவன் றற்பரத்துக் கோர்பெருமை
இலையாக வெச்சனு ரீறுமாந்த வேள்வியைமுன்
புலையாக மாற்றியவா பூவல்லி கொய்யாமோ. சு

செவ்வைப் படச்செய்த தீஞ்சுவையூண் டாங்கிடக்கக்
கவ்வைக் கிடனுகக் காதலித்து வேங்கடவன்
அவ்வைக்கொப் பாளொருத்தி யடகமுது செய்தருளும்
புவ்வச் செயல்போற்றிப் பூவல்லி கொய்யாமோ. எ

பெருவிந்தை வேங்கடவன் பிட்டமுது முன்னளித்தாள்
ஒருவந்தி மனக்குறைதா னொழிவாளா பெழுவோராய்
அருமந்த கட்டமுதண் ணமலைக்காட் டினிதளித்த
பெருவிருந்து பேணியவா பூவல்லி கொய்யாமோ. அ

பாலாழி தாங்கடைந்தார் பதைபதைத் தாவிதப்ப
நாலாறு மோடுங் கடவுளரோ நமைக்காப்பார்
ஆலால நல்லமுத மாப்புசித்த வேங்கடவன்
கோலாலங் கோடித்துப் பூவல்லி கொய்யாமோ. கூ

அடிகளார் தம்மை யகங்கொண்ட வவ்வளவே
குடிகளா வைம்புலனுங் குற்றேவல் செயப்பெற்றேன்
விடியலா யென்னை விழிப்பித்த வேங்கடர்வெண்
பொடியுலா மெய்பாடிப் பூவல்லி கொய்யாமோ. ௧௦

இடிபட்டு வாழுங்கா லென்றலைமே லின்னருளால்
அடியிட்டு நாயேனை யாட்கொண்ட வேங்கடவன்
மிடிபட்ட வாழ்க்கையேன் வெவ்வினையின் பகுவாயிற்
பொடியட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. கக

எச்சார்புந் தற்கின்றி யெவ்வெவைக்குந் தானேயோர்
அச்சாக நின்றபே ராண்மையான் வேங்கடவன்
பிச்சாகி யன்னோனற் பேதுற்றேன் பிறவனைத்தும்
பொச்சாந்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. க௨

தக்கவா ருட்பட்டோர் தாங்கண் டதிசயிப்பத்
தெக்கணா மூர்த்தியாந் திருவேங் கடரமணன்
மிக்கவா ருட்கொண்டிம் மிச்சையே னுள்ளத்துட்
புக்கவா பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. க௩

வேட்டடுத்த மெய்யடியா ரீட்டத்தை மெய்ஞ்ஞான
வீட்டிடத்து வாழ்விக்கும் வேங்கடவன் வாள்விழியாற்
கூட்டடைத்து நாயேனைக் கோத்த விதயகந்திப்
பூட்டுடைத்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. க௪

பள்ளமாத் தன்னுள்ளம் பற்பலவாஞ் சித்திகளும்
வெள்ளமாப் பாய்ந்துள்ள வேங்கடவ னென்னுளத்தைத்
தெள்ளமாத் தேற்றியவச் சீர்த்திமைவா னம்பாடிப்
புள்ளெனப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. க௫

ஐயா வகையருளி நாயேனை யாட்கொண்ட
மெய்யாய வான்கருணை வேங்கடவன் மன்பதையை
எய்யாமை யுய்விக்கு மின்பமழை யெஞ்ஞான்றும்
பொய்யாத வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. க௬

முள்ளினு லிசைத்தமுழுக் கோவணனு யிரங்கண்ணன்
கள்ளமா யுருக்கரந்த கைத்துணியான் வேங்கடனெம்
தள்ளையா யள்ளித் தரும்பே ரநுபூதிக்
கொள்ளையாற் குதுகலித்துப் பூவல்லி கொய்யாமோ. கஎ

எம்பலா லென்போன்ற வேழையரை யேன்றுபுகழ்
மேம்படா நின்றதிரு வேங்கடவ னன்பர்க்குத்
தீம்பலா வண்சுளையிற் றித்திக்குந் தேன்சுரக்கும்
பூம்பதாம் புயம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. கஅ

மதிவீரத் தாலே மதிக்கொணுன் மயங்கியவவ்
விதிவீரத் தலைகொய்த வேங்கடவ னடியானை
அதிவீரத் தாலடர்த்தா னுவிசெற்ற வறைகழற்காற்
குதிவீரம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. கசு

எதுவதுவென் றியாரேனுங் கேட்டக்கா லேற்றபடி
அதுவிதுவென் றேசுட்ட வார்க்குமொணுச் சிதாகாயப்
பொதுவதுவாம் வேங்கடனென் புந்திக்குட் புக்கதிறம்
புதுவதுபோற் போற்றிநாம் பூவல்லி கொய்யாமோ. ௨0

அரங்கமா வென்னிதயத் தாடு மடிப்புணையாற்
றரங்கமா யப்பிறவி தாண்டுவித்தான் சித்திகட்கோர்
சுரங்கமாய் ஞானச் சுடர்ப்பிழம்பாய்த் தூலமுதற்
புரங்கடந்த வேங்கடற்கே பூவல்லி கொய்யாமோ. ௨க

எதுபொருளென் றேணையக மிதமிரண்டு மறியுமறி
வதுபொருளென் றருளியவேங் கடனருளா லவையிற்றைக்
கதுவுமறி வேயன்றி யவ்வறிவாற் கதுவுறுமூன்
பொதியுமது வானவா பூவல்லி கொய்யாமோ. ௨௨

எந்தையாம் வேங்கடவன் யானெனதென் செருக்கிரண்டும்
உந்தியா னேதுநெறி யோர்ந்துபோ யுள்ளத்துட்
சந்தியா நின்றபர தத்துவமுற் சடமாயென்
புந்திதான் போயினவா பூவல்லி கொய்யாமே. உங

ஆத்தவா சகமொன்று மறியா தடிநாயேன்
மூத்தவா கண்டிரங்கி முதுணர்வோன் வேங்கடவன்
காத்தவாற் றலெனது கண்காணப் புன்முறுவல்
பூத்தவா பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. உச

தாங்கொணு வெம்பிறவித் தாபத்தா லெற்றுண்டு
பாங்கனு கும்மடியேன் பரிதபித்தல் கண்டிரங்கி
ஊங்கணுன் வேங்கடவ னுள்ளங் குளிர்ந்துசெயும்
பூங்கணேக் கம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. உரு

ஒழுக்கத்து நன்குணரா னுருப்பழிக ளுறத்தக்க
இழுக்கத்தா னென்றெனேக்கை யிகவாவேங் கடனருளால்
வழுக்கினரை வாய்க்கொளுநால் வகைத்தோற்றத் தேழ்பிறவிப்
புழுக்கமெலாம் போயினவா பூவல்லி கொய்யாமோ. உசா

தேகபா வந்தீரச் சின்மாத் திரசிவத்தோ
டேகபா வம்பாய்ந்த வியல்பாலே யேய்ந்தபரி
பாகமிலா வெங்கட்கும் பார்வையே ரமணசிவ
போகமா வாய்த்தவா பூவல்லி கொய்யாமோ. உஎ

ஒல்லாங்கே யலால்வாத வூரர்முதற் சான்றோர்தம்
தொல்லாங்குந் தோய்ந் துடைவேங் கடவனருட் பேறுசொல்ல
நல்லாங்கு நயவார்போ னனிலத்தே சிலர்நவிலும்
பொல்லாங்கு நல்லாங்காப் பூவல்லி கொய்யாமோ. உஅ

கொல்லியம் பாவைபோற் கொழுங்கா முகனன்புக்
கெல்லினுமோர் மண்ணீட் டியல்பாவை யானூற்போல்
அல்லியர்போல் வேங்கடன்பே ரருட்குப்பாத் திரமாவிப்
புல்லியந்தாம் போந்தவா பூவல்லி கொய்யாமோ. உகூ

முத்தமிழின் சுவைபெருக முன்புமணி வாசகனார்
சுத்தநிலை நின்றுரைத்த தூயதிரு வாசகம்போல்
வித்தகவேங் கடன்செவிக்கிவ் வெறியனேன் வறுமொழியும்
புத்தமுத மானவா பூவல்லி கொய்யாமோ. ௩0

காண்டோறுந் திருமுகத்தைக் களிகூரச் சென்னிமேற்
பூண்டோறும் பொன்னடியைப் புளகூர ரமணனெனைக்
கூண்டோடே வீடெய்த வாண்டதாற் கோதனைத்தும்
பூண்டோடே போனவா பூவல்லி கொய்யாமோ. ௩க

திருச்சிற்றம்பலம்

௧௦அ. திருப்பொற்சுண்ணம்

(ஆசிரியவிருத்தம்)

† பண்: நட்டபாடை (நாட்டை)

திருச்சிற்றம்பலம்

ஓவிய மென்றால கோர்வியக்க
வுரலணி மின்க ளுயிர்கவரும்
காவியை யுண்டகட் காரிகையீர்
காசணி மின்க ளுலக்கையெல்லாம்
மேவிய பண்ட நறுவிரைகள்
வேண்டிய மட்டு மிகமிகப்பெய்
தாவியை யுண்வேங்க டான்மநாதற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. ௧

சத்தாகி யெங்குந் தழைத்தபெருந்
தமனியப் பொன்செய் யுரலகத்தே
சித்தா யொளிர்கின்ற சித்தமென்னுந்
திண்ணிய வல்லுலக் கைகளோச்சித்
துத்தாய பேரின்பச் சுண்ணமணந்
தொல்லுல கெங்கும் பரிமளிக்க
எத்தானு மொப்பிலா வேங்கடேசற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. ௨

---

† புண்ணியர் பூதியர் பூதநாதர் — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்பொற்சுண்ணத்தைத் தழுவியது.

மிச்சை யெனச்சொலு மேதினியும்
மெய்ப்பொரு ளன்றிமற் றில்லையென்னக்
கச்சை விசித்தடி யாரிதய
கந்தித் தொடக்கறுக் கும்பெருமான்
விச்சை யெலாஞ்செய வல்லபிரான்
வித்தக வேங்கட வேதியற்குப்
பச்சை மயிலன்ன பாவைநல்லீர்
பைம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. ௩

காண்டலு மேதன் கடைக்கணேக்காங்
கடிய வடவைக் கனற்பிழம்பால்
மூண்ட பிறவிக் கடல்சுவற
மூழ்கிக் கிடந்த வுயிர்த்தொகையை
ஈண்டிக் கிடந்தவீட் டின்பவெள்ளத்
தேற விடும்பத வேங்கடனும்
பாண்டிச் செழுந்தமிழ் வாணனுக்குப்
பைம்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. ௪

கண்ணுங் கருத்துமே யாயினூர்க்குக்
கல்வியுங் கேள்வியு மாயினூர்க்குப்
பண்ணெடு பாட்டுமே யாயினூர்க்குப்
பானமு மன்னமு மாயினூருக்
கெண்ணெ டெழுத்துமே யாயினூருக்
கெவ்வெவை யுந்தாமே யாயினூர்க்கு
விண்ணெடு மண்ணுமாம் வேங்கடற்கு
விளங்குபொற் சுண்ண மிடித்துநாமே. ௫

தாக்கே யிலாதெல்லாப் பூதமோடுந்
தாக்குற்று நின்றநந் தம்பிராற்குப்
போக்கே வரத்தே யிலாதபரி
பூன்றனும் புண்ணிய வேங்கடற்கெம்
வாக்கே குறிக்கொண்ட வண்செவிசேர்
மன்னவன் மாண்புகழ் பாடிப்பாடி
மாக்கேழ் மடவரன் மங்கைநல்லீர்
வண்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. சு

ஊழி யுலப்பினுந் தானுலவா
னுண்மைப் பெருந்திறம் பாடிப்பாடிக்
கேழில் பரஞ்சோதி மெய்யனது
கிளரொளி வண்ணங்கள் பாடிப்பாடி
வாழி ரமண மகிணனது
வரையில்பே ரின்பங்கள் பாடிப்பாடித்
தோழிமா ராம்பசுந் தோகைநல்லீர்
சுவணஞ்செய் சுண்ண மிடித்துநாமே. எ

*ஓர்ப்பாலே நானுரென் றுள்ளத்தடத்
துண்மூழ்கித் தம்மெய் யுசாவிழியாற்
பார்ப்பாரே காணத் தகுங்கண்மணிப்
பாவையா மன்னுன் படிவம்பாடி
வேர்ப்பாலே காய்த்து வெடித்தபலா
வேரிச் சுளைவேங் கடன்றுள்பாடி
ஊர்ப்பாலே நாய்க்கு முதாரங்காட்டு
முடையாற்குச் சுண்ண மிடித்துநாமே. அ

*பஞ்சன மாய்மனப் பாழவியப்
 பார்வேங் கடனருட் பாதம்பாடித்
தஞ்சனை யாண்ட தலைவனுக்கென்
 றலையா மவன்பாத பீடம்பாடி
உஞ்சன மாக்கி யுடையகோவுக்
 குற்றவென் னுள்ளப்பொற் கோயில்பாடி
மஞ்சன மாகவென் மாயநேயம்
 மகிழ்வாற்குச் சுண்ண மிடித்துநாமே. கூ

மஞ்சன மாடநம் மஞ்சனுக்கு
 மறையின் முடிபாய மன்னனுக்குத்
தஞ்சமென் றோர்த்தாங்குந் தாளனுக்குத்
 தயாபர வேங்கட தேவனுக்கின்
றஞ்சன நாமென் றுளந்தளிர்க்க
 வுடம்பும் புளகித் துயிர்தழைக்கக்
கஞ்சமென் மாமுகக் காரிகையீர்
 கனகவொண் சுண்ண மிடித்துநாமே. கO

கொங்கே நிறைந்த குழன்மடவீர்
 கோதை யொடுந்தேன் குழாங்களாடப்
பொங்கே ரெழின்மார்பம் பூண்களாடப்
 பூங்கணு னந்தபாட் பங்களாட
எங்கே நினைப்பினு மேவரேனு
 மேனென் றவர்க்கங் கெதிர்ப்படுமொண்
பங்கே ருகமுக வேங்கடற்குப்
 பைம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. கக

முந்தை வினைமுழு தோடவோட
மோக விருள்கரந் தோடவோடச்
சிந்தை மலமிரிந் தோடவோடத்
தேக நினைவொழிந் தோடவோடச்
சந்தை யினம்பிரிந் தோடவோடச்
சாத்திரக் குப்பைகெட் டோடவோட
விந்தையி னுண்டருள் வேங்கடற்கு
வியன்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. கஉ

நீதி நடுநிலை நிற்கநிற்க
நிண்ணய ஞானநெஞ் சூன்றவூன்ற
நேதியா லிம்மட்டு மெய்ப்பொருளா
நினைந்தவெல் லாம்பொய்யா நீங்கநீங்கச்
சாதி மதந்தலை சாயச்சாயச்
சாந்திநெஞ் சந்ததும் பத்ததும்ப
வேதிய னுவாண்ட வேங்கடற்கு
வீறுபொற் சுண்ண மிடித்துநாமே. கங

செம்மா ணடியிணை சேர்ந்தவென்னைத்
திருவருள் பாலித்துச் செங்கணோக்காற்
சும்மா விருக்கென மோனமதாற்
சொல்லறச் சொல்லித் தொட்டக்கறுத்தான்
மைம்மாயை யாங்கா ரிருட்பிழம்பை
மாய்க்குறு மார்த்தாண்ட வேங்கடவன்
அம்மா வதிசய மாடிப்பாடி
யம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. கச

முத்தே நிகர்த்த முறுவனல்லீர்
முகவிலா சத்தினெம் மோகமழித்
தெத்தே வருந்தா ழிணையடியெம்
மிதயப் புலத்திற கவ்விறக
வித்தாய் விளைத்தெங் குடிமுதலாய்
மிடிமைதீர்த் தாள்விழி யேருழவன்
புத்தே ளிறைதிரு வேங்கடற்குப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. ௧ரு

காமனைக் காய்ந்தவெங் கட்கதிராற்
காமனை மாய்ந்தவென் றன்கருத்துட்
பாமறைச் சென்னியும் பார்த்தறியாப்
பாதம் பயப்பயப் பாய்த்தருளி
ஏமரு வாழ்க்கை யெனக்களித்த
வெம்பிரான் வேங்கட நாதனடைப்
பூமனை வாழும் பொறியணையீர்
புதுப்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. ௧௬

கோனொடு தந்தைதாய் தெய்வமுமாங்
குருவா யெனக்கருள் வேங்கடனுக்
கியானென தென்னு மிரண்டுமவ
னிணையடிக் கேபலி யாச்செலுத்தித்
தேனொடு பால்போற் றெவிட்டலறத்
தித்திக்குஞ் சீரடிச் சிந்தனையால்
ஊனொ டுயிர்மறந் தோகையாகி
யொளிர்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. ௧எ

மலேயா மிலக்கை மறைத்துணர்வை
மருட்டிய பொல்லா மயற்றிறத்தாற்
றலேகா லறியா துலகிடைநான்
றட்டுளுப் புப்பட்டுத் தத்தளித்த
பலவா தனேயும் பரிசழியப்
பார்ப்பானே விட்டெந்தப் பாருலகும்
இலகாமை காட்டிய வேங்கடனுக்
கிலகுபொற் சுண்ண மிடித்துநாமே. கஅ

நிசாமுகத் தான்மனத் தேநிகழ்ந்து
நெடுஞ்சுரத் தின்வழிப் போக்கர்முன்னே
பசேலெனப் பைம்பொழில் போற்பசப்பும்
பாரிடத் தின்பகு வாய்நின் றென்னே
விசாலவெண் பாற்கடல் வெண்ணிலாவை
வென்ற விலாசக் கதிர்முகத்தால்
வசீகரித் தாட்கொண்ட வேங்கடற்கு
வண்ணப்பொற் சுண்ண மிடித்துநாமே. கசு

முப்புடி யோடுதொந் தம்முனிந்த
முனிவர னுமெவன் றுட்புழுதி
மைப்படி வங்கொண்ட வன்மயக்க
வலவைக்கோட் பட்டமாப் பீடையையான்
பொய்ப்படிக் கேபுலம் பாதவண்ணம்
பூதியாய் முற்றிலும் போக்கியதோ
மெய்ப்படி வஞ்சேரவ் வேங்கடற்கு
மேலாம்பொற் சுண்ண மிடித்துநாமே. உ0

கள்ளக் கசடற நாயினேனைக்
 கடைக்கணேக் காயகங் கைப்புனலாற்
றள்ளற் கரியமுத் தாபமாறத்
 தானூட்டித் தண்ணளி செய்தபிரான்
தெள்ளத் தெளிந்துசேர்ந் தாருயிரைத்
 திகழ்த்துமெய்ஞ் ஞானதே சோமயமாம்
வெள்ளப் பிரான்வேங் கடவனுடை
 விளங்குபொற் சுண்ண மிடித்துநாமே. உக

ஊத்தை யுடம்புக்குள் ளேனுந்தூய
 வுள்ள மெனும்பே ரூரலகத்தே
மாத்தம்ப வேங்கட மன்னனுக்கெம்
 மானுபி மான திரவியம்பெய்
தேத்தும் புகழாம்பல் காசணிந்த
 வேகாக் கிரவல் லுலக்கையாலே
சோத்தெம் பிரானெனச் சொல்லிச்சொல்லிச்
 சுடரும்பொற் சுண்ண மிடித்துநாமே. உஉ

தற்பத மென்னுந் தயங்கொளிசேர்
 தமனியப் பொன்செய் யுரலகத்துச்
சொற்பத மாத்திர மாய்த்துலங்குந்
 தொம்பத மஞ்ச ணுறுநுறுங்க
அற்புத மாய வசிபதமா
 முலக்கை யழகுறக் கைப்பிடித்தே
அற்பனை யாள்வேங்க டான்மநாதற்
 காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. உரு

பூசனை யொன்றும் புரிந்திடாப்பொய்ப்
புலையனேன் றன்னையு மோர்பொருளாப்
பாச வினையைப் பறித்துநோக்காற்
பந்தனை தானறுத் தாண்டுகொண்டான்
வாசனை யெல்லா நறுவிரையாப்
பெய்திட்டு வாசனை மாண்டவராய்த்
தேசனும் வேங்கட தேவனுடைத்
தேசார்பொற் சுண்ண மிடித்துநாமே. உச

உயலி னுளங்கொண்ட வுத்தமர்பல்
லோர்க ளிருக்கவு மூத்தையேனை
மயலி னடல்வலி மாயச்செற்று
மலர்க்கணு லுண்மை புலப்படுத்துச்
செயலற நின்றமெய்ச் சின்மயமாச்
செறிந்திடச் செய்திரு வேங்கடற்குப்
புயலி னறுங்குழற் கோதைநல்லீர்
புதுப்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. உரு

பள்ளத் தொழுகுநீ ரோட்டமென்னப்
பாதத் தொழுகுமெய்ப் பத்தியினர்
எள்ளத் தகாதவர் பற்பலர்முன்
னிருக்கவிக் குக்கலைத் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த
வேங்கட நாத விநோதனுடைப்
புள்ளொத் தெழுங்குரற் பூவைநல்லீர்
புதுப்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. உசா

தெங்குங் கமுகுந் திரள்பொழிலுஞ்
செழிவய லுஞ்சேர் சுழியலினின்
றெங்கும் பரந்தெழு மின்பவெள்ளத்
திந்த விழிசின நாயினேனை
முங்கும் படிக்கு முழுக்கருணை
மூழ்த்து முழுமுதல் வேங்கடன்சீர்
பொங்குங் குழன்மட வீர்கள்போற்றிப்
புதுப்பொலஞ் சுண்ண மிடித்துநாமே. உஎ

வாட்கொண்ட வாள்விழி மங்கைநல்லீர்
வம்மினோ வந்துடன் வாழ்த்துமினோ
தாட்கொண்ட சிந்தைய ராயடியார்
தாழ்வறச் செய்தவஞ் செய்துநிற்க
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நன்னெறி காட்டியிந் நாயினேனை
ஆட்கொண்ட வேங்கட வான்மநாதற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. உஅ

போதனை யின்றிச் சிறுமையின்மெய்ப்
போதம் புலப்படப் பெற்றவற்குச்
சாதனை யின்றித்தன் சந்நிதியாற்
சமாதிசா திப்பித் தருள்பவற்கு
வாதனை யற்றநிர் வாதனையால்
வயப்படுத் தென்னைமுன் பாண்டவற்கு
வேதனை யற்றநம் வேங்கடற்கு
விளங்குபொற் சுண்ண மிடித்துநாமே. உகூ

பொதுவினில் வாழ்தரும் புண்ணியற்குப்
புத்தமு தூறுந்தன் பொன்னடிவாய்
மதுகர மாவிந்த மண்டூகத்தை
மாற்றிய வேங்கட மாயனுக்கு
முதுவரு ளெல்லா முதியவற்கு
முன்னு மிளைஞரு ளும்மிளையோற்
கிதுவது வாச்செயு மெம்பெருமாற்
கினியபொற் சுண்ண மிடித்துநாமே. ௩௦

வாட்டிய தாப வகைகளற
வறும்பா ழுலகமா மையலற
வீட்டிய லெண்ணித்தன் வித்தகத்தாள்
விமலநீ ராடாது பைம்புனல்போற்
காட்டிய கானல்வா யாடினேனைக்
கனிந்து தனுதுகண் ணோக்கமுதால்
ஆட்டிய வற்புத வேங்கடவற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. ௩௧

கூறு படுமிக் குவலயத்திற்
குமரிபா கீரதி யாதியபல்
லாறு கடன்முத லாயபன்னீ
ராடினு மும்மகந் தூய்மையாமோ
ஊறு படும்புறத் தூய்மைபாழா
வொழிய வகந்தூய்மை வாய்மையாலே
வீறு படக்காட்டும் வேங்கடற்கே
வீறுபொற் சுண்ண மிடித்துநாமே. ௩௨

திருச்சிற்றம்பலம்

கoகூ. திருப்பொன்னூசல்

(தரவுகோச்சகக்கலிப்பா)

† பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

துய்த்தவநுபோகந் துவ்வாமை யாவொழியப்
பைத்த பசுங்கருணை பாலித்த மாதேவன்
மொய்த்தார் சிதற முடுகிய நஞ்சுண்டு
மைத்த கருங்கண்டன் மாணிக்காக் கூற்றுதைத்து
மெய்த்த வருட்பாதன் வேங்கடன்றன் சீர்பாடிப்
புத்தமுதப் பண்மொழியீர் பொன்னூச லாடாமோ.

அல்குங் கடுவிடத்தைக் காணிக்கை யாவுவந்து
நல்குங் கடவுளர்க்கு நல்லமுதந் தானளித்து
மல்கும் பெரும்புகழான் மாதேவன் வேங்கடவன்
பல்குங் குணநலங்கள் பாடுவா ருள்ளத்துட்
பில்குந்தேம் பாதப் பெருமான் புகழ்பாடிப்
புல்குங் கொடியிடையீர் பொன்னூச லாடாமோ. உ

---

† துன்னம்பெய் கோவணமும் — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருப்பொன்னூசலைத் தழுவியது.

ஆயிர நாமத்தா னாயிர வேடத்தான்
ஆயிர நேத்திரத்தா னாயிரஞ் சோத்திரத்தான்
ஆயிரந் தோளுடையா னாயிரந் தாளுடையான்
ஆயிரன் மற்றனைத்து மாயிடினுந் தானென்றே
ஆயின வேங்கடவ னற்புதச்சீ ராயிழையீர்
ஆயிரமும் பாடிநாம் பொன்னூச லாடாமோ. ௩

ஏனோர் விழிக்கு மிடத்தே துயில்கின்றான்
ஏனோர் துயிலு மிடத்தே விழிக்கின்றான்
ஈனோரே யன்றி யெழுநிலத்து முள்ளபெரு
வானோருங் காணா வளமையான் வேங்கடவன்
ஊனோ டுருக்கியெனை யுள்ளங் கொளைகொண்டு
போனோன் கழல்பாடிப் பொன்னூச லாடாமோ. ௪

தங்கக்கை யாலபயந் தந்தடியர் தங்கட்கு
வங்கப் பதங்காட்டி மல்லற் கரையேற்றிச்
சிங்கக்கண் ணோக்காற் செறிந்திதய தீர்த்தத்தே
முங்கக் கடைக்கணிக்கு மூர்த்தியான் வேங்கடவன்
பங்கப் படாத பரங்கருணை பாடிமணம்
பொங்கக் குழன்மடவீர் பொன்னூச லாடாமோ. ௫

கிரிசைமே லுள்ளக் கிடக்கையர்கா ணாமோனப்
புரிசையா னென்றாப் பொதுநோக்க லன்றிக்கே
வரிசையா னோக்கும் வகையறியாக் கண்ணன்முக்
கரிசையறச் சுட்டுக் கரியாக்கிப் பேரின்பப்
பரிசை யடியார்க்குப் பாலிக்கும் வேங்கடப்பேர்
அரசையே நாம்பாடிப் பொன்னூச லாடாமோ. ௬

உலகைப் பொருளாக வோம்புங் கடையேன்
அலகையா வெங்கு மலையாமே கண்ணால்
மலகுபுன் மாயை மயக்கறுத்து நெஞ்சப்
பலகைமேற் பாய்ந்தொளிரும் பாதச்சீ ரெங்கும்
இலகுமெய்ஞ் ஞானரம ணேசன்றா ளேத்தி
அலக நறுநுதலீர் பொன்னூச லாடாமோ. ௭

வைவந்த வேற்படைகள் வந்துபுறஞ் சூழ்ந்தாற்போல்
மொய்வந்த மூள்வினையின் மூலமாங் காரறிவின்
மைவந்த வல்லிருளை மாய்த்திந்த நாயேற்குக்
கைவந்த நெல்லிக் கனிதானும் பொய்யென்ன
மெய்வந்த வத்துவித வேங்கடவன் சீர்பாடிப்
பொய்வந்த நுண்ணிடையீர் பொன்னூச லாடாமோ.

சேற்றின் முளைத்த செழுந்தா மரைபோலத்
தேற்றும் பதாம்புயமென் சிந்தைவாய்ப் போந்தருளி
ஆற்றிற் கரைத்தபுளி யாயவினை யன்பாலே
ஏற்றுத் தொழும்புகந்த வேற்றத்தான் வேங்கடன்மாட்
டாற்றப்பே ரார்வமா யன்னா னடிப்புகழைப்
போற்றி மயிலனையீர் பொன்னூச லாடாமோ. ௯

போரிப் பதிக்கண்ணும் பொய்யனே னெஞ்சத்தும்
தாரித் திருக்குந் தயாளத்தான் பேரின்ப
மாரிப் பெயல்பெய்யு மாமுகிலான் மாணாத
காரிக் கடுவாகக் கைத்தேனை யின்னமுதா
வாரிப் புசித்த வளவேங் கடன்புகழ்மெய்
பூரித் திசைத்துநாம் பொன்னூச லாடாமோ. ௧௦

திருச்சிற்றம்பலம்

ககO. குயிற்பத்து

(ஆசிரியவிருத்தம்)

† பண்: காந்தாரம் (நவ்ரோஸ்)

திருச்சிற்றம்பலம்

ஏறுது மனத்துக் கிசைந்த
விண்ணிசைக் கோகிலப் பிள்ளாய்
அனுதி மலமுத்த னுகி
யன்பரை யாட்கொள வேண்டி
உனுது மனத்துக் குகந்த
மாமர நன்னிழ லுற்றுத்
தெனுது திசைமுக நோக்குந்
திருவேங் கடவனைக் கூவாய். க

எக்கள மாக்கரு வேளுக்
கிசைக்குங் கருங்குயிற் பிள்ளாய்
அக்கர மெய்ப்பொரு ளாகி
யன்பரை யாட்கொள வேண்டித்
தக்கணு மூர்த்தியாய்த் தேமாந்
தண்ணிழல் வீரா தனத்திற்
செக்கர் நிறங்கிளர் மேனித்
திருவேங் கடவனைக் கூவாய். உ

† பாடிளம் பூதத்தி னுனும் — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் குயிற்பத்தைத் தழுவியது.

இனித்த குரற்குயிற் பிள்ளா
யெய்திய தன்னடி யார்க்குத்
தனித்த பரம்பொரு ளாய
தற்பத வுண்மை யுணர்த்திப்
பனித்த கொடுந்துயர் பாறப்
பார்க்குஞ் சுடராருட் கண்ணன்
மனித்த வுடம்பொடு வந்த
மறைவேங் கடவனைக் கூவாய். ௩

ஏர்தரு தீங்குர லாற்பே
ரின்பநல் குங்குயிற் பிள்ளாய்
சார்தரு மெய்யடி யாரைச்
சதிசெயு மாயைச் சழக்குத்
தீர்தரச் செம்பொரு ளாய
திப்பிய தத்துவ ஞானம்
சேர்தரச் செங்கண் விழிக்குந்
திருவேங் கடவனைக் கூவாய். ௪

பொங்க ரிளங்குயிற் பிள்ளாய்
போற்றுந் தனதடி யார்தம்
பங்க முடைப்பரு வஞ்சப்
பாழ்ம்பிற வித்துயர் பாறத்
துங்க முடைத்துரி யப்பே
ரின்பத் துயில்வர நோக்கும்
செங்கண னெங்கள் செல்வத்
திருவேங் கடவனைக் கூவாய். ௫

பேட்டுச் செழுங்குயிற் பிள்ளாய்
பெண்ணெனிற் பேயு மிரங்கும்
நாட்டுப் பலப்பல நல்லோர்
நடுப்பட ஞானச் செழுந்தீ
வேட்டுப் புணர்ந்துபின் னென்னை
விட்டு விதிவழி யாகக்
கூட்டு மெனதுயிர்க் கொண்கன்
குருவேங் கடவனைக் கூவாய். சு

சேடிக்குச் சேடியு மாய்நின்
சிற்றடிக் குற்றேவல் செய்வேன்
ஈடில் செழுங்குயிற் பிள்ளா
யின்பமீக் கூர்தரப் பொய்யா
ஊடிப் புலந்த வுழியும்
பொறாதுட னென்னை யுணர்த்திக்
கூடிப் பிரிந்தவெங் கோமான்
குருவேங் கடவனைக் கூவாய். எ

கொஞ்சுங் குயிற்பெடைப் பிள்ளாய்
கோலம் புனைந்தெனைக் கூடி
விஞ்சும் பெருமித வேட்கை
வெளிப்படுத் தானடி கேளாய்
துஞ்சிக் கிடந்தவப் போதைச்
சோர்வுபார்த் திந்த வநாதை
அஞ்சும் படிவிட் டகன்றா
னவ்வேங் கடவனைக் கூவாய். அ

உடற்றுங் கடுவை யுருட்டித்
திரட்டிவெண் ணெய்யாக வுண்ட
மிடற்றன் மிறைபடு சொல்லை
மெய்யென நம்பி யிருந்தேன்
வடித்த குரற்குயிற் பிள்ளாய்
மயங்கவிட் டென்னைப் பிரிந்தான்
படிற்றுக் களவுடை யப்பார்ப்
பனவேங் கடவனைக் கூவாய். ௯

உவகை தருங்குயிற் பிள்ளாய்
ஒன்று முறுச்சிறு பெண்டிர்
மவலை நிகர்த்தபுன் மூரன்
மாதரா ரெல்லா நகைக்க
அவலை யெனச்சற்றும் பாரா
தடிச்சியை விட்டுப் பிரிந்து
திவலையு மென்னை நினையாத்
திருவேங் கடவனைக் கூவாய். ௧௦

திருச்சிற்றம்பலம்

௧௧௧. திருக்கோத்தும்பி

(கொச்சகக்கலிப்பா)

† பண் : பஞ்சமம் (ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

ஒல்லையினர் கோடி யொருங்கெழினுந் தானழியா
அல்லழிக்கு மெய்ஞ்ஞான வாதவவேங் கடனூர்முன்
செல்லடியர் தமையோம்பிச் சேரடியர்ப் பார்த்திருக்கும்
நல்லடித்தா மரைமலர்க்கே நயந்தூதாய் கோத்தும்பீ. ௧

வஞ்சத்தா லென்னை வருவித்தான் வந்ததுமென்
நெஞ்சத்தே பாய்ச்சி நிறுவினன் வேல்விழியைக்
கொஞ்சத்தா னல்லன் கொலைஞன்போல் வேங்கடவன்
கஞ்சத்தாட் கன்பாய்க் கரைந்தூதாய் கோத்தும்பீ. ௨

ஆட்டான் படுத்தென்னை யாள்வான்போ னேக்கியந்தோ
காட்டானை யுண்ட கனியாக்கிக் காசினிக்கே
போட்டா னகையாற் புரமெரித்த வேங்கடவன்
தாட்டா மரைமலர்க்கே தாழ்ந்தூதாய் கோத்தும்பீ. ௩

பாவம் பழிமிடைந்த பாழுலகிற் பாய்ந்தழியா
தாவென் றருளி யறிவை யகமுகமா
ஏவுங் குருவா யெனையாண்ட வேங்கடமா
தேவன் றிருவடிக்கே தேர்ந்தூதாய் கோத்தும்பீ. ௪

---

† வானவர்கள் வேண்ட — என்னும் திருவிசைப்பாப் பண்; திருவாசகம் திருக்கோத்தும்பியைத் தழுவியது.

தன்னை யலாதபிற தத்துவங்க ளத்தனையும்
சொன்னநூற் கோடி துறைபோயு மேதுபயன்
என்னை யறிவித் தெனையாண்ட வேங்கடன்றாள்
வன்ன மலர்க்கே வரைந்தூதாய் கோத்தும்பீ. ரு

புலப்படுவ யாவுமுழுப் பொய்யென்று நூலாற்
சொலப்படுவ தொன்றைத் துணிவித்து நெஞ்சுட்
டலைப்படுவ தாகத் தரிப்பித்து நீங்கா
நிலைப்புடைய வேங்கடற்கே நின்றூதாய் கோத்தும்பீ. சு

ஆரிடத்து மெய்ப்பொருளை யாய்வித்தவ் வாற்றாலே
நீரிடத்து நீழலா நெஞ்சத்துட் டோன்றுமிப்
பாரிடத்தை மெய்யாப் பதையா தெனையாண்ட
தீரிடத்த வேங்கடற்கே தீர்ந்தூதாய் கோத்தும்பீ. எ

மிடிகட்கெல் லாமோர் மிடியா மவிச்சைகெடப்
புடிகட்கெல் லாமோர் புகல்காட்டி யாட்கொண்டான்
முடிகட்கெல் லாமோர் முடியாய வேங்கடப்பேர்
அடிகட்கே வேண்டி யடைந்தூதாய் கோத்தும்பீ. அ

இடர்கட்கெல் லாமோ ரிடரா மிருள்செகுக்கும்
சுடர்கட்கெல் லாமோர் சுடராய கண்ணேக்காற்
படர்கட்கெல் லாம்படராம் பவமழிக்கு மானந்த
நடர்சொக்க வேங்கடற்கே நயந்தூதாய் கோத்தும்பீ. கூ

மொழிகட்கெல் லாமோர் மொழியாய மோனத்தாற்
சுழியற் பதியானென் சோர்வுகெடுத் தாட்கொண்டான்
விழிகட்கெல் லாமோர் விழியாய வேங்கடமாச்
செழியப் பிரானடிக்கே சேர்ந்தூதாய் கோத்தும்பீ. க0

கண்டாரு மில்லாதான் காசினிமேல் வந்தருளித்
தொண்டாக வென்னைத் தொழும்புகந்து தான்றலையாப்
பண்டார மாயுதவும் பாண்டிரம ணனந்தன்
பண்டாய சேவடிக்கே பாய்ந்தூதாய் கோத்தும்பீ. கக

என்செய்த நல்வினையோ டேழேழ் தலைமுறையோர்
முன்செய்த நல்வினையான் முற்பட்டு நாயேற்கு
மன்செய்த தண்ணளியான் மாவேங் கடரமணன்
பொன்செய்த பூங்கழற்கே போந்தூதாய் கோத்தும்பீ.

பள்ளமுறப் பாய்புனல்போற் பாதமுறப் பரிபாட்ப
வெள்ளமுகப் பெறுமன்பர் விழைந்திருக்க மதுப்பெய்கை
வள்ளமெனக் கடையேற்கு வாய்த்ததிரு வேங்கடனார்
தெள்ளமுதச் சேவடிக்கே தேர்ந்தூதாய் கோத்தும்பீ. கந

திங்கக்கை யடியார்கள் சூழ்ந்திருக்கத் துப்புடைய
சிங்கக்கண் ணேக்காலென் சிந்தைமதக் கடகளிற்றை
மங்கக்கை சாய்த்தெனக்கு மாண்பாய வீடளித்த
தங்கக்கை தன்னடிக்கே தாழ்ந்தூதாய் கோத்தும்பீ. கசு

சாயா வகந்தைத் தருக்கா லலமந்து
நோயா லிடைந்துநா ணைந்துபடா தன்புடைநற்
றுயாக வென்னைத் தலையளித்த வேங்கடவன்
வாயாத வார்கழற்கே வாய்ந்தூதாய் கோத்தும்பீ. கரு

ஞாலப்பாழ் நாடகத்தை மெய்யாக நம்பிப்பைஞ்
ஞீலப்பாழ் ஞேயத்தா னெஞ்சழிந்த நாயேனை
மூலப்பாழ் மோசித்த முத்தரம ணனந்தன்
கோலப்பா தாம்புயமே கூர்ந்தூதாய் கோத்தும்பீ. கசு

கயிற்றிலராக் கடுப்பச்சிற் கனபாரத்திற் காசினியைக்
குயிற்றியகுச் சிதமனத்தாற் கொடுந்துயரங் கூர்ந்தேனைத்
துயிற்றினன் போன்றுண்மைத் துயிலுணர்வாந் துரியத்துப்
பயிற்றியவேங் கடன்பதமே பயின்றூதாய் கோத்தும்பீ.

ஒப்பமா வெவ்வெவையு மோராதே யுணர்வழிந்து
வெப்பமா முலகியல்வாய் வெந்துயரான் மெலிவேனை
அப்பனே ரந்தணனா யகங்குளிர்வித் தாட்கொண்ட
செப்பமாஞ் சேவடிக்கே சேர்ந்தூதாய் கோத்தும்பீ. கஅ

பங்கமுடை வெந்துயரப் பாழ்ம்பிறவி யாழ்ங்கடல்வாய்
அங்கமக மெனமயங்கி யாழுங்கா லடியேற்கு
வங்கமென வந்துதவி வாழ்வளித்த வேங்கடவன்
செங்கமலப் பைங்கழற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ககூ

குடிப்பிறப்புக் கொண்டுமனங் குதுகலித்துக் குலவுதிரி
புடிப்பரப்பா மாயைத்தீப் புணரியிலாழ்ந் தேனையவைக்
கடிப்படையா மெய்க்காட்சி யக்கரைமே லேற்றியவேங்
கடப்பரப்பூங் காவுக்கே களித்தூதாய் கோத்தும்பீ. உ0

இணையாது மிலாவடிக ளெண்ணாதே யுவதியர்கட்
கணையாலே கண்கெட்ட கடையேற்கு முத்திநெறித்
துணையாய வேங்கடனார் தொழுவாரைக் கரையேற்றும்
புணையாய பூங்கழற்கே புக்கூதாய் கோத்தும்பீ. உக

பகலிடத்துக் கூகைபோற் பரங்குருடாய்ப் பாவையார்
நகலிடத்து விழிப்பாய நாயேனை நல்லருளால்
அகலிடத்தோ ரந்தணனா யாட்கொண்ட வேங்கடவன்
புகலிடத்தா மரையடிக்கே புக்கூதாய் கோத்தும்பீ. உஉ

ஒருந்தேபுன் ஒரலென மோகித்து மடவார்பால்
இருந்தேவல் செய்கின்ற விழிசினனென் றெள்ளாதே
விருந்தேல வந்தென்னை விழுங்கியவேங் கடரமணப்
பெருந்தேவர் தேவுக்கே பேர்ந்தூதாய் கோத்தும்பீ. உரு

ஆவிக்கே நல்லுறுதி யாய்ந்தறியா தைம்புலவெங்
கோவுக்கே குற்றேவல் குறித்தேனைக் குழைத்தாண்ட
தேவுக்கே சேர்சச் சிதானந்த வேங்கடப்பூங்
காவுக்கே காதலாய்க் கசிந்தூதாய் கோத்தும்பீ. உச

அறுகணுர் தெவ்வ ரறவோரால் யானடைந்த
உறுகணு ளுந்தீர்த் துவந்தாண்டா னுயிர்த்தொகைதம்
தறுகணு வுள்ளமாந் தாழ்கோத்த பூட்டுடைத்துக்
குறுகொணு வேங்கடற்கே குழைந்தூதாய் கோத்தும்பீ.

பாசமறப் பிறந்தன் பார்வையா லென்பஞ்ச
கோசமறக் கண்டதிருக் குறிப்பாலே யாரும்பே
ராசைகூ ரான்ம வரதனமெற் களித்தரம
ணேசனுர் திருவடிக்கே யிசைந்தூதாய் கோத்தும்பீ. உசு

வலிதாக வேங்கடவன் வந்தென்னை யாட்டுமிடற்
றலைதாடி யாவீ ணலைந்தழியா தாட்கொண்டான்
இலதாய மாயையா மேழ்பொழிற்பூக் கண்ணுகரா
துளதாய சேவடிக்கே யுவந்தூதாய் கோத்தும்பீ. உஎ

வெளங்கொண்ட வேழ்பிறப்பில் வீழ்ந்தழியக் கிடந்தேனைக்
களங்கொண்ட கருத்தன்மாக் கலதியெனக் கழியாதே
உளங்கொண்ட நல்லருளா லுவந்தாண்ட வேங்கடவன்
வளங்கொண்ட வார்கழற்கே வதிந்தூதாய் கோத்தும்பீ.

நகையாலே யென்னை நயந்தாண்டா னவிச்சையாம்
புகையாலே யுள்ளக்கண் புதைபட்டார் தேருமெய்த்
தகையாய வேங்கடவன் றம்முருவாய்த் தம்முளுறை
குகையாய தாமரைக்கே குடைந்தூதாய் கோத்தும்பீ. உசு

ஒருகணு லோர்ந்தாலோ வொண்குணமா மேருமற்
றொருகணு லோர்ந்தானிர்க் குணவுததி வேங்கடவன்
திருகெணு நின்றதிண் டிறல்விலங்கி னேடுமறைக்
குருகணு மலரடிக்கே குனிந்தூதாய் கோத்தும்பீ. ௩0

திருச்சிற்றம்பலம்

ககஉ. திருவேசறவு

(கோச்சகக்கலிப்பா)

† பண்: பஞ்சமம் (ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

பின்னணிக்கே நின்றாலும் பேச்சென்றாற் குதிகுதித்து
முன்னணிக்கே முந்துமுழு மூடனிவ னென்னுதே
தன்னடிக்கே தானுறையுஞ் சதாநிட்ட வேங்கடநீ
பொன்னடிமேற் பூட்டியதா லன்றேநான் பொதிந்ததுவே.

பிந்தாது முற்பட்டுப் பிறப்பறுத்தார் பிறரெல்லாம்
முந்தாது பிற்பட்டான் மூடனிவ னென்னுதே
சிந்தாத ஞானரவி வேங்கடவா சிவபர
வந்தாதி காட்டியவா றன்றேநின் பேரருளே. உ

---

† பைங்கோட்டு மலர்ப்புன்னை — என்னும் தேவாரப் பண்; திருவாசகம் திருவேசறவைத் தழுவியது.

மழைநோக்குந் தண்ணளியான் மன்னுயிரை வாழ்விக்கும்
குழைநோக்குங் கூர்விழியாள் கூறுய வேங்கடவா
உழைநோக்க மின்னார்மே லோகையிருட் பட்டேனுன்
விழைநோக்கம் வீழ்ந்தன்றே வீணனேன் விளங்கியதே. ௩

பெண்ணோக்கங் கொண்டேயும் பிறநோக்கங் கொண்டேயும்
விண்ணோக்குஞ் சதாநிட்ட வேங்கடவா வீணனேன்
உண்ணோக்கஞ் சற்றுமிலா வூத்தையே னுனதுகடைக்
கண்ணோக்கங் கொண்டன்றே கடைபோக வுய்ந்ததுவே.

என்பாலே சற்றேனும் யானிருக்க மாட்டாது
மின்போலே தோன்றிமறை மேதினிவாய் வீழ்ந்தேனைத்
தன்பாலே தானிருக்குஞ் சதாநிட்ட வேங்கடநீ
அன்பாலே நோக்கியவா றன்றேநா னுய்ந்ததுவே. ௫

நின்பதும பதநெஞ்சா னினையாதே யுலகியல்வாய்த்
துன்பமுற மேன்மேலுந் தோய்ந்தேனை வேங்கடவா
இன்பமுற வெஞ்ஞான்று மிணையடிக்கே பேரன்பால்
என்புருக வைத்தவா றென்னேநின் னின்னருளே. ௬

வியர்த்தாவி மெலிந்தேனை வேங்கடவா தன்னைத்தான்
அயர்த்தாக மாப்பேதுற் றழுங்குந்தீ வெம்பிறவி
வயத்தாகச் செய்வித்த வன்மாயப் புன்மனத்தை
அசத்தாக வாக்கியவா றன்றேநின் னருட்டிறமே. ௭

வாதியா நின்றமன வாக்குக்கெட் டாவின்பாம்
போதியாம் வேங்கடவா புல்லறிவிற் பொல்லேனை
நேதியா லெஞ்சிநின்ற நின்மலமா மெய்ஞ்ஞான
சோதியா விளக்கியவச் சூதென்னோ வருட்சுடரே. ௮

வெருள்கடிந்து வெறுப்போடு விழைவுகடிந் தூழ்வினையார்
இருள்கடிந்துள் ளெழுஞான ரவியாய வேங்கடவா
மருள்கடிந்து மதிகடிந்து மனங்கடிந்துன் மத்தனேற்
கருள்சுரந்தள் ளூறியவா றன்றேநின் னருட்டிறமே. கூ

வாக்கிறந்து மனமிறந்து மதியிறந்து விதியிறந்து
மேக்குயர்ந்த விழுப்பொருளா மெய்ஞ்ஞான வேங்கடவா
போக்கிறந்து வரத்திறந்திப் புலையேனும் புவ்வினைத்
தாக்கிறந்து நின்றவா றன்றேநின் றண்ணருளே. க0

திருச்சிற்றம்பலம்

——:o:——

ககரு. வியந்த பத்து

(கலிவிருத்தம்)

† பண் : கௌசிகம் (பைரவி)

திருச்சிற்றம்பலம்

உயிர்மன் பதையோ டுறுதே வருமே
செயிரல் லறுசெங் கதிரா முனெதிர்
அயரும் மதிபா வகரா குவரேல்
இயலுன் னொளிதா னெனைவேங் கடனே. க

கடமா மிசையூர் கடுவெந் திறலோன்
அடலாண் மையழித் ததுநின் னடியேல்
வடமா மலைவாங் கியவேங் கடநின்
தடவார் திரடோள் வலிதா னெனையே. உ

† அழனீ ரோழகி — என்னும் தேவாரப் பண்.

உதையப் பலரா வுயிர்வாங் குரவோன்
சிதையத் தெறுமஃ துனதீ விழியேல்
விதையொத் துவிளைக் குறுவேங் கடநின்
இதையத் தரனென் னெனவெண் ணுவதே. ௩

உழிதர் வனநின் சிலுயிர்ப் பவையே
எழிலின் மறையே லிதயத் துநிலை
விழிகொண் டுவிளக் குறுவேங் கடநின்
மொழியின் பரிசென் மொழியத் தகுமே. ௪

இகலார் புரமூன் றெரிவித் ததுநின்
நகுபுன் னகையே னறையேழ் பொழிலாம்
தொகுபல் லுலகுந் துடைவேங் கடநின்
வெகுளிக் கனலின் விறல்விள் ளுவதே. ரு

மிச்சை யுறுமெந் தவிழுப் பதமும்
பிச்சை யடியார் பெறவெண் ணலரேல்
விச்சை யொளிர்வேங் கடவே தியநின்
இச்சை யெழலின் றியசெல் வெனையே. சா

நினைநோக் கினர்நெஞ் சகமே யகிலக்
கனைமாக் கடல்சூ ழுலகங் களெனில்
வினைநீக் கியருள் விழிவேங் கடநின்
புனைமாக் கதிரின் புரணம் பெரிதே. எ

ஒளியே யுருவா யவுளத் தொளிரும்
